[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

1917

[illegible]

"பல்லவகுலசேகரர்"



கனம். கா. கோ. பலபத்திர நாயகர் அவர்கள்.

"பல்லவகுலசேகரர்"

கனம்

# கா. கோ. பலபத்திர நாயகர்

அவர்கள்

# திருச்சரித்திரம்

கோ. நா. குப்புசாமி வர்மா அவர்கள்

எழுதியது.

R. உலகநாதன் அவர்களால்

டி. வி. வி. அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1917

ரிஜிஸ்டர் காபிரைட்] [விலை அணு எட்டு.

2426
923.254
Y592pwl
N17
172445

# சமர்ப்பணம்

க்ஷத்ரிய உதிரம் நிரம்பப்பெற்றுக் குலாபிமானிகளாய் இதுவரைக்கும் விளங்கிய, இப்பொழுதும் விளங்கிக்கொண்டிருக்கிற, இனிமேலும் விளங்கப்போகிற, குல சிரேஷ்டர்களது திருப்பாத மலர்களை எனது சிரமேற் சூடியவனாய், அப் புண்ணியவான்களது ஞாபகார்த்தமாக அன்னோருக்கு, இந்நூலை வணக்கத்துடனும் வந்தனத்துடனும் சமர்ப்பிக்கிறேன்.

இங்ஙனம்,
குலாபிமானிகளுக்கு அடியன்,
கோ. நா. குப்புசாமி வர்மா.

# பதிப்புரை

தமிழ் நாட்டுச் சகோதரர்காள்!

"பல்லவகுலசேகரர் கனம் கா. கோ. பலபத்திர நாயகரவர்கள் திருச்சரித்திரம்" என்னும் பெயர் புனைந்த இந்நூலை வெளியிடுவதில், நான் மிகுந்த பெருமை கொள்வதோடு, அதிக ஆனந்தமுங் கொள்ளுகிறேன். நாயகர் பெருமானைப்பற்றி அதிகம் தெரிய ஏதுவில்லாமலிருந்த எனது அரிய நண்பர்களிற் சிலர் அதைரியம் கூறினரேனும், பல்லவகுலசேகரரது மங்காமகிமையும் பெறற்கரிய பெருமையும், அரிய புகழும் அநேக இடங்களில் விளங்கியதென்பது நான் அறிந்திருப்பதினால், நாயகசிகாமணியின் திருச்சரிதையை யாவரும் வாசித்து உணரவேண்டுமென்றே, இந்நூலை வெளியிடலாயினேன்.

இப்பனுவலை இயற்றியவர் என் இன்னுயிர்த்தோழரும், இன்னுஞ் சில காலத்திற்குள் ஆத்ரிய குலத்திற்கு ஒரு பற்றுக் கோடாயிருப்பாரென்று பார்த்தவுடன் கூறுதற்குரித்தானவரும், கோயம்பத்தூரிலுள்ள வன்னிகுலத் தெள்ளுமணிகளில் ஒருவருமான இராஜஸ்ரீ C. N. குப்புசாமி வர்மா அவர்களாகும். அவர் தம் குலத்தின்மேலுள்ள அபிமானத்தாலும், தம்முடைய ஜாதியாரை எவ்வாற்றானும் ஏற்றமுறச் செய்யவேண்டுமென்ற கண்ணோக்கத்தாலும், இத்திருச்சரிதையை இயற்றியிருக்கின்றனர். வைத்தியன் நோயாளிகளுக்கு ஔஷதத்தைச் சர்க்கரையோடு கலந்து கொடுக்குமாறுபோலச், சற்குலாபிமான கைங்கரியம், வம்சாபிமானம், சங்கயாத்திரை முதலியவைகளின் உண்மைகளை விளக்கி, இவ்வாசிரியர், மேற்கண்ட விஷயங்களைக்கொண்டு காலங்கழித்துப் புகழுடம்பெய்திய நாயகரவர்களின் நல்லதாம் சரிதத்தை நயம்படக்கூறி, ஆங்காங்கு அழகிய அணிகளால் அலங்கரித்துத் தெவிட்டாத தேவாமிர்தமாகக் கொடுத்திருக்கின்றனர்.

இவ்வாசிரியர் இனிய எளிய செந்தமிழ் நடையில் இந்நூலை இயற்றியிருக்கிறார். நூலின் பகுதிக்கேற்பவும், அவ்வப்பகுதியின் சுவைக்கேற்பவும் நடையானது வேறுபட்டிருக்கிறது. உலகவழக்கான தொடர்களைத் தகுந்த இடங்களில் அமைத்து எழுதியிருக்கிறார். இவருக்குப் பாஷாஞானம் உண்டென்பதற்கு இவர்சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு "நாலடி நானூறு", "நளவெண்பா", "திருக்குறள்" முதலிய நூல்களினின்றும் மேற்கோள் காட்டியிருப்பதே போதிய சான்றாகும். இவரது குலாபிமானத்தையும், முயற்சியையும், மிகவும் மெச்சி இவருக்கு மேன்மேலும் ஊக்கம் ஊறும் வண்ணம் செய்வீர்களென்று பெரிதும் நம்புகிறேன்.

இந்நூலில், 86, 89 பக்கங்களின் கடைசியில் அநாவசியமாகக் கொஞ்சம் இடம் விட்டிருக்கிறது. சில பல அச்சுப்பிழைகளும் அங்குமிங்கும் காணப்படலாம். அவைகள் என்னுடையன அல்ல எனினும், அவைகளுக்காக என்னை மன்னிக்குமாறு மிகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். இந்நூலுக்கு முதலில் சேர்த்துள்ள கனம் பல்லவகுலசேகரர் திருவுருப்படம் அச்சிட்டுக்கொள்ள, ஹாப்டோன் பிளாக்கைக் கொடுத்துதவிய வன்னிகுல மித்திரன் பத்திராதிபர் இராஜஸ்ரீ ஆ. சுப்பிரமணிய நாயகரவர்கட்கு எனது வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

வன்னியரல்லாத அந்நியரும் இந்நூலை இச்சையுடன் வாசித்து, அவர்களைப்போல் உழைத்துத் தங்கள் தங்கள் குலத்தை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமென்பது எனது பேரவா. இதில் கூறப்பட்டுள்ள வன்னிகுல திலகங்களும், நாயகசிகாமணியும், எங்ஙனம் பெருஞ்சிறப்பமைந்தவர்களாயும், புண்ணியவான்களாயும், எஞ்ஞான்றும், புகழ்பெற்று விளங்குகின்றனரோ, அங்ஙனமே ஒவ்வொருவரும் சிறந்த குலதர்மங்களைச்செய்து, புகழுடம்பு பெற முயற்சிக்கவேண்டும். இத்தகையினோருக்கு நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடென்பவைகளால் யாதும் அழிவில்லையென்பது அறிவுடையோர் கூற்றாகும்.

பார்க்டவுன், சென்னை,
20 ஜனவரி 1917.

இங்ஙனம்,
R. உலகநாதன்.

# முகவுரை

அநேக கனவான்களின் வேண்டுகோள்கள் ஒருபுறமிருக்க, நான் பிறந்துள்ள உயர்குல க்ஷத்ரிய வம்சத்துக்கு, நான் அவசியம் செய்யவேண்டியதாய் ஏற்பட்டுள்ள குலாபிமானக் கடமையும், பல்லவகுலசேகரர்பேரில் எனக்கிருந்த பற்றுமே, நம் குல நவமணியான நாயகரவர்களின் திவ்ய சரித்திரத்தை எழுதப் பெரிதும் தூண்டியது. நான் க்ஷத்ரிய குலத்தில் பிறந்து இருப்பதுபற்றி மிகவும் பெருமைபாராட்டிக் கொள்ளுகிறேன். இக்குலத்தில் உதித்துவிளங்கிய குலாபிமான சிகாமணிகளின் திருச்சரிதைகளைக் கேட்கவும், படிக்கவும், எழுதவும், அளவிலா ஆனந்தம் கொள்ளுகிறேன். அன்னோர்களது புண்ணியார்த்தமான குலதர்மங்களையும், சங்கயாத்திரைகளையும், மற்றும் நம்மரபின் முன்னேற்றத்துக்குரிய கைங்கரியங்களையும், உள்ளன்போடு அனுஷ்டித்து அவைகளை என்னால் இயன்ற அளவு செய்துகொண்டுவருகிறேன். இவ்வாறே இச்சரித்திரத்தை வாசிக்கும் எனது சகோதர சகோதரிகளும் செய்துகொண்டு வருவார்களென்பது எனது நம்பிக்கையாகும்.

ஜாதிக்குழைத்த தனிமணிகளது சரித்திரங்கள் ஒவ்வொன்றும் நமக்கு, நவரத்தினங்கள் நிறைந்த அருமையும் பெருமையும் வாய்ந்துள்ள ஒவ்வொரு பொக்கிஷமாகும். நமது குலாபிவிர்த்தி விஷயமாக, ஒவ்வொரு குலாபிமானியும் பரமானந்தத்துடன் அவைகளைப் படித்தறிதல்வேண்டும். கா. கோபால நாயகர் என்ன, கா. அண்ணுசாமி நாயகர் என்ன, திரு. எட்டியப்ப நாயகர் என்ன, பு. தியாகராய நாயகர் என்ன, ர. வெங்கடசாமி நாயகர் என்ன, கூ. அய்யாசாமி பிள்ளை என்ன, தி. அய்யாக்கண்ணு நாயகர் என்ன, கா. செல்லப்பநாயகர் என்ன, ராய்பகதூர் ஆ. தனகோடி முதலியார் என்ன, ச. சிங்காரவேலு நாயகர் என்ன, கா. ஆறுமுகநாயகர் என்ன, கா. கோ. பலபத்திர நாயகர் என்ன, வெளியூர்களிலுள்ள அனந்தம் குலவிளக்குகள் என்ன,—இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தில் சிறந்த குலாபிமானி

யாவர். இக்குல சிரேஷ்டர்களது குலாபிமானச் செயல்க
நாம் எக்காலத்தில்தான் மறக்கக்கூடும்? அவர்களைப்பற்
நினைக்குந்தோறும் குலாபிமான அமிர்தம் சுரந்துகொண்
டிருக்கிறது.

இத்தகைய க்ஷத்ரியவம்சச் சிரோமணிகளின் சற்கரும
ங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவதனுல் தான் நாமும் நம
பின் சந்ததியாரும் விருத்திக்குவரவேது இருக்கிறது. குலா
மானப் புண்ணியம் புரிந்து, புகழுடம்பும் மோக்ஷசாம்ராஜ்
யமும் பெற்று, விளங்குவதான குலதர்மத்தைப்போலச் சி
றந்தது வேறொன்றுமில்லையென்ற உண்மையை நம்மவர்களுக்
கெடுத்துக்காட்டும் வழிகாட்டிகளாக ஏற்பட்டிருக்கும் இ
காத்துமாக்கள், அவ்வக்காலங்களில் செய்துவந்த அரிய
ரிய குலக்கைங்கரியங்களை, நாம் அறிந்துகொள்ளல் அத்தி
வசியமல்லவோ? அங்ஙனம் அறிந்துகொண்டால், நமது அ
ஞானம் நீங்கி, அவர்களைப்போல் கடைத்தேறும் மார்க்கமு
ஏற்படலாமே. எனவே, பாஷாஞானம் பெற்ற குலாபிமா
கள், ஆங்காங்கு நிகழ்ந்திலங்கிய குலமணிகளின் சரித்தி
ங்களை வெளியிடக் கங்கணம் கட்டிக்கொள்ளவேண்டும். இ
விஷயமாகச் சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மகாசங்கமும், இ
சங்கங்களும் முற்றும் மௌனம் சாதித்து வருதலான
மிகவும் குறைகூறத் தக்கதும் விசனிக்கத் தக்கதுமான வி
மாகும்.

பல்லவ குலசேகரரது திருச்சரித்திரமாகிய இச்சிறு
தகத்தை எனக்குத் தெரிந்தவரையில் சுருக்கமாகவே தீ
யுள்ளேன். நம்மனோர் ஒவ்வொருவரும் இதை வாசி
அறிந்து, நற்கொள்கைகளையெல்லாம் அனுஷ்டானத்துக்
கொண்டுவரவேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டுதா
சகலருக்கும் உபயோகமாக இருக்கும்படி, கூடியவரை
எளிய நடையிலேயே எழுதப்பட்டிருக்கிறது. எனக்கு இ
றியமையாத பல வேலைகளினிடையே அவ்வப்போது கி
த்த அவகாசத்தில் இப்புத்தகம் எழுதப்பட்டதாதலின்,
றம் ஏதேனும் காணப்படின், மன்னிக்கக் கோருகிறேன்.
புத்தகத்திலுள்ள விஷயங்கள் ஏற்றமாற்றங்கள் பெற இ

பின், கனவான்கள் தயவுசெய்து அவைகளை எனக்குத் தெரிவித்தால், வந்தனத்துடன் அங்கீகரிப்பதன்றி, அவைகளைக் கொண்டு, மறுபதிப்பைப் புதுக்கியும் பெருக்கியும் திருத்தியும் அச்சிடுவேன். இப்புத்தகம் எழுதுவதில் எனக்கு விஷயங்கள் தந்துதவிய எல்லா கனவான்களுக்கும்,—முக்கியமாய் விஷ்ணுபாதசேகரர் வித்வான் ஆ. பசுபதி நாயகரவர்கட்கும், [illegible]குலதிலக[illegible]ராதிபர் இராஜஸ்ரீ ஆ. சுப்பிரமணிய [illegible]ன்பார்ந்த வந்தனத்தைச் செலு[illegible]ன்றேன்.

இப்புத்தகத்தை, வன்னிகுலமித்திரன் பத்திராதிபர் ராஜஸ்ரீ ஆ. சுப்பிரமணிய நாயகரவர்கள் வெளியிடுவதாக யோசித்துக்கொண்டிருந்தார். சிற்சில அசந்தர்ப்பங்களினால் தாமதிக்கையில், எனது இன்னுயிர்த் தோழரான ம-ள-ள-ஸ்ரீ டி. உலகநாதம்பிள்ளையவர்கள் தாம் பிரகடிப்பதாக முன்வந்தார். பிள்ளையவர்கள் பல்லவகுலசேகரர்பால் அத்தியந்த மதிப்பும் விசுவாசமும், அன்னோரது குடும்பத்தின்மேல் மிகுந்த அபிமானமுங் கொண்டவர். பல்லவகுலசேகரரின் புத்திரசிகாமணியான சிரஞ்சீவி லோகநாதனுக்கு உபாத்தியாயராக, நாயகரவர்களாலேயே பிள்ளையவர்கள் நியமனம் செய்யப்பட்டவர். வெகுபணம் செலவிட்டும், மிகு சிரமம் எடுத்துக்கொண்டும், புரூப் முதலியனபார்த்து மிகுந்த உதவிசெய்தும், இப்புத்தகத்தை வெளியிலவச்செய்தவரும், எனது நண்பசிகாமணியும், பரோபகாரம், தயாளகுணம், விசாலமான புத்தி, நன்னடக்கைமுதலியநற்குணங்கள் பெற்று விளங்குபவரான டி. பிள்ளையவர்களுக்கு எனது மனமுவந்த நன்றி என்றும் மறக்கற்பாலதன்று.

வ. ஆ. [illegible],
[illegible], சென்னை,
30, ஜனவரி 1917.

இங்ஙனம்,
தாழ்மையுள்ள,
கோ. நா. குப்புசாமி வர்மா.

# விஷய அட்டவணை.


சமர்ப்பணம் ... ... ...
பதிப்புரை ... ... ...
முகவுரை ...

முன்னுரை ...
நாயகரின் பிறப்பும் பாலப் பருவமும் ... 9
நாயகரது வித்தியாப்பியாஸம் ... ... 13
கோபால நாயகரது மரணமும் அவரது குடும்பமும் 18
நாயகரது சுய அதிகாரம் ... ... 23
தண்டவாளச் சாலை ... ... 31
நாயகரது குணாதிசயங்கள் ... ... 41
சங்கமும் நாயகரது குடும்பமும் ... ... 53
நாயகரது சங்கமுயற்சியின் ஆரம்பம் ... 61
நாயகரும் மகா சங்கமும் ... ... 71
நாயகரும் மற்றைய சங்கங்களும் ... ... 82
நாயகரும் பிரசுரங்களும் ... ... 93
வன்னிய உலகமும் நாயகரும் ... ... 102
பொது விஷயங்களில் ஊக்கம் ... ... 112
தினசரியை ... ... ... 121
நாயகரது மரணம் ... ... ... 127
சமயோத்தாரக்கிரியை ... ... 135
முடிவுரை ... ... ... 144
பாக்கள் ... ... ...

பல்லவ குலசேகரர்

# கா. கோ. பலபத்திர நாயகர் அவர்கள் சரித்திரம்.

## முன்னுரை

சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மகாசங்கத்தைப் பெற்றுப் பாலூட்டித் தாலாட்டிப் பாராட்டிச் சீராட்டி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தவரும், வன்னிய உலகத்தார் பழமைபோல் முன்னிலையடைய உடல் பொருள் ஆவி ஆகிய இம்மூன்றையும் அர்ப்பணம் செய்தவருமாகிய "வன்னிகுலோத்தாரணர்" கா. கோபாலநாயகர் அவர்கள் இவ்வுலகினின்றும் மறைந்ததுபற்றிக் கிளம்பிய விசனக்கொதிப்பு இன்னும் ஆறி அடங்கியபாடில்லை. அவருக்குப் பின்பு தேகவியோகமான நமது குலாபிமானிகள் பலரும் நம்முடைய வியாகுலக் கடலின் எல்லையை விரித்தே செல்லலாயினர். இவ்வாறாக அப்போதப்போது உண்டான துக்ககாலங்களைச் சுலப சாத்தியத்தில் பறக்கடித்து, "நம் ஜாதி விஷயமான எக்காரியத்திலும் நான் உடன்பட்டு, முன்னின்று, மனப்பூர்வமான அன்புடன் செய்யத் தயாராயிருக்கிறேன்; நீங்கள் மனங்கலங்க வேண்டியதில்லை" என்று உறுதியான ஹிதவார்த்தைகளுடன் ஆறுதல் சொல்லி, சொல்லியவண்ணம் செய்து, நமக்குத் தீர வீர தைரிய உற்சாகாதிகளை உண்டாக்கியவர், நம்மில் நடுநாயகமாய் விளங்கிக் குணக்குன்றாய் ஜொலித்த குல சிகாமணி "பல்லவ குலசேகரர்" கா. கோ. பலபத்திர

நாயகரன்றோ? இத்தகைய மகான் நாம் சிறிதும் எதிர்பாராதபடி நம்மைவிட்டுச் சட்டென, அகன்றாரெனின், அதனால் நம் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருக்கும் மனத்துயரின் ஆழத்தை அளந்து செப்பத்தரமுள்ளவர் யாவரே!

க்ஷத்ரிய குலம் தழைத்தோங்குதற்கு வேண்டிய உதவி செய்யக் கிருபாநிதியாய் விளங்கிய கூ. கோபால நாயகர் அவர்களுக்குத் தப்பாக்ஷி வருஷத்தில் பீரங்கியெனப் பிறந்த புதல்வரான நம் நாயகர் அவர்கள் தமது தந்தை காலத்துக்குப் பின்பு மகாசங்கத்தின் சகல காரியத்துக்கும் உடனிருந்தும், முன்னின்றும், அச்சங்கம், சிறிதும் சோர்படையவொட்டாமல் தாங்கியும், தூண்டியும், "இன்னேனைய சங்கம் வேறொன்றுமில்லை" யென யாவரும் போற்றி ஆச்சரியப்படுமாறு அவ்வளவு விர்த்திக்குக் கொண்டுவந்தார். அச்சங்கத்தில் பிரதிசகாரியதரிசி, பொக்கிஷதாரர் என்ற இரண்டு அபாரமான உத்தியோகங்களை வகித்துச் சங்கத்தைப் பிரகாசிக்கச்செய்தார். மகாசங்கத்தைச் சேர்ந்த இரண்டொரு பள்ளிக்கூடங்களுக்கு மானேஜராக இருந்தார். சங்க விஷயமாகவும் குலாபிவிர்த்தியின் பொருட்டும் வெளிச்சென்று, வன்னிய நாட்டினருக்கு உற்சாகத்தை உண்டாக்கி, நம் குலத்தைக் குன்றின் மேலிட்ட தீபம்போல் விளங்கச்செய்ய எவ்வளவும் பின்னடையார். அது விஷயமாக ஏற்படும் திரவியச் செலவு, சரீரப்பிரயாசை முதலியன எவற்றையும் ஒரு பொருட்படுத்தார். மகாசங்கம் என்ற படரும் கொடிக்குக் கொழுகொம்புபோல் நின்றார்; அச்சங்க விளக்குக்கு ஒரு தூண்டுகோலானார். பின்னும் அம் மகாசபைக்கு ஓர் ஊன்றுகோலெனவே பெரிதும் உபகரித்து வந்தார். வன்னிகுலோத்தாரணர் காலத்தைக்காட்டிலும் பல்லவகுலசேகரர் காலத்தில் சென்னை வன்னிகுலக்ஷத்திரிய

மகாசங்கம் அன்னிய உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள சின்னஞ்சிறிய கிராமங்களிலும் புகுந்து கண்டோர் வியந்து புகழவும், கேட்டோர் அதிசயத்து மதிக்கவும், பேரும் புகழும் சீரும் சிறப்பும் பெற்றோங்கி விளங்கியதன்றோ? இங்ஙனம் மகாசங்கத்தின் இவ்வளவு கீர்த்திக்கும் காரண பூதராவர் கனம். கா. கோ. பலபத்திர நாயகரவர்களே.

இராஜஸ்ரீ கா. அண்ணாசாமி நாயகரவர்கள் விதைத்ததும் தம் தந்தை வளர்த்ததுமான சங்கச்செடி தளிர்த்து இலை தழைத்துப் பெருமரமாகிப் பூத்துக் காய்த்துக் கனிந்து யாவருக்கும் பயன்படுமாறு எங்கெங்கும் பரவவேண்டுமென்று நமது நாயகர் அவர்கள் ஆசைகொண்டார். சங்க விஷயங்களில் ஈடுபட்டு ஆனந்திக்கும் விசேஷ குணம் இவரிடத்தில் அமைந்திருந்தது. அதனால் குலோபகாரமான எக்காரியத்துக்கும் மிகச் சிரத்தையோடு முன்னின்று உழைத்தார். வெளியூர்க் குலாபிமானிகளுடையவும் சங்கத்தாருடையவும் வேண்டுகோளுக்கிணங்கி, அவர்களது நல்வரவுக்குப் பாத்திரமாகி, அன்னாரது அபீஷ்டங்களைக் குதூகலத்துடன் நிறைவேற்றிவந்தார். நம்மவர் முன்னேற்றத்தின் விஷயமாக எவ்விதக் கஷ்டம் வருவதெனினும் அவருக்குச் சம்மதமே. வன்னிகுல க்ஷத்ரியரின் பூர்வோத்திர நிலைமையை எடுத்துக்காட்டி, அவர்களது ஆசாரங்களை நிலைநாட்டி, க்ஷத்ரியகுல தர்மபரிபாலனங்களையெல்லாம் முன்னிலும் அதிக விர்த்திக்குக் கொண்டுவருவது தமது கடமைகளில் ஒன்றென நினைத்தார். தம் தகப்பனாரைப்போலவே நம் குல கிரந்தங்களைத் தமது சொந்தச் செலவிலேயே வெளிவரச்செய்தார்; வன்னி வம்சத்துக்கு ஆதாரமான பத்திரிகைகளுக்கு உதவி புரிந்தார்; பலமாணவர்களுக்குச் சம்பளம் புஸ்தகம் முதலியவைகள் அளித்து

அநிக உபகாரம் செய்து வந்தார். தம் வம்சாபிவிர்த்தியின் பொருட்டு இவர் செய்த பரோபகார கிருத்தியங்களும் சங்கதந்திரங்களும் மிகவும் பாராட்டத்தக்கன. இவர் அடைந்திருக்கும் கீர்த்தி வேரூன்றி நிலைபெறத் தக்கதான அதியுதாரமான கொடைகள் பல இயற்றியுள்ளார். தமது ஜீவியநாட்களைக் குலாபிமானத்துக்கென்றே நந்தம் செய்து இராஜகுல ரத்தினமாய்த் துலங்கினார். சாணையிற் பிடிக்குந்தோறும் மிகுந்து பிரகாசிக்கும் வயிரமணியேபோல் குணவந்தரான நம் நாயகர் அவர்கள் குலாபிமானம் ஏறஏற மிகப் பொலிந்து விளங்கினார். கொஞ்சகாலத்துக்குள் சிறந்த குலாபிமானத் தென்னுமணிகளுள் ஒருவரென உலகெங்கும் இவர் பெயர் முழங்குதலாயிற்று. தற்காலத்தில் வன்னிகுல க்ஷத்ரியராகிய நம் மரபினரும் சங்கங்களும் அடைந்திருக்கும் பிரசித்தியாவும் இவருடையவும் இவரது பிதாவுடையவும் பெருமிதமுயற்சியின் பயனேயென்று சொல்லத்தகுந்ததாயிருக்கின்றது.

இவர் வன்னியகுல சமூகத்துக்கே ஓர் அரிய அழகிய ஆபரணமென ஜொலித்ததன்றி, ஏனைய சமூகங்களின் நடுவிலும் சிறந்தாருள் ஒருவராய் மிகவும் பிரகாசித்து வந்தார். இவருடைய தயாளம், பொறுமை, முதலிய பாசங்களினால் கட்டுண்டு யாவரும் இவருக்கு வசீகரமாயினர். உதார குணமும், பரோபகார சிந்தையும், இவரிடம் உயர்ந்து தோன்றியதால், எவ்வித தர்மகைங்கரியமும் இவரைக் காணாது போவதில்லை. திரவிய சம்பத்தும் முயற்சியுடைமையும் பெற்று வீரிய தைரிய சௌரிய நேர்மையுடன் பூததயை, பச்சாத்தாபம், நல்லொழுக்கம், மனவுருக்கம் முதலியன சிறந்து விளங்கினமையால் சென்னையில் உள்ள பல சங்கத்தினரும் நம் நாயகரது மெம்பர் ஸ்தானத்தை விரும்பி,

அவருக்கு நல்வரவு கூறிப் புகழ்ந்தனர். மதராஸ் யுனைடெட் கிளப்பில் மாண்புடன் பொக்கிஷதாரராய்ப் பொலிந்ததும், சுகுணவிலாச சபையைச் சார்ந்து சுந்தரமாய் விளங்கியதும், தென்னிந்தியா தேகாப்பியாசச் சங்கத்தில் மேன்மையுடன் ஓர் அங்கத்தினர் ஆனதும் நாம் அறியத்தக்கவைகள். பல காலக்ஷேப சபைகளிலும், சில முற்ற ஒரு மெம்பராயினர். இவரது தெய்வபக்தியையும், க்ஷத்ரியகுல தர்மத்தையும், சன்மார்க்கத்தையும் மெச்சி இவரே கோயில் திருப்பணிகள் நடப்பிப்பதற்குரியரெனப் பலர் வேண்டிக்கொள்ள, அவர்களது விண்ணப்பங்களுக்கு இசைந்து, பல வைணவ சைவக்கோவில்களின் நிர்வாக சபைக்குத் தலைவராகவும், டிரஸ்டியாகவும், தர்மகர்த்தாவாகவும் அமர்ந்து, அத்தியந்த பக்தியுடன் ஆராதனைகளும் உற்சவங்களும் அன்பரும் தொண்டரும் அகமகிழுமாறு செய்வித்து, இவரது புகழ் மேன்மேலும் செழித்தோங்கச் சிறந்து வாழ்ந்தார்.

ஜா. கோ. பலபத்திர நாயகர் அவர்கள் ஓர் அரும் பெரும் குலாபிமானியேயன்றித் தேசாபிமானியுமாவர். நமது தேசம் பலதுறைகளிலும் உயர்வுற்று உன்னதஸ்தானம் அடையுமாறு தம் வாழ்நாள் முழுதும் சித்தம் செய்து, அவ்விஷயத்தில் அநுகூலித்த எக்காரியத்துக்கும் கங்கணம் கட்டிக்கொண்டு, இடையூறு எதனையும் பாராட்டாது விடாமுயற்சியுடன் பாடுபட்டுவரும் தேசாபிமானச் சிரோன்மணிகளைத் தன்னகத்தே அடக்கிக்கொண்டுள்ள நாஷனல் காங்கிரஸ் என்ற மகா சங்கத்தின் ஒப்பற்ற மேன்மையான கருத்துக்களை நமது நாயகர் அவர்களும் தழுவி, அம் மகாசபை உபசரணைக் கமிட்டியின் அங்கத்தினருள் ஒருவராய்ப் பலதரமிருந்து வந்துள்ளார். சில வருடங்களுக்குமுன்னர் தென் ஆப்பிரிக்காவில் நமது சகோதரர்கள்

பட்ட துன்பத்தை நிவர்த்திப்பான் வேண்டிச்சேர்ந்த கஷ்ட நிதிக்குத் தம்மால் இயன்றவரைக்கும் உதவி புரிந்தார். இந்தியாவின் அபிவிர்த்தியையும் முன்னேற்றத்தையும் கோரிய வழிகளிலெல்லாம் இஷ்டங்காட்டினார். மேல்நாட்டுக் கொள்கைகளையும் தற்கால நாகரீகத்தையும் நன்குணர்ந்து, நல்லவை எடுத்து அல்லவை விடுத்துக் கீர்த்தி பெற்றார். ஆசார சீர்திருத்தச் சபைகளது நோக்கங்களின் அம்சங்களைப் பெரும்பான்மையும் அநுசரித்துக் கையாண்டும், சமயம் வாய்த்தபொழுது பிறருக்குப் போதித்தும் வந்தார்.

நம் நாயகர் அவர்களுக்கு லௌகீக வியவகார நிர்வாகத்தில் நல்ல பழக்கமுண்டு. தம் தந்தை இறந்த பிறகு, தமக்கு இருந்த கடனைக் கொடுத்துத் தீர்க்கும்பொருட்டுத் தமது தண்டவாளச்சாலையின் அலுவலை அல்லும் பகலும் கண்ணுங்கருத்துமாய்க் கவனித்துக் கொஞ்சகாலத்துக்குள்ளேயே அக் கடனைக் கட்டிமுடித்தார். புது யந்திரங்களைத் தருவித்தும், வேலையாட்களை அதிகரித்தும், தண்டவாளச்சாலையை விர்த்திக்குக் கொண்டுவந்தார். தகப்பனாரது உன்னத நோக்கங்களை அனுசரித்தே இச்சாலையில் வன்னிய ஜனங்களே வேலைபார்த்து வருவதானது நாயகரது அளவற்ற குலாபிமானப் பெருக்கை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதில் புலப்படுமாறு காட்டுகிறது. இவர் தம் குடும்ப வியவகாரங்களில் காட்டிய கவனம் நன்கு மதிக்கக்கூடியதும், வியந்து பாராட்டத்தக்கதுமே. தமது குடும்பத்தை உன்னதநிலைமையில் வைத்துப்பார்க்கவேண்டுமென்பது இவரது அபீஷ்டங்களில் ஒன்றாகும்.

பல்லவ குலசேகரர் நல்லியல்புகள் இசைந்தவர். உற்சாகம், சாதுர்யம், தைரியம் முதலிய குணங்கள் வாய்க்

தவர். பொறுமையும் நன்னடக்கையும் பெற்றவர். அடக்கமும் பணிவும் அவரிடத்தில் காணப்பட்டன. யாவரையும் மகிழ்விக்கும் நடையினர்; பழிஞராமான சிநேகிதர். அம்மையும் மேன்மையும் உடையவர். பாரபக்ஷமின்றி நியாயமே மேற்கொண்டவர். எம்மதமும் இவருக்குச் சம்மதமே. இவரது உடையுடைமைகள் யாவும் மிக ஒழுங்காயும் பகட்டமாயுமிருக்கும். எல்லாரையும் ரமிக்கச் செய்வதே அவரது விருப்பம். நண்பினரிடத்தில் உண்மையுள்ளவர். அண்டினோரை ஆதரிப்பவர். அவரது நெஞ்சம் மிகவும் இளகுந்தன்மையது. உத்தமகாரியங்களுக்கு உதயஸ்தானம். நன்னெறியைக் கடைப்பிடித்தொழுகினவர். ஈகை பொறுமை என்னுமிரண்டும் இவருடைய விசேஷகுணங்கள். இவரது வாலிபப் பிராயமும், சிறந்த வடிவமும், காம்பீரத்தோற்றமும் எவரையும் கவரத்தக்கன. ஆதிமுதற்கொண்டே இவரிடத்துக் குடிகொண்டு விளங்கிய ஒழுக்கமே சகலருடைய மதிப்பையும் கொண்டுவந்தது. செல்வத்தில் சிறந்த சீமான்களும், மதிவல்ல கல்விமான்களும் விசுவாச நேசராயினர். இவரது அரும் பெருங் குணநிசயங்களை வியந்து ம-ள-ள-ஸ்ரீ சிவராமலிங்கம் பிள்ளை அவர்கள் பின்வருமாறு சுருங்கச்சொல்லி விளங்கவைத்துள்ளார்.

"அருளோங்குஞ் சென்னையினி லரசர்
வன்னிகுலக் கொழுந்தா யவதரித்துப்,
பொருளோங்கிப் புலனோங்கிப் புகழோங்கித்
திகழோங்கிப் புலவர் மெச்சத்
தெருளோங்கிச் செயலோங்கிப் பலபத்ர
நாயகனே சிறந்தா யன்றோ?"

இத்தகைய உத்தமகுணங்கள் உற்றமகானும், சகல ராஜ சின்னங்களோடுகூடினவரும், சிறந்த லௌகிக வைதீக காரியங்களில் பழகிக் கைதேர்ந்த செல்வச் சீமானும், சென்னை

வன்னிகுல க்ஷத்ரிய மகாசங்கத்தின் பல காரியங்களையும் தம் பொருப்பில் மேற்கொண்டு அச்சங்கத்தை அதிக வைராக்கியத்தோடும் அபிமானத்தோடும் பரம உற்சாகத்தோடும் தாங்கிவந்தவரும், வன்னி உலகினோர் முன்னேற்றத்தின் பொருட்டு அகோராத்திரம் குல விர்த்திக்கே பாடுபட்டவரும், மற்றும் தருமப் பொதுக்காரியங்களிலும் சத்கிரியைகளிலும் தமது அருமையான வாணாளைச் செலவழித்தவரும் வன்னிகுலமேதாவியும், வன்னிய சங்கத் தந்திரியும், வன்னியர் அன்னியரால் வாயாரவாழ்த்தப் பெற்றவருமான பல்லவகுலசேகரர் கா. கோ. பலபத்திரநாயகர் அவர்கள் இடும்பிரவேசமாய் மரணமாயது நம் ஒவ்வொருவரையும் திடுக்கிடச்செய்து, விசனசாகரத்தில் நெடுந்தூரத்தே ஆழ்த்தியிருக்கிறது. சிறந்த இலக்கணங்கள் மலிந்து விளங்கிய புண்ணியபுருடரான இவரது சாவு இவரைச் சார்ந்தோருக்கும் வன்னிய உலகத்துக்கும் உண்டாக்கிய கஷ்டநஷ்டங்களுக்குக் கங்குகலரையேயில்லை. "விலையறிய முடியாத மணியே" என்று வாய்விட்டலறினர் ஸ்ரீ வன்னிவம்சப் பிரகாசிகை நூலாசிரியர் இராஜஸ்ரீ அர்த்தநாரீசவர்மா அவர்கள். "இறந்தாரா பிஸ்டர் பலபத்திர நாயகர்!!" என்று கதறினர் வன்னிகுல மித்திரனூர். லையுறு நிலைபாடிய இராஜஸ்ரீ T. C. சிவாநந்தன் அவர்கள்,

"கோபால நாயகன்றன் குலமகனே கீர்த்திமிக்க
பூபாலனென்று நினை புரந்தரனு ரமைத்தனரோ!"

என்று புகழ்ந்து பாடியுள்ளார். இவ்வாறான விஷயங்களை உத்தேசித்தே, "வன்னிகுலத்தினர் தங்கள் மன்னனெனக் கொண்டாடு மகிமை பெற்றிருன்" என ம-ள-ள-ஸ்ரீ ஜெகராவ முதலியார் அவர்கள் தமது சரமகவியில் இசைத்தார்.

நம் நாயகர் அவர்களது மரணத்தைக் குறித்து மிகுந்த அனுதாபங்காட்டியும், அவரது குணவிசேஷங்களைச் சிலாகித்தும், பல ஆங்கிலத் தமிழ்ப் பத்திரிகைகள் எழுதின. சென்னை வன்னிகுல க்ஷத்திரியமகாசங்கமும், மாணவர்களின் சௌகரியார்த்தமாகச் சென்னையில் ஏற்பட்டிருக்கும் வன்னிகுல க்ஷத்திரிய ஹாஸ்டல் சங்கமும் நாயகரது குடும்பத்தாருக்குத் தமது அளவிறந்த விசனத்தைத் தெரிவித்தன. வன்னியநாட்டிலுள்ள பல சங்கத்தினரும், ஆங்காங்குள்ள ஏனைய குலாபிமானச் சிரேஷ்டர்களும் நமக்கு வெகுதூரத்தில் இருக்கின்ற தென்ஆப்பிரிக்கா வன்னிகுல சங்கங்களும் தாங்கள் சொல்லி முடியாவண்ணம் ஆறாத்துயருற்றுத் தங்களது அநுதாபக் கடிதங்களையனுப்பினர். பாவலர் பாமாலை சூட்டினர்; காவலர் ஞாபகச்சின்னம் நாட்டினர்; நாவலர் உபன்னியசித்தனர்; ஏவலர் தேம்பித் திகைத்தனர். இங்ஙனம் சிறப்புடன் முடிந்தது பலபத்திர வள்ளலது வாழ்நாள். இப்பேர்க்கொத்த மகா புண்ணிய சீலருடைய சரித்திரத்தை விரிவாய் உரைப்போம்.

---

## நாயகரின் பிறப்பும் பாலப்பருவமும்

சீர்பூத்த வன்னிகுலம் செய்தவத்தா லவதரித்துச்
சிறப்புற் றோங்கி
ஏர்பூத்த அங்கிகுல விபரமெலாம் உலகறிய
எடுத்துக் காட்டிப்
பேர்பூத்த சங்கமொன்றை நிலைநிறுத்தி நங்குறையைப்
பேசித் தீர்க்கத்
தார்பூத்த மாலபதிசார் கோபால நாயகரின்
தாள்கள் போற்றி" என்று,

கோயமுத்தூர் வக்கீல் ராஜஸ்ரீ ஜீ. வீராசாமிப் பிள்ளையவர்கள் துதிசெய்தும், க்ஷத்திரியர்கள் அனைவரும் பூஜிக்கும்

கலிகால வன்னிகுலச் சற்குருவதார ஸ்ரீமான் வன்னிகுலோத்தாரணர் கா. கோபால நாயகர் அவர்கட்கு, நலமுற்ற கீர்த்தியாலும் நம் குலம்பெற்ற சிரோன்மணியுமான பல்லவகுல சேகரர் கா. கோ. பலபத்திர நாயகர் அவர்கள், தென்னிந்தியாவின் திருமுகத்திலிட்ட திலகமெனவிளங்கி, மாடமாளிகை கூடகோபுரங்கள் நிரம்பி, பூமகட்கு ஓர் அலங்கார மணியேபோல் துலங்கி, நாமகட்கும் திருமகட்கும் நல்லுறைவிடமான சென்னபட்டணத்திலே, மகா உத்தமமான வன்னிகுலக்ஷத்ரிய வம்சத்திலே, திரு அவதாரம் செய்தார். பல்லவ குலசேகரர் வன்னிகுலோத்தாரணரின் முதல் தாரமான ஸ்ரீமதி நாகம்மாள் அவர்களிடத்து உற்பவித்தவர். தாது ௵ தை மீ 8-ந்தேதி சோமவாரம் பகல் 11-மணிக்கு ஜெனனமானார். இவர் தம் குடும்பத்துக்கு ஜேஷ்டபுத்திரராவர்.

---

பலபத்திரநாயகர் அவர்கட்கு க்ஷத்ரியரின் சோடசகிரியைகளுக் கொப்ப ஜாதகர்மம் எழுதுவித்து தானதர்மங்கள் அளிக்கப்பட்டன. பன்னிரண்டாம்நாள் புரோகிதரால் புண்யாஹவாசனம், நவக்கிரகசாந்தி முதலிய கிரியைகளை முடித்துச் சுபமுகூர்த்தத்தில் க்ஷத்ரியருக்குரிய பராக்கிரமத்தைக் குறிக்கும்பொருட்டு கோபால நாயகர் இஷ்டதேவரான விஷ்ணுமூர்த்தியின் எட்டாமவதாரப்பெயராகிய "பலபத்திரன்" என்ற திருநாமமே தம் நாயகரவர்கட்குச் சூட்டப்பட்டது.

**ஆராரோ! ஆராரோ!!**
ஊரார்புகழுவந்த
பூமண்டலந்தனிலுன்
தாமரரை வதைக்கவந்த

**ஆராரோ! ஆராரோ!!**
உருத்ரவன்யகுலவிளக்கே,
புகழ்நாமம் நூன்னிற்க
படையாட்சி கண்வளராய்

என்ற தாலாட்டுப் பாடலுடன் பலபத்திரநாயகரவர்கள் வாழையின் இளங்குருத்துப்போலவும் சுக்கிலபக்ஷத்துச் சந்திரன்போலவும் அருமையோடும் அதி செல்வத்தோடும் வளர்ந்து வந்தார். வேதவிதிப்படி சந்திமிதித்தல், அன்னப்பிராசனம், சூடாகர்ணம் முதலிய சடங்குகள் கிரமமாய் நடந்தன. உற்றார் பெற்றார், உறவினர் நண்பினர் முதலிய அனைவரது அன்புக்குரியராகித் தினைதினை அபிவிர்த்தி யடைய லுற்றும் வனப்புவாய்ந்தும் கண்டோர் மனம் களிக்கச் செய்தார். இங்ஙனம் வளர்ந்து வருகையில் நம் நாயகருக்கு ஏழாவது வயதில் வித்யாரம்பம் செய்யப்பட்டது. இவரது பால்யப் பருவத்திலேயே கோபாலநாயகரவர்கள் விண்ணுலகுசேர்ந்தாராகையால், அவர் இவருக்கு உபநயனம் விவாகாதி முதலிய சடங்குகளைச் செய்வித்தும், "வன்னிகுலம் பெருகவந்த பலபத்திரவேள்" பிற்காலத்தில் செய்துவந்த உதாரகுண சத்கிரியைகளையும் அடைந்த உன்னத மேன்மையையும் கண்டு களிகூர்ந்தும் இருக்கப் பாக்கியம் பெறவில்லை. ஆயினும், இப்பாக்கியம்

> "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோனெனக் கேட்டதாய்."

என்னும் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரது திருவாக்குக் கிலக்காய் நாயகரது தாயாருக்குக் கிட்டியது. அந்த அம்மாள் இன்னும் சுகமாக ஜீவித்துக்கொண்டுள்ளார்.

நாயகர் அவர்கட்கு இரண்டாம் வயதில் பேதியும் வாயுக்கட்டியும் வந்து வெகு அவஸ்தை கொடுத்தனவாம். பின்பு அவர் மரணபரியந்தம் எவ்வித அபாயகரமான வியாதியும் அவரை அணுகியதில்லை. சிலகாலங்களில் சொற்ப

நோயால் வருந்துவதுண்டாயினும் இளமையிலிருந்தே திடம்பெற்ற அவரது தேகம் கட்டுப்பெற்றதாகவே யிருந்தது. ஏனெனில், இவர் சிறுவயதில் விளையாட்டில் அதிக பிரியமுள்ளவரா யிருந்ததால், பல தேகாப்பியாசங்கள் செய்து உரம்பெற்ற உடம்பு பெறலானார். காற்றாடி விடல், பந்தாடல் முதலிய விளையாட்டுகளில் வெகுவாய் நாள் முழுதையும் கழித்து நெடுநேரம் சென்று வீட்டுக்கு வந்த சமயங்களுமுண்டு. இவ்வாறு ஆடிப்பாடி வரினும் எவ்வித துஷ்டச் செயலுக்கும் இவர் மனம் இடங்கொடுத்ததுமில்லை; உடன்பட்டதுமில்லை. இரண்டொரு தடவை தமது தந்தை கண்டித்ததின்பேரில் இவ் விளையாட்டுகளையும் விட்டொழித்தார். ஒன்பது வயதுக்குமேல் விளையாட்டு ஒன்றும் கண்டறியாராம்.

"ஆரியக்கூத்து ஆடினும், காரியத்தின்பேரில் கண்ணாயிரு" என்றபடி கனம் கோபாலநாயகர் அவர்கள் தாம் செய்யவேண்டியிருந்த பல வேலைகளையும் அதி ஜாக்கிரதையோடு கவனித்துக்கொண்டே வந்ததேயன்றித் தமது குமாரர்களின் கல்விவிஷயமாகக் கண்ணும் கருத்துமாகவே யிருந்துவந்தார்; தமது புதல்வரைத் தங்களது இஷ்டப்படி ஆடித்திரிய விட்டுவிட்டவரல்ல. அவர் தம் புதல்வர்களுக்குப் பற்பல படிப்பும் கற்பிக்கலானார். பலபத்திர நாயகரவர்கட்கு அநேகவிதக் கல்வி கற்றுக்கொடுக்கப்பட்டது. இவ்வித அஸ்திவார பலமேதான் நம் நாயகர் அவர்கள் பின்னால் உலக அனுபவங்களைச் சுருக்கில் தெரிந்துகொண்டு, ஜனங்களது நோக்கப்படி காரியப்போக்கை விட்டுப் பிறரைத் தம் வசப்படுத்தி ஜெயம் பெறுவதற்குப் பெரிதும் ஆதாரமாயிருந்தது. எனினும் இவர் பிற்காலத்தில் பிரகாசித்தமாதிரி ஆரம்பப் பிராயங்களில் பிரகாசித்ததாகத் தெரியவில்லை.

சில போலிகள் தொடக்கத்தில் சூரத்துவம் காட்டிப் பிரமாண்டமாய் நடித்துப் பிறகு வரவர மங்கிமங்கிக் கடைசியில் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோவதுண்டு. பலபத்திர நாயகர் அந்தக் கணக்கில் சேர்ந்தவரல்லர். இவருடைய விசேஷ குணங்கள் வருஷத்துக்கு வருஷம் வளர்ந்தும், விவகார அநுபவங்கள் முதிர்ந்தும், யுக்தி யோசனைகள் பலவாறு பெருகிச் சிறந்தும் வந்தன. "சிறுகக் கட்டிப் பெருகவாழ்" என்னும் பழமொழியை நம் நாயகர் அவர்கள் கடைப்பிடித்தவராயினர்.

---

## நாயகரது வித்தியாப்பியாஸம்

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாமென்னு நடுவுநிலைமையாற்
கல்வியழகே யழகு."

என்ற நாலடியாரின் நல்லுரையை உள்ளபடி உணர்ந்தவராகையால், "பாப்பதி கீர்த்திய பாவலர்க்கிபவ"ராகிய கோபாலநாயகரவர்கள் எல்லாச் செல்வத்தைக்காட்டிலும் கல்விச் செல்வத்தையே அதிகம் அளிக்கவேண்டியது அத்தியந்த அவசியமென்ற நியதியைத் தம் புதல்வர்கள் விஷயமாக அநுசரித்தாரென்பதற்குத் தமது செய்கைகளைச் சாக்ஷியம்வைத்துச் சென்றுள்ளார். நம் க்ஷத்ரியர்களில் அநேகர் பணமிருந்தால் போதுமென்றும், படிப்பு அவசியமில்லையென்றும் தப்பிதமாய் எண்ணிவிட்டுத் தம்முடைய மக்களது கல்வி விஷயமாகப் பாராமுகமாய் இருந்துவிடுகின்றனர். இத்தகைய மக்கள் தமது பெற்றோர்களுக்குப் பின்பு அவர்கள் கஞ்சிகுடித்து நெஞ்சமுறித்துக் கஷ்டப்பட்டுத் தேடிவைத்த

திரவியத்தை யெல்லாம் வீண் டம்பத்திலும் துராக்ருதங்களிலும் செலவழித்து ஓட்டாண்டியாகியும், "குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்"பென இகழும் வண்ணம் மதி கெட்டுக் குலந்தரு விதிவிட்டு இழிதொழில்கள் புரிந்தும், தான் தோன்றித் தம்பிரான்களாகத் திரிவது நாம் கண்கூடாகக் கண்ட விஷயம். இவர்கள் தாம் பிறந்த குடும்பத்துக்கும் குலத்துக்கும் அவமதிப்பையன்றோ தேடிவைக்கிறார்கள்! இன்னோரது பெற்றோர்கள் கல்வியாகிய ஞானப்பாலைச் சிறுவயதிலேயே ஊட்டியிருந்தால் இவ்விதக் கொடுஞ் சம்பவங்கள் நிகழுமா?

நம் நாயகரவர்களுக்குச் சிறுபொழுதிலேயே படிப்பு சொல்லிக் கொடுக்கப்பட்டது. அவர் ஒவ்வொரு விஷயத்தையும் நன்றாய்ப் படித்தே வந்தார். தெலுங்கு பாஷையில் தான் வித்தியாரம்பமாயிற்று. இங்கிலீஷும் தமிழும் இதுடன் கற்றுக்கொண்டனர். பின்னர் சமஸ்கிருதபாஷைக்கென்று தனி உபாத்தியாயர் அமர்த்தி அப்பாஷையும் படித்துவந்தார். அக்காலத்தில் விசேஷ சிரத்தையோடும் அதி ஞாபகத்தோடும் படிப்புக் கற்றுவந்ததாக அவரது உபாத்தியாயர் ம-ள-ள-ஸ்ரீ தேவராஜ செட்டியார் அவர்கள் சொல்லுகிறார். சொல்வதெழுதலில் ஒரு தப்பிதமுமின்றி எழுதுவாராம். மற்றப் பாடங்களையும் நன்கு கவனித்து வாசித்துத் தமது வீட்டு உபாத்தியாயர் வந்ததும் ஒப்பிப்பார். பள்ளிக்கூடமுள்ள ஒவ்வொரு நாளும் தாம் ஆஜராகியே இருந்திருக்கிறார். தாம் கற்றவரைக்கும் தெளிவாய் அறிந்து கொள்வது என்பதே அவரது கொள்கை. அவர் உண்மையாகவே கஷ்டப்பட்டுக் கல்வி கற்றுவந்தார். பிற்காலங்களில் அவர், இன்னதேசத்து விளைபொருள்கள் இன்னின்னவென்றும், இன்னதேசத்துத் தலைமைப்பட்டணம் இன்னது

என்றும் சரிவரச் சட்டெனச் சொல்லிவந்ததே தாம் மாணாக்
கராய் இருந்தகாலத்தில் படித்த பாடங்களின் முக்கிய பாகங்
களை நெட்டுருப்பண்ணி மனனம் செய்துவந்தவரெனத் தெரி
யவருகிறது. ஆரம்பத்திலேயே அஸ்திவாரம் பலப்பட்ட
படிப்பு நம் நாயகர் அவர்கட்குக் கிடைத்தது.

பார்க் டவுன் பெத்துநாயகன் வீதியில் சில வருஷங்க
ளுக்கு முன்) ராஜகோபாலப் பிள்ளையவர்கள் ஏற்படுத்திய
பிரைமரிப் பாடசாலையில் பலபத்திர நாயகரவர்கள் ஆரம்பக்
கல்வி கற்றுவந்தார். பிறகு கோவிந்த நாயக[illegible]க்கூடத்
தில் சேர்ந்து தமது படிப்பைத் தொடர்ந்த[illegible] அவர்
அக்கசாலையில் அக்காலத்தில் லோயர் போர்த் பாரம்
என்றழைக்கப்படும் வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தபொ
ழுதுதான் தம் தந்தையாரிடம். "உனக்குத் தொண்டன்
கோபாலன் வன்னியக் கொற்றவன்" இவ்வுலகு நீத்தான்,
நம் நாயகர் அவர்களே குடும்ப விவகாரங்களையும், தண்ட
வாளச் சாலையையும், மற்றுமுள்ள விஷயங்களையும் கவனித்து
நடத்தவேண்டி ஏற்பட்டு விட்டதனால், பாடசாலைப் படிப்பு
இம்மட்டோடே நின்றுவிடவேண்டியதாயிற்று. இல்லையேல்
பலபத்திர நாயகர் அவர்கள் ஓர் பட்டதாரியாகி இன்னும்
பதின்மடங்கு ஒளியுடன் பிரகாசித்திருப்பார் என்பதற்கு
எட்டுணையும் ஐயமில்லை.

பள்ளிக்கூடம் விட்டபின்பு தமது கல்வியை விர்த்தி
பண்ணுவதில் இளைப்பில்லாத முயற்சிசெய்து வந்தனரென்
பது அவரது காரியங்களைக் கவனிக்கின் வெளியாகும். ஒரு
வித்தியார்த்தி பாடசாலையில் எவ்வளவு விர்த்திசெய்துகொ
ள்ளலாமோ அதற்குமேல் எவ்வளவோ மடங்கு தமது படி
ப்பை விர்த்திசெய்துகொண்டார். ஹிந்து, மெயில் முதலிய
ஆங்கிலப் பத்திரிகைகளை அநுதினமும் வாசித்து வந்தார்.

அவரிடம் ஆங்கிலத்தில் சம்பாஷித்தோர்கள் நாயகரவர்கள் ஒரு பி. ஏ. வாக இருக்கக்கூடுமென்று எண்ணினார்கள். தமிழில் விலீலைகளில் யாவருக்கும் சிரிப்புண்டாகுமாறு அன்பாயும் இன்பாயும் அதி வேடிக்கையாயும் பேசுவார். திருத்தமாய்த் தெலுங்கிலும் சம்பாஷணம் செய்வதில் நல்ல பழக்கமுண்டு.

இவைகளன்றிக் கணக்கு, அளவைகள், யந்திர சாஸ்திரம், குடித்தனப்பாங்கு, அரசியல், சித்திரம் முதலியவைகளைத் தமது அனுபவத்தினாலேயே விருத்தியும் கற்றுவந்தார். அவருக்குச் சங்கீதத்தில் அதிகப் பிரியம். தேச விதிகளிலும், கைத்தொழில் சாஸ்திரங்களிலும் அனுபவமுண்டு. சில வேலைகளில் தமது தண்டவாளச் சாலையில் வேலை செய்வோர்களுக்கு இன்னது இன்னவிதமாய்ச் செய்தால் கைகூடுமென்று யுக்தியோசனைகள் சொல்லிவருவார். க்ஷத்திரிய தருமப்படி தனுர்வித்தைக்குப் பதிலாக தற்போது கற்கக்கூடியதான சுதேச அப்பியாசங்கள் பலவற்றையும் ஒரு உபாத்தியாயனை மாதம் 15-ரூபாய் சம்பளத்தில் அமர்த்தி அவரிடமிருந்து பழகி வந்தார். தினந்தோறும் அதிகாலையில் கசரத்து செய்தல், தெண்டால் எடுத்தல், ஜோடிகள் விளையாடல், கர்லாக்கட்டைவீசல் முதலியன செய்வது வழக்கம்.

நம் நாயகரவர்கள் வித்தியார்த்தியாய் அடுத்து வாசித்த ஒவ்வொருவரிடத்திலும் நல்ல பெயரும் கீர்த்தியுமே வாங்கியுள்ளார். உபாத்தியாயர்களிடத்தேனும் மற்றும் எவரிடத்தேனும் பொய்யென்பது பேசார். உபாத்தியாயர்களுக்கும் பெரியோர்களுக்கும் கீழ்ப்படிதலுள்ளவராகவே யிருந்து வந்துள்ளார். தமது ஆசிரியர்களை எவ்விடத்துக் காணினும் அவர்களை வணக்கத்துடன் கும்பிடாமல் போவதில்லை. "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பதற்கிணங்க

பலபத்திர நாயகரவர்கள் பிறந்து பிரகாசித்த பொழுது மிக உன்னதமாய் உயர்ந்து கொழுந்துவிட்டெரிந்த உத்தம குணங்கள் அவருக்கு அப்பொழுதே அமைந்திருந்தன. "பண்ணுளும் மெய்வளர்த்த பலபத்திர நரபதியே" என்று மதுரைத் தமிழ்ச்சங்க வித்வான் செங்கற்பட்டு அரங்கசாமி நாயகர் அவர்கள் தமது கொச்சகக்கலிப்பாவில் பேசியிருக்கிறார்.

கல்வியின் அருமையும் பெருமையும் நன்குணர்ந்தவர் நம் நாயகர் அவர்கள்.

மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு.

என்பது அவருக்கு மனப்பாடமாதலால், கற்றோரிடத்து அத்தியந்த மரியாதை காட்டினார். கல்வியில் உள்ளபடியே அபிருசியுடையவர்களையும், அதைப் பெறுதற்கு ஆசையுடையவர்களையும் அபிமானித்து வந்தார். அவருக்குச் சிநேகரான ஏறக்குறைய எல்லாரும் சாஸ்திர விற்பத்தியும் நன்னறிவும் உள்ளவர்கள். தமது பிள்ளை லோகநாதனைச் சீமைக்கு அனுப்பிக் கல்வியில் தேர்ச்சிபெறச் செய்யவேண்டுமென்று எண்ணியிருந்தார். இன்னும் கொஞ்சகாலம் இவ்வுலகில் வாழ்ந்திருப்பாராயின், இதையும் செய்து, தாம் எண்ணியவாறே பல சத்கருமங்களையும் இன்னிதில் முடித்து, வன்னியவுலகு பெரும்பேருக்கும் அருஞ்செயலுக்கும் உறைவிடமென எவரும் சொல்லுமாறு செய்வித்தேயிருந்திருப்பார். ஓ! வன்னிகுல க்ஷத்திரியகுல கனவான்களே! கல்வியையே உங்களது ஆபரணமாகக் கொண்டு, புத்திசாதுர்யமான தர்மங்களைச்செய்து, என்றே

களும் நம் நாயகரைப்போல் பிரகாசிக்கலாகாதா? இனி யேனும் நீங்கள் வன்னிகுலசேகரரான ஆறுசாமி நாயகர் அவர்களது மெய்க்கண்ட அருள்வாக்கை அநுசரித்து நடப் பீர்களாக.

“ஞானகல்வியே மாந்தரின் கண்ணெனவும்
அஃதிலாதவர் முகத்தில்
அமைந்தவிருகண்களும் புண்களெனவும்போற்று
மறிஞர் ஓதுவர் ஆதலால்,
ஞான சூனியரான கல்வியாங் கண்ணிலா
நம்மவர்கள் குருடுநீங்க
நற்கல்விகற்பித்து ஞானமுண்டாக்ககுல
நாயகரெல்லாங் கூடியே
மானம் வைத்தோர் சங்கம் நாட்டினர் அதனில் அபி
மானம் வைத்தினிது பெறவே
வன்னியர்களே நல்ல கண்ணியர்களே சங்க
வன்னியர்களாக வாரீர்.”

---

## கோபாலநாயகரது மரணமும் அவரது குடும்பமும்

“பத்திநெறி வழுவாரை உபசரித்து மிக்கீந்து பணிவு செய்வோன்” ஆன நம் பலபத்திர நாயகர் அவர்கள் பல வித்தைகளைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்ற அவாவுடனும், தமது தகப்பனாரது பெயரை என்றும் நிலைநிறுத்தல் வேண்டு மென்ற இயற்கைக்குணத்தோடும் நன்குவாசித்துச் செவ் வையாய் விஷயங்களை யறிந்து, நல்ல வித்தியார்த்தியெனவே பேர்பெற்று வந்தார். தம் தகப்பனார் ஏற்படுத்திய ஓ. கோபால நாயகர் அண்டு சன்ஸ், தண்டவாளச் சாலைக்குச் சிலவேளை களில் சென்று அங்கு நடப்பனவற்றைப் பார்த்து வருவார். “பலன்தரு நற்செய்கையைச் சாதிப்பதில் வலன்”

என விஷ்ணு பாதசேகரர் புகழ்ப்பாமாலை சூடிய வன்னிகுலோத்தாரணராகிய தம் தந்தையார் சங்கவேலையாக வெளியூர்களுக்குப் போகும்போதும், சென்னபட்டணத்திலேயே மகாசங்கமகோத்சவங்கள் நடைபெறும்போதும், பல்லவகுலசேகரரான நம் நாயகர் சிலவேளைகளில் அவருடனிருந்து சங்கவேலைகளைப்பற்றிக் கவனித்தும், அவைகளிற் பழகியும் வருவார்.

நமது கோபால நாயகரவர்கள் தம்மிடத்தே உற்பத்தியாகிக் கொண்டுவந்த அபரிமிதமான குலாபிமானமானது இரும்பை இழுக்கும் காந்த ஊசியேபோல் அவரது பால்யப் புதல்வர்களையும், அக்கம்பக்கத்திலுள்ளோர்களையும் அதிவிரைவில் இழுத்துச் சங்கபாசத்தால் கட்டுண்டிருக்கச் செய்தது. "தண்டில் வளையாதது தடிமரமானால் வளையாது" என்பதை உன்னியே, குலாபிமானச் சிங்கமான கோபால நாயகரவர்கள் தம்மக்கட்குச் சிறுவயதிலேயே குலாபிமானப் பாலை வார்த்து வந்தார். இதுவன்றோ குலத்தைச் சிறக்க வைக்கும் குணம். இதன் பயனே பயனாகப் பலபத்திர நாயகர் பல்லவகுலசேகரரானார். இம்மாதிரியே நம் மரபிற் றோன்றிய ஒவ்வொரு தந்தையும் தம் மக்கட்குச் சிறந்த குலாபிமான ரசம் சீருடன் ஊட்டிச் சங்கவியவகாரங்களில் பழக்கி வருவரேல், வன்னிகுலம் நன்குவிளங்கத் தடையிராது.

இத்தகைய குலாபிமானப் பொக்கிஷமானவரும், ஐக்கம், குணாதிசயம், பரோபகார சிந்தை முதலியவைகட்கு உறைவிடமானவரும், வன்னியருக்கும் அன்னியருக்கும் அத்தியந்தப் பிரியமுள்ளவருமான கோபாலநாயகர் அவர்கட்குத் தமது மரணகாலத்துக்குச் சுமார் நாலைந்து வருடங்களுக்கு முந்தியே வந்தணுகிய மதுமேகமென்னும் வியாதி

இப்பொழுது கொஞ்சங் கொஞ்சமாய் அவரை அதிகம் இம்சிக்க ஆரம்பித்தது. ஆயினும் அவர் தமது வியாதியை ஒரு பொருட்படுத்தாது, எப்பொழுதும்போலவே தமது காரியாகாரியங்களைக் கவனித்து வரலானார். சாக இரண்டு மூன்று நாளைக்குமுன் புதவாரத்தன்று தமர்வாயு என்ற ஒரு கொடிய நோயும் அவர் உடம்பில் தோன்றிற்று. இவ் வியாதியையும் சட்டைபண்ணாது, அப்பொழுது நடந்த பல கலியாணங்களுக்கு விஜயம் செய்து, சங்கசன்மானங்களைப் பெற்றும் தண்டவாளச்சாலை சம்பந்தமான வியவகாரங்களை நடத்திக்கொண்டும் வந்தார். வெள்ளிக்கிழமைதினம் மத்தியானம் பகல் போஜனம் அருந்திக் குடும்பத்தாரோடு தமது பிள்ளைபெண்களுக்குக் கலியாணம் நடத்தவேண்டிய சுபகாரியங்களைப்பற்றி வெகு சந்தோஷமாக நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார். பின்னர் பத்திரிகைகளிலுள்ள பல தேசவர்த்தமானங்களை வாசித்துக்கொண்டிருக்கலானார். இச்சமயத்தில் அத்தமர்வாயு அவரை வந்தணுகி மிகவும் வருத்த, சர்வேஸ்வரனை ஸ்மரித்தவராய் எவ்விதத் துன்பத்துக்கும் ஆளாகாமல், அன்று சாயந்திரம் ஆறுமணிக்குப் பரமபதமடைந்தார். தமது மனையாள், புதல்வர் மூவர், புத்திரி, மற்றுமுள்ள பந்து மித்திரர்கள் துயர்க்கடலில்மூழ்கினார்கள். சிலர் கன்றையிழந்த காராவைப்போல் கதறினர்; சிலர் பெருமூச்செறிந்து பேச்சற்றனர். மறுநாள் இச்சேதியைக் கேள்வியுற்ற பந்துமித்திரர்களும், சங்கத்தவர்களும், வன்னியரும், அன்னியரும் சுமார் இரண்டாயிரம் பேருக்குமேல் துக்கசாகரத்தில் ஆழ்ந்துபுடைசூழ்ந்துவர, க்ஷத்ரியருக்குரிய எல்லாக்கொடிகளும் விருதுகளும் விளங்க, பல வாத்தியங்களும் முழங்கச் சகல சடங்கு ஆசாரங்களோடு அவரது தேகத்தைக் காஷ்டத்தில் தகனம் செய்தனர்.

இப்பொழுது நான் சங்கச்செடி துளிர்த்துத் தழைத்து வருகிற சமயம். வன்னிய உலகுக்கு ஆபரணங்களாக விளங்கி, ஒவ்வொரு துறையில் சிறந்தோரெனப் புகழ்பெற்ற டிஸ்ட்ரிக்ட் முன்சிப் க. செல்லய்ய நாயகர் அவர்கள், ராவ்பகதூர் ஆ. தனகோடி முதலியார் அவர்கள், கூ. அய்யாசாமிப் பிள்ளை அவர்கள், பு. தியாகராய நாயகர் அவர்கள், ரா. சுந்தரம் பிள்ளை அவர்கள், தி. ஜயராமன் நாயகர் பி. ஏ. அவர்கள், சு. சிங்காரவேலு நாயகர் அவர்கள் முதலிய பல குல நாயகர்களைச் சங்கவலையில் கட்டி, கா. அனுசாமி நாயகர், சங்க இன்ஸ்பெக்டர் கா. ஆறுமுக நாயகர், ஆசி. இராஜகோபால பூபதி ஆகிய இக் குலாபிமானக் கொழுந்துகளைக்கொண்டு, சகலருக்கும் குலாபிமான அமிர்தம் ஊட்டும்படி செய்வித்து, உள்ளூர் வெளியூர்ச் சங்காபிமானிகள் பலரையும் பந்துக்கட்டுக்குள் ஏற்படுத்தி, "சன்மப்போர்தருக்கு வேரசைவந்தவன் கோபாலனேயன்றி வேறில்லேய" என்றபடி நின்ற கோபால நாயகரவர்கள் இறந்தமையால், வன்னிய சமூகம் அடைந்த துயரத்தை இன்னவாறென்று எடுத்துரைக்க முடியாது. அவரது புத்திரசிகாமணியான பலபத்திரநாயகர் அவர்களால் ஒருவாறு மனந்தேர்ந்து ஆறுதலுற்று, "கோபாலனார் சென்றார்; பலபத்திரனார் தோன்றினார்" என்று நாமெல்லோரும் உரையாடினோம். கொஞ்சகாலத்துக்குள் பல குலாபிமானிகளையும் எமனுக்குப் பறிகொடுத்து ஏங்கி நின்று விசனப்படுகையிலே கண்ணுங்கருத்துமாய், தற்போது "சிந்தாத வன்னியர் தம் கொழுங்குலத்தைத் தனிவளர்த்த" பல்லவகுலசேகரரை எவரும் எதிர்பாராது கைநழுவவிட்டது நம்மவரை எத்தகைய விசனத்துக்குள்ளாக்காது!

சகல காரியங்களையும் புத்தி சாமர்த்தியமாய் ஆழ்ந்த அறிவுடன் நடத்திவந்த கோபால நாயகர் அவர்கள் இறந்த பின்பு, ஒரு பெருங் குடும்பத்தை ஆதரிக்கவேண்டியதும் எவ்வளவோ ஆட்களை வேலை செய்து வரும்படியான தண்டவாளச் சாலையைச் சாதுர்யமாய் நடத்திவரவேண்டியதுமான ஒரு பெரும்பாரம் பலபத்திர நாயகர் அவர்கள் தலையின்மேல் விழுந்தது. அதனால் நாம் பள்ளிக்கூடத்துக்குப் போவதையும் நிறுத்திவிடவேண்டியதாயிற்று. இளம்பிராயத்தில் பிதாவை இழந்து, இப்பேர்ப்பட்ட பெரிய காரியங்களை நிர்வாகம் பண்ணுவது எவ்வளவோ கஷ்டமான காரியம். தமது குடும்பமும் சொத்தும் சிதறுண்டு போகாமல், ஒரு சேரப் பிடித்துக் கட்டியாளப் பிரயத்தனப் பட்டார். முதலில் உண்டாயிருந்த கஷ்டநஷ்டங்கள் கொஞ்சமல்லவாயினும், நம் நாயகரவர்கள் உத்தமகுணங்கள் உற்றவராகையாலும், தமது அனுபோகத்திலும் பல வியவகாரங்களைப் பழகியிருந்தவராகையாலும், தமது குடும்ப பாரத்தைத் அவ்வேளையில் ஈடுகொடுத்துத் தாங்கிவந்தார். பின்னர், காரியங்களையெல்லாம் நிர்மிக்கவும், நிர்வகிக்கவும் சக்தியுள்ளவரானார்.

நம் நாயகர் அவர்கட்கு அவரது தம்பிமார்கள் இராஜஸ்ரீ கெருடபதி நாயகர் அவர்களும், இராஜஸ்ரீ கஜபதி நாயகர் அவர்களும் ஊன்றுகோல்போல் நின்று, குடும்ப விவகாரங்களிலும், தண்டவாளச்சாலை விஷயங்களிலும் உதவிபுரிந்து வந்தனர். கோபால நாயகரவர்களது ஏகபுத்திரியும், நாயகர் அவர்களது சகோதரியுமான தேசியம்மாள், சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மகாசங்கத்துக்குச் சிலகாலம் பொக்கிஷ காரியதரிசியாயும், இப்பொழுது உள்ளூர்க் காரியதரிசியாயுமிருந்துவரும் ஹைகோர்ட் வக்கீல் இராஜஸ்ரீ ந. வரதப்ப

நாயகர், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு 1897-ல் கலியாணம் செய்து கொடுக்கப்பட்டது. இரண்டு வருஷம் கழித்து பலபத்திர நாயக ரவர்கட்குத் திருமணம் நடந்தது. 1904 வரைக்கும் ஒரே குடும்பமாயிருந்து, அவ்வருஷத்தில் பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டது. அதே வருடம் கருடபதி நாயகரவர்களுக்கு முத்தியாலுபேட்டை ராஜஸ்ரீ ராஜகோபால நாயகரவர்கள் குமாரத்தி மாணிக்கம்மாளை விவாகம் செய்வித்தனர். மறுவருஷத்தில் ஜெயபதி நாயகரவர்கள் நம் நாயகரவர்களது பெண்சாதியின் தங்கை ஜானகியம்மாளை மணந்தனர். இவ்வணம் பாகம் பிரிந்துவிட்டதெனினும், சகோதர நேசத்தால் புஜபலம் பெருகுமென்பதைப் பலபத்திர நாயக ரவர்கள் மறக்கவில்லை.

---

## நாயகரது சுய அதிகாரம்

வள்ளி குலோத்தாரணர் இறக்கும்போது பல்லவ குலசேகருக்கு வயது சுமார் இருபது. குலாபிமானமே திருவுரு வெனத் திரண்டு விளங்கிய கா. கோபால நாயகரவர்கள் தம் புத்திரர்களுக்கு உபநயனச் சடங்கு செய்துவிக்கக் கருதியிருந்தும், அதை நிறைவேற்றுமுன்னரே 'காலகதி யடைந்துவிட்டார். அதனால் நம் நாயகர் அவர்கட்குத் தமது விவாக மகோற்சவத்துக்கு முன்புதான் க்ஷத்திரிய மார்க்கர் ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமாய் நடந்தாகவேண்டிய பூணூற் கலியாணம் நிறைவேறியது. இந்து சாஸ்திரப் பிரமாணங்களின்படி வேதாகம கிரமங்களுக்கொப்ப, க்ஷத்திரிய தருமம வழுவாதிருக்க, நம் வம்சத்திலுதித்த ஒவ்வொருவரும்

பூணூல் தரித்துக்கொண்டிருக்கக் கடமைப்பட்டவர்களைவிருக்க, நம்மிற் சிலர் அவ்விசேஷப் புண்ணியார்த்தமான தீலையணியாதிருப்பது எவ்வளவோ பாபகரமான காரியம். இத்ஜாதிக்குரிய ராஜ சின்னங்களொழிந்து, அதனைவரை பில்லாபமின்னம் ஜாதிக்கும் பெரிதும் உழைத்துச் சிறந்த அரும்பெருங் குணசீலர்களாய் விளங்கக்கூடியமைக் காரணத்துப் பேசும் சில போலிவேஷதாரிகள் பேச்சைக் கேட்டுக்கொண்டு, "கெடுத்த நெஞ்சுக் கொடாதிற்றப்பான் கண்டத்தெருவளையில் வழிவிட்டான்" என்னும் பழமொழிக்கு இலக்காகுதல் தகுமோ, க்ஷத்திரியபுத்திரஜ் கிரஹப்பெற்ற நம்மவர் ஒவ்வொருவரும் தம் மக்களுக்கு வித்தியாரம்பஞ் செய்து, கல்வி கற்பித்தும் அட்டபாரம் உபநயனம் முடித்து, குலாபிமான அமிர்தம் ஊட்டி, அரசக் கலைகளுடன் விளங்கச் செய்யவேண்டிய கடன்களைத் தவிர, இலாபிக்கத் தக்கனவாய்ப் புரியக்கூடியன வேறு இல்லையா.

பலபத்திர நாயகரவர்கள் இப்போது இளமைப்பருவம் நீங்கிக் கலியாணத் தோர்வைக்கு வந்துவிட்டமையால், முத்தியாலுபேட்டையில் வசிக்கும் இராஜஸ்ரீ பாபசமுத்திரம் கப்பராய நாயகர் அவர்களது புத்திரி சௌபாக்கியவதியான ஆண்டாளம்மாளோ நம் கதாநாயக சிகாமணிக்கு 1899ம் வருஷம் விவாகம் செய்விக்கப்பட்டது. இத்திருமணப் பந்தரில் லை காவிலாய் வரவழைக்கப்பட்ட கன்னிய பூர்விகர் அநேகர் பல திசைகளிலிருந்தும் வந்து கூடினர். மணப்பெண் மாலையிட்டு, சபையோர்கள் வாழ்த்துக் கூறிச் சேவையிட்டுக் கேட்டவர்கள் "அன்றேகு சபையோரைக் கண்டு, மகனுக்கு செய்ய, ஏன்டிமைத்தனிப் புகழ்கொண்ட வஸ்கரியருக்கு மணனம்" என் மங்களம் பாடினர். தாராமுகூர்த்தமும் மாங்கல்யமுகூர்த்தமும் நடந்தபின்னர், மேற்கொண்டு நடக்கும் அர்ச்சனை,

"மாசாம்பவிக் கிருபையும் திருமாலின் கிருபையுடைய
தேசாபிமானசீ வன்னிய கிருபா எச்சரிக்கை"

என்றுதிய கண்ணிகள் உச்சரிக்கப்பட்டன. இது முடிந்தவுடன், ஸ்ரீ சொர்ண காமாட்சியம்மனுக்கு அபிஷேகாராதனைகள் செய்வித்துச் சந்தனம், பன்னீர், தாம்பூலம், பூச்செண்டு முதலியன வன்னியருக்கும் அன்னியருக்கும் வழங்கப்பட்டன.

"பார் மகிழுமறையவரோர் வடந்தொட்டாட்ட
பரிதிமதி குலத்தவரோர் வடந்தொட்டாட்ட
சீர்பெருகும் வைசியரோர் வடந்தொட்டாட்ட
திறந்திகழ் சூத்திரரோர் வடந்தொட்டாட்ட
ஏர்திகழும் கச்சியில்வீற் றிருக்குமெங்கள்
ஏகாம்பரநாத ருதனின் மேனாள்
ஆர்தமிழ்ப் புலவர்கள் புகழ்ந்துபாடும்
அக்கினிகுல க்ஷத்திரியரே யாயுரசல்"

எனப் பல மங்களப்பாமாலை பாடப்பட்டன. காலைமாலைகளில் ஔபாசனங்கள் நடந்தன. பின்னர் பாட்டுக்கச்சேரி அதி விமரிசையுடன் நடைபெற்றது. மறுநாள் மணமகனும் மணமகளும் ஸ்நானம் செய்து, புதிய ஆடை யுடுத்தி, ஆபரணமிட்டு, பண்டு பலகாரங்கள் புசித்து, வாசனைத் திரவியங்களுடன் மலர்மாலையணிந்து,

உத்தமகுணப்பிடியே—மறை
யோது வன்னிகுலக்கொடியே
சித்தமிருக்கத்தாராய் (நல்லகலவைச் சாந்தணிய)
சதுர்மறையோர்க் கருமையா—உயர்
சற்சன வன்னியராயா
மதகரியேயடைந்தாராய் (நல்லகலவைச் சாந்தணிய)

என்று முகூர்த்தத்துக்குரிய கொனிக்கை விநோதங்களுடன்,

சொற்புலவர் மிடிபகல வுதவு முபகாரா
சுவர்க்கநன்மழுலகிற் செலுத்து மதிகாரா
அற்புதச்சிகாமணி வேகமுறுதேரா
அக்கிருஷ ஆத்ரியகு மார வலங்காரா

எனச் சேடியர் பாடிட, ஆத்ரியருக்குரிய கிரியையெல்லாம் செய்வித்து முடிவாக, நம் பலபத்திர நாயகர் அவர்களது திருமணம் மிகு சிறப்புடன் வெகு காம்பீரமாக நிறைவேறியது. தம்பதிகளைச் சகலரும் ஆசிர்வதித்துச் சென்றனர்.

நம் நாயகர் அவர்களது குடும்ப வாழ்க்கை ஆரம்பமாயிற்று. ஸ்ரீமதி ஆண்டாளம்மாள் அவர்கள் குணவதியான ஒரு குலமங்கை. சுபாவத்திலேயே மிக்க நல்லவர். கல்விஞானம், பெற்று அடக்கமும் ஒழுக்கமும் அமைந்து இலங்குபவர் தர்மத்தில் நிலைத்த சித்தமுடையவர். "அன்னைதயையும், அடியாள் பணியும், பொன்னின் அழகும், புவிப் பொறையும்" முதலிய கல்யாணகுணங்கள் ஒருங்கே பொருந்த விளங்குபவர். இப் பெண்மணிக்குத் தாம் அணியும் ஆபரணங்களெல்லாவற்றிலும் மரியாதை என்ற ஆபரணமே உயர்ந்தது. இம்மாதரசி,

"தொழுது தெய்வம் பராய் மலர் தூவுதல்
பழுதில் கற்புடைப் பத்தினிக் கென்பவே"
"எய்தும் இல்துறந்து ஏகலர் இல்லகல்
வைகுவார் முகம் காணினும் நாம்புவர்"

என்னும் இவைபோன்ற கற்பிலக்கணங்களுடன் திண்மை வாய்ந்து, பதிமாட்சிக்குரிய நற்குணநற்செய்கைகளைக்கொண்டுள்ளார். இப் புண்யவதி தமது அரிய மணாளரோடு உயிரும் தசையும் போலவும், மணியும் ஒளியும் போலவும், மதனும் ரதியெனவே உடல் இரண்டாயினும் உயிர் ஒன்றெனும்

படி மனமொத்து, ஊசியும் நூலும் ஒருவழிச் செல்வது போல இல்லறதர்மங்களை எள்ளளவும் குறைவற நடாத்தி மிகச் சிறந்து பிரகாசித்தவர். எவ்வாறு இவர் தம் கணவராண நம் பலபத்திர நாயகர் அவர்கள் புருஷரில் ஒப்புற்ற நாயகமாய் விளங்கினரோ அவ்வாறே இம்மாது சிரோமணி இணையிலா ஸ்திரி நாயகமாய் விளங்குகிறார். இச் சீமாட்டியருக்கு, தமது புருஷரிடத்தே தோன்றி ஜொலித்த தைரியம், ஊக்கம், குலாபிமானம், உதாரகுணம், தருமசிந்தை முதலிய அரும்பெருங் குணாதிசயங்கள் அஸ்திவாரத்துடன் அமைந்து காணக்கிடக்கின்றன. இத்தன்மைகள் வாய்ந்த உத்தமி, நம் நாயகரவர்கள் குலாபிமானக் கைங்கரியங்களிலும், சங்க காரியாதிகளிலும் விடாமுயற்சியுடன் உழைத்து வந்தபோது, தாமும் உடனின்று தம்மால் எவ்வவ்விதங்களில் உதவிபுரிதல் கூடுமோ அவ்வவ்விதங்களில் மனப்பூர்வமான அன்புடன் ஒத்தாசை செய்துவந்துள்ளாரென்பதில் எவ்வளவும் ஆட்சேபனையில்லை. பல்லவகுலசேகரர் பத்தினியின் மாதிரிகள் ஒவ்வொரு க்ஷத்ரியமகளிரும் பின்பற்றத் தக்கன.

இவ்விதம் சிறப்புற்ற விசேஷ குணங்கள் அமைந்த இல்லாளுடன் அல்லவோ பல்லவகுலசேகரவர்கள் நல்லறங்கள் நடத்தலானார். செம்மனச் செல்வரான பலபத்திர நாயகர் தமது தந்தையார் நடாத்திவந்த தர்மங்களையும், தாம் மேற்கொண்ட கர்மங்களையும் செவ்வனே செய்துவந்தார். தமக்குச் சொந்தமான தண்டவாளச்சாலையை அதிகம் விர்த்திக்குக் கொண்டுவந்ததுமன்றித் தமது கடன்களையெல்லாம் கட்டிவிட்டார். "தாளாளனென்பான் கடன்படா வாழ்பவன்" அன்றோ? இதுவேயன்றிப் புதிய வகாரங்களிலும் தலையெடுத்தே வந்தார். சென்னை வன்னி

குல க்ஷத்திரிய மகாசங்கத்தில் சேர்ந்து அதன் பிரதேசகாரிய தரிசியானதுமுதல் இவரது பெயரும் சமாசங்கத்தின் பெயரும் வன்னிய உலகெங்கும் முழங்கியது. அன்னிய உலகங்களிலும், அவ்வாறே அவர் திருநாமம் பிரகாசித்தது. வெவ்வேறு கருத்துக்களைக்கொண்டு சென்னையில் ஏற்பட்ட பற்பல சங்கங்களிலும் ஓர் அங்கத்தினரானார்; கோவில் மைலாப்பூர் காரியஸ்தர்களில் பிரமுகராயினர், ஹைகோர்ட்டு ஜூரிகளில் ஒருவராக நியமனம் பெற்றும் இல பத்திரிகைகளில் வெளியிட்டுவந்தார்; பல புஸ்தகங்களைப் பிரசுரித்தார். பல நாடுகளுக்குச் சென்றார்; தான தருமங்கள் செய்து வந்தார். பல்லவகுலசேகரரது குணாதிசயங்களைக் கண்டுணர்ந்த பல்லோரும் அவரது அருமையான கீர்த்தியை நாடினர். "செம்மையிற் சிறந்திலகும் அர்த்தநாரீச வர்மத்திலகர்,"

"செல்வநகர்ச் செல்வர்களில் தியாகவானாம்புரியும்
திறமேலோர் தம்மில்
சிறந்தவராய்ப் பேராளிக்கும் பெருமேவியத் தென்னாட்டில்
சிறுபர் வாழும்
அன்னவர்கள் பலகோறு பெற்றியா வாழுங்கே
சுகப் பிரிவில
அன்னவர்க ளெல்லாரும் பாற்றுறின்னும் கருத்த
அன்றும் கொள்கை" [குலர்க்கு

என் கன்றே புகழ்ந்துள்ளார்.

இளையிபானைக்கக்கே இலம்பதபரன கோபால நாயகர் அவர்கள் எல்லாம் அவ்வாறே கருணைநிதியாகி, வன்னிய உலகத்திலே பேரிசைப் பிரகாசித்து வந்தார். அவரது புத்திர ரத்தினமான பலபத்திர நாயகரோ,

"தந்தைக்கு நிகர்வோர் பின்பு தவமுதற்றில்லையென்றார்
வந்தனையவர்க்கு மேவாய் மதியினில் மிக்கோய் நீயே."

எனப்படத்தக்கன்ற வன்னிய உலகமேயன்றி, அன்னிய உலகத்திலும் பல துறைகளில் சிறப்புற்று வாழ்ந்தார். நம் நாயகரவர்கள் தமது குடும்ப காரியாதிகளையும், தண்டவாளப்பட்டறை வியவகாரங்களையும், சற்சங் கைங்கரியங்களையும், இன்னும் இதர வெளி விஷயங்களையும் அவ்வளவு திறமையுடன் பார்த்து வந்ததானது நல்ல குடும்ப சங்க ராஜ தந்திரங்களுடன் ஒரு சிறிய ராஜ்யத்தையே பரிபாலனம் செய்வதை நிகர்த்திருந்தது.

"கற்புடை மனையில்லாள் கவின்பெறும் ஆண்டாளம்மாள்" என வித்வான் பசுபதிநாயகரவர்கள் புகழ்ந்து மெச்சிய நம் நாயகரவர்களது மனைவியார் கல்யாணமான சில வருடங்களுக்குப் பின்னர் "பொற்பினிற் சிலைபோல்" விளங்கும் ராஜாம்பாள் என்ற நாமகரணம் சூடிய புதல்வியை ஈன்றனர். இருவருடங்கள் கடந்து லோகநாதன் என்ற திருநாமம் பூண்ட ஓர் எழில் மைந்தனைப் பெற்றார். ஐந்து வருடங்களுக்குப் பிற்பாடு ஓர் ஆண் குழந்தையும், மறு வருடத்தில் ஒரு பெண் குழந்தையும் பிறந்து கொஞ்ச நாட்களே இப்பூவுலகின்கண் இருந்து இறந்தன. பின்பு 1912-ல் பிறந்து, ராமநாதன் என்ற பெயர் புனைந்து, சிசுவிலேயே உசிதமான நடைபெற்று, யாவரையும் களிக்கச் செய்து, சிறந்தோங்கி விளங்கிய அம்மகவு 1915-ல் ஓர் நாள் சாயந்திரம் விளையாடிக்கொண்டிருக்கையில் தீநெருப்புப் பட்டுக் காயமடைந்ததைப்பற்றி எவ்வளவோ சிகிச்சை செய்தும் பிரயோஜனப்படாது உயிர் துறந்தது நினைக்குந்தோறும் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் வெருத்த மனத்தை உண்டாக்குகின்றது. ஆயின் முற்பிறக்க இருவரால் யாவரும்

ஒருவாறு மனத்தேறுதலடையலாயினர். அழகான வெண்முத்தும் செம்பவளமும் கோத்தாற்போன்றதான இவ்விரு அருமைமக்கட்கும் சம் நாயகரவர்கள் க்ஷத்திரியருக்குரிய *சகல சடங்குகளையும் செய்வித்துச் சிறப்புற்றார். அவர்கட்குப் பற்பல விதப்படிப்புகளும் கற்றுக்கொடுக்கப்பட்டு வருகின்றன. அன்னோருக்குப் பாகும் பருப்பும் பரிந்து இட்டு, பாலும் தெளிதேனும் பண்புடன் வார்த்து, வெல்லமும் வெண்ணெய்யும் வேண்டியது கொடுத்துச், சித்திரப்பட்டு இறுக்கக்கட்டி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வருகின்றனர்.

கனம் பல்லவகுலசேகரர் பலபத்திர நாயகர் அவர்களது ஏகபுத்திரனும் விளங்கும் லோகநாதனுக்கு இப்போது வயது பதின்மூன்று. "வன்னியகுலத்தினர்க்கோர் மணிமுடியென நின்ற" நமது பலபத்திரநாயகரவர்களது குமாரன் "தந்தையறிவு மகனறிவு" என்பதற்கிணங்கச் சங்கதர்மங்களில் பிரவேசித்து, எங்கும் வன்னிகுலம் விளங்கவும், அதன் ஒளி எத்திசையும் வீசவும், தகப்பனாரைக் காட்டிலும் பதின்மடங்கு மனமொழி மெய்களால் விடாமுயற்சியுடன் உழைத்துப் பல பட்டங்களும் பெற்றுப் பிதா, பிதாமகன் ஆன பல்லவகுலசேகரர், வன்னிகுலோத்தாரணர் ஆகிய இன்னோரது நற்பெயரையும் பெரும்புகழையும் நிலைநிறுத்திப் பிரகாசிக்கச்செய்ய முன்வரக்கூடிய நாளை நாம் சதா எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதை உத்தேசித்தே,

"பித்தி யுன்றனுக்கு மிக்க பிரபலனாவான் உன்றன்
மைந்தனென் றுரைப்பனன்னே மகிதலமீது"

என்றனர் விஷ்ணுபாத சேகரரும்.

இன்னனைய மக்கட்குச் சிறந்தனயாவும் அடையும்படி செய்து, தமது குடும்பத்தை மேன்மையான ஸ்திதிக்குக்கொ

ண்டுவரவேண்டுமென்று நம் நாயகரவர்கள் ஆசை கொண்டிருந்தார். அதற்குத் தக்கன இயற்றியே வந்தார். குடும்பப் பாதுகாப்பிலும் மிக்கோன் எனப் பெயர் பெற்றார். தமது குடும்பத்தில் வீண்சலவரம் எதுவும் நேரவொட்டாமல், அதி ஜாகிரதையாய்க் கவனித்து வந்தார். நமது முன்னோராகிய அதிவீரராமபாண்டிய மகாராஜா அருளினபடி, "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்றவாறு பலபத்திர நாயகர் அவர்கள் உற்றார் உறவினர் பந்துமித்திரர் பலருக்கும் வெகுவாய் உதவி புரிந்து வந்துள்ளார். உணவிலார்க்கு உண்ண உணவும், உடையிலார்க்கு உடுக்க உடையும் கொடுத்து ஆதரித்தார். அநேக தர்மங்களுக்கு உபகரித்தார். "தரணியினிற் பல்லறங்கள் தாங்கிய நற்கைகரனே" என்று வித்வான் இராஜஸ்ரீ பு. மு. பாலசுந்தரநாயகரவர்கள் கூறியிருக்கிறார். நம் நாயகரவர்கள் இறந்தபிறகு அவரது குடும்ப விர்த்தியைக்கோரி முன்னுக்கு வந்த கனவான்களின் தொகையே அவர் தம் காலத்தில் எவ்வளவு தர்மிஷ்டராயும், பரோபகாரியாயும் இருந்தனரென்பதைப் பட்டப்பகல் வெட்டவெளிச்சம்போல் காட்டுகிறது. தற்போது அவரது குடும்பப் பராமரிப்பு விஷயமாக, ஸ்ரீமதி ஆண்டாளம்மாளின் சகோதரரும் நாயகரவர்களது மைத்துனருமான இராஜஸ்ரீ க. தங்கவேலு நாயகவர்கள் விசேஷ கவனம் செலுத்திவருகின்றனர்.

---

## தண்டவாளச் சாலை

அங்கு இங்கு எனாதபடி எங்கும் குலாபிமான அருட்பெருஞ் ஜோதியாயும், வன்னிகுலத் தனிப்பிரகாச வள்ளலாயும், சிறந்து விளங்கிய கா. கோபால நாயகரவர்கள்

நாம் செய்த ஒவ்வொரு காரியத்திலும் அளவிறந்த குலாபிமானச் சிந்தையைக் காட்டியுள்ளார். "அருளில்லார்க்கு அவ்வுலகில்லை; பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை" என்ற முதுமொழிப்படி, செல்வத்தின் சிறப்பையறிந்து திரைகடலோடியும் திரவியந்தேடி, நற்குலாபிமான விஷயங்களில் தருமம் புரியவேண்டுமென்று எண்ணிய வன்னிகுலோத்தாரணர் கைத்தொழில் கற்று, குலாபிமானத்தை முன்னிட்டு, தம் மரபினர் பலர்க்கும் ஜீவனோபாயத்துக்குரியதாக இருக்கும்படி, 1884ஆம் மார்ச்சு மீ மூலக்கொத்தளத்தில் "பேசின் பவுண்டிரி" என்று நாமமிட்டு ஒரு தண்டவாளப் பட்டறையைச் சுபதினத்தில் ஸ்தாபித்தார். இதில் வன்னியர் பலருக்கும் வேலை கொடுத்து உதவினர். க்ஷத்ரியகுலச் சிறுவர்கள் அநேகருக்குப் பற்பலவிதக் கைத்தொழில்கள் கற்பித்துக் கொடுத்தார். இவ்வாறு குலாபிமானத்தை யொட்டியே சகல கிரியைகளையும் அவர் செய்து வந்திருக்கிறார்.

கோபால நாயகரவர்கள் தாம் ஏற்படுத்திய தண்டவாளசாலையைத் தினேதினே விர்த்திக்குக் கொண்டுவந்தார். நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட யந்திரங்களைப் பேட்டெண்ட் செய்து கொண்டார். வருஷாவருஷம் சுமார் 2000 ரூபாய் செலவிட்டுப் புது யந்திரங்களும், சாமான்களும் வாங்கி விர்த்திசெய்தார். தமது சொந்த யுக்தியாலேயே சில யந்திரங்களையும், சாமான்களையும் செய்து உபயோகித்தார். சேலம், சைதாப்பேட்டை, மைசூர், பூனா முதலிய இடங்களில் நடந்த விநோதக் கண்காக்ஷி சபைகளில் வைக்கப்பட்ட இவரது சாமான்களின் வேலைத்திறத்துக்கும், உழைப்பாட்டுக்கும் மெச்சி, அவருக்குத் [illegible]த்தனத்தார் வெகுமதி தந்தனர். இவருக்குக் கைத்தொழில் விஷயத்தில் விசேஷ மதிப்புண்டு. சர்க்கார் உத்தியோகத்துக்கென்றே

படிப்பது இலாபிக்கத்தக்கது அல்லவென்பதும், படிப்பாளிகள் வியாபாரம், கைத்தொழில், முதலியவைகளிலும் பிரவேசித்துத் தங்களது சாமர்த்தியத்தைக் காட்டவேண்டுமென்பதும் அவரது கொள்கையாகும். 1895-ல் திரு. எட்டியப்ப நாயகர் அவர்கள் வன்னிய சங்கக்கல்விச்சாலை வருடமஹோற்சவ காலத்தில், அவர் அக்கிராசனம் வகித்தபோது, அடியிற் கண்டவாறு பிரசங்கித்தனர். "நான் ஆதியில் ஏழ்மையான குடியிற் பிறந்து, மிக்க கஷ்டப்பட்டுச் சொற்ப கல்விகற்றுக் கொண்டேன். பிறகு மிஷன் ஸ்கூல் உபாத்தியாயராக விருந்தேன். பின்னர் இரும்பு வியாபாரத்தில் பிரவேசித்தேன். இதில் பல கைத்தொழில்களையும் கற்றேன். எனது சொற்ப சுயார்ச்சிதத்தைக் கொண்டே ஒரு தண்டவாளப் பட்டரையை ஏற்படுத்தினேன். இதனால் நானும் எனது குடும்பமும் பந்து மித்திரர்கள் சுமார் 150 குடும்பங்களும் ஜீவிக்கவில்லையா? ஆகையால் நண்பர்களே! நமது மக்கள் முதலில் கல்வி கற்கவேண்டும், பிறகு வெவ்வேறு தொழில்களில் பிரவேசிக்க வேண்டுமென்பது எனது கருத்து."

"கோபால நாயகர் அண்டு சன்ஸ்" என்ற பேரின் பவுண்டிரித் தண்டவாளச்சாலையை ஸ்ரீராஜஸ்ரீ கோபால நாயகரவர்கள் . மிகவும் விர்த்திக்குக் கொண்டுவந்தார். அவர்காலத்திலேயே இச்சாலையார் உண்டாக்கிய சாமான்கள் சகலரும் மெச்சிக் கீர்த்திவாய்ந்திருந்தன. அவரது அருமைப் புத்திர ரத்தினமான நம் பலபத்திர நாயகரவர்கள் தண்டவாளப்பட்டரையை அதிகம் அபிவிர்த்தி செய்தார். முன்னிருந்த என்ஜினைக்காட்டிலும் மிக்க சக்தியுள்ள என்ஜினை உபயோகிக்கலானார். டர்னிங் மெஷின், அறுப்பு மெஷின், முதலிய பட்டரை யந்திரங்களைப் புதுப்பித்து அதிகரித்

தார். தம் கம்பெனியிலுள்ள இலாகாக்களையும், அவற்றிற்கு வேலையாட்களையும், பிருதியாக நியமித்தார். தண்டவாளச் சாலைக் கட்டடம், ஆபீசு இடம் முதலியவற்றை விஸ்தாரமாக்கினார். கோபால நாயகரவர்கள் காலத்திலிருந்ததைவிடப் பலபத்திர நாயகரவர்கள் காலத்தில் பேசின் பவுண்டிரி ஒவ்வொரு விஷயத்திலும் இரண்டு மடங்கு பெரிதாயது. இராஜாங்கத்தாரின் பாக்டரி ஆக்டை அநுசரித்து வருகிற இந்தத் தண்டவாளச்சாலையில் உற்பத்தியாகும் சாமான்கள் யாவும் சிறு வேலைப்பாடு உடையவைகளாகவும், வெகுகாலம் உறுதியுள்ளவைகளாகவும், நாட்பட நின்று சரிவர உழைக்கத்தகுந்தவைகளாகவும், பலவருஷம் உபயோகிக்கக் கூடியவைகளாகவும், விலை சரசமாயுள்ளவைகளாகவும் இருப்பதினால், இவரது சாமான்கள் சென்னை ராஜதானியிலுள்ள அநேக ஜில்லாக்களிலும், மைசூர்ப் பிராந்தியங்களிலும், தென்னிந்தியாவிலுள்ள இதர நாடுகளிலும், விசேஷமாய் விலையாகிக்கொண்டு வருகின்றன. 1904-ம் வருஷத்தில் பாகம் பிரித்த பொழுது, இச்சாலையை நம் நாயகரே தம்பாகத்துக்கு எடுத்துக்கொண்டாராகையால், அக்காலத்திலிருந்து பேசின் பவுண்டிரி "கோபால நாயகர் அண்டு சன்" என்று வழங்கிவருகிறது.

இப்பொழுது தண்டவாளப்பட்டறையில் அநேக விதச் சாமான்கள் செய்யும் வண்ணம் பற்பல கைத்தொழில்கள் நடந்து வருகின்றன. விநோதமான கரும்பாலைகள், விசித்திரமான எண்ணெய் மெஷின்கள்; ஆச்சரியமான கொட்டை உடைக்கும் யந்திரங்கள், அற்புதமான கவலைகள்; சீமைக் கலப்பைகள், சீரான பம்புகள்; நேர்த்தியான நீலப்பிரசுகள், சித்திரக் கட்டடங்களுக்கு அமைக்கும் தண்டவாளத் தூண்கள், சபாமண்டபங்களுக்கு உதவும் சித்ர விநோதக் கிராதி

கள், பூங்கொடிச் சித்திராலங்கார விளக்குக்கம்பங்கள், பேர் பெற்ற அழகிய பெஞ்சுக்கால்கள், விசாலமான கேட்டுகள், சிங்காரமான படிக்கட்டுகள் முதலிய யந்திரவேலைக்குரிய சர்வவித வேலையும் உற்பத்தியாக்கப்படுகின்றன. சாமான்கள் வேண்டுவோரது மனவிருப்பத்துக் கிசைந்தவாறு, குறித்த காலத்துக்குள் செய்து கொடுக்கப்படுகின்றன. பவுண்டிரியில் வார்ப்பட வேலையும், இராவட்ட வேலையும், தச்சு வேலையும், கடைச்சல் வேலையும், கருமார் வேலையும், கனத்த மெல் வேலையும், யாதொரு குற்றங் குறையுமின்றிச் சகல முஸ்தீப்புகளுடனே அமைக்கப்பட்டிருக்கின்றன. வேலையாளராய் அமர்ந்திருக்கும் பலரும் தத்தம் வேலைகளிற் கைதேர்ந்த கெள்ளுமணிகள். பவுண்டிரியிலுள்ள ஒவ்வொரு இலாகாவுக்கும் மேஸ்திரியும், சாலையில் நடக்கும் சகல தொழில்களை மேற்பார்வை பார்த்துவர, ஒரு சூப்பிரண்டெண்டும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்னோரது பார்வையின் கீழ் பேசின் பவுண்டரித் தண்டவாளச்சாலையில் உண்டாக்கப்படும் சாமான்கள் மேல் நாட்டுக்கம்பெனிச் செய்தொழிலுக்குச் சமதியாக விருப்பதால், சாமான்கள்செய்ய அநேகவிடங்களி லிருந்து கணக்கற்ற உத்திரவுகள் வந்துகொண்டிருக்கின்றன. முனிசிபாலிட்டி, பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட், பெரிய கம்பெனிகள் முதலியன, நம் நாயகர் தண்டவாளச்சாலைக்கு அடிக்கடி ஆர்டர்கள் அனுப்புவதுண்டு. ஒவ்வொரு ஆர்டரும் நன்கு முழுதும் கவனிக்கப்பட்டு, நல்லவிதமாய்த் திருப்தியுண்டாகும்படி, சாமான்கள் செய்யப்படுகின்றன. பட்டறையிலிருந்து சென்ற சாமான்களைப்பழுது பார்ப்பதற்கும், சாமான்கள் விற்பனை செய்வதற்கும், பலவிடங்களில் கிளைச் சாலைகள் ஏற்படுத்தி, வேண்டிய சிப்பந்திகள் நியமிக்கப்பட்

டிருக்கின்றனர். இதனால் வர்த்தகர்களுக்கும், குடிகளுக்கும் அநேக அனுகூலங்கள் உண்டாயிருக்கின்றன. பேசின் பவுண்டிரி, பட்டறையின் வேலைத்திறத்தால் பிரகாசித்தது இருபுறமிக்க, நம் நாயகரது சகோதரவாஞ்சை, பரோபகார சிந்தை, தயாளகுணம் முதலிய விசேஷ குணங்களால், "பொன்மலர் நாற்றமுடைத்து" என்றபடி மேன்மேலும் ஜொலித்துக் கீர்த்திபெற்றது. வர்த்தகமும் பிரபலப்பட்டது.

பலபத்திர நாயகரவர்கள் இயற்கையாகவே பொறுமையும், தயாளமும், அடக்கமும், ஒழுக்கமும் வாய்க்கப்பெற்றவர். அனைவரிடத்திலும் அன்பு பாராட்டுபவர். வேலைக்காரர்களுக்கு அவரிடத்தில் பக்தி விசுவாசம் உண்டாயிற்று. அவர் தமது சிப்பந்திகளையும் மரியாதையான வசனத்திலேயே யழைப்பார். ஆள்களை வைவதும், அவர்களுடைய கூலியைப்பிடிப்பதும், ஆள்கள் வராமல் நின்று விடுவதும், அவர் சாலையினில் இல்லை. சிலவேலைகளில் தமது வேலைக்காரர்கள் தப்பிதமாகச் சில சாமான்களைச் செய்து விட்டாலும் கோபித்துக் கொள்ளமாட்டார். ஆயின் நல்ல புத்திமதி புகட்டுவார். "பொறுத்தார் பூமியாள்வார்" என்ற பழமொழியை முற்றிலும் கடைப்பிடித்தொழுகுவார். அவர்காலத்தில் குறை கூறின ஆட்களே இடையார். ஒவ்வொரு வேலையாளருக்கும் தகுந்த சம்பளம் கொடுப்பார்; வேறு உதவிகளும் செய்வார். காலாகாலம் தெரிந்து லாபகரமான தொழில்களைச் செய்து, தமது தண்டவாளச் சாலையின் உத்தியோகஸ்தர்களுக்கும், வேலைக்காரர்களுக்கும், வேதனமும் கூலியும் வெகுவாய் உயர்த்திக் கொடுப்பார். சாலையிலுள்ள சகலருக்குமே நாயகரவர்களின் பேரில் பக்ஷம் அதிகம். அவர்கள் தங்களது பரிபூரண அன்பைப் பலதட-

லைகளிலும் காட்டி வந்துள்ளார்கள். 1913ஆ அக்டோபர் மீ 8உ ஆயுத பூஜைக்குரிய சடங்குகளைச் செய்வித்து, வள்ளிகுமோத்தாரணர் திருவுருப்படத்துக்குப் புஷ்பாலங்காரம் புரிந்து, தூபதீப நைவேத்தியங்கள் நடத்தி, விசுவாசத்துடன் வந்தனவழிபாடு ஆன பின்னர், பேசின் பவுண்டிரியின் சொந்தக்காரரான நம நாயகரவர்கட்கு யாவிலு மரியாதை செய்து, ஆங்கிலத்தில் எழுதி அழகாய் அச்சிட்ட வந்தனோபசாரப்பத்திரம் ஒன்று வாசித்தளித்தனர். அதன் சுருக்கு வருமாறு:—

வந்தனோபசாரபத்திரம்.

மகா-ள-ள-ஸ்ரீ,

**கா. கோ. பலபத்திர நாயகரவர்கட்கு,**

சொந்தக்காரர்,

மெஸ்ஸர்ஸ். C. கோபால்நாயகர் அண்டு சன்,

பேசின் பவுண்டிரி,

மதராஸ்,

கனம் தங்கிய ஐயா!

தங்களுடைய தண்டவாளப் பட்டறையிலிருக்கும் அடியிற் கையொப்பமிட்ட குமாஸ்தாக்களாகிய நாங்கள், 1913ஆ அக்டோபர் மீ 8-ந் தேதி தசரா உற்சவதினமான இந்த விசேஷதினத்தன்று எங்களது அன்பார்ந்த வந்தனத்துடன் தங்களுக்கு இந்த வந்தனோபசாரப் பத்திரம் வாசிக்கின்றோம்.

எங்களுடைய வேலைப்பாடுகளிலிருக்கும் குற்றங் குறைகளை ஒரு பொருட்படுத்தாது எங்கள் அனைவரையும்

எப்போதும் பாரபக்ஷமற்ற அன்புடன் நடத்தி வருதற்காக நாங்கள் மிக்க வந்தனம் செலுத்துகிறோம்.

திறமைவாய்ந்த எஞ்சினியரும், ஓர்க்ஸ் மானேஜருமான லெப்டினெண்ட், J. புரூக்ஸ் ரிடயர்ட் I. C. D. அவர்களைத் தாங்கள் பெற்றிருப்பதுபற்றி எங்களுக்கு மிகவும் சந்தோஷம். அவர் இருப்பதானது நமது பட்டரைக்கு உண்மையிலேயே அதிகம் நன்மை விளைவிக்கத்தக்கதாயிருக்கிறது. அவரது மேன்மையுற்ற குணமும், மெச்சத்தகுந்த நன்னடக்கையும், மேன்மேலும் உற்சாகம் பெறுமாயின், மிகுந்த பலன் உண்டாகும் என்பதில் சந்தேகமில்லை. அவரிடத்தில் வாய்த்துள்ள இந்த நற்குணங்களே அவருக்கு நல்ல பெயர் சம்பாதித்துக் கொடுத்திருக்கின்றன.

தங்களுக்குச் சந்தோஷகரமான சம்பவங்களே நிகழும் படிக்கும், தமது விசேஷித்த கடாக்ஷத்தைத் தங்கள்மேல் பொழியும் படிக்கும், நீடூழிகாலம் இன்புற்று வாழும்படிக்கும், எல்லாம்வல்ல இறைவனை நாங்கள் அனுதினமும் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்,

தங்களது தாழ்மையுள்ள ஊழியர்கள்,

M. C. பசுபதி பிள்ளை.
T. K. பார்த்தசாரதி முதலியார்.
T. M. தாண்டவராய நாயகர்.
M. ராஜு நாயகர்.
N. V. பார்த்தசாரதி நாயகர்.
S. ஆதிசேஷ நாயகர்.
M. கண்ணபிரான் பிள்ளை.
C. நமசிவாய நாயகர்.

S. கண்ணுசாமி முதலியார்.
N. கோவிந்தராஜுலு நாயுடு.
V. R. சீனிவாச நாயகர்.
S. வெங்கடாசல நாயகர்.
M. நாதமுனி நாயகர்.
S. ராகவலு நாயகர்.
M. N. கிருஷ்ணசாமி நாயகர்.

நமது சங்க காரியங்களுக்கு அடிக்கடி வந்துதவியது இத்தண்டவாளச்சாலைதான். குலாபிமான உருவெனவிளங்கிய கோபால நாயகரவர்களது பிரதிபிம்பங்களென்ன இச்சாலைஉத்தியோகஸ்தர்கள் சங்க காலங்களில் திகழ்ந்தனர். கா. கோபால நாயகரவர்கள் காலத்தும், பலபத்திர நாயகரவர்கள் காலத்தும், தண்டவாளச்சாலையின் வன்னிகுல காரியஸ்தர்கள் மகாசங்க வருடமகோற்சவ காலங்களில், மிகுதியும் உதவி புரிந்து வந்தனர் என்பதைப் பிரதி வருஷ மகாசங்க ரிப்போர்ட்டிலும் பார்க்கக் காணலாம். சங்க வருஷோற்சவ காலத்துக்குச் சில நாட்கள் முன்னும் பின்னுமாக, பட்டரை வேலையில் அமர்ந்திருக்கும் சில உத்தியோகஸ்தர்களுக்குச் சங்கவேலையே வேலையாகவிருக்கும். சங்க உற்சவத்துக்கு வேண்டிய பல சாமான்களும்பட்டரையிலிருந்தே போகும். வன்னிகுலோத்தாரணருக்கும் பல்லவகுல சேகாருக்கும் சாலை வேலையும் சொந்தவேலைதான்; சங்க வேலையும் சொந்த வேலைதான். இந்தத்தண்டவாளச்சாலையைச் சங்கப்பட்டரை எனினும் பொருந்தும். இத்தகைய பேசின் பவுண்டிரிச்சாலையைப் பட்டரை ஆரம்பத்திலிருந்தே, தமது இளந்தை முதற்கொண்டு, பவுண்டிரியில் பழகிக் கோபாலப் பலபத்திர நாயகரவர்களிடமிருந்து முழு நம்பிக்

கையும் அதிவிசுவாசமும் பெற்றுச் சாலையின் மானேஜரா யிருந்து, பவுண்டிரி விவகாரங்களை நடத்துந்திறமை வாய்ந்த இராஜஸ்ரீ M. C. பசுபதி பிள்ளையவர்கள் தற்போது ஏஜண்டு ஆகித் தண்டவாளச்சாலை ஆபீஸ் அலுவல்களைப் பார்த்து வருகிறார்.

இப்பொழுது தண்டவாளச் சாலையில் வேலை நன்றாய் நடந்து வருகின்றதென்று கேள்விப்படுவது சந்தோஷகரமானதே. நாயகரவர்கள் இறந்த பிறகு, சிற்சிலகாரணங்களால் ஏற்பட்ட அசந்தர்ப்பங்களினால் கொஞ்சம் நஷ்டம் வருமென்று தோன்றிற்று. ஆயின், சுமார் பன்னிரண்டு வருஷங்களாக நாயகரவர்களுடனே யிருந்து, அந்தரங்க விஷயங்களிலும் அவருடன் கலந்து, நாயகரவர்களால் அத்தியந்த விசுவாசத்துடனும் விசேஷமதிப்புடனும் நடத்தப்பட்டு, "பலபத்திரரில்லாத ஜமீன்தாரில்லை; ஜமீன்தாரில்லாத பலபத்திரரில்லை" என்று சொல்லுமாறு அவ்வளவு நெருங்கிப்பழகிய அவர்தம் ஆருயிர்த் தோழரான ஜமீன்தார் அவர்கள் பல்லவகுலசேகரரது குடும்ப அபிவிர்த்தியை முன்னிட்ட வியவகாரங்களில் கண்ணும் கருத்தும் செலுத்தலானார். மைசூர் சாமராஜநகரம் ஹெப்பசூரில் வசித்து, மைசூர் மகாராஜா அரண்மனையின் ஓவர்சியராயிருந்த பிரம்மஸ்ரீ, K. அழகிங்கராச்சாரியார் அவர்களது குமாரரான பிரம்மஸ்ரீ, நரசிப்பூர் கிருஷ்ணையங்கார் அவர்கள், ஜமீன்தார் அவர்களது வேண்டுகோளின்படி, பட்டறையின் மானேஜராக நியமனம் பெற்றார். ஐயங்கார் அவர்கள் யந்திர சாஸ்திரத்தில் நல்ல பழக்கம் பெற்றவர். அவர் முன்பே நாயகரவர்களது சாலையில் இருந்தது பற்றியும், நாயகரவர்கள்மேல் அவருக்கிருக்கும் அபிமானம் பற்றியும், தாம் ஏற்கனவே யிருந்துவந்த சாலையில் கிடைக்கும் சம்பள அபிவிர்

த்தியையும், ஒருபொருட்படுத்தாது, தம் நாயகரவர்களது பட்டரையைச்சேர்ந்து வெகுதிறமையுடனும், மிகு சிக்கனத்துடனும், தருமானவைகளைச் செய்து, தமது வேலையைச் செவ்வையாய்ப் பார்த்துக்கொண்டு வருகிறார். ஜமீன்தார் அவர்கள் பட்டரைக்காரியாதிகளை மேற்பார்வையிட்டும் வருகிறார். இங்ஙனமாக அவர் பலபத்திர நாயகரவர்களது குடும்பவிர்த்தியைக் கோரியவழிகளிலெல்லாம் ஈடுகொடுத்துச் சலியாமுயற்சியுடன் கவனித்துவருதலானது பெரிதும் ஆனந்திக்கத்தக்கதும், அதிகம் சிலாகிக்கத்தக்கதுமே.

---

## நாயகரது குணாதிசயங்கள்

"நல்லவகுலமே விடுமவர் கட்குறு கட்டமுறச்
செல்லவகுலமா மலைதுகள் பட்டெழச் செய்திடுவோய்
வில்லவ குலசே கரன்வரு நற்குல மேவிநெம்
பல்லவ குலசே கரபல் பத்திரப் பார்த்திபனே.

என்றிவ்விதமா—நின்றிவருஞ் சொல
குன்றொளிர்தீப—மென்றொளிர்வோனே"

என்று இவ்வாறு நமது குலாபிமானக் கொழுந்தாகிய பலபத்திர நாயகர் அவர்களை விஷ்ணுபாதசேகரர் வன்னியமாசங்க வைபவ சூடாமணியில் விசேஷித்துப் பாடியுள்ளார். இவ்வளவு புகழ்பெற்ற பல்லவகுலசேகரர் தம் தந்தையைப் போலவே எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் சலியாதகுலாபிமான முன்னவர் வம்சாபிவிர்த்திக்குரிய சகல கைங்கரியங்களையும் கிஞ்சிற்றும் மனங்கோணாது, அகமகிழ்ச்சியுடனும் முகமலர்ச்சியுடனும் செய்து, அனைவருக்கும் ஆனந்தத்தை உண்டாக்கி, அன்னோரது அன்பும் மதிப்பும் ஒருங்கே கிடைக்கப்பெற்றவர். குலாபிமானத்துக்கு வழியம் செய்வதிலும், சங்கத்துக்குத் தொண்டு புரிவதிலும், நம்

நாயகரவர்கள் பேரவாவுடன் சந்தோஷம் கொள்வார். அவரது நடவடிக்கைகளைக் கண்டு, நம் கனவான்களில் பலருக்குத் தானாகவே குலாபிமானம் சுரந்தது. அவர்பால் குடிகொண்டிருந்த குலாபிமானத்தின் வாசனை அடித்த இடங்களிலெல்லாம் சங்கங்கள் முளைத்துக் கிளம்பின. அவைகளுக்கும் தம்மாலியன்ற உபகாரத்தை அப்போதப் போது செய்தே வந்தார். தமது உயர்ந்த குலத்தின் மேன்மைக்குக் குறைவுவரும்படியாக நிந்திப்பவர் எவராயினும் சரியே, அவரிடம் நம் குலத்தின் நன்மையின் பொருட்டுப் போர்புரியப் பின்னிடமாட்டார். க்ஷத்ரியகுலம் தழைத்துப் பிரகாசிக்கவேண்டுமென்கின்ற நன்னோக்கம் அவரது இருதயத்தில் சதாகாலமும் குடிகொண்டேயிருந்தது.

ஜாதியபிமானக் களஞ்சியமாகிய பல்லவகுலசேகரர் நல்லவளர்ச்சியும் புஷ்டியும் பெற்று, மதயானைக்குட்டியை நிகர்த்தவர். பொலிவுற்ற முகமும், வலிவுற்ற தேகமும் பெற்றவர். இருண்டகுழலும், திரண்டதோளும் கொண்டவர். அகன்றமார்பும், பரந்த நெற்றியும் உடையவர். அவருடைய கண்கள் உருண்டுகருத்திருக்கும்; மீசை திரண்டு சிறுத்திருக்கும். அவர்தம் திருமேனி கேவலம் கன்னங்கருப்புமல்ல; மிகவும் செக்கச் சிவப்புமல்ல; மனோகரமான மாநிறமானது. நம் நாயகரது குரல் கர்ஜனைபோன்றது. மொழியோ கரும்பு; நகையோ அரும்பு. அவரது உருவம் அதிக நெட்டையுமன்று; மிக்க குட்டையுமன்று; பருமனும் நடுத்தரமானது.

நம் நாயகரவர்கள் எல்லாருடைய மனதையும் கவர்ந்திரமிக்கச்செய்யும் காம்பீரத்தோற்றமுடையவர். அவர் எவ்வாறு உடுக்கினும், பெரிய மனுஷத்தராவே கொண்டு பிரகாசிப்பார். எப்பொழுதும் சுத்தமான ஆடையுடனும், விலை

யுயர்ந்த உடையுடனுமே வெளிக்கிளம்புவார். அவர் அணியும் உயரமான தலைப்பாகையும், நீளமான சட்டையும், வெண்மையான துணியும், அழகான ஆங்கிலப் பாதரக்ஷையும், பெரும்பாலாரது கவனத்தைத் தம்மிடத்தேயிழுக்கும். அவர் தமது கையில் ஒரு பெருந்தடியை வைத்துக்கொண்டிருப்பார். அது அவரது சுந்தரத் தோற்றத்தை மேன்மேலும் உன்னதப்படுத்தி பெருந்தன்மையையும் வசீகரத்தையும் விர்த்திபண்ணுவதாயிற்று.

அவருடைய விசாலமான நெற்றியில் பட்டையான வடகலை நாமம் ஜொலிக்கும்; கைவிரலில் மோதிரமொன்று இலங்கும். சட்டை முதலிய உடுப்புகள் களைந்திருக்கும்போது, அவரது பரந்த மார்பில் நிறைந்த பூணூல் சிறந்து விளங்கும். சாதாரணமாகத் தூய வெள்ளைவேஷ்டிதான் அரையில் கட்டிக்கொண்டிருப்பார். பட்டறையில் தமது அலுவலைப் பார்க்கும்போது நிஜாருடனிருப்பார். அநேகமாய் இங்கிலீஷ் மோஸ்தரா உடுப்புகளே அவர் போடுவது வழக்கம். தற்கால நவீனநாகரீகத்திலும் தேர்ச்சி பெற்றார்; இந்து மதமுறை பிறழாதவரென்றும் கீர்த்தியுற்றார். வைணவ சாம்பிரதாயத்தை யொட்டியே குடுமி முதலியனவும் வைத்திருந்தார். இவர் வெளியில் பிரசன்னமாகும்போது, மஹாவிஷ்ணுமூர்த்தியே திரு அவதாரம் செய்து வந்ததுபோல் தோற்றும். சேலம் அர்த்தநாரீச வர்மா அவர்கள் பின்வருமாறு வர்ணிக்கிறார்.

கருணைமிக திருவிழியும் கண்ணபிரா
னெனப்பொலியுங் கரிய மேனி
பெருமிதமு மின்சொல்லும் பீதிக்லா
டையுந்தண்டும் பெரியோர் போற்று
மருங்குணமு மூர்த்தவபுண் டாயிலகு
வதனமு மிக்கவமைந்த வுன்றான்

திருவுருவை யினியொருகால் சேவைசெய்ய
வருளாயோ திரும்பாய் கொல்லோ.

கனம் பலபத்திர நாயகரவர்களது மேற்புறம் எவ்வாறு அழுக்கற்ற பரிசுத்தமான ஆடையாபரணங்களால் உன்னதமாய் விளங்கியதோ, அவ்வாறே உட்புறமும் மாசுமறுவற்று மேன்மையான எண்ணங்களாலும் உயர்தரக் கருத்துகளாலும் கண்ணியமாய் மின்னியது. தானம், தருமம், தயை, இரக்கம், ஆராதனை, நல்லொழுக்கம் முதலியன குடிகொண்ட சுத்த மனதுடையவர். பாரபக்ஷமென்பது என்னளவுமில்லை. சாதக பாதகங்களையும், பந்தப் பிரதிபந்தங்களையும், சீர்தூக்கிப் பார்த்தே எக்காரியமும் செய்வார். மனச்சான்றுக்கு விரோதமின்றி நடப்பவர்; உண்மையாகவும் நீதியாகவு மிருப்பவர். அநாதைகளை ஆதரிப்பவர். நம்பினோரைக் கைவிடார்; மூண்டினோரை மூக்கறுக்கார். நம் நாயகரவர்கள் கௌரவகுணங்கள் வாய்ந்தவராகையால், ஒருவரைப்பற்றி அவதூறு பேசுவதாவது, ஒருவரிடத்து விரோதங் கொள்வதாவது, அவரிடத்தில்லை. தெரிந்து குற்றம் செய்தவர்களை ஒறுப்பினும், தெரியாது குற்றஞ்செய்து அநுதபிப்பவர்களைப் பொறுப்பதே தமது கடமையாகக் கொண்டிருந்தார். எவரிடத்தும் அல்லவை நீக்கி, நல்லவை கொண்டாடுபவர். பழிக்குப்பழி வாங்கும் குணம் அவரிடத்தில் கிடையாது. மற்றவர்கள் செய்யும் தப்பிதங்களையும் மன்னித்தலான குணம் இவரிடம் சிறந்ததாகும். பெரியோராயினும் சிறியோராயினும் எவர் எதைச்சொல்லினும், அதை யெல்லாம் செவிகொடுத்துக் கேட்பார். தாம் பிடித்த முயலுக்கு மூன்றேகாலென்று அகம்பாவங்கொண்டு, தம் அபிப்பிராயத்தையே பெரிதெனச் சாதிக்கார். நியாய ஆதாரமுடைய அபிப்பிராயமே கொள்வார்.

எதையும் உண்மையென்று ஒப்புக்கொள்ளாமல், பலவிதத்திலும் விசாரணைசெய்துபார்த்தே ஒரு முடிவுக்கு வருவார். தமக்கு நியாயமென்று தோன்றியதினின்றும் ஒருபோதும் பிறழமாட்டார்.

நம் நாயகரவர்கள் ஆரம்பசூரத்தனமாக ஒருகாரியத்தையும் செய்வதில்லை. ஒவ்வொன்றையும் நிதானித்து ஆலோசித்துச் சீர்தூக்கிக் குறிவைத்தபடி செய்து முடிப்பது அவரது வழக்கம். தம் பொறுப்பிற் கொண்ட காரியத்தின் பேரில் பிரயாசையும் கவலையும் எடுத்துக்கொள்வார். விடாமுயற்சியும் பிடித்த காரியத்தைச் சாதிக்கும் குணமுமுடையவர். மகா தைரியசாலி; பகைவனுக்குப் பின்வாங்காதவர். உறுதியும் மதிப்பும் பெற்றவர். பராக்கிரமும், உதாரகுணமும் பொருந்தியவர். கௌரவமும், செல்வமும் படைத்தவர். தன்னடக்கம், பரநேசம், ஜீவகாருண்யம், ஈஸ்வரபக்தி முதலிய நற்குணங்கள் அவரிடத்திற் பிரகாசித்தன. மனோநெகிழ்ச்சியும், ஜனவாஞ்சையும் கொண்டவர். குழந்தைகளிடத்திலும், ஜீவப்பிராணிகளிடத்திலும், விசேஷ அன்பும் அபிமானமும் பாராட்டுபவர். நீதிவானாய்ப் பிறர் க்ஷேமத்தில் அக்கறை கொள்ளும் சுபாவமுடையவர். தனவந்தன் வறியன் என்ற பேதமின்றிச் சமம் நீதி என்பனவற்றை உன்னி, யாவரையும் ஒருபடித்தாய் நடத்தி வருவார். நம் மரபினோர் ஏழைகளாயினும் பணக்காரராயினும் அவர்களுடன் கலந்து சாப்பிடுவது அவருக்கு நியதியாக இருந்தது. அவர்கள் பரிந்திட்டது கூழேயாயினும், அறுசுவையோடு நால்வகையுண்டியும் அமர்ந்து இட்டனரென்று அன்புடன் அருந்தி அகமகிழ்வார்.

பொறுமை, தயாளம் என்பன அவரை எஞ்ஞான்றும் சிறப்பிக்கும். இவ்விரு குணாதிசயங்கள் மிகுந்து விளங்

கின. சிலர் தங்களுக்குள்ள பணச் செருக்கினாலும், வித்தியாமமதையாலும், அல்லது வேறுகாரணங்களாலும், தமது சுய அறிவை இழந்து, சகல துன்பங்களையும் விளைவிக்கும் கோபத்துக்கு ஆளாகிப் பொறுமையை யறவே விழுங்கி விடுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் விஷய விசாரணை செய்யும் சிந்தையுடையவரல்லர். ஆயின் நம் நாயகரோ, பிறரின் கஷ்ட நிஷ்டூரங்களைக் கவனித்து, எதையும் சாவதானமாய் நன்னோக்கத்துடன் செய்ய முயலுவார். பட்டறையில் வேலையாளர்கள் தமக்குப் பெரு நஷ்டத்தையே உண்டாக்கக் கூடிய காரியத்தைச் செய்துவிடினும், அவர்கள் மீது தமது கோபாஸ்திரத்தைச் சட்டெனப் பிரயோகம் பண்ணிவிடாது, மனதின் வாயில் மாட்டியிருக்கும் பொறுமை என்ற கடிவாளக் கயிற்றைக் கெட்டியாய் இழுத்துப் பிடித்துக் கொண்டே, சற்று நிதானித்துத் தீர்க்காலோசித்து, எது மேற்கொண்டு செய்யத்தக்கதோ அதைச் சாந்தமாக அவர்களுக்குச் சொல்லுவார். ஒருவேளை பொறுமையற்று, தம்மையும் மீறிக் கோபமோ தாபமோ வந்துவிடுமாயின், அது அகலும் வரைக்கும் தமது முகத்தைக் கைக்குட்டையால் மூடிக்கொண்டிருப்பார். ஒருவரையும் பொல்லாங்கு சொல்லார். மறுபடியும் வெகுவிரைவிலே அவரது திவ்யப் பிரதாபம் பொருந்திய வதனத்திலே பொறுமை திகழும். நம் நாயகரவர்கள்,

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்" என்ற

தமிழ்வேத கர்த்தரான திருவள்ளுவ நாயனார் இக் குறளைத் தமக்கே சொன்னதாகத் தழுவி நடப்பார். தமது நடக்கையிற் பலதரம் இந்த அபூர்வ குணமான பொறுமையை விசிதப்படுத்தி யிருக்கிறார். இவைகளைக் கவனிக்கின், முற்

காலத்தில், தமது பத்தினியை மானபங்கப் படுத்திய பொழுதும், தமது தம்பிமார்கள் கண்களில் நெருப்புப் பொறி பறக்கக் கோபாவேசத்தில் ஆழ்ந்தபோதும், சாந்தமே உருவென விளங்கிய நமது மூதாதையான தருமராஜாது பொறுமை பெரிதோ, அல்லது தற்காலத்தில், நம் நாயகரவர்கள் பூண்டிருந்த பொறுமை பெரிதோ என்ற ஆசங்கை நிகழலாம்.

பல்லவை குலசேகரர் பூரண தயாளம் கொண்டவர். இரக்கம் என்பது அவருக்கு இயல்பு. பசித்தோர் முகத்தைப் பார்க்கச் சகியாத பண்புடையவர். தயை தாக்ஷண்யமே ஆபரணமாக அணிந்தவர். யாராயிருப்பினும் துயருற்றிருப்பதைப் பார்க்க மனம் பொறுத்திரார். எவருடைய குறையேனும் கேட்க நேரும்போது, அனலிற்பட்ட மெழுகுபோல உள்ளம் உருகி விசனத்துக் குள்ளாவார். சில கனவான்களைப் போன்று நெஞ்சம் நெகிழ்வதோடு நின்றுவிடாமல், தம்மாலியன்ற அளவு உதவியும் புரிவார். இவ்வுதார குணம் இவர் பிறக்கும்போதே கூடவே பிறந்து வந்தது என்னலாம். இந்த மேன்மையான தன்மை இவர் குடும்பத்தினர் ஒவ்வொருவரிடத்திலும் நன்கு பொலிந்து விளங்கக் காணப்படுகிறது. சில வேளைகளில் இவரது தயாளத்துக்கு எல்லையே யில்லை. அக்காலத்திலும், "தாம் இது செய்யப்பட்டவரென்றும், அது [illegible] ன்றும், பிறர் மெச்சிக்கொள்ளப் பேசுவதில்லை. [illegible] எதையுஞ் சொல்லாமலே செய்வர்.

"சொல்லாமலே பெரியர் சொல்லிச் செய்வர் சிறியர்,
சொல்லியும் செய்யார் கயவரே"

என்பது முதுமொழியன்றோ?

இங்ஙனம் தயாளவள்ளலாய்க் கருணை[illegible] நாயகரவர்கள் விளங்கினும், தமது திரவியத்தை இக்காலத்தில் தருமமென்று பெயர் புனைந்த எல்லா விஷயத்துக்கும் குரு

ட்டு நம்பிக்கையுடன் எடுத்துக் கொடுத்துவிட்டவரல்ல. ஆழ்ந்த சிந்தனையுடனே சாரமுள்ள தருமங்களுக்குமட்டுமே உதவிபுரிந்து வந்திருக்கிறார். கோவில் திருப்பணிக்கென்று அதிக பணத்தை நிஷ்பிரயோஜனத்துக்காக விரயம் செய்தல் வீண்டம்பத்துக்கென்று அவர் நன்றாய் அறிந்திருந்தமையால், அத்தகைய காரியங்களுக்குத் தம் தகப்பனார் ஏற்படுத்திவிட்டுப் போனது போகலான வேறொன்றும் செய்யத் துணியவில்லை. அவைகளையும் கூடியவரைக்கும் சுருக்கியே செய்துவந்தார். "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்ற பழமொழிப்படி கல்வியபிவிர்த்தி விஷயமாக அவரது தயாளமும் தானதருமங்களும், பொங்கி வழிந்தன. அதிலும் வன்னிய உலகத்தில் க்ஷத்ரியப் பிள்ளைகளின் முன்னேற்ற விஷயமாகப் படிப்புப் பரவிவர, பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதிலும், ஹாஸ்டல் வைப்பதிலும், ஏழை மாணவர்களுக்குச் சம்பளம், புஸ்தகம், துணிமணி முதலியன பேரானந்தத்துடன் கொடுத்து வருவதிலும், விடாமுயற்சியுடன் உழைத்துவந்தார். இவைகளைத் தவிர, நிலைபெற்றிருக்கும்படியானவும், உபயோகமுள்ளவையாகவும், பொதுநலமுடையதாகவுமுள்ள குலாபிமானத் தர்ம கைங்கரியங்களான சங்கங்களை ஏற்படுத்துதலிலும், வன்னிய ஆதிக்கங்களடங்கிய புஸ்தகங்களைப் பிரசுரித்தலிலும், தமது பொருளை விநியோகம் செய்தார். காசி ராமேஸ்வர யாத்திரை கொடுக்கும் புண்ணியத்தைக்காட்டிலும், சங்கக் குலாபிமான யாத்திரை ஆயிரமடங்கு புண்ணியம் அதிகம் கொடுக்கக்கூடுமென்பதை அவர் நன்குணர்ந்தார். இந்த ரகசிய உண்மையை அவர் சந்தேகமறத் தெரிந்துகொண்டதினால், தம் தந்தையைப் போலவே தமது வாழ்நாளைச் சற்குலாபிமானக் கிரியைகளில் உபகரித்துப் புகழுடம் பெய்தினர்.

“காவலர் குலத்தில் தலைமணிபொருவும் மன்னனுள” அம் பல்லவ குலசேகரர் குலபக்தி மாத்திரமேயன்றிச் சன்மார்க்கமும் பொருந்தியவர். சிற்றின்பப் பிரியரல்லர். தனதானியங்கள் அளவிருந்தும், சுகபோகவைபவங்கள் சூழவிருந்தும், அவற்றால் மனம் மயங்காமல் நல்லொழுக்கத்தில் நிலைபெற்றிருந்தார். கல்வியறிவு நீதிநெறியுள்ளவராகையால், அறக் கொள்கைக் கடைப்பிடித் தொழுகினார். சிலர் போன்று குறுகிய மனமுடையவரன்று; விசாலித்த புத்தியுடையவர்; பெருந்தன்மையான கருத்துகள் வாய்ந்தவர். “அஹிம்சா பரமோ தர்ம:” என்ற உண்மைப் பிரமாணப்படி எவருக்கும் எந்தத் தொந்தரவும் வைக்கக்கூடாதென்று விரும்பினார். இயன்றமட்டில் மாம்ச பக்ஷணத்தை விலக்கிவந்தார். விஷ்ணு மதத்திலே பிறந்து, விஷ்ணு மதத்திலே வளர்ந்தவராயினும், சிவனையும் சைவமதத்தாரையும் தூஷியார். “அரியும் சிவனும் ஒன்னு அறியாதவன் வாயில் மண்ணு” என்பதை உணர்ந்து, சமயபேதம் பாராட்டாது, எச்சமயத்தாரோடும் சமரசமாயிருப்பதிலே அவருக்கு விருப்பம். சென்னையிலே வாழ்ந்தவராயினும், பட்டணத்தாரென்றும் காட்டுப்புறத்தாரென்றும் வேற்றுமை காட்டார். ஆந்திரரில் நாயகரென்றும், ராயரென்றும், கண்டரென்றும், படையாட்சியென்றும் எவ்வித வித்தியாசமும் எள்ளளவுங் கொள்ளார். இவ்வாறு கூறுவோர்கள் தங்களது அறியாமையைத் தாமே வெளிப்படுத்திக் கொள்ளுகிறார்களென்று பகருவார். குலாபிமானியைப்போல் நடிப்போரை “பேமானி” என்று அழைப்பார்.

நம் நாயகரவர்களிடத்தில் சிறந்த பாங்கு பரிசினையும் நல்ல ஆசார உபகாரமுமுண்டு. தமது நடக்கையின் வல்லமையினால் எவரையும் வசீகரப்படுத்துபவர். கல்வியின்

உண்மையான அபிமானம் வைத்துவந்தவர். "நற்குமரைக் கயற்றில் மலரெல்லாம் சேர்ந்தாற்போல்", புத்திநுட்பமும் சாமர்த்தியமுள்ளவர்களெல்லாம் அவரது இஷ்டர்களாயினர். வித்வத்களையும் வித்வான்களையும் அபிமானித்துச் சன்மானித்துவந்தார். சங்கீதங்களைப் பார்ப்பதும், சங்கீத நிபுணர்களோடும் ஞானவான்களோடும் ஸம்பாஷிப்பதும், இவருக்குச் சந்தோஷத்தை விளைவித்தன. லௌகிக விவகார, சர்வாகத்திலும் கைதேர்ந்தவராகையால், எவரெவரோடு எவ்வெவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமோ, அவரவரோடு அவ்வவ்வாறு மிக்க கௌரவத்துடனும் மதிப்புடனும் நடந்துகொண்டார். ஆயின் உள்ளே ஒன்றுவைத்துக்கொண்டு, புறம்பாக வேறொன்று பேசுபவரல்ல. எனினும், தம்முடன் பேசுபவர் வஞ்சகமாய்த் திரிகிறாரென்று அறிந்தால், அவ்வொருக்குத்தாமும் வஞ்சகமாய்ச் சுளக்கும்படி பல போடவும் சக்தியிருந்தார். இவரது ஆந்தரிக எண்ணங்கள் இலகுவில் வெளிக்குவரா. "தோழனோடும் ஏழ்மைபேசேல்" என்பதையுன்னி, இருதயத்திரகசியங்களைச் சுலப சாத்தியத்தில் வெளியிடமாட்டார்.

வன்னியப் பொதுஜன நன்மைக்குரிய காரியம் எதுவாயினும் சரி, அதை முன்னின்று நடத்திக்கொடுக்கப் பாடுபட்டார். அவர் சஞ்சாரம் செய்த நாடுகளும், புரிந்த கணக்கற்ற செயல்களுமே சான்று பகரும். சில தனவான்களைப் போல ஜனசமூகத்தின் மத்தியில் தம்மைக் கௌரவமாய்க் காட்டிக்கொள்ளவேண்டுமென்கிற எண்ணம் அவரிடம் லவலேசமும் கிடையாது. ஜனங்களுக்கு வேண்டிய உதவி புரிந்து, அவர்களின் ஊழியன் போலக் காட்டிக் கொள்வதுவே பெருமைக்கும் கீர்த்திக்கும் வித்து என்பதை அவர் நன்றாய் அறிந்திருந்தார்.

குலாபியான் [illegible] மிருந்தது மந்திப் புருஷோ த்தமராயும் பிரகாசித்த பலபத்திரிகைகளால் அன்னியராலும், அன்னியராலும், வாயார வாழ்த்தப்பட்டார். அவர் இது வரைக்கும் புகழ்க்கப்பட்டார்; இப்பொழுதும் புகழ்க்கப் படுகின்றார்; இனிமேலும் புகழ்க்கப்படுவார். இத்தகைய சிறப்புக்கும் [illegible] அவருடைய அபூர்வமான [illegible] குணங்களே. அவரு டைய பணமில்லை. செல்வம் [illegible], அருளு [illegible] அவர் தம் அனுபவத்தில் கண்டு தெளிந்திருந்தார் [illegible].

“ [illegible] மாட்டும் இல்லாது செல்வமும்
[illegible] போலவரும்.”

என்ற ஆன்றோர் [illegible] இனியதாகும். “[illegible] செல்வம்” என்று ஆன்றோர் [illegible] அருவருப்பாய்ச் [illegible] “நாம் [illegible] [illegible] பணத்தை [illegible] டார். [illegible] தார். பல [illegible] இயற்கிலும் [illegible] [illegible] இரட்டினார்; அவர்களை [illegible] குலாபியான் [illegible] [illegible] புகழ் [illegible].

[illegible] இல்லாமல் [illegible] [illegible] [illegible] உரைத்து அறியவேண்டுமோ மந்திப் பணத்தை உரைத்து அறியலாகாது.

பல்லவ குலசேகரர் மேனாட்டு நாகரீகத்தையும், அவர்களது நடையுடை பாவனைகளையும், செவ்வையாய்த் தெரிந்தவர். அவைகளில் அநுகூலமானவைகளைக் கையாண்டு வர, அவர் எக்காலமும் பின்வாங்கியதில்லை. தேசாபிவிர்த்தி விஷயமாகக் காங்கிரசும் கைத்தொழில் முயற்சியும், குலாபிவிர்த்தி விஷயமாகச் சங்கமும் சுலாபிமானக் கல்வியும், அத்தியாவசியமென்பதைக் கருதியே யிருந்தார். ஆசார சீர்திருத்தக் காரரின் ஜனசமூகத் திருத்தங்களை மனமுவந்து ஒப்புக்கொண்டு, தமது குடும்பம் வரைக்கேனும் அமுலுக்குக்கொண்டுவந்தார். பெண்பிள்ளைகள் ருதுவான சில வருடங்களுக்குப் பிறகே, தாங்கள் வரிக்கும் ஆடவரையே விவாகம் செய்துகொள்ள வேண்டு மென்பது அவரது கொள்கையாகும். தமது ஏக புத்திரனான லோகநாதனை, கல்வி கற்பிக்கச் சீமைக்கு அனுப்பவேண்டுமென்று பேராவாக் கொண்டிருந்தார். நம் நாயகரவர்கள் விசாலித்த மனதும் மேன்மையான கருத்து முடையவராதலின், இன்னும் பழங் கிழங்களின் மண்டையி னின்றும் இறங்காத சில குருட்டுப் பழக்க வழக்கங்களை அறவே ஒழித்துவிட்டார். "குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவது" போன்று அடுத்த அகத்திலும், எதிர்விட்டிலும்தான் கொள்வினை கொடுப்பினை முதலிய சம்பந்தாசம்பந்தங்கள் வைத்துக்கொள்ள வேண்டுமென்று குறுகிய புத்தியுடன் எண்ணமிட்டவரல்ல. பணமிருந்தால் போதும், படிப்பு அநாவசிய மென்றதப்புக் கருத்து கொண்டவரல்ல. பரதேசத்துப் போக்குவரவும், வெளியூர்ச் சம்பந்தமும், தமக்கே பலவிதங்களிலும் அளவிறந்த நன்மைகள் உண்டாக்குவதுடன் போவதன்றி, ஒரூர் வாசிக்கும் மற்றோரூர் வாசிக்கும் உள்ள சொந்தப்பாத்தியக் கட்டுப்பாட்டால், நாகரீகம் கல்வி அறிவு முதலியன விர்த்

நியர்கி, வன்னிய மகாசமூகத்தின் முன்னேற்றத்துக்குரிய தொருசிறந்த வழியாகுமென்பதைத் தமக்குள்ள உலக ஞானத்தாலும், அனுபவத்தாலும், கரதலா மலகம்போலக் கண்டு உணர்ந்தார். நாம் யாவரும் நம் நாயக சிகாமணியின் இந்த நல்ல கொள்கைகளை யெல்லாம் அனுசரித்து நன்மை பெறுவோமாக.

---

## சங்கமும் நாயகரது குடும்பமும்

“சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மகாசங்கம்” என்று நாமம் புனைந்த சங்கமானது, சென்னையிலும் வெளியூர்களிலுமிருந்த பல குலாபிமானிகள் சேர்ந்து, க்ஷத்ரியரின் அபிவிர்த்தியைப் பலவழிகளிலும் கோரிச் சென்னையில் ஸ்தாபித்து இற்றைக்குச் சற்றேறக்குறைய முப்பது வருஷகாலமாகிறது. வன்னிய உலகத்தில் “சங்கம்” என்ற பெயருடன் நல்ல உருப்புக்கூடி முதல் முதல் உண்டாயது இதுவேயாகும். இச்சங்கம் திவ்யமான கருத்துக்களுடனும், உன்னதமான எண்ணங்களுடனும் கொண்டே ஏற்பட்டது. இது உருக்கொண்ட வரலாறு கனம் வன்னிகுலோத்தாரணர் கா. கோபால நாயகரவர்கள் புண்ணிய சரித்திரத்தில் பின்வருமாறு கண்டிருக்கிறது.

“1886ஆம் நீலகிரியிலிருந்து ம-ள-ள-ஸ்ரீ, கா.. அண்ணாசாமி நாயகர் அவர்கள், கு. முனிசாமி பிள்ளை யவர்களால் இயற்றிய ஜாதி சங்கிரகசாரமென்னும் நூலை வாசித்து, அதின் உண்மையை ஒருவாறு உணர்ந்து, ஓர்கால் சிறப்புற்றிருந்த வன்னியகுலம் தற்காலம் சீரற்றிருப்பதைச் சகியாது, அந்நூலை ஆக்கியோருக்கும் ஸ்ரீமான் கா. கோபால நாயகர் அவர்களுக்கும் வன்னியகுலத்தைச் சீர்திருத்தவேண்டிய பற் பல சாதனங்களைக் காட்டி ஓர் மனுவெழுதினார். இதைக்

கண்ணுற்ற ஷை ஆசிரியர் முன்னவர் முனிசாமி பிள்ளை அவர்கள் தம்மால் கூடியவரைக்கும் பாடுபட்டும் தமது கருத்தை நிறைவேற்றக்கூடிய ஸ்ரீமான் இல்லாமையால் வாளாவிருந்ததாகப் பதில் கூறினார். ஆனால் கா. கோபால நாயகர் என்னும் இப்புண்ணியசீலரோ ஷை யார் சென்னைக்கே உத்தியோகமாய் வந்து, அதுவிஷயத்தில் பாடுபடுவதாயின், தம்மாற்கூடிய சகாயம் செய்வதாக மறுமொழி கூறினார். இப்புண்ணியவான் கருத்திற்கிணங்க, ஷை கா. அண்ணுசாமி நாயகர் 1887ல் அக்டோபர்மீ நீலகிரியை விட்டு சென்னைக்கு வந்தார். அவர் வந்தகாலந் தொட்டு, இவர் தாம் யோசித்ததுபோலப் பற்பல கூட்டங்கள் செய்து கூட்டம் கூட்டுவதற்கு வேண்டிய ஆலோசனைகள் செய்தார். முதலில் சென்னை மதுராகாட்டார் ம-ள-ள-ஸ்ரீ சிவபாத நாயகர் புத்திரர் க. அரங்கநாத நாயகரவர்களும் ம-ள-ள-ஸ்ரீ அ. வெங்கடாசல நாயகரவர்களும், ம-ள-ள-ஸ்ரீ க. சிங்காரவேலு நாயகரவர்களும், இவரும் ஷை அண்ணுசாமி நாயகரும் ஆகிய ஐவரும் கூடி யோசித்து முதல் விளம்பரம் ஷை மதுராகாட்டார் அரங்கநாத நாயகரவர்களைக் கொண்டு பிரசுரித்துப் பரவச் செய்தனர். இம்மாதிரியாக ஐந்து கூட்டங்கள் அடிக்கடி இப்புண்ணியவானுடைய கிரகத்திலேயே கூட்டப்பட்டன. இக்கூட்டத்தில் சங்கத்தின்பேர் **அக்கினிகுல க்ஷத்திரிய மகாசங்கம்** என்றும், இதை நடத்துவோர் இன்னின்னாரென்றும், ஷை சங்கத்திலிருந்து வன்னிகுலாபிமானி யென்னும் பத்திரிகை ஒன்று உலாவவேண்டுமென்றும், குலத்தாருக்கு கல்விச்சாலை ஸ்தாபித்து வன்னியச் சிறுவர்களைக் கல்வியில் பயிற்ற வேண்டுமென்றும், முடிவு செய்யப்பட்டது. இக்காலத்து கூட்டத்தில் ம-ள-ள-ஸ்ரீ டிஸ்ரிக்ட் முன்சிபு த. செல்லப்ப நாயகரவர்களும், ம-ள-ள-ஸ்ரீ [illegible] சைதாப்பேட்டை முதலியாரவர்களும் இப்

புன்னியவானுடைய கிராமத்திற்கு விஜயஞ்செய்து இக்கூட்டத்தைக் காங்கிரஸ் கூட்டம்போல் கூட்டி விசேஷமாய் நடத்தவேண்டுமென்றும் தங்கள் சம்மதத்தை வெளியிட்டனர்.

"சங்க விளம்பரத்தில் தாங்களே கையெழுத்திட்டு வெகு ஜனங்களுக்கும் அறிவிப்பதாகவும், சங்காபிவிருத்திக்குத் தங்களால் கூடிய சகாயஞ்செய்வதாகவும், வாக்களித்தனர். அதேபிரகாரம் 1888ளு ஏப்பிரல்மீ 8உ மஹாஜனசபை கூட்டும்பொருட்டு, ம-ா-ா-ஸ்ரீ கா. கோபால நாயகரவர்கள், ம-ா-ா-ஸ்ரீ ச. சிங்காரவேலு நாயகரவர்களையும், கா. அண்ணாசாமி நாயகரவர்களையும் அழைத்துக் கொண்டு, புதுவை, கூடலூர், பாலூர் முதலிய இடங்களுக்கு நாலு நாளில் சுமார் நானூறு மயில் ரெயில்மார்க்கமாகவும், வண்டிமார்க்கமாகவும், இரவும் பகலுஞ் சென்று ஆங்காங்குள்ளாருக்கு சங்கக்கருத்தை விளக்கி, அவர்களை ஷை மகாஜனகூட்டத்திற்குக் குறித்ததேதியில் வரும்படியாகக் கேட்டுக்கொண்டனர். அதே பிரகாரம் அநேக நண்பர்கள் வந்து ஷை சுபதினத்தில் ம-ா-ா-ஸ்ரீ, த. செல்லப்பநாயகர் அவர்கள் மாளிகையில் வன்னியகுல க்ஷத்திரிய மஹாசங்க ஸ்தாபனஞ் செய்தனர்."

பின்பு வன்னிகுலோத்தாரணர் அவர்கள் மகாசங்காபிவிர்த்திக்காகப் பல ஜில்லாக்களிலுள்ள க்ஷத்திரியகுலாபிமானிகளைக் கூட்டியும், சங்கக்கருத்தை விளக்கிச் சங்கத்தை அபிமானிக்கும் வண்ணமும், மகாசங்கத்தில் ஐக்கியமும் நம்பிக்கையும் பிறக்கும்படி செய்யவும், அளவற்ற விசேஷ முயற்சி எடுத்துக்கொண்டனர். ஆகமேலும் "வன்னிக்ஷத்திரியருக்குச் சங்கம் நிலைத்தது கோபாலனாலெனச்சாற்றுவரே" என்று வித்வான் பசுபதி நாயகரவர்கள் வன்னியகுலோத்தாரண

சதை புகழ்ப்பாமாலையில் கூறியிருப்பது பொருத்தமானதே யெனினும், ஒப்பு உயர்வு அற்ற குலாபிமானியாய் விளங்கிய கா. கோபாலநாயகரவர்கள் எவ்வளவு புகழ்ச்சிக்கு உரியவராயிருக்கிறாரோ, அவ்வளவு புகழ்ச்சிக்கும் சங்கவிதையை யியற்றிய கனம் கா. அண்ணாசாமி நாயகரவர்களும் உரியவரேயாவர்.

சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மகாசங்கத்துக்கு அடிகோலினவர்கள் கனம் கா. அண்ணாசாமி நாயகரவர்களும், கனம் கா. கோபாலநாயகரவர்களுமே. கா. அண்ணாசாமி நாயகரவர்கள் மகாசங்க ஸ்தாபனத்துக்கு முதன்மையாய் நின்றவர். இக் குலகீர்த்தியை முன்னிட்டுத் தமது உத்தியோகத்தையும் விட்டுவிட்டு, நீலகிரியிலிருந்து சென்னைக்கு வந்தாரல்லவா? அப்படிப்பட்ட குலாபிமானம் கொண்டிராத ஒருவர் இவ்வாறு செய்ய இசைவாரென்று நாம் ஒருக்காலும் எதிர்பார்க்கமுடியாது. பின்பு நீலகிரியிலிருந்து வந்த திருக்குலச்சீர்திருத்த விஷயமாகச் சங்கமேற்படுத்துதலில் முயற்சித்து, சங்கத்தை ஸ்தாபித்து, அதற்குப் பிறதேசகாரியதரிசியுமானார். வன்னியகுல மேன்மை விளங்கவும், வன்னியர்கள் க்ஷத்ரியரே யென்று நாம் நன்குணர்ந்தவாறு சென்ஸஸ் ரிபோர்ட்டில் பதிவுசெய்யவும், சுருதி ஸ்மிருதி புராணேதிகாசங்களினின்றும், செப்பேடு சிலாசாசன முதலியவைகளினின்றும் பிரமாணங்களை உதாரித்து, "வன்னியகுல விளக்கம்" என்ற ஓர் அரிய நூல் இயற்றினார். அந்நூலை வன்னியகுலோத்தாரணர் அவர்கள் சொந்த பிரயாசை எடுத்துக்கொண்டு, திரவியசகாயம் செய்து, தமிழிலும் ஆங்கிலத்திலும் பதிப்பித்தார். ஆகையால் நாம் மகாசங்கத்தைப்பற்றி நினைக்குந்தோறும், அண்ணாசாமிக் கோபால நாயகர்களை ஒருமிக்கநினைத்துத்தீரவேண்டும். நாம் செலுத்தும் புகழ்ச்

கிக் கப்பம் இரண்டு சரிபாகமாய்ப் பிரிக்கப்பட்டு ஒரு பாதி
கள். அண்ணுசாமி நாயகரவர்கட்கும், மற்றொரு பாதி
கள். கோபால நாயகரவர்கட்கும் போகவேண்டும். மகா
சங்கத்துக்குத் தந்தை அண்ணுசாமி நாயகர்; தாய் கோபால
நாயகர்.

மகா சங்கத்தைப்பெற்று, அதை வளர்த்த வன்னிகு
லோத்தாரணர் பட்டபாடு இவ்வளவினதென்று எடுத்துரை
க்க ஆதிசேடனுலும் முடியாது. அருமையாயும் பெருமை
யாயும் காப்பாற்றினுர். அம்மகா சங்கத்துக்கு உபாக்கிரா
சனுதிபதியாக விளங்கினுர். மகாசங்கத்தின் பிரதிவருஷத்
திய ரிபோர்ட்டையும், பல பதிப்புகளையும், தம் சொந்தச்
செலவிலேயே வெளியிட்டார். நம் மரபுக்கு வேண்டிய சக
லமான புத்தகங்களையும் தம் காலத்திலேயே பதிப்பித்துக்
கொள்ளுமாறு விரும்பினுர். கவர்மெண்டாரும், இதர ஜாதி
யாரும், நம்மவர்கள் க்ஷத்திரியர்களே என்பதை சாஸ்திர
யுக்தமாய் அறிந்து கொள்ளவேண்டி, வெகு பிரயாசை எடுத்
துக்கொண்டார். சங்கவிஷயமாகத் தம் சொத்தெல்லாம்
செலவாயினும் சரியேயெனச் சம்மதித்தார். நம் ஜாதிக்
குரிய ஆதிக்க மொவ்வொன்றும் அவருக்கு விலையுயர்ந்த
மாணிக்கம் போன்றது. சங்கங்கள் ஸ்தாபிப்பதே தமது
முக்கியவேலை. நம்மவர் சீர்திருத்தம் பெற்று முன்னேறு
வதே தாம் அடையும் லக்ஷியம். குலாபிமானமே திரு
ருவெனத் திரண்டு வந்தவராகையால், இவருக்குச் சங்கமே
படிப்பு; சங்கமே சாப்பாடு; சங்கமே உத்தியோகம்; சங்
கமே சந்தோஷம்; சங்கமே பெண்டுபிள்ளை; சங்கமே
பிராணன்; சங்கமே எல்லாம். சங்கவிஷயமாகவும், குலாபி
விர்த்தி விஷயமாகவும், தம்முயிரைக் கொடுக்கத்தயாராகவே
யிருந்தார். ஆகலினுல் அவருக்கு "வன்னிகுலோத்தாரணர்"

என்னும் பட்டத்தை 1894-ம் வருஷம் நடந்த சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகா சங்க மஹோற்சவ காலத்தில் சூட்டினார்கள்.

"மன்னவர்க்கு நன்குலத்தின் மகிமையெல்லாம் மாசிலையான் மணியக்காட்டிய" அவரது குலாபிமானம் அளவு கடந்ததே. மனதுக்கும் வாக்குக்கும் எட்டாததே. தாமே வலியச் சென்று சங்கத்துக்கு வருபவர் ஒவ்வொருவருக்கும் புன்னகையுடன் சோடசோபசாரம் செய்வார். யாவரது க்ஷேமத்தையும் விசாரிப்பார். உத்தமோத்தமப்பெரும் புண்ணியவான். உதாரகுணசீலர்; தந்தையிற் சிறந்த அன்பினில் மிகுந்த சற்குணர். அவர் குலாபிமானச் சிலையே? உண்மைக்கு உத்தாரமாகப் பாடுபட்டார். தமக்குச் சொந்தமான தண்டவாளப் பட்டறையின் விவகாரங்களை மகா சங்கத்தாரே கைக்கொண்டு அதினின்று வரும் லாபத்தில் மூன்றிலொரு பங்கை சங்கமுதலிய தருமத்துக்கும், மற்ற இரண்டு பங்கைத் தமது குடும்பசம்ரக்ஷணைக்கும் கொடுக்கவென்று மனமொத்துப் பன்முறையும் வற்புறுத்திய வன்னி குலோத்தாரணரது குலாபிமானத்தின் அளவையும் சங்க முயற்சியின் எல்லையையும் யார்தான் வரையறுத்தல் கூடும்? அவர் இறந்தபொழுது, திருமயிலை வித்வான் சண்முகம் பிள்ளை யவர்கள்,

> "நீர்நீத்த வயலென்ன நின்மரபோர்
> எஞ்ஞான்று நினைத்து வாடப்
> பார்நீத்து எங்கசென்றனையாற் கோபால
> நிருபதியாம் பண்பினனே.

என்றார். இராயபுரம் தமிழ் வித்தியாபிவிர்த்திச் சங்கக்காரிய தரிசியாகிய சிறுவாடி, ராம்ராஜவர்ம, துரைசுவாமி இராயரவர்கள் பின்வருமாறு புகழ்ந்து பாடினார்.

"குலமணியே! குணக்குன்றே! கோபால
நாயகமே! குலவு மெங்கள்
நலமணியே! நலிவுடைய யாவரையு
மாதரித்தோய்!"

அவரையே ஓர் உதாரணமாகக் கொண்டு, ஒருவரது வாழ்நாள் இன்னவிதமா யிருக்கவேண்டு மென்பதைத் தத்துவ விவேசினிப் பத்திராதிபர் இராஜஸ்ரீ பு. எ. முனிசாமி நாயுகரவர்கள் கீழ்காணும் செய்யுளில் சுருக்கிச் சொல்லியுள்ளார்.

"பிறந்தாலும் பேருலகில் புகழுடனே
எந்நாளும் பிறத்தல் வேண்டும்.
சிறந்தாலும் கோபால நாயகர்போல்
குலவிளக்காய்ச் சிறத்தல் வேண்டும்.
மறந்தாலும் மறைபடா மாட்சியுடை
நற்றலங்கள் மலியச் செய்தே
இறந்தாலும் இறவாத கீர்த்திபுகழ்
இந்நிலத்தில் எய்தல்வேண்டும்."

மகாசங்க பாலகனையும், இன்னும் இதர சங்கங்களையும், வன்னிகுலோத்தாரணர் வளர்த்துக் காப்பாற்றி வந்தது போலவே, பல்லவ குலசேகரரும் பாதுகாத்துப் போஷித்து வந்தார். கனம் கா. கோ. பலபத்திர நாயகரவர்கள் மகாசங்கத்தின் பிரதேச காரியதரிசியாயும், பொக்கிஷதாரராயும் பொலிவுற்றார். அவர் குலாபிமானமே பூஷணமாகப் பூண்ட வன்னிகுல தீரர். சங்கசஞ்சாரம் மிகுதியும் செய்தவர். தந்தையைப் போலவே நம் மரபின் சீர்திருத்தத்தின் பொருட்டும், முன்னேற்றத்தின் பொருட்டும், தமது சொந்தச் செலவிலேயே பல புத்தகங்களைப் பிரசுரித்தவர். வன்னிய உலகத்திலுள்ள எவரது விரோதத்தையும் கொள்ளாத வண்ணம் யுக்தா யுக்திப்படி சங்கதந்திரங்களை அநுசரித்து, மகாசங்கக் காரியாதிகளையும், ஏனைய சங்கங்களின் விவ

காரங்களையும், ஒன்றுக்கொன்று முரணாது, தமது ஆயுள்பரி யந்தம் பெருந்தன்மையாகவே நடத்தி வந்தார். மகாசங்கத் தின் ஒவ்வொரு வருஷத்திய மகோத்சவமும் நடைபெற முன்னின்று உழைத்தவர். இக்குலாபிமான மணிவிளக்கு களான வன்னி குலோத்தாரணர் கனம் கா. கோபாலநாயகர வர்களும், பல்லவகுலசேகரர் கனம் கா.கோ. பலபத்திரநாய கரவர்களும் வன்னிய உலகத்தில் சபாநாயகங்களாகவிளங்கி யிருந்தவர்கள். இப்புண்ணிய புருடர்களுக்குநம்மவரனைவரும் தங்கள் தங்கள்உயிரைத்தந்தும் பண்ணிக்கொடுக்கினும் ஈடா காது. இவர்களுக்கு எதையேனும் ஒப்பிடக் கூடுமெனின், கைம்மாறு வேண்டாத வானத்தைத்தான் நாம் ஒப்பிட வேண்டும்.

நம் பல்லவ குலசேகரர் காலத்துக்குப் பிற்பாடு அவ ரது தம்பிமார்கள் ராஜஸ்ரீ கருடபதி நாயகரவர்களும், ராஜஸ்ரீ கஜபதி நாயகரவர்களும், சங்கவிஷயங்களில் கவ னமும் ஊக்கமும் காட்டி வருகின்றனர். இவர்களது தாயா ரான நாகம்மாள் சங்கத்தின்மேல் மிகுந்த அபிமான முள் ளவராவர். இவர்களன்றிக் குலாபிமானத்திலே பிறந்து, குலாபிமானத்திலே வளர்ந்து, பிரகாசித்துக்கொண்டிருப்ப வர்களாகிய நம் பலபத்திர வள்ளலது புத்திரபுத்திரி சிரோ மணிகள் இன்னும் கொஞ்சநாளைக்குள் நம் குல திலகங்க ளாய்த் துலங்குவரென்பது சகலருடைய பூரண நம்பிக்கை யாகும். பல்லவ குலசேகரரது பத்தினியான ஸ்ரீமதி ஆண் டாளம்மாள் அவர்களுடைய குலாபிமான முயற்சி நாம்முன் னரே கூறியதொரு விஷயம். ஆகவே, நம் நாயகரவர்களது குடும்பத்தில் தாய் தகப்பன், பெண்டு பிள்ளை, அண்ணன் தம்பி, அக்காள் தங்கை, மாமன் மைத்துனன் முதலியோர் எல்லாருமே குலாபிமானிகளாய்த் திகழ்கின்றனர். புவிக்

ஆப்பிறந்து பூனையாய்ப்போவதுண்டா? இத்தகைய குடும்பங்களுக்கு ஒன்றேனும் இருக்கும் பக்ஷத்தில் நமது குலாபிமானிகளின் உன்னதக்கருத்துகளும், உயர்ந்தசங்கமுயற்சியும், சிறிதேனும் சிந்தாமல் சிதையாமல் சித்திபெறுதற்கு இனிக்கணமும் தடையுமுண்டோ? ஆ! க்ஷத்திரிய குலத்தில் உதித்த ஞான சகோதர சகோதரிகளே! என் நீங்களும் குலாபிமான மணிவிளக்குகள் கூடிக் குலாவும் குடும்பங்களாக ஏற்பட்டுப் பெருங் கீர்த்தியும், அபிவிர்த்தியும், சிறந்த புகழும், வீர தீர ஜெயமும், பிறர்மதிப்பும் பெற்று, இம்மையில் இனிது வாழவும், மறுமையில் மோக்ஷ சாம்ராஜ்ஜியம் அடையவும் முயற்சிக்கலாகாது? இந்த க்ஷணமே முயற்சி செய்யுங்கள்; வெற்றிபெறுங்கள்.

## நாயகரது சங்கமுயற்சியின் ஆரம்பம்.

“அவதார சொரூபிகளில் ஒருவராகியும், நமது மரபார் செய்த புண்ணியமே ஓர் திருவுருக்கொண்டதெனமதிக்கும் வன்னிகுலோத்தாரணர் கனம் கா. கோபால நாயகர் என்னும் பெருந்தகை வள்ளல்” அவரை தம் தந்தையார் மண்ணுலகு விட்டு விண்ணுலகு எய்தியதுமே, நம் நாயகரவர்கள் சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகாசங்க நிர்வாகசபை மெம்பர்களில் ஒருவராக நியமனம் பெற்றார். குலாபிமான மேலீட்டால் அதி பால்யத்திலேயே, பலபத்திர நாயகரவர்கள் சேலம் ஜில்லா, தர்மபுரி தாலுகா, வரிக்கோட்டிப்பட்டி முதலிய இடங்களில் நடந்த சங்கங்களுக்குத் தம தகப்பனருடன் விஜயம் செய்திருக்கிறார். அதிசூர் பிரம்ம வன்னிவம்ச க்ஷத்திரிய மகா மடாலயம் ஸ்ரீமத் குழந்தையானந்த சுவாமிகளுக்குப் பெருந்தலைமைப் பட்டம் சூட்டிய காலத்தும் பிரசன்னமாயிருக்கிறார். இன்னும் சிற்சில இடங்களுக்கும் சங்ககாரி

யமாகவும், குலாபிவிர்த்தி விஷயமாகவும், பிறதேச சஞ்சாரம் செய்துவந்ததாய்த் தெரியவருகிறது.

1896ல் மகாசங்கத்து நிர்வாக சபையின் ஓர் அங்கத்தினரானது முதல், அச்சங்கத்தினது வியவகாராதிகளை அதிஜாக்கிரதையோடு நன்கு கவனித்து வரலானார். வன்னிகுலோத்தாரணர் மகாசங்கப் பாலகனது எட்டாமாண்டில் அந்தியமடைந்தார். ஒன்பதாமாண்டின் கடைசியில் நடைபெற்ற வருஷோற்சவ விஷயமாக, தமது தகப்பனாரைப்போலவே பலபத்திர நாயகரவர்கள் பெருமித முயற்சி எடுத்துக்கொண்டது, அக்கினிகுலாதித்தன் பத்திரிகையில் விரிவாய் வெளியிட்டிருந்தது. இதைக் கண்ணுற்று ஆனந்தசாகரத்தில் மூழ்கிய ஓர் அரும்பெருங் குலாபிமானியான இராஜஸ்ரீ மாயவரம் கோவிந்தசாமி நாயகரவர்கள் பின்வரும் குலாபிமான வியாசத்தை அக்கினிகுலாதித்தனில் பிரசுரப்படுத்தியுள்ளார்.

“வன்னிய கனவான்களே!

காலஞ்சென்ற வன்னிகுலோத்தாரணர் ம-ா-ா-ஸ்ரீ, கா. கோபால நாயகர் அவர்களும், அவருடைய புத்திரரும், ஏழை வன்னியர் சீர்திருத்தம் செய்வதற்காக குலாபிமானத்தைக் கொண்டல்லவோ முயற்சித்தது! அவர்களுக்கு உண்டாகிய குலாபிமானம் ஏன் நம்மிடமும் இருக்கக்கூடாது? நாம் அக்குலத்திற் பிறக்கவில்லையா? மற்றைய தர்மத்தைப் பார்க்கிலும் குலதர்மம் முக்கியமல்லவா? மேற்கண்ட பெரியோர்களைப்போல நாமும் நம்முடைய சக்திக்குத் தக்கபடி பிரயாசை எடுத்துக்கொள்ளும் பக்ஷத்தில் இந்தச் சங்கமும் விர்த்தியாகும், நம்முடைய இனத்தவர்களும் சுகமடைவார்கள். ‘தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி மெய் வருந்தக் கூலிதரும்’ என்ற பழமொழியைக் கடைப்பிடித்து முயற்சிசெய்து வரும்படி மிகுந்த வணக்கத்துடன் நமஸ்கரித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

8—4—96. }

N. கோவிந்தசாமிநாயகர்,
மாயவரம்.

இவ்வாறு பலபத்திர நாயகரவர்கள் கா. கோபாலராய சரவர்களைப் போலவே, சங்க காரியாதிகளுக்கு முன்வந்து நின்று உழைக்கலானார் என்பது வன்னிய உலகத்துக்கே அளவற்ற மகிழ்ச்சியை உண்டாக்கியது. "சத்விஷயத்தை இன்னபடி நடத்தவேண்டுமென்று வழியைக் காட்டிப் புகழெய்திய வன்னிகுலோத்தாரணரின் பிரதம புத்திரரும், தந்தைவழியைத் தவறாது நடந்துவரும் பாலியருமான ம-ா-ா-ஸ்ரீ பலபத்திர நாயகரவர்களும்" இன்னும் அநேக குலாபிமானிகளும் மகோத்சவத்துக்குப் பிடிக்கும் செலவுக்காக ஒவ்வொரு வன்னியர் வீடு தவறாமல் வெய்யிலிலும் காற்றிலும் தேகசிரமத்தை நோக்காமல்போய் சகாயப் பொருள் வாங்கி வந்தார்களென்று அக்நிகுலாதித்தனில் வரைந்திருக்கிறது.

வன்னிகுலோத்தாரணர் மகோற்சவ சம்பந்தமாய்க் கடிதங்கள் எழுதி வந்ததைப்போல், அவரது புத்திரரான நம் நாயகரும் பன்னாட்டு வன்னிகுல மேன்மக்களுக்கும் கனவான்களுக்கும் அநேக கடிதங்கள் எழுதினார். அக்கடிதங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் தங்களால் கூடிய முயற்சி செய்வதாகவும், மகோற்சவத்துக்கு அவசியம் வருவதாகவும், பதில் எழுதிக்கொண்டு வந்தனர். அங்ஙனமே நாற்றிசைகளினுமுள்ள க்ஷத்ரிய குலாபிமானிகள் வெகு தூரத்திலிருந்தும், 1897 ஜூன் 21ந் தேதியாகிய மகோற்சவதினத்துக்கு முந்தியே சென்னையில் வந்து சேர்ந்தார்கள். அவர்களில் பலர் சங்காபிவிர்த்தி விஷயமாகவும், இன்னும் பல விஷயமாகவும், வெகு நேர்த்தியாய்ப் பிரசங்கம் செய்தனர். இவ்விசேஷ வன்னியக் குலாபிமானக் கூட்டத்துக்கு வன்னிகுல சேகரரான வி. குருசாமி ராயரவர்கள் சபா நாயகராய் வீற்றிருக்க ஒன்பதாவது

வருஷத்திய மகோத்சவம் மிகுந்த விமரிசையுடனும் சிறப்புடனும் நடந்தேறியது. இவ்வளவு காம்பீரத்துடன் நடைபெற்றதற்கு, அதிமுக்கிய காரணங்களுள் ஒன்றாயிருப்பது, நம் குலாபிமானகுணசீலரான பலபத்திர நாயகரவர்கள் எழுதியனுப்பிய கடிதங்களின் தூண்டுகோலேயாகும். இவருக்குக் குலாபிமான வன்னியபூபதிகள் பலரும் அனுப்பியுள்ள கடிதங்களுள் இராஜஸ்ரீ, G. வீராசாமி பிள்ளையவர்கள் வரைந்தனுப்பிய பதில் இங்கு குறிக்கத்தக்கது.

பாக்கள்.

"சீர்பூத்த வன்னிகுலஞ் செய்தவத்தா லவதரித்துச்
சிறப்புற் றோங்கி
ஏர்பூத்த அக்கிகுல விபவமெலா முலகறிய
எடுத்துக் காட்டிப்
பேர்பூத்த சங்கமொன்றை நிலைநிறுத்தி நமர்குறையைப்
பேசித் தீர்க்கத்
தார்பூத்த மால்பதிசார் கோபால நாயகரின்
தனைய கேளாய்:

அவைக்கறிஞர் பலிருக்க ஆறுமுக நாயகரைநீ
அறியார் போலுங்
கவைக்குதவா எனநினைந்தார் நதிப்புனல் விட்டுவர் நீரைக்
கவர்வார் போலும்
சுவைக்கதலிக் கனியிருக்கத் துவர்க்காயை யுண்ண மனந்
துணிவார் போலும்
நவைக்கிடமே நான்சபைக்கு நாயகமா யிருந்ததன்மிக
நகைப்பு மாமே.

என்னையுமோர் மதியூகி யெனநினைத்த ஆறுமுக
வேந்த லார்க்கும்
பன்னுசங்க திருவாகப் பெரியோர்க்குஞ் சபையார்க்கும்
பலபத் ரப்பேர்

மன்னுகம தருக்குலத்தின் மணிவிளக்கா முனக்குமக
மகிழ்ச்சி யாகச்
சொன்னவென தனக்கவித வந்தனத்தை யவர்க்குரைப்பாய்
சுகுண மாலே.

என்னளவி லொருதிறனு மில்லையெனுந் தாங்களொரு
பொருட்டா வெண்ணி
வன்னிகுல க்ஷத்திரிய மாசபைக்கு நாயகமாய்
வருதி யென்று
சொன்னகவு ரவமொழியை சிரந்தாங்கி யிணங்குவது
துணிபென் றாலும்
பின்னுமதற் கொருதடையா யுளதுடலின் சுகக்குறைவு
பிணியி னாலே.

கடந்தசில நாளாக இருப்பிடத்தி லிரண்டிரத்தக்
கட்டி தோன்றி
நடந்தசைய வியலாது கிடந்தபடி யிருந்துமிக
நலிந்து தேகத்
திடங்குறைந்த தோரிடத்துஞ் செலற்கேலா தாதலினென்
செய்வேன் உங்கள்
இடம்படரும் பாக்கியத்தைப் பெறுதலென்னை மன்னிக்க
இறைஞ்சி னேனால்.

இப்படிக்கு,
தங்கள் இஷ்டன்,

கோயமுத்தூர்,
7—6—97.

G. வீராசாமி பிள்ளை,
வக்கீல்."

கா. கோ. பலபத்திர நாயகரது மிதமிஞ்சிய குலாபிமானத்தையும், மனமுவந்த சங்கமுயற்சியையும், யாவரையும் சகோதர வாஞ்சை யுடன் நடத்தும் மனப்பான்மையும், கண்ணுற்ற வன்னிய உலகினோர் அனைவரும் புளகாங்கிதராயினர். மகா சங்கத்தார்கள், சங்க சம்பந்தமாக அவர் செய்த ஒப்பற்ற முயற்சிக்குப் பெரிதும் வந்தனம் செலுத்தி

பிருந்திருந்தனர். 1897ஆ ஆகஸ்டு 29உ ஆதிவாரம் கூடிய மீட்டிங்கில் மகாசங்க லோகல் கமிட்டியார், அப்பொழுது பிரதேசகாரியதரிசி வேலையைப் பார்த்துக்கொண்டு வந்த கனம் கா. பத்மநாப நாயகரவர்கள் பொக்கிஷ காரியதரிசியாய் நியமிக்கப்பட்டதால், காலியாயிருந்த பிரதேசகாரியதரிசி வேலைக்கு நம் நாயகரவர்களை ஆக்டிங்காக நியமனம் செய்தார்கள். லீவிலிருந்த கனம் கா. அண்ணுசாமி நாயகரவர்கள், 1898ஆ மார்ச்சு மாதத்தில் அவ்வேலையை ஏற்றுக்கொள்ளுகிறவரைக்கும், பலபத்திர வள்ளல் ஏறக்குறைய ஆறுமாதகாலம் பிரதேச காரியதரிசியாக இருந்து வந்தார். அவ்வருடத்தில் சங்க மூலதனம் சேகரிக்கவும், சங்காபிவிர்த்தி செய்யவும் நியமிக்கப்பட்ட ஏழுபேர் கூடிய கமிட்டியாருள் நம் நாயக சிரோமணி ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மகாசங்கத்தின் பத்தாவது வருஷத்திய மகோத்சவம் 1898ஆ ஜூன் 26ஆ தேதி நடந்தபோது, அதற்கு முன்னின்று அதை அதிக வைபவத்துடன் நடத்தி வைத்தார். மகாசங்கப் புஸ்தகசாலைக்குத் தம் தந்தையால் கொடுக்கப்பட்ட சில புஸ்தகங்கள் கைசோர்ந்து போயினமையால், மேற்படி புஸ்தகங்களை வாங்கி இனமாக அளித்தார். பின்பு நடந்த பிரதி மகாசங்க வருஷோத்சவத்தையும் "கோபால மகிபன் சேஷ்டகுமாரன்" முன்னின்று, மனமொழிமெய்களால் உழைத்து, மிகச் சிறப்புடனே நடத்திவந்தார். மகாசங்கப் புத்தகசாலைக்குப் புத்தக உதவியும் அடிக்கடி செய்துள்ளார். சங்கமூலதன விர்த்தியின் பொருட்டுச் சந்தா, பிடிபரிசித்தண்டல் முதலியன விரமாக வருவிக்க, 1902ல் ஏற்பட்ட சப் கமிட்டியார் பதின்மருள் ஒருவராக நியமனம் பெற்றார். மகாசங்கத்தின் 15-வது வருஷமகோத்சவத்தை நம் நாயகரவர்கள் வேண்டிய முய

றி எடுத்துக்கொண்டு சீர்பெற நடத்திவைத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பிற்பாடு மகாசங்கத்தின் பிறதேச காரியதரிசி ஆனார். அந்நாள் தொட்டு தமது மரண பரியந்தம் அவ்வேலையிலிருந்த சிரத்தையுடனே வெகு காம்பீரமாகப் பார்த்துவந்தார்.

“அரசர்குல விளக்கமன்ன”னை கோபால நாயகரது புத்திர ரத்தினம் பலபத்திர நாயகரவர்கள் சங்க மூலதன அபிவிர்த்தி விஷயமாகப் பிரயாசை எடுத்துக்கொண்டதுமின்றித் தாமும், 1903ம் வருஷம் தமது தகப்பனார் வன்னிகுலோத்தாரணர் பெயரால் மைலாப்பூரிலும், இராயபுரத்திலுமுள்ள வன்னிய சங்கக் கல்விச்சாலைகளின் மூலதனமாக 2500-ரூபாய் வைத்துச் சங்கமூலதனத்துடன் சேர்த்தார். மகாசங்கமூலதனமும் வருஷா வருஷம் கொஞ்சங் கொஞ்சமாய் விர்த்தியாகிக்கொண்டே வந்து, 1906-ம் ௵ மார்ச்சு ௴ 31உ யில் ரூபாய் 22,143-2-5க்கு வந்து சேர்ந்தது. ஆயின், ஒரு நூற்றாண்டுக்கு மேல் பிழைத்துச் செழித்தும் பிரகாசித்து வந்த அர்பத்நட் கம்பெனிக்கு 1906 ௵ அக்டோபர் ௴ நிமசனை கோர்த்த கொடுமையால், அக்கம்பெனியில் வைத்திருந்த தமது மகாசங்க மூலதனம் ரூபாய் 21,400 நஷ்டமாய் விட்டது. குலாபிமானிகள் சகலருக்கும் ஏற்பட்ட விசனத்துக்கு அளவேயில்லை. எங்கும் நிமில குமிலமாயிருந்தது. மகாசங்கத்தின் நிலைமையை உத்தேசித்துச் சங்கத்தை நடத்தலாமா அல்லது நிறுத்திவிடலாமா என்றுங்கூடப் பலர் கருதுவாராயினர். ஆனால் “சங்கத்தின் வினையனைத்துஞ் சதுராகக் காட்டிடற்குச் சளியாத” நம் நாயகரவர்கள் மகாசங்க வியவகாரங்களை பழமை போல் நடைபெற வேண்டுமென்ற உறுதிகொண்டவராய்த் திடசித்தத்தோடும், அகோராத்திர முயற்சியோடும், வன்

ளிய உலகிலுள்ள எல்லாக் குலாபிமானிகளுக்கும் சங்க சம்பந்தமாய்க் கடித மெழுதினர். நாயகரவர்களின் கடிதங் களைப்படித்துப்பார்த்துச் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினவர் களாகிப் பல குலாபிமானிகள் தகுந்த பதில்கள் அனுப்பி, நாயகரையும் மகாசங்கத்தாரையும் உற்சாகப் படுத்தினர். பலபத்திர நாயகரவர்கட்கு வெளி ஜில்லாக்களிலிருந்து வந்த பல பதில் கடிதங்களுள் இரண்டு அடியில் காட்டப் பட்டிருக்கின்றன.

1

“ம-ள-ள-ஸ்ரீ. கா. கோ. பலபத்திர நாயகர் அவர்களுக்கு,

கூடலூர் டவுன் தேவனாம்பட்டினம்,

வைத்தியலிங்கராஜா வந்தனம், உபயக்ஷேமம்.

“9—10—07 தேதியுள்ள தங்கள் லெட்டர் கிடைத் தது. காணாக்கப்பல் கரைசேர்ந்ததுபோல் மிக்க சந்தோஷ மாயிற்று. சென்னையிலுள்ள நமது குலப்பெரியோர்கள் இப்போதுதான் விழித்துக்கொண்டார்கள்போலும்! அரு மையான விதையைப் புதிதாய் நட்டு, அது முளைத்தெழு ம்போது, எதிர்பாராத நோய்கள் அவ்விதையை நசித்தது போல், முதன்மையானவரும், சொந்தப்பணத்தைச் சுஜாதி விஷயத்தில் அபரிமிதமாய்ச் செலவு செய்பவரும், சுஜாதி விருத்தியே விரதமாகக் கைக்கொண்டவரும், எடுத்த காரி யத்தை ஊக்கத்தோடு முடிப்பவருமான தங்கள் தங்கையார் களாம் கா. கோபாலநாயகர் அவர்கள் காலஞ்சென்றதும், ...... பிளேக், க்ஷாமம் இவைகளினால் வருடாந்தரக் கூட்டம் நடை பெறாததும், கடைசியில் ஆர்பத்னட் பாங்கியில் சங்கதிரவியம் நஷ்டமானதுமாக பல இடையூறுகள் நேரிட்டதே சங்கவிருத் திக்குத் தடையுண்டாயிற்று. இவைகளை ஆழ்ந்து யோசிக் கில் ஆச்சரியமும் துயரமுமாகின்றது. நமக்குள் அநேகர் தக்க அந்தஸ்துடையவர்களா யிருந்தும், ....... ஆஸ்தி சேர்க்கப் பல தொழில்களுள்ளாகிறார்களே தவிர, சுஜாதி விருத்தி தருமத்தைக் கவனித்தார்களில்லை.

"...பாலூர், கனிதீர்த்தான் குப்பம், செல்லஞ்சேரி முதலிய இடங்களுக்குப் போயும், கடலூர், பண்ணுருட்டி இந்தக் கிராமஸ்தார்களோடு கலந்து பேசியு மிருக்கிறேன்.

"சங்கத்தீர்ப்பின்படி சங்கசட்டப் புத்தகத்தைப் புதிப்பிப்பதிலும், தக்கவர்களை மெம்பர்களாய்த் தெரிந்தெடுப்பதிலும், மற்றுமாகவேண்டியவைகளைச் சரிசெய்வதிலும், எனக்கு ரொம்பவும் சம்மதம். சாத்தியமானவரையில் சிலருடன் டிசம்பர்ஸ்ரீ நடக்கும் கூட்டத்துக்குத் தவறாமல் வருகிறேன். என் பிராணன் உள்ள வரையிலும் சஜாதி விருத்தி தருமத்தில் சாத்தியமானவரையில் காலங்கழிக்கச் சித்தமாயிருக்கிறேன்.

"தங்கள் கோருதல் நிறைவேற எல்லாம் வல்ல கடவுளின் திருவருளை சிந்திக்கிறதுடன், அக்டோபர்ஸ்ரீ கூட்டத்துக்கு முன்னமே என் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கத் தவறிப்போனதற்கு விசனப்படுகிறேன். நமது சங்க இன்ஸ்பெக்டர் கனம். கா. ஆறுமுக நாயகரவர்களின் நன்முயற்சிக்காக அநேக வந்தனம் அளிக்கிறேன்.

"டிசம்பர் மாதக் கூட்டத்துக்கு என்னுடன் வருபவர்களின் ஜாபிதாவை பின்னால் அனுப்புகிறேன். ஆகவேண்டிய காரியங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தக் கோருகிறேன்.

இப்படிக்கு,

தங்கள் அன்புள்ள,

அ. வைத்திலிங்க ராஜா.

## 11

"சென்னை வன்னியகுல க்ஷத்திரிய மஹாசங்கப்பிரதேச காரியதரிசியாகிய, ம-ள-ள-ஸ்ரீ, சி. ஜி. பலபத்ர நாயகர்

அவர்களுக்கு கடலூர் ஜில்லா சங்கப் பிரதிநிதியாகிய வன்னியகுலசேகரர் வி. குருசாமி ராயர் எழுதிக்கொண்டது:—

"தாங்கள் 9—10—07-ந் தேதியில் எழுதிய கடிதம் வரப் பெற்றேன். லோகல் கமிட்டியார் மற்ற சங்கத்தைப் புதிப்பிக்கவேண்டுமென்று செய்த தீர்மானம் மிக்க நன்மையே. இவ்விஷயமாக டிசம்பர்மீ கூடப்போகிற மகாஜன சங்கத்திற்கு யானும் வருகிறேன். இச் சில்லாவிலிருந்து வரக்கூடியவர்கள் இவ்வளவுபேரென்று பின்னால் தெரிவிக்கிறேன். தாங்கள் பிரதேச காரியதரிசியாயிருந்து சங்காபிவிருத்தி செய்ய ஒப்புக்கொண்டு நடத்தி வருவதற்கு மிகவும் ஆனந்தமடைந்தேன். தங்கள் தந்தையர் காலத்தில் சங்கம் விருத்தி யடைந்ததுபோல தங்கள் காலத்திலும் அபிவிருத்தி யடைய எம்பெருமான் அருள்புரிவாராக.

| | |
|---|---|
| கடலூர் ஜில்லா,<br>சங்கப் பிரதிநிதி ஆபீசு,<br>22—10—07,<br>பாக்கிப்பேட்டை. | இங்ஙனம் தங்களிஷ்டன்,<br>வன்னிகுலசேகரர்,<br>வி. குருசாமி இராயர்,<br>ஜில்லா சங்கப் பிரதிநிதி." |

குலாபிமானமே ஆபரணமாகப் பூண்ட நன்குல மணிகள், தாங்கள் கடிதங்கள் அனுப்பியவாறே மகோத்சவத்துக்கு எட்டுத்திசையிலிருந்தும் வந்து சென்னையில் குழுமினர். 1907 ஹு டிசம்பர் மீ 29௳, 19-வது வருஷமகோற்சவம் "கோபால நாயகனும் கொடைவள்ளல் பெருந்தவமே குலவப் போந்தோன்" ஆகிய ஸ்ரீமான் கா. கோ. பலபத்திர நாயகரவர்களது பெருமுயற்சியாலும், பொருட் சகாயத்தாலும், மிகச் சிறப்போடு கொண்டாடப்பட்டது. அவருக்குச் சகாயமாக உடனிருந்தும், பல குலாபிமானி

ளை உழைத்துவந்தனர். தாம் மகாசங்கத்தின் பிரதிநிதி காரியதரிசியான சில வருடங்களில், நம் நாயகரது பேரும் புகழும் வன்னியநாடு முழுதும் பரவலாயிற்று. பின்னர் ஸ்தாபிக்கப்பட்ட பல சங்கங்களுக்கும் விஜயம் செய்திருக்கின்றார். 1908௵ ஏப்ரில் மீ 16உ யில் கனம் T. வரதப்ப நாயகர் B.A. B.L. அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடந்த செல்லஞ்சேரி வன்னிகுல க்ஷத்திரிய உபசங்கஸ்தாபனக் கூட்டத்துக்கும், 1908௵ ஜூன் மீ 14உ யில் கனம் அ. சொக்கலிங்க நாயகரவர்கள் சபா நாயகராய் வீற்றிருந்து நடாத்திய தென்னாற்காடு ஜில்லா மகாஜனக் கூட்டத்துக்கும், பலபத்திர நாயகர் பிரசன்ன மாயினர். இவைகளைக் கவனித்த நெல்லூர் வாசிகள் 1908௵ செப்டம்பர் மீ 27 உ பொன்னூர்சிலை நாட்டைச்சேர்ந்த ஆரம்பாக்கத்து ரெயில்வே ஸ்டேஷனை அடுத்த இராமாபுரத்தில் நடைபெற்ற உபசங்கஸ்தாபனக் கூட்டத்துக்குச் சபா நாயகராக அழைத்தனர்.

இவ்வாறு நம் நாயகரவர்கள் பற்பல சங்கங்களுக்கு விஜயஞ்செய்தும், அக்கிராசனம் வகித்தும், குலாபிமானிகளது மனோபீஷ்டங்களை நிறைவேற்றியும், மற்றையோருக்குக் குலாபிமான அபிவிருத்தியை யூட்டியும், மகாசங்கக் கருத்துகளைப் பரவச் செய்தும் வந்தார்.

## நாயகரும் மகாசங்கமும்

"நாவினாற் பேசிய புகழோங்கு கோபால
நாயகன் தவத்தில் வந்த
பொங்கு மெழிற் பலபத்திர நாயகப் பிரபலன்"

ஆன நம் குலாபிமான சிரேஷ்டர் தாம் மகாசங்கத்தில் புகுந்த நாள் முதற்கொண்டு, சங்க விஷயகாரியாதிகளைத்

தமது சொந்தக் காரியாதிகளென்றே எண்ணி, அதி சிரத்தையுடனும், மன ஊக்கத்துடனும் நடத்தி வந்தார். ஒவ்வொரு மகாசங்க வருஷமகோற்சவ வைபவத்திற்கும் முதன்மையாய் வந்துழைத்தவர் இவரே. சங்கத்துக்கு விஜயம் செய்யும் குலாபிமானிகளுக்கு இடம் சாப்பாடு முதலிய பல செளகரியங்கள் விஷயமாகத் தாமே நேரில் கவனித்தும், கண்ணோட்டம் வைத்தும், சரிவரச்செய்து வருவார். பந்திபோஜனம் குறைவற நடைபெறுகிறதாவென மேற்பார்வை பார்த்து வருவார். சிலவேளைகளில் தாமே இலை முதலியவற்றை எடுத்துக்கொண்டு பரிமாற ஆரம்பித்து விடுவார். இதைப்பார்த்ததுமே அநேகர் கிளம்பி, "நாங்கள் செய்கிறோம்; நாங்கள் செய்கிறோம்" என்று சொல்லி நாயகரவர்கள் எவ்வித வேலையும் செய்ய வொட்டாமல் தடுத்து விடுவர். பிறகு பலபத்திர நாயகர் பந்திகள் நடத்து முறையில் தலைமை பெற்று விளங்குவார். சாப்பிட்ட பின்னர் எச்சிலைகள் வெளியே போகவேண்டியும் எவ்வித உபாயம் செய்வார். எவ்வளவோ உயர்ந்த அந்தஸ்திலிருந்த நம் நாயகரவர்களே இவ்வாறு செய்யத் தூண்டியது, அவரிடத்துக்குடிகொண்டிருந்த அபரிமிதமான குலாபிமானமே யாகும்.

சங்கத் திருத்தொண்டு புரிவதன் பேரில் அவருக்கு ஓர் அளவற்ற பிரீதி உண்டாயிருந்தது. அது போலவே அவரது பேசின் பவுண்டிரிக் காரியஸ்தர்களும் சங்க வேலைகளைச் செய்ய ஆநந்தம் கொள்வர். சங்க உற்சவ விஷயமாக அவர் பட்டரையிலிருந்து, உபயோகத்துக்குரிய சகல சாமான்களும் வைபவத்துக்கு முந்தியே வந்து சேர்ந்துவிடும். 1909ளு டிசம்பர்மீ 30, 31உ களில் மகாசங்கத்

தின் 21 வது வருஷத்திய மகோத்சவம் நடைபெற்ற பொழுது, "கோபால நாயகர் அண்டு சன்" பட்டரைச் சாமான்களும், அச்சாலை உத்தியோகஸ்தர்களுமே, சங்கக் காரிய சம்பந்தமாகக் காணக்கிடந்தனர். இணைநகளில் பெரிய பவுண்டரித் தண்ணீர்க் குழாய்கள் வைக்கப்பட்டுப் பீப்பாய் வண்டிகளில் தண்ணீர் வந்திறங்கிய வண்ணமாயிருந்தது. பலபத்திர நாயகரவர்கள் S. I. R. சொஸைடிக்கு வரவேற்புக் கமிட்டியாருள் ஒருவராய் நியமிக்கப்பட்டார். பந்தோபஸ்தையும் விசாரிப்பதிலும், திரளான ஜனங்களை அடக்கி ஆள்வதிலும் வல்லவராகையால், போஜனக் கமிட்டிக்கும் தலைமை வகித்தார். வரவேற்புச்சபையின் ஜாயிண்டுக் காரியதரிசிகளில் ஒருவராயினர். இந்த மகோத்சவத்துக்குக் கனம் V. திருமலைப் பிள்ளையவர்கள் சபாநாயகராக வீற்றிருந்து, வியவகாரத்தினை வெகுசிறப்புடன் நடத்திக் கொடுத்தார். இவ்விவபவக் கொண்டாட்டத்தின் நிமித்தமாக அச்சுவேலைக் கமிட்டி, பந்தல் கமிட்டி முதலிய பல கமிட்டிகள் பிரிந்தன. வைத்தியசாலை, புத்தகசாலை, வாசிப்புச்சாலை முதலியன வகை வகையாய் ஏற்பட்டன. உக்கிராண அறை, சமையலறை உண்டாயின. இலாகா ஏற்பாடு அமுலுக்கு வந்தது. சேலம், கோயமுத்தூர், வட ஆற்காடு, தென்னாற்காடு, புதுவை, பெங்களூர், தஞ்சை, திருச்சி, செங்கல்பட்டு, செகிண்டிராபாத், நெல்லூர் முதலிய பல ஜில்லாக்களிலுமிருந்தும், சென்னைக் கடுத்த பல கிராமங்களிலிருந்தும், சென்னையிலுள்ள பல பேட்டைகளிலுமிருந்தும், அநேககுலாபிமானிகள் விஜயம் செய்தனர். சங்க வைபவ மகோத்சவத்தைக் கண்ணாரக் கண்டு, தங்கள் தங்கள் ஊரிலும் இவ்வாறு நடத்தவேண்டுமென்று வெளி

யூர்க் குலமணிகள் எண்ணங்கொண்டனர். இதன் பின்னர் நடந்த மகாசங்க வருஷோத்சவங்களெல்லாம் வெளியூர்களிலேயே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்தியக் காங்கிரஸ் மகாசபையைப்போல் சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மகாசங்கத்தின் பிரதிவருட மஹோற்சவத்தையும் ஒவ்வொரு ஜில்லாவில் நடத்துதல் மிகவும் நன்மையே. அவ்வாறு சங்க வைபவங்களையும், வியவகாரங்களையும், வெளி ஜில்லாக்களில் நடத்துவது சாமன்னிய காரியமன்று. குணத்திலும், செல்வத்திலும், குலாபிமானத்திலும், சங்கதந்திரத்திலும் மேம்பாடு உடையவராயிருந்தமையால், பலபத்திர நாயகரவர்கள் மகாசங்கத்தின் பிறதேசகாரியதரிசியாயிருக்க அருகராயினர். இதுவரைக்குமிருந்த பிறதேச காரிய தரிசிகளுக்கு அவ்வளவு கஷ்டமிருந்திராது. தற்போது மகாசங்க வைபவங்கள் வெளிநாடுகளில் நடைபெற வேண்டியிருப்பதால், சங்க சம்பந்தமாக எவ்வளவோ தரம் பயணப்படவும், சங்க அலுவல்களைப் பொறுப்புடனும் பிரயாசையுடனும் தீவிரமாய்ச் செய்யவும் வேண்டியிருக்கிறது. நம் நாயகரவர்களது ஊக்கத்தையும் விடாமுயற்சியையும் கண்டே, பல பெருங் குலாபிமானிகள் தங்கள் ஜில்லாக்களில் மகாசங்கத்தை நடத்துவதென்று தீர்மானித்துக் கொண்டனர்.

சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மகாசங்கத்தின் 11 வது மஹோத்சவத்தை, 1899௵ ஜுலை ௴ 23உ யில் தென்னாற்காடு ஜில்லா வாசிகள், கடலூரை அடுத்த திருப்பாதிரிப் புலியூரில், அளக்குடி திவான் கோவிந்த ராயர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடத்தினது வழிகாட்டியாக விளங்கி நின்று கொண்டிருக்கிறார்களெனினும், வடஆற்காடு ஜில்லாவாசிகள் முன்வந்து, 1910௵ டிசம்பர் ௴ 28, 29 தேதிகளில் நடத்

றிய 22 வது வருஷ மஹோற்சவமே ஜாதியபிமானம் பூண்டு எழுந்தருளிய பெருந் தொகையினரான அக்குலத்தார்களைத் தன்னிடத்தே அடக்கிக் கொண்டிருந்தது. சுமார் 4000 வன்னிய குலாபிமானிகள் விஜயம் செய்திருந்தனர். இவ்வருஷோற்சவம், ஆர்காட்டில், ஸ்ரீமத் மகாவிதேஹ அந்தியூர் பிரம்ம வன்னிவம்ச க்ஷத்திரிய மகா மடாலய இராஜகுலோற்பவ விஜயதீர பராக்கிரம சிவ கருணை சித்தப் பிரம்மசைதன்னிய ஞானரத்தின சிம்மாசனாதிபதி, சக்கிரவர்த்தி, சிவராஜயோகி, ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகராகிய ஸ்ரீமத் குழந்தையானந்த சுவாமிகள் நாமவர வன்னி ராஜகுல குருபீடமாய் எழுந்திருக்கும் ஸ்ரீமத் பாஸ்கர சுவாமிகள் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கண்டோர் கேட்டோர் யாவரும் இதுகாறும் இச்சங்கம் இவ்வளவு காம்பீரமாய் நடந்ததில்லையென்று மனத்தாலும் வாக்காலும் மதிக்கக்கூடிய வண்ணம் மிகுந்த சிறப்புடனே கொண்டாடப்பட்டது. சங்க வருஷோற்சவ விஷயமாக எண்ணிய கருமத்தை எண்ணியவாறே இனிதின் முடிக்கும் நுண்ணறிவாளராகிய ராஜஸ்ரீ பூபதி ஜெகந்நாத ராஜா அவர்களும், ராஜஸ்ரீ சடகோப நாயகரவர்களும் பசிதாகாதி பாதையும் மழை பாதையும் பாராமல், அஹோராத்திரம் பாடுபட்டு வந்தனர். மகாசங்கப் பிறதேச காரியதரிசியாகிய பலபத்திர நாயகரவர்கள் அடிக்கடி ஆர்காட்டிற்கு விஜயஞ்செய்து, அன்னோருக்குச் சிரமத்தைப் போக்கி, உற்சாகத்தை உண்டுபண்ணி, ஒரு தூண்டுகோலாகவும் ஊன்றுகோலாகவும் நின்றார். நம் நாயகரவர்களது பெரும் முயற்சியையும் அருங் குலாபிமானத்தையும் கண்டு மெச்சி, அவருக்குப் "பல்லவ குலசேகரர்" என்ற பட்டத்தைச் சூட்டினர்.

## சென்னை



# வன்னிகுல க்ஷத்ரிய மகாசங்கம்.

ம-ா-ா-ஸ்ரீ, கா. கோ. பலபத்திர நாயகர் அவர்கள் வன்னிகுல விர்த்தியின் பொருட்டுச் செய்தபல நன்மைகளை உத்தேசித்து, அவருக்கு 1910ஹ டிசம்பர்மீ 28உ கூடிய வன்னிகுல க்ஷத்ரிய மகா சங்கத்தாரால் "பல்லவகுல சேகரர்" என்னும் பட்டப்பெயர் கொடுக்கப்பட்டது.

1910ஹ டிசம்பர்மீ 28உ

த. வரதப்ப நாயகர் *B.A. B.L.*, அ. சொக்கலிங்கநாயகர்,
காரியதரிசி. அக்கிராசனாதிபதி.

சபையார் அனைவரும் இதை வெகு சந்தோஷத்துடன் அங்கீகரிக்க, மேற்கண்ட பட்டப் பெயரை அழகிய பட்டுத் துணியில் பலவித நிறத்தில் அச்சிட்டு, சித்திரவேலைப் பாடுள்ள சந்தனப் பெட்டியில் வைத்து, பாண்டுவாத்தியம் முழங்கச் சபையாரின் ஆனந்தக் கரக்கோட்டுடன் பலபத்திர வள்ளலுக்கு அளிக்கப்பட்டது. அச்சமயம், புரசை-வித்வான் மு. பாலசுந்தர நாயகரவர்கள் வாழ்த்துப் பாக்கள் கூறினர். அவைகளில் இரண்டொன்று இங்கு கூறப்பட்டிருக்கின்றன.

## வாழ்த்துப்பா.

கற்றவர் சூழும் வன்னிய குலத்தி
னவிலருஞ் சங்கத்தின்ஞான
மூற்றவர் மதிக்க முழுமன திட்டு
முனிவிலா திங்குறு பணிகள்
கற்றவப் பயனே யென்றுள மிறுத்தி
நயமுடன் செய்திடும் பான்மை
கற்றவ ரோடு மற்றவர் வியக்க
காண்டொறு முவகையோ மாறேம்.

இவ்வண மாக நின்றிடு மெழிலோ
னிரும்புவி மகிழவே மிக்க
செவ்வண மாகும் பல்லவ குலசே
கரனெனும் பெயரொடு சிறந்தே
எவ்வவர் மனத்துங் களிகொளப் பெருக
பிரவிதா னவ்வவை யின்பால்
நவ்வியங்கட்டிரு மாலவ னருளால்
நவில்தர வாழிவா ழியவே.

அவ்வருடத்திலேயே நம் நாயகரவர்கள், கனம் சோக்கலிங்க நாயகரவர்கள் ராஜினுமா செய்துவிட்ட பொக்கிஷதாரர் வேலைக்கு நியமனம் பெற்றார். தம் பொறுப்பில் கொண்ட பிறதேச காரியதரிசி, பொக்கிஷதாரர் என்ற இந்த இரண்டு அசாத்தியமான வேலைகளையும் மகா பராக்கிரமத்தோடு பார்த்து வந்தார். இவர், இவ்வேலைகளை மிகுந்த கவலையோடும் ஆழ்ந்த சிந்தனையோடும் நன்கு கவனித்து வந்தாரென்பதற்குப் பின்னர் நடந்த மகாசங்க வருஷோற்சவ காலங்களில் விஜயஞ்செய்த வன்னிகுலக் கனவான்களின் தொகை அதிகரித்து வந்ததே போதிய சான்றாம். 1911௵ டிசம்பர் ௴ 27, 28 தேதிகளில் செங்கல்பட்டு ஜில்லா காஞ்சிமாநகரத்தில் மகாசங்கத்தின் 23 வது வருஷ மஹோற்சவம் நடந்தபொழுது, சுமார் 7000 அக்குலத்தார்கள்

வந்துசேர்ந்தனர். மகோத்சவமோ இரணியவர்மச்சோழன் வம்சத் தோன்றலும், பிச்சபுரம் ஜமீன்தாருமாகிய இராஜ வன்னியராஜஸ்ரீ சாமிதுரை சூரப்ப சோழனார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் வெகு விமரிசையாய் நடைபெற்றது. அதன் சிறப்பை நினைக்குந்தோறும் சதா ஆநந்தத்தைக் கொடுக்கத் தக்கதாயிருக்கிறது. "இனி இவ்விதமாக எவ்விடத்தில் எவ்வருஷம் கண்டு களிக்கப் போகிறோம்" என்று எண்ணும்படியாக விருந்தது. இவ்வளவு சிரத்தையுடனும், ஊக்கத்துடனும், சரிவரவும், க்ரமமாகவும் தேக சிரமம் என்பது சிறிதேனும் கவனியாது காஞ்சிமாநகர் வன்னிய குலாபிமானிகள் உழைத்தற்குப் பல்லவகுல சேகரரது நல்லவகையான முயற்சியல்லவோ முதற்காரணமாயிருந்தது. அவ்வருடோற்சவ வாழ்த்துக் கவியில் திருமாயிலை சீனி-கோவிந்தராச நாயகரவர்கள் நம் நாயகரவர்களைப் பற்றிச் சொல்வதாவது:—

"சென்னைமா நகரின் மேவித்
திகழ்மா சங்கப் பைங்கூழ்
தன்னமுந் தளர்வு றாமற்
தண்புயன் முகிலு வாணப்
பொன்னெனு மாரி பெய்து
பரிவுடன் வார்க்குஞ் செம்மல்
மன்பல பத்தி ரப்பேர்
மகிபனீ டூழி வாழி"

சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மகாசங்கத்தின் 24வது வருஷமகோத்சவம் செஞ்சியில் நடைபெற்றது. அது விஷயமாகப் பல்லவகுல சேகரர் பல பிரயாணம் செய்தனர். சரியானபடி வண்டி முதலியன அகப்படாத இடமாகையால். அலைச்சலும் அதிகம் பட்டனர். 1912ஆம் பிப்ரவரீ

25உயில் செஞ்சி பெரியகரம் இராஜஸ்ரீ சுப்புக்கவுண்டரவர்கள் கிரகத்திலேயே நாயகரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஒரு கூட்டம் கூடியது. பின்னர் 1912ஆ ஆகஸ்டுமீ 18உ திண்டிவனத்தில், ஸ்ரீமான் வக்கீல் T. M. குமாரசாமிப் பிள்ளையவர்கள் சபாநாயகராக வீற்றிருக்க, ஒரு சபை நடந்தது. மகோத்சவ விஷயமாக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்குப் பலபத்திர நாயகரவர்கள் அதே வருஷம் டிசம்பர் மீ 15உ வல்லம் என்ற கிராமத்துக்கு விஜயஞ் செய்து, ராஜஸ்ரீ துரைசாமிக்கவுண்டர் அவர்களிடம் நேரில் பேசித் தகுந்த வசதிகள் செய்வித்தனர். 1912ஆ டிசம்பர்மீ 30உ, வக்கீலும், லாஜர்னல் பிரகாசிப்பவருமான ராஜஸ்ரீ P. C. சுப்பிரமணியம் பிள்ளை B. A. B. L. அவர்களது அக்கிராசனத்தின் கீழ் மகோத்சவம் வெகு சிறப்பாகவும் மிகு காம்பீரமாகவும் கொண்டாடப்பட்டது. சபைக்குச் சுமார் 4000 கனவான்கள் விஜயம் செய்திருந்தனர்.

மகாசங்கத்தின் வெள்ளிஜுபிலியாகிய 25 வது வருஷ மகோத்சவம், 1913ஆ ஜூன் மீ 15, 16, 17 தேதிகளில் நடந்தேறியது. இவ்வளவு சீக்கிரத்தில் ஒரு மகாசங்கத்தின் வெள்ளிஜுபிலி நடைபெற்றதற்குக் காரண பூதராயிருந்தவர், கனம் பல்லவகுலசேகரர் பலபத்திர நாயகரவர்கள் என்பதற்கு எள்ளளவும் தடையில்லை. அம்மகோத்சவம், டைலர் கம்பெனி அதிபாதி ராஜஸ்ரீ திருவேங்கடசாமி நாயகரவர்கள் சபாநாயகம் வகிக்க, மகோன்னதமாக மிகுந்த விமரிசையுடன் நிறைவேறிற்று. ஏறக்குறைய 5000 அக்கினிகுலஸ்தர்கள் விஜயம் செய்திருந்தனர். சபா மண்டபச் சிறப்பும் வைபவக் கோலமும் நேரில் கண்ணாரக் கண்டவர்களே நன்கு அறியக் கூடுமெனினும், வன்னிகுல மித்திரனைப் படித்தோரும் ஒருவாறு தெரிந்திருத்தல்

கூடும். அதன் பெருமையைச் சேலம் வன்னிகுல க்ஷத்ரிய ஸ்ரீசமுதிற்றறிவார் சபைப் பொக்கிஷ காரியதரிசி சு. அர்த்த நாரீசவர்மா அவர்கள் "வெள்ளிஜூபிலிவைபவச் சந்த"த்தில் வெகு நேர்த்தியாகப் பல வர்ணமெட்டுகள் அமைத்துப் பாடியுள்ளார். "வன்னிய மகாசங்க வைபவ சூடாமணி" இயற்றிய விஷ்ணுபாத சேகரர், "வாயினாற் பேசரிய பெரிய கொட்டையிட்டு" என்று பந்தலின் பெருமையைச் சுருங்கச்சொன்னார். இவ்வைபவத்தை நடத்திய கனம் S. கந்தசாமிக் கண்டராவர்கட்கு "சம்புகுலசேகரர்" என்ற பட்டம் மகா சங்கத்தாரால் கொடுக்கப்பட்டது.

இவ்வண்ணமாகப் பல்லவகுல சேகரர் பிரதேச காரியதரிசியாய் விளங்கி மகாசங்கத்து வருஷோற்சவங்களைச் சிறப்பாகவும் சரியாகவும் நடத்திவந்தார். வெள்ளி ஜூபிலிக்குப் பின்பு மகாசங்க வருஷோத்சவ விஷயமாக ஏதோ சில காரணங்களினால் முயற்சியற்றிருந்திருப்பதாகத் தெரிகிறதெனினும், சேலத்தில் மகாசங்கம் நடை பெறவேண்டுமென்று மிகவும் முயன்றார். அப்பொழுது சேலத்தில் பிளேக்காயிருந்தமையால், காரியம் கைகூடவில்லை. அதற்குள் மகா சங்கத்தாரிற் சிலர், திருக்கழுக்குன்றத்தில் நடத்துவதென உத்தேசித்தனர். கடைசியாக மகாசங்கம் எங்கேயேனும் நடந்த பாட்டைக் காணேம். சில வேளைகளில் மகா சங்கத்தார் நாயகரை முன்னும் போகவிடுவதில்லை, பின்னும்போக விடுவதில்லை. ஆதலின் நம் நாயகரவர்கள் சிறிது மனவருத்த முறலுற்றார். மகா சங்கத்தினரில் சிலர் எச்சுப் பேச்சாக வாதாடுவதைக் கேட்டுக்கேட்டு, அவர் சலிப்படைந்தார். புண்ணைப் பரிசரிக்காமல் புண்ணிலே கோலிடுபவர்களைக் கண்டால், அவருக்கு அருவருப்பு அதிகம். இந்த வைய காரியங்களைச் சிக்கறுத்துச் சீர்திருத்தவேண்டுமென்று

என்னினர். ஆயின், மகாசங்கத்தில் இரண்டு கக்ஷியாருண்டு. ஒன்று, சங்கத்தார் இட்டதே சட்டமெனச் சாதிக்கும் "சங்கக்கக்ஷி". மற்றொன்று, குலாபிவிர்த்தியைக்கோரும் "குலாபிமானக்கக்ஷி". இவற்றில் சங்கக்கக்ஷியார், "மகாசங்கத்தார் வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை; அதற்கு மேல் வாதிக்கக்கூடாது" என்ற கொள்கையினையுடையவர். நம் நாயகரவர்கள் அந்தக் கணக்கில் சேர்ந்தவரல்லர். மகா சங்கத்திலும் மற்றும் பல சங்கங்களிலுமுள்ள ஊழல்களை நிர்மூலம் செய்யவேண்டுமென்று ஆசை கொண்டார். எவராயினும் தகுதியுள்ளவர்களுக்கு மகாசங்கத்தில் உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்தார். பல்லவகுல சேகரர் சங்கக்கக்ஷியாரின் உடுப்புத் தரித்த குலாபிமானக் கக்ஷியாராவர்.

நம் பலபத்திர நாயகரவர்கள் ஒரு சிறந்த வன்னிய சங்கத் தந்திரி. தமது வாழ்நாளில் எவருடைய கொள்கைக்கும் விரோதமாகாதவாறு நடந்துகொண்டார். சீர்திருத்தங்களும் கொஞ்சம் கொஞ்சமாகவே அனுசரணைக்குக் கொண்டு வருதலே, மேன்மையும் உபயோகமும் உள்ளதென நிர்ணயித்தார். மகாசங்கக் காரியாதிகளைப் பார்த்துக்கொண்டு வரச் சம்பளம் கொடுத்து ஒரு காரியதரிசியை ஏற்படுத்தவேண்டுமென்ற பிரேரபணையைப் பல தடவைகளில் பெரிதும் தாங்கிப் பேசியிருக்கிறார். மகா சங்கத்துக்காகச் சென்னையில் ஒரு பெரிய கட்டடம் இருக்கவேண்டுமென்பது அவரது பூர்ண எண்ணமாகும். அக்கட்டடத்தின் ஒரு பாகம் நம்மவருடைய சுபாசுப காரியங்களுக்கும், வேறொரு பாகம் நம் குல மாணவர்கள் தங்கியிருந்து வாசிக்க "ஹாஸ்டலு"க்கும் ஏற்படவேண்டுமென்பது அவரது கோரிக்கைகளுள் ஒன்றாகவிருந்தது. இன்னும் இவை போன்ற சில முக்கிய விஷயங்களைப்

பற்றி உத்தேசித்துக்கொண்டிருந்தார். அவர் இன்னும் சில காலமட்டும் இவ்வுலகில் இருந்திருப்பரேல், மேற்கூறிய தமது கருத்துக்களை யெல்லாம் நிறைவேற்றுவதன் பொருட்டு, அல்லும் பகலும் அநவரதமும் விடாமுயற்சியுடன் உழைத்து, எங்ஙனமாவது கைகூடும்படி செய்திருப்பார். மகாசங்கத்தார்கள் அவரது வழியைப் பின்பற்றி, அவரது கொள்கைகளைக் கையாண்டு வருவாரானால், மகாசங்கத்துக்கு வேண்டிய பணசாதகமாவதுடன், அதன் அபிவிர்த்தியும் விரைந்து செல்லுமென்பதில் தடையில்லை.

## நாயகரும் மற்றைய சங்கங்களும்

கனம் கா. கோ. பலபத்திர நாயகரவர்கள் சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மகாசங்கத்தின் ப்ரமுகர்களில் ஒருவரேனும், அதிலேயே குருட்டபிமானம் வைத்து எக்காரியத்தையும் செய்துவந்தவரல்லர். அவர், குலாபிமானங்கொண்டு வன்னிய உலகினருக்கு எது நன்மை பயக்கத்தக்கதோ அதையே முன்னின்று இயற்றினார். மகாசங்கத்தில் குலாபிமானக் கட்சியை மிகுதியும் சார்ந்தவராகையால், சில வேளைகளில் மகாசங்கத்தார் செய்தது சரியல்லவென்று சொல்லவும் பின்வாங்கவில்லை. எனினும், மகாசங்கத்தின் கீர்த்தி மங்கவும் விட்டுவிடவில்லை. வன்னிய ஜன சமூகத்தின் பொது நன்மையை நாடி எப்போதெப்போது ஜனங்கள் பக்கத்தில்நின்று வாதாட வேண்டுமோ அப்போதப்போது அவ்விதமே செய்திருக்கின்றார்; மகாசங்கத்து அபிவிர்த்தியைக் கோரி எப்போதெப்போது பேச நேரிட்டதோ, அப்போதப்போது பேசியிருக்கின்றார். உண்மைக்கு உத்தாரமாகப் பாடுபடவேண்டுமென்ற உயர்ந்த எண்ணமுடையவராகையால், நன்மையையே கடைசிவரைக்கும் கடைப்பிடித்துச் சத்திய

த்துக்கு ஊழியஞ்செய்து, தமக்கு எட்டிய எல்லாச் சங்கங்க ளுக்கும் தம்மாலான உபகாரத்தைப் புரிந்துவந்திருக்கிறார். வஞ்சனையின்றிக் கஷ்டநிஷ்டூரங்களைக் கவனித்து விவகாரங்களை ஒழுங்குபடுத்தும் அபூர்வகுணம் அவரிடத்து அமைந்திருந்ததுபற்றி, அவரே பல புண்ணியார்த்தமான கைங்கரியங்களுக்கு ஆரம்பச் சடங்குகள் நடத்துவதும், தலைமை வகிப்பதும் உசிதமும் சிரேஷ்டமுமென்று அவர்து நல்வரவைச் சகலரும் வேண்டிக்கொண்டார்கள். தமது விஜயம் அவசியமென்று கேட்டுக்கொண்ட இடங்களுக்கெல்லாம் அவர்போகமற் போவதில்லை.

நம் க்ஷத்திரிய நாட்டில் செல்வாக்கிலும், சொல்பலத்திலும், சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகாசங்கம் ஒழியச் சிறந்து பிரசித்திபெற்று விளங்குவது, தென்னாற்காடு வன்னிகுல க்ஷத்திரிய ஜில்லாசங்கம் என்னலாம். இச்சங்கத்தார் நம் நாயகரவர்கள்பேரில் விசேஷ அன்புபாராட்டிவந்தனர். பல்லவகுலசேகரர் மூலமாகவே மகாசங்கத்துக்கும் தமக்கும் உள்ள சம்பந்தங்களை விர்த்தியாக்கிக்கொள்ள, இந்த ஜில்லா சங்கத்தார் பெரிதும் விரும்பினர். பலபத்திர நாயகரும் சமயம் நேர்ந்தபோது, மேற்கண்ட இரண்டு சங்கங்களின் ஐக்கியத்தைப்பற்றி மிகவும் கவனம் செலுத்தி வந்தார். பல தடவைகளிலும் நம் நாயகர் அவர்களே தென்னாற்காடு சென்று சங்கவிஷயமாகப் பேசிவருவார். தமது சங்கவிஷயமாக அவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டவரும், அதுபற்றி அதிக வந்தன வழிபாடுகளுக்குரியவருமான பலபத்திர நாயகரவர்களது சிறப்புப் பெயராகிய "பல்லவகுலசேகரர்" என்ற பட்டப்பெயரால் ஒரு பள்ளிக்கூடம் தென்னாற்காடு ஜில்லா சங்க ஆபீசில் ஏற்படுத்தலானது, தங்களது மேலான நன்றியை விசிதப்படுத்துமென்று அச்சங்கத்தார் உத்தேசித்தனர். வன்

வன்னிகுல வர்த்தமானன் என் சிலகாலம் வெளியிட்டுவந்த "சுதேசபந்து" என்ற பத்திரிகையில் பின்வரும் விஷயம் கண்டிருக்கிறது:—

"25-8-12ல் புதுப்பாளையம் ஜில்லா சங்க ஆபீஸில், கனம் சென்னை பல்லவ குலசேகர கா. சோ. பலபத்திர நாயகர் அவர்கள் பெயரால் ஜில்லா சங்கத்தாரால் ஒரு பாடசாலை 10 மணிக்கு ஸ்தாபிக்கப்பட்டது. ஜில்லாசங்க மானேஜிங் கமிட்டி மெம்பர்களில் 20 கனவான்கள் விஜயம் செய்தார்கள். 30 சிறுவர்கள் வாசிக்கிறார்கள். பாடசாலையின் அவசியத்தையும், அது நடைபெறும் முடிவையும் குறித்து, கனம் பலபத்திர நாயகர் அவர்கள் தம் விலையுயர்ந்த காலத்தின் பெரும்பாகத்தையும் பொருளையும் சங்க விஷயமாய்ச் செலவழிப்பதுடன், தமது தேக சிரமத்தையும் கஷ்டத்தையும் கவனியாது பிரயாணம் செய்வதனால், அவருடைய பெருந்தன்மையும், அருமைத் தந்தையின் புகழையும் 100 மடங்கு அதிகமாக்கிவிட்டார் என்பதையும் எடுத்துப் பேசினார்கள்."

நம்மவர்களது பெருமையை விளக்கிக் காட்டிக்கொண்டுவரும் ஆதிக்கங்களையும், அரும்பெரும் திவ்ய ஸ்தலங்களிலிருக்கும் மடம் சத்திரம் முதலியவைகளையும், மடாலய தருமம், கைங்கரியம், மரியாதைகளையும், நாம் கைக்கொண்டு நம் ஆதரவின் கீழ் இருந்து வரவேண்டுமென்று, நம் நாயகரவர்கள் மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டார். அவைகள் நம் சுவாதீனத்தில் வரவும், வந்தவை நிலைபெற்று நிற்கவும் விரும்பி, தருணகாலத்தில் ஏற்றவிதமாய் உபகரித்து வந்தார். காஞ்சிபுரம், திருவண்ணாமலை முதலிய இடங்களிலுள்ள சத்திரங்களைப் புதுப்பிக்கத் தூண்டினார், இதன்றி பலனுக திருத்தணியிலுள்ள வன்னிகுல க்ஷத்ரிய தருமசத்திரத்தை உத்தாரணம் செய்யவேண்டி, ஒரு தனிச்சங்கம் ஏற்படுத்தி, அத் தருமசத்திரத்தின் வேலை நடத்திக்கொண்டு வருகி

றது. அது புதுப்பிக்கப்பட்டபொழுது, பலபத்திர நாயக ரவர்களே அஸ்திவாரக்கல் நாட்டினார். அதைப்பற்றி சொல் வதாவது—

"திருத்தணி வன்னிகுல க்ஷத்திரிய தர்மசத்திர உத்தாரண சங்கம்.

"மகா-ள-ள-ஸ்ரீ காளி பாப்பா நாயகரவர்களால் தர்மசத் திரத்துக்கென வாங்கியுள்ள நிலத்திலும், ஷை சங்கத்தின் பிரசிடெண்ட் மகா-ள-ஸ்ரீ ப. வெங்கடாசலம் பிள்ளையவர்க ளால் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலத்திலும், கார்த்திகைமீ ௨௨ புதவாரம் உதயாதி நாழிகை 4 க்குமேல் 9 நாழிகைக் குள்ளாக, தனூர் லக்கினத்தில், ஷை வன்னிகுலோத்தாரணர் கா. கோபால நாயகரவர்கள் அருமைத் திருக்குமாரரும், மகாசங்கப் பிறதேச காரியதரிசியும், பொக்கிஷதாரருமாகிய ஸ்ரீமான் பல்லவகுலசேகரர், கா. கோ. பலபத்திர நாயகரவர் களால் அஸ்திவார முகூர்த்தம், பிராமணர்கள் ஆசீர்வாத வாத் திய கோஷங்கள் முழங்க, வெகு சிறப்பாக நடந்தேறியது. அன்றையதினம், பெருமழையையும் தேகசிரமத்தையும் கொ ஞ்சமுங் கவனியாது விஜயஞ்செய்த ஷை நாயகரவர்களுக்கும், காஞ்சீபுரம் மகாவித்வான் ஸ்ரீலஸ்ரீ கா. ஆலாலசுந்தரம் பிள்ளையவர்களுக்கும், ஸ்ரீ அ. முருகப்ப நாயகர், ஸ்ரீ ஆ. சுப் பிரமணிய நாயகர் முதலியவர்களுக்கும், உள்ளூர் வெளியூர் கனவான்களுக்கும் சபையாரால் வந்தனமளிக்கப்பட்டு, தாம் பூலம், தட்சிணை, பழம், சர்க்கரை முதலியன வழங்கி மங்கள கோஷத்துடன் சபை பூர்த்தி செய்யப்பட்டது."

இவ்வாறான சாஸ்திருத்தியங்களுக்கு நம் நாயகரவர்களே மிகவும் அநுகூலமாக வன்னிய உலகெங்கும் பிரசித்தமாயி ற்று. கோயமுத்தூரில் இராஜஸ்ரீ R. பூபதி பழனியப்ப நாயகரவர்களும், இராஜஸ்ரீ O. N. குப்புசாமி வர்மா அவர்களும், இன்னும் சில குலாபிமானிகளும் சேர்ந்து நன்முயற்சி செய்து ஸ்தாபித்த "கோயமுத்தூர் அக்கிகுல க்ஷத்திரிய ஜில்லா சங்க"த்தின் 4-வது வருஷ மகோற்சவம்

1914ல் பல்லடத்தில் நடைபெற உத்தேசிக்கப்பட்டபொழுது, அவ்வருஷ மஹோத்சவத்துக்குப் பல்லவ குலசேகரரான நம் பலபத்திர நாயகர் அவர்களை சபாநாயகராக வீற்றிருக்கவேண்டுமென்று, பல்லடம் வாசிகளும் கோயமுத்தூர் ஜில்லாசங்கத்தாரும் தீர்மானித்து, நம் நாயகரவர்கட்கு விண்ணப்பித்துக்கொண்டார்கள். அவ்வாறே இராஜகுல ரத்தினசிகாமணியும் மனமுவந்து அன்புடன் ஒப்புக்கொண்டு, அக்கிராசனம் வகித்து, மஹோத்சவத்தை அதி விமரிசையாகவும் வெகு காம்பீரமாகவும் நடத்திக் கொடுத்தார். அப்பொழுது கோவை ஜில்லா சங்கத்தாரால் வெகு அழகாயும், வன்னி குலோத்தாரணரின் திருவுருப் படத்துடன் சிறந்த விஷயங்களை எழுதியும், பார்ப்பவர் கண்ணைப் பறிக்கும் வண்ணம் பல வித வர்ணங்களால் அச்சிட்டுத் தயார் செய்யப்பட்டிருந்த "வந்தனோபசாரப்" பத்திரம், பிரசுரதாரரும் இப்பொழுது மேற்கண்ட கோயமுத்தூர் அக்கினிகுல க்ஷத்ரிய ஜில்லா சங்கத்தின் அக்ராசனாதிபதியாய் விளங்குபவருமான ராஜஸ்ரீ M. P. கருப்பண்ணகவுண்டரவர்களால் வாசித்துச் சபாநாயகருக்கு அளிக்கப்பட்டது.

வந்தனோபசாரப் பத்திரம்.

உ

கடவுள் துணை.

## கோயமுத்தூர் அக்னிகுல க்ஷத்ரிய ஜில்லா சங்க 4-வது வருஷ மஹோத்சவம், 1914௵ ஏப்ரல்௴ 25௳, 26௳.

பல்லடம்.

சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மஹா சங்கத்தின்
பிறதேச காரியதரிசியும், பொக்கிஷதாரரும்,
இன்றுகூடும் ஜில்லா சங்கத்தில் அக்கி
ராஸனம் வகிப்பவருமான
"பல்லவ குலசேகரர்" கனம்

கா. கோ. பலபத்திர நாயகரவர்கட்கு

ஷை சங்கத்தார் செய்துகொள்ளும்

# வந்தனோபசாரம்.

சதாகாலமும் நங்குல விர்த்திக்கே பாடுபடும் குலமணியே!

தாங்கள் குல அபிமான மேலீட்டால் நங்குலத்தவர் பல்வகையானும் முன்னேற்றம் பெறுதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டு, அதன் பொருட்டாய்ப் பல தூரமான ஜில்லா, தாலூகா, கிராமங்களுக்கும் பொருட்செலவு, தேகப் பிரயாசை, காலப்போக்கு, மனச் சஞ்சலம் முதலியன எவற்றையும் ஒருபோதும் எள்ளளவேனும் கவனியாது சென்று, ஆங்காங்கு நம்மவர்களுக்குக் குலாபிமானத்தை ஊட்டியும், அரிய பெரிய சங்கங்களைக் கூட்டியும், நங்குலச் சிறுவர்களுக்காகக் கல்விச்சாலைகள் நாட்டியும், நங்குலம்

குன்றின் மேலிட்ட தீபம்போல் பிரகாசிக்கும் வண்ணம் குல விளக்குகள் ஏற்றியும் வைக்கிறீர்கள். தவிர பல பாகங்களுக்கும் போதகாசிரியர்களை நியோகித்து, அவர்களால் நமது மரபின் சீரும் சிறப்பும் ஐயந்திரிபற அறியவும், அறிந்தவாறு நம்மவர் சகலரும் நடக்கவும், பின் சந்ததியாரும் வழிவழியே குலாபிமானமும், நல்லொழுக்கமும், குலப்பிரகாசமும், ஆசாரமும், படிப்படியே பெருகவும் செய்கிறீர்கள்.

வன்னிய உலகெலாம் பெருமை பாராட்டிக்கொள்ளத் தக்கவரும், நமது மகா சங்கமும் ஏனைய சங்கங்களும் நிதிதப் சோர்படைய வொட்டாமல் தாங்கினவரும், நங்குலச் சிறப்பு ஒவ்வொருவரும் உணரும்படி "வன்னிகுல விளக்கம்," "வருண தருப்பணம்" முதலிய கிரந்தங்களைச் செய்வித்தவரும், நங்குல விர்த்தியின் பொருட்டு மனமொழி மெய்களால் அகோராத்திரம் பாடுபட்டவருமான தங்கள் தகப்பனார், "வன்னிகுலோத் தாரணர்" கனம் கா. கோபாலநாயகர் அவர்கள் அலங்கியம் முதலிய இடங்களுக்கு விஜயம் செய்து, எங்கள் ஜில்லா வாசிகளுக்குக் குலாபிமான அமிர்தம் ஊட்டி நம் குலத்தை உத்தாரணம் செய்து சென்றார். அப் பெருமானின் பாதார விந்தங்கள் படிந்ததுமே எங்கள் பூமி புண்ணிய பூமியாய்விட்டது. குலாபிமானிகள் தோன்றிச் சங்கங்கள் பல உண்டாயின. அவரது பூதவுடம்பு மறைந்துவிட்டதெனினும், புகழுடம்பு எங்களது இருதயத்தின் கண்ணே பசுமரத்தாணிபோல் பதிந்து கொண்டிருக்கிறது.

"தந்தை எவ்வழி மைந்தன் அவ்வழி" என்பதற்கிணங்கத் தங்கள் தகப்பனார் நமது குலத்தை உத்தாரணம் செய்து வந்ததுபோலத் தாங்கள் நமது குலத்தைச் சேகரம் செய்துகொண்டு வருகிறீர்கள். "கச்சிப் பல்லவ சோழ சரித்திரம்" என்ற நூலைச் செய்வித்தீர்கள். நீடித்த தருமம், குலாபிமானக் கைங்கரியம், தெய்வீககாரியம் முதலியனவற்றில் ஈடுபட்டிருக்கிறீர்கள். தந்தையைப்போலவே தயாள

சிந்தையும், உதார குணமும், அளவற்ற குலாபிமானமும், நிலையுற்ற பெருமித முயற்சியும் உடைத்தாயிருக்கின்ற வன்னிகுலோத்தாரணரின் ஜேஷ்ட புத்திரரான பல்லவகுல சேகரரை இன்று நாங்கள் அளவளாவிய ஆனந்தத்தோடு தரிசிக்க நேர்ந்தது, நாங்கள் முற்பிறப்பில் செய்த பெரும் புண்ணியமேயாகும். இனி எங்களது நாடு பல குலாபிமானிகளை யுண்டாக்கிவிடும்; அவர்களுடைய குலாபிமானம் பானு போற்பெருகிச் க்ஷத்திரிய வீரணங்களுடன் வன்னிய உலகெங்கும் ஜெகஜ்ஜோதியாய்ப் பிரகாசிக்கும் என்பதில் ஐயப்பாடில்லை.

இத்தியாதி குணநலம், குல விசுவாசம், ஐக்கியம், விடா முயற்சி முதலிய நற்குணங்களுக் கெல்லாம் பொக்கிஷமானவரும், எங்களது வேண்டுகோளுக் கிணங்கி, இன்று விஜயஞ் செய்து, சொலற்பாலனவற்றைச் சொல்லி, எங்களையும் தம்மைப்போலவே குலாபிமானிகளாக்க இவ்விடம் வெளி வந்துதவிய பெரும் புண்ணிய சீலருமான தங்களுக்கு நாங்கள் செய்யத்தக்க கைம்மாறு யாதுளது? எனினும், நாங்கள் வாசா கைங்கரியமாக இவ்வந்தனோபசாரப் பத்திரிகையின் மூலமாய் எங்கள் அனைவருடைய அன்பையே ஆரமாகத் தொடுத்துத் தரித்து, எங்களது அளவற்ற மனப் பூர்வமான வந்தனத்தைச் செலுத்துவதுடன், தங்களுக்கு நீடூழி ஆயுளையும், சகல சம்பத்துக்களையும், தந்தருளுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்:

கோ. அ. க்ஷ. ஆபீஸ்:
பல்லடம்.
15—4—1914.

கோயமுத்தூர்
அக்நிகுல க்ஷத்திரிய
ஜில்லா சங்கத்தார்.

இவ் வந்தனோபசாரத்தைப் பெற்றுக்கொண்டு, கனம் கா. கோ. பலபத்திர நாயகரவர்கள்,

"எனது அருமைச் சகோதரர்களே!

நீங்கள் இன்று எனது வரவேற்பின் நிமித்தமாக இங்கு செய்துள்ள காரியாதிகளுக்கு நான் மிகவும் வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டவனாயிருக்கின்றேன். நீங்கள் இப்போது வாசித்துக்கொடுத்த வந்தனோபசாரப்பத்திரத்தில் என் தகப்பனார் செய்த குலாபிமானச் செயல்களையும், நான் செய்து வரும் மிகச் சிறிய முயற்சியையும், அதிகம் பெருமை பாராட்டிச் சொல்லியிருப்பதானது, நீங்கள் எங்களிடத்தே காட்டும் மிகுந்த அன்பின் பயனே என்று சொல்லத்துணிகிறேன். இவ்வாறே நீங்கள் அனைவரும் எப்பொழுதும் குலாபிமானமுடையவர்களாயிருந்து, பலவிடங்களிலும் சங்கங்கள் கூட்டி, நங்குலச் சிறுவர் சிறுமிகளுக்குக் கல்வி கற்பிக்க முயற்சியெடுத்துக்கொள்வது தான் நீங்கள் என்னிடத்தில் காண்பிக்கும் அன்புக்கும், நீங்கள் கொண்டிருக்கும் குலாபிமானத்துக்கும், பிரதி உபகாரமாகும். இச்சங்கமும் நங் குலாபிமானிகளும் மேன்மேலும் விர்த்தியடையுமாறு கடவுளைப்பிரார்த்திக்கின்றேன்." என்று பதிலுரைத்தார்.

கோயமுத்தூர் அக்நிகுல க்ஷத்ரிய ஜில்லா சங்கத்தின் 4-வது வருஷ மகோற்சவத்தை எதிர்பார்த்ததற்குமேல் எண்மடங்கு அதிகச் சிறப்புடன் நடத்திக்கொடுத்தாராகையால், அச் சங்கத்தின் 5-வது வருட மகோற்சவம் 1915ஞு ஜுன்மீ 26, 27 தேதிகளில் கோயமுத்தூரிலேயே நடைபெற்றபொழுதும், நம் நாயகரவர்களே இன்னும் ஒருமுறை சபாநாயகராய் வீற்றிருக்கவேண்டுமென்றும், நஞ்சையிடையாறு பிரசங்கதாரரும் "சம்புகுலசேகரரு"மான கனம் S. கந்தசாமிக் கவுண்டரவர்கள் வரவேற்புச் சபையின் அக்கிராசனாதிபதித்துவம் வகிக்கவேண்டுமென்றும், கோவைவாசிகள் சகலரும் வேண்டிக்கொண்டார்கள். அவ்வாறே "சிந்தாத வன்னியர்தம் செழுங்குலத்தைத் தனிவளர்த்

நான்" ஆன பலபத்திர நாயகரவர்களும், "பழநிற்றன் சொல் தப்புநூலத்தோர்க்குதவிபுரி" கந்தசாமிக் கவுண்டரவர்களும், சபாநாயகர்களாக வீற்றிருந்தமையால், மகோற்சவம் முன்னிலும் சிறந்த வைபவத்துடன் கொண்டாடப்பட்டது. தன்குல நேயமலிகளான பல்லவகுலசேகரரும், சம்புகுலசேகரரும் ஒருங்கே சேர்ந்து, ஒரு சங்கத்தில் தோன்றுவது, எவ்வளவோ அபூர்வமான காரியம். உண்மையாகவே இவ்விரு குலசேகரரும் சபையிலே வீற்றிருந்து சங்கத்தை நடத்தியதனைது, நாம் கண்ணாரக் காணவேண்டிய காட்சியாகும்.

நாயகரவர்கள் தம் வாழ்நாளில் கடைசியாக ஒரு சங்கத்திற்கு அக்கிராசனம் வகித்தது, கோயம்புத்தூர் அக்கினிகுல க்ஷத்திரிய ஜில்லா சங்கத்தில்தான். அதன் பின்பு வன்னிய உலகில் அவர் சங்கங்களையும் நடத்த, நாம் பார்க்க, ஏற்படும் பாக்கியம் நாம் பெற்றோமில்லை. சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகாசங்கத்தின் 2[illegible]-வது வருஷ மகோற்சவத்தைச் சேலத்தில் நடத்த மிகவும் பிரயாசை எடுத்துக்கொண்டார். இராஜஸ்ரீ சி. பழனியப்ப நாயகர் அவர்களும், இராஜஸ்ரீ கு. அர்த்தநாரீச வர்மா அவர்களும், அது விஷயமாக எடுத்துக்கொண்ட கஷ்டநஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. பல்லவகுலசேகரர் சேல நகருக்கும், அதற்குப் பக்கத்திலுள்ள பல கிராமங்களுக்கும் பலதரம் சங்கவிஷயமாகப் பிரயாணம் பண்ணியிருக்கிறார். மேச்சேரி முதலிய விடங்களுக்குச் சரியான பாதை முதலிய சௌகரியங்கள் இல்லாமையால், அவருக்குச் "சரீரப்" பிரயாசை மிகவும் ஏற்பட்டது. காட்டிலும் மேட்டிலும், குன்றும் மலையும், கடந்து செல்லவேண்டியிருந்ததால், குதிரைச் சவாரியும் கொஞ்சதூரம் செய்தார். சில பாலங்கள் கல்லும் முள்ளுமாயிருந்தன.

சேற்றிலும் தண்ணீரிலும் நடந்தார், பாறையும் பள்ளமும் நிலவிடங்களில் கஷ்டத்தைக்கொடுத்தன. பாம்பு பூரான் முதலிய போன்ற விஷ ஜந்துக்களினின்றும் இரண்டொரு தடவை தப்பித்துக் கொண்டார். சரீர வருத்தத்தைப் பாராமலும், பசியை நோக்காமலும், நித்திரையைக் கருதாமலும், சஞ்சாரம் செய்திருக்கிறார். எந்தப் பொல்லாங்கையும் பெரிதுகொள்ளாமலும், தேகசிரமங்களையும் கவனிக்காமலும், சொந்தக் கஷ்டத்தையும் ஒரு பொருட்டாய் எண்ணாமலும், சமூகத்துக்கு உழைத்துவந்தனர். இதுபற்றியே காம் கெ. அர்த்தநாரீசவர்மா அவர்கள் கீழ்க்கண்ட உருக்கமான பாடலைப் பாடியுள்ளார்.

"மாதங்க வையத்தை யெமதூரில் கண்டிடவே
மலையுங் குன்றும்
கூசங்க கானகமும் கொடும்பகலில் நள்ளிரவில்
குழவி போலத்
தேசங்க டோறுமெமைப் பின்தொடர்ந்த நினதுசெயல்
சிந்திக் காது
மாசங்க ளாகுமுன்னே மோசமுடனெமைப் பிரிந்தாய்
மாயை தானோ?"

இவ்வாறு பல்லவகுலசேகரர் தம் குலாபிவிர்த்தியின் பொருட்டு ஏற்பட்ட சகல சங்கங்களுக்கும் இயன்ற அளவு உதவி செய்தே வந்தார். வன்னிய உலகில் சிலகாலத்துக்குள் கிளம்பிய நவீனக் கிளர்ச்சியின் பயனும், க்ஷத்திரியக் கல்வியாபிவிர்த்தியின் நிமித்தம் அத்தியாவசியமானதும், பலபத்திர நாயகருடைய கோரிக்கைகளில் முக்கியமானதுமான 'ஹாஸ்டல்' ஒன்று, 1913ல் ஆகஸ்டுமீ 16ல் நம் குல வெளியூர் உள்ளூர் மாணவர்களின் சௌகர்யார்த்தமாக ஏற்பட்டதும், அந்த ஹாஸ்டலைப் பரிபாலிக்கும் சங்கமாகிய "வன்னிகுல க்ஷத்திரிய ஹாஸ்டல் சங்கம்" ஸ்தாபித்ததும், பல்லவ குல

சேகரருக்கு நல்ல செய்திகளாகும். மகா சங்காபிமானிகளான சிலர்போல் அச்சங்கத்தின்மேல் குருட்டுத் தனமாய் வெறுப்படையாமல், குணவர்த்தனும் குலாபிமானியுமான நம் நாயகரவர்கள் அபிமானத்தோடு வந்தார். பலபத்திர நாயகரவர்கள் பேருள்ளம் படைத்தவராதலையால், க்ஷத்திரிய நாட்டில் ஏற்படும் எல்லாச் சங்கங்களும் நன்மையைப் பயக்குமென்பதை நன்குணர்ந்தார். பல பிள்ளைகளைப்பெற்ற குணவதியான ஒரு தாய், எங்ஙனம் எல்லாக் குழந்தைகளையும் ஸமமாகப் பாவித்து, யாவரையும் ஒரு படித்தாய்ப் பிரியங்கொண்டு நடத்துவாளோ, அங்ஙனமே "வன்னிகுலம் பெருகவந்த பலபத்திரவேள்" என்னிய உலகிலுள்ள சகல சங்கங்களையும் ஏகரீதியான பக்ஷத்துடன் நடத்திச் சிறப்புற்றார். இவரது கொள்கைகளைப்பட்டிப் நூற்றிலொரு பங்கேனும் நாம் அனுசரித்துவந்தால் நமது மரபு அதி ஸீக்கிரத்தில் எவ்வளவோ முன்னுக்கு வந்துவிட ஏதுவிருக்கிறது.

---

## நாயகரும் பிரசங்கங்களும்

"குலபதனிற் சூரியபல நாலளிக்கும் ஆறுமுகக்
கோமான் போலும்
நிலபதனி லென்னாலும் பரவிவரப் பொருளீட்டும்
நின்னையே போலும்
கலையமுனி யருள்படைத்த பலபத்ர நாயகனே
கண்[illegible]பா லோங்கி
இலகுபுக ழுடையவரை எக்காலம் கண்டாள
இருக்கின் றோமே."

என்றல்லவோ ம-ா-ா-ஸ்ரீ. சிவராமலிங்கம் பிள்ளையவர்கள் பாடினார். க்ஷத்திரிய நாட்டைத் திருத்திப் பெருக்கிச் சீர்பெற நடத்துதல் வேண்டித் தோன்றிய பலபத்திர

நாயகரவர்கள் காலத்தில், "உடல் ஆவி இரண்டையும் சங்கத்தின்பால் வைத்து உழைத்து விடாதுழைப்பவரும், அக்னிகுலாதித்தன் மானேஜரும், சங்க இன்ஸ்பெக்டருமாகிய" இராஜஸ்ரீ கா. ஆறுமுக நாயகரவர்கள் குலநூல்கள் எழுதலானார்; நலமுடன் நம் நாயகரவர்கள் அவைகளைப் பதிப்பிக்கலானார். வருணதருப்பணம் அச்சாவதற்கு ரூபாய் இரண்டாயிரத்துக்கு மேலாயிற்று. அக்கினிகுலாதித்தன் பிரசுரிக்கும் விஷயமாக மிகுந்தபணம் செலவழித்தார். கச்சிப் பல்லவசோழ சரித்திரச் சுருக்கம், வன்னியமகாசங்க வைபவசூடாமணி முதலிய புஸ்தகங்களையும் அச்சிட்டார். இவர் காலத்தில் குலாபிமானிகள் எழுதிக்கொடுத்த நம் மரபிற்குரிய நூல்களைப் பிரசுரித்தவர் இவரே. "கோபால நாயகர் எத்தனை நாளைக்கு இருப்பாரென்பது என்ன நிச்சயம். ஆகையால் எனக்குக் கைகூடிய காலத்திலேயே நமது மரபிற்கு வேண்டிய புஸ்தகங்களை அச்சிட்டுக்கொள்ளுங்கள்" என்று அளவளாவிய குதூகலத்துடன் சொல்லிய குலாபிமானச் சிங்கமென விளங்கிய வன்னிகுலோத்தாரணரான இவரது தந்தையார் காலத்திலேயே க்ஷத்திரிய மரபுக்குரிய பல நூல்களும் அச்சிட்டு வெளியாய்விட்டபடியால், மீந்திருந்த சில புத்தகங்களையே நம் நாயகரவர்கள் பிரசுரிப்பதாயினர்.

இராஜஸ்ரீ கா. ஆறுமுக நாயகரவர்கள் மிகவும் சிரமம் எடுத்துக்கொண்டு விஷயங்களை நெடுநாளாகச் சேகரம் செய்து "வருண தருப்பணம்" என்ற ஜாதிக் கண்ணாடியை வரைந்தார். இந்த அரிய பெரிய நூல், வேதாகமாதி-இதிகாச-புராணாதாரங்களைக் கொண்டும், சிந்தாமணி-சிலப்பதிகாரம்-பன்னிருபாட்டியல்-தொல்காப்பியம் முதலிய சங்கமருவிய இலக்கண இலக்கிய நூலாதாரங்களைக்கொண்டும், பிங்கலம்-சூடாமணி-திவாகரம் முதலிய கருவி நூல் ஆதார

க்களைக்கொண்டும், பண்டைக்காலம் தொட்டுள்ள சிவாலயங்களிலும், விஷ்ணுவாலயங்களிலும் அவ்வக்காலங்களில் வதிந்த அரசர்களாலும், அதிகாரிகளாலும், முதியோர்களாலும் பின் சந்ததியார் உணர்ந்துய்யுமாறு, க்ஷேமவிதிகளைய்த் திட்டப்பட்டுள்ள செப்பேடு-சிலாசாசன ஆதாரங்களைக் கொண்டும், இனிய தமிழில் தெள்ளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இந்நூலில் நாலுவருணங்களின் உற்பத்தி, ஒழுக்கம் முதலியவற்றைப்பற்றிக் கூறியிருப்பினும், முக்கியமாய்ப் பல்லவர், படையாட்சி, கண்டர், வன்னியர், சம்புகுலத்தவர் முதலிய க்ஷத்ரிய வம்சத்தினரது விருத்தாந்தங்களைப் பிரமாணவாயிலாய்த் தற்காலத்தில் தெரிந்துகொள்ள விருப்பமுடையோர்க்கு, இஃது ஒரு பெருத்த வழிகாட்டியாம். அவ்வக்காலங்களில் நிகழ்ந்துவந்த வடநூல், தென்னூல் பாஷா நடைகளையும், ஐதிகங்களையும், விளக்கிக்காட்டும் கண்ணாடியுமாம். இதற்குச் சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ் முதலிய பாஷைகளில், ஒவ்வொன்றிலும் வல்லுநரென்று உலகறிந்த, ஆப்தர்களாகிய சாஸ்திரிகளும், பண்டிதர்களும், கவிசாத்திரியும், அபிப்பிராயம் கொடுத்துள்ளார்கள். இந்நூல் 1917ஞ் ஜூலைமீ 27உ சென்னை அன்னதான சமாஜ மீடிங்கில், பட்டஸ்ரீ பாலசரஸ்வதி பண்டித சுதர்சன நாராயண சாஸ்திரியார் அவர்கள் அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்க, அநேக புத்திமான்களும், கல்விமான்களும், வித்வான்களும், பண்டிதர்களும், ஞானவான்களும் சாஸ்திரிகளும், கவிவாணர்களும், புலவாணர்களும் நிரம்பப்பெற்றிருந்த மகா சபையின் முன்னிலையில் அன்பர்களது ஆனந்தத்துடன் அரங்கேற்றப்பட்டது.

இந்த ஜாதிக்கண்ணாடியின் சபை கா. ஆறுமுகநாயகவர்கள் புராதன ஜாதியாரின் வரலாற்றையும், புகழையும்,

கீர்த்திகளையும், வரிசைக்கிரமமாகத் தீட்டியுள்ளார். "நெட்டிப் பேச ஆள் இல்லாவிட்டால், தம்பி சண்டப்பிரசண்டன்" என்றபடி, இக்காலத்தில் சில ஜாதியார்கள் தங்களை உயர்த்திக் கொள்வான் வேண்டிப் பழைய நூல்களைப் புரட்டியும், புதியன சேர்த்தும், "கள்ளிக்கொம்புக்கு வெள்ளிப்பூண் போட்டது" போலத் தங்களை மிகவும் உன்னதமாய் எழுதிக் கொண்டனர். அத்தகைய விஷயங்களை பகாசங்க இன்ஸ் பெக்டரவர்கள் வெகு சாமர்த்தியமாய்க் கண்டித்திருக்கிறார். மற்ற விஷயங்களையும் நீதிமுறைப்படி சாஸ்திரயுக்தமாய் ஒழுங்காக எழுதியிருக்கிறார். ஆற்காட்டில் சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மகாசங்கத்தின் 22-வது வருஷமஹோற்சவம் நடந்தபொழுது, அக்கிராசனம் வகித்த ஸ்ரீமத் பாஸ்கர ஸ்வாமிகள் தமது உபன்னியாசத்தில் பின்வருமாறு சொல்லியிருக்கிறார். "இந்நூல் எழுதுவதற்குக் காரணம் சில நவீன நாகரீகம் பெற்ற அயலார், தங்கள் மரபின் உண்மை உள்ளபடி நூல்களில் இருப்பதை மறந்து, சாஸ்திரங்களுக்கும் புராணங்களுக்கும் முற்றும் விரோதமாய்ச் சிலவற்றைத் தங்கள் ஜாதிபுராணமென்று எழுதிக்கொண்டு, தங்கள் இனத்தார்முன் திரும்பத்திரும்பப் படித்து அகமகிழ்வதோடு இராமல், நம்மையும், நம்மைப்பற்றி ஆங்கிலேயபண்டிதர் முதலானவர்களால் சொல்லிய புராதன சரித்திரங்களையுங்கூடப் புறங்கூறவும் தூஷிக்கவும் தலைப்பட்டனர். ஆதலால் சாஸ்திரபுராணங்களென்னும் சமுத்திரத்தில் நீர்முகந்த மேகமானது, சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகாசங்கமென்னும் பர்வதத்தே காலூன்றி, மேற்காட்டிய பொறாமைக்காரருடைய நெஞ்சத்தே பிடிபிடித்துக் குமுறி, கடு நிலைமையான அன்னியரும் வன்னியரும் களிக்க, வருண தருப்பணம் என்னும் மாரியைப் பொழிந்தது."

இவ்வளவு அருமையும் பெருமையும் வாய்ந்த கிரந்தத்தைப் பெருங்கொடைப் பிரபுவும், பரம்பரையாய்ப் பற்பல நூல்களை அச்சடித்து ஆதரித்தவருமான பல்லவகுல சேகரர் கா. கோ. பலபத்திர நாயகரவர்கள் வெகு திரவியம் செலவழித்துப் பதிப்பித்தார். இந்நூலாசிரியரான ஸ்ரீமான் ஆறுமுகநாயகரவர்கள், "முன்னர் வன்னிகுல விளக்கத்தை எங்கும் ஒளிவீசும்படி அச்சிட்ட வன்னிகுலோத்தாரணர் கா. கோபாலநாயகர் போலவே, இக்காலத்தில் இந்நூலை வெளிநிலவச்செய்த அவர் புத்திரர் ம-ா-ா-ஸ்ரீ கா. கோ. பலபத்திர நாயகரவர்கள் திரிகரணத்தாலும் செய்த பேருதவிக்கு யான் கடமைப்பட்டவனாயிருக்கிறேன்" என்று தம் நன்றியறிதலை முகவுரையில் காட்டியிருக்கிறார். பற்பல ஆதாரங்களைக்கொண்டு, காஞ்சிவாசிகளும் பிறதேசத்தவரும் முன் உணராத இலைமறைகாய்போலுள்ள பல காஞ்சீமாநகர ரகசியங்களையும், தொண்டைநாட்டுச் சிறப்பையும், காஞ்சியை யாண்ட பூர்வ அரசர்களின் வம்சாவளிகளையும், அன்னோர் ஆண்டகால நிர்ணயத்தையும், காஞ்சிமாநகரிலுள்ள சைவ வைஷ்ணவ சாக்தேய சௌமார காணாபத்யாதி முதலிய பல சமய ஆலயங்களும், இன்னின்ன பாரிசத்தில் இருக்கின்றனவென்று கைக்கண்ணாடிபோல் தெரிந்துகொள்ளக்கூடிய சாயாபடமென உதவும் வண்ணம் ராஜஸ்ரீ கா. ஆறுமுக நாயகரவர்கள் இயற்றிய "கச்சிப் பல்லவ சோழ சரித்திரச்சுருக்க"த்தையும் நம் நாயகரவர்கள் பதிப்பித்தார். இந்நூலுக்குக் கோயமுத்தூர்க் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் பிரம்மஸ்ரீ வெங்கடரமண ஐயரவர்கள் கொடுத்த அபிப்பிராயம் வருமாறு:—

"படையாட்சி வன்னியர்கள் காஞ்சியாண்ட
பல்லவர்கள் என்பதுலக றியும் வண்ணம்
இடையாட்சி கல்விகுலமறந்ததினுல் மாசூர்ந்து
இருந்திடு தன்குலமேன்மை யெவருங்காணத்

தொடையாட்சி பெருநன்னூன் முகத்தினாலே
தோன்றலாம் ஆறுமுக நாயகன்பேர்
நடையாட்சி பெற்றுய்ய ஆலம் வீழ்தின்
நயமொத்து விளங்கினனு னிலத்தின் மாதோ"

உலகத்துக்கு ஆதித்தன் இருளை ஓட்டி ஒளியைக் கொடுப்பதுபோல, அக்கிகுலத்தவர்களுக்கு அஞ்ஞான இருளை விரட்டியோட்டி, மெய்ஞ்ஞான வெளிச்சத்தை ஊட்டிக் கொண்டு வந்த "அக்கிகுலாதித்தன்" என்ற பத்திரிகை முன் உலாவிவந்ததுபோலவே, வன்னிய உலகினரின் நன்மையின் பொருட்டு மறுபடியும் உலவிவரவேண்டுமென்று, நம் நாயகரவர்கள் அதிகம் திரவிய சகாயமும் செய்து வந்தார். இப்பத்திரிகை 1897ஆ பிப்ரவரி மாதத்தில் ஸ்டார் ஆப் இந்தியா அச்சுக்கூடத்துச் சொந்தக்காரர் இராஜஸ்ரீ T. குப்புசாமி நாயகர் அவர்களால் பட்சத்துக் கொருமுறையாக ஆரம்பிக்கப்பட்டது. குலாபிவிர்த்தியின்பொருட்டு ஒரு பத்திரிகை உலாவிவரவேண்டுமென்று, மகா சங்கத்தார் வெகு காலமாக உத்தேசித்தும், அது விஷயமாகத் தீர்மானங்கள் செய்துகொண்டுவந்தபொழுது, வன்னிய சங்க கெஜட் என்ற நாமத்தோடு தாம் ஒரு பத்திரிகை நடத்துவதாக, கனம் குப்புசாமி நாயகர் அவர்கள் முன் வரவும், மகா சங்கத்தார் அதற்குச்சம்மதியாமல், வேறொருபெயரால் நடத்தவேண்டுமென்று விரும்பினர். அதற்கு ஸ்ரீமான் குப்புசாமி நாயகர் அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை யெனினும், பத்திரிகை ஒன்றிருத்தல் அவசியமெனப் பல்லோர் கோரியதற்கிணங்க, அக்கிகுலாதித்தன் என்ற பெயரால் நடத்தலானார். அஃது க்ஷத்ரியர்களுடைய பூர்விக நித்தமான சுதர்ம அந்தஸ்தைப்பற்றியும், மேன்மேலும் சீர்திருத்தம் அடையவேண்டிய முறைமைகளைப்பற்றியும், அச் சீர்திருத்தத்துக்கு உபாங்கமான விஷயங்களைப்பற்றியும், பிரசுரித்து வந்தது.

இப்பத்திரிகை சில வருஷங்கள் சரிவர நடந்து, பின்பு நின்று போயிற்று.

மறுபடியும் 1908௵ பிப்ரவரி௴ அக்நிகுலாதித்தன் கிளம்பிற்று. இப்பொழுது வாரமொருமுறை பிரசுரிக்கப்பட்டது. மகாசங்க இன்ஸ்பெக்டர் ஆறுமுகநாயகரவர்கள், முன்னர் அக்நிகுலாதித்தன் மானேஜராயிருந்து வந்தது போலவே இப்பொழுதுமிருந்து வந்தார். கனம் பலபத்திர நாயகரவர்கள் பத்திரிகை வெளிவரும் வண்ணம், வேண்டிய பணச்செலவு செய்து வந்தார். எனினும், அது இரண்டொரு வருஷத்துக்குள் நின்றுவிடவேண்டியதாயிற்று. அக்நிகுலாதித்தனை அநேகர் திருப்பிவிட்டார்களாம். சந்தா சரியாய் வசூலாகாமல், பலபத்திர நாயகரவர்களுக்குப் பெருத்த நஷ்டமுண்டாயிற்று. "பட்டகாலிலேபடும், கெட்டகுடியே கெடும்" என்றபடி, அச்சமயத்தில் அவர் தம் சொந்தச் செலவிட்டு நடத்திவந்த "லாயர்" என்ற சட்டவியவகாரப் பத்திரிகையும் நஷ்டத்தையே கொணர்ந்தது. ஆகலின், நம் நாயகரவர்கள் கொஞ்சகாலம் சொற்பமாகவே உதவிபுரிந்து வரலானார். அக்நிகுலாதித்தனை நடத்தும் பொருட்டு ஒன்பதின்மர் கூடிய ஒரு கமிட்டியும் ஏற்பட்டது. அக் கமிட்டியார் ஒரு விசேஷ விஞ்ஞாபனத்தில் தங்கள் கருத்தைத் தெரிவித்து வெகு பிரயாசைப்பட்டும், அதிகம் பிரயோசனப் படாமையால், 1909-ல் நின்றே போய்விட்டது.

பின்னர் இராஜஸ்ரீ ஆ. சுப்பிரமணிய நாயகரவர்கள் "சுதேசபந்து" என்ற பத்திரிகை மூலமாய் நம் ஜாதீய வியவகாரங்களை வெளிப்படுத்தி வந்தார். என்றாலும், நமது மரபுக்கென்றொரு பத்திரிகையில்லாமலிருந்தது. இக்குறையை நிவர்த்திப்பானவேண்டி, கனம் சுப்பிரமணிய நாயகரவர்கள் பகீரதப் பிரயத்தனஞ் செய்து, "வன்னிகுல மித்திரன்".

என்ற நமது மாபிற்குரிய பத்திரிகையை 1913ஆம் அக்டோபர் ௴ முதற்கொண்டு பிரசுரிக்கலானார். இப்பத்திரிகை வெளிக்கிளம்பியதும் பல்லவகுலசேகரருக்குப் பரமானந்தமுண்டாயிற்று. வன்னிகுல மித்திரனை மிகவும் அபிமானித்தும், அதிகம் ஆதரித்தும் வந்தார். அதில் நமது வருணசிரம தருமங்களும், க்ஷத்திரிய ஜனசாரத் திருத்தங்களும், வன்னிய உலகவர்த்தமானங்களும், நம்மவர் முன்னுக்கு வரும் வழிகளும், பொதுவிஷயங்களும், பிரசுரிக்கப்பட்டு மாதமொருமுறை மலர்ந்து வருகிறது. இத்தகைப் பத்திரிகையிலுள்ளதான் நாம் அதிசீக்கிரத்தில் முன்னுக்குவரும் மார்க்கமிருக்கிறது. நாம் நம்குல விரத்தங்களையும், நம் குலசமாச்சாரப்பத்திரிகைகளையும் அடிக்கடி படித்துவருவதால், மகத்துவமும் உன்னதமும் பொருந்திய நமது மரபைப்பற்றிய உண்மையை உள்ளவாறு அறிந்துகொள்ளலாம். வன்னிய உலகில் நடக்கும் பல சங்க வர்த்தமானங்களைத் தெரிந்து கொள்ளலாம். நமது சங்க தந்திர நிபுணர்களது யுக்தாயுக்தியின்படி, வன்னியப் பிரஜைகளின் முற்போக்குக்குரிய வழிகளைக் கடைப்பிடித் தொழுகலாம். இன்னும் எவ்வளவோ நன்மைகளுண்டு. ஆகையால் வன்னிகுல க்ஷத்திரிய கனவான்களே! நல்ல கன்னியர்களே! வன்னிகுல மித்திரன் சந்தாதாரர்களாக வாரீர்; வன்னிவம்சப் பிரகாசிகைகளைப் பாரீர்.

நம் நாயகரவர்கள் கடைசியாகப் பதிப்பித்தநூல் வன்னியமகாசங்க வைபவ சூடாமணியாகும். இது, தஞ்சையிடையாற்றில் நடந்த மகாசங்க வெள்ளி ஜூபிலி மஹோற்சவத்தின் வைபவத்தைக் கூறும் ஒரு நூல். இந்நூலில், நகரச் சிறப்பு, சபாமுயற்சி, சபாமண்டபச்சிறப்பு, நதிக்காட்சி, புனல் விளையாட்டு, நகர் வலக்காட்சி, சபைக்காட்சி என

எழு இயல்கள், வகுத்து ஆங்காங்கு கற்பனாலங்காரங்களும் அமைத்து, விஷ்ணுபாதசேகரர் வித்வான் ஜ. பசுபதி நாயகர் அவர்கள் இயற்றினார். இதற்குப் பண்டித சிரோமணிகளும், வித்வ சிரோமணிகளும், அநேக சாற்றுக்கவிகள் அளித்திருக்கின்றனர். இங்ஙனமாக வன்னிகுலோத்தாரணர் காலத்துக்குப் பின்பு இதுவரைக்கும், க்ஷத்ரியர்களின் புகழையும், சரித்திரத்தையும், குலதர்மத்தையும் விளக்கும் புஸ்தகங்களைப் பதிப்பித்தவரும், நம் குலாபிவிர்த்தியின் பொருட்டு ஏற்பட்டுள்ள பத்திரிகைகளை வெளிக்கிளப்பினவரும், அவைகளை அபிமானித்து உதவிபுரிந்தவருமாவர் பல்லவகுலசேகரர் கா. கோ. பலபத்திர நாயகர் அவர்கள். இப்பொழுது க்ஷத்ரிய நூல்கள் தழைத்தோங்குதற்குரியதான ஒரு பெரிய ஆதாரம் அநேகமாய் அற்றதென்றே சொல்லவேண்டும். இனி நமது ஜாதியப் பெருநூல்கள் எழுதப்படுவதும் அபூர்வமாயிருக்கும்; அங்ஙனம் எழுதப்படினும் அச்சாகி வெளியாவதும் அரிதாயிருக்கும். "சுவரிருந்தாலல்லவோ சித்திரம் வரையலாம்" என்றபடி, ஆதரிப்பவர் இருந்தாலல்லவோ கல்விமான்கள் நூல்கள் இயற்றுவர். ஆதலால், பல்லவகுலசேகரரைப்போன்ற நம் அரும் பெருங் குலாபிமானிகள் இத்தகைய விஷயங்களுக்கு உதவி புரிய எப்பொழுது முன்னுக்கு வந்து நிற்பார்களென்பதை வன்னிய உலகம் எதிர்பார்த்த வண்ணமாயிருக்கிறது. ஓ' ஜாதிக்குழைக்கும் தனிமணிகளே! க்ஷத்ரிய புத்தகங்களைப் பதிப்பிக்கவும், பத்திரிகைகளைப் பிரசுரிக்கவும், உங்களது ஒப்பற்ற உதவியைச் செய்யுங்கள்.

## வன்னிய உலகமும் நாயகரும்

"இந்துவு மரவு முறவுசெய் தொளிரு
மிறையவ னேக்கினி லுதித்து
வந்திடும் வன்னிகு லத்தினுக் கரசே!
மாதவா!! மாசிலா மணியே!!!"

என்று திருவாங்கூர் சமஸ்தானம் செங்கோட்டை தாலுகா இலத்தூர் இராஜஸ்ரீ சாமி உபாத்தியாயர் அவர்கள் வர்ணித்தவாறு, கனம் பல்லவகுலசேகரர் கா.கோ. பலபத்திர நாயகரவர்கள் வன்னிகுலத்தவரின் ஒரு மன்னனெனவே மிகவும் மதிக்கப்பட்டு வந்தார். வன்னிய உலகில் சங்கசம்பந்தமாக நடந்த சகல காரியங்களையும் சிக்கறுத்துத் தம்மாலியன்றவரைக்கும் சீர்திருத்தி,

"சீதமதிக்குடைக்கீழ் செம்மையறங்கிடப்ப,
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்,—மாதர்
அருகூட்டும்பைங்கிளியு மாடற்பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு." என்றபடி

தமது ஒற்றை வெண் கொற்றக்குடையின்கீழ் ஏகாதிபத்தியம் புரிந்தவர் இவர் ஒருவரே. இவர் தந்தை வன்னிகுலோத்தாரணர் "கோபாலநாயகனுங்கோ" என்று பலவித்வசிரோன்மணிகளால் புகழ்ந்துபாடப் பெற்றுள்ளார். அவரது புத்திரசிகாமணி பல்லவகுலசேகரரையோ, பண்டிதர் பாமரர் முதலிய பல்லோருமே 'மன்ன'னென்றும் 'அரச'னென்றும், 'இறைவ'னென்றும், 'இராஜா'வென்றும், 'மணி'யென்றும், 'மாணிக்க'மென்றும் எவ்வெவ்வளவோ விதமாக வாயார வாழ்த்தியுள்ளார்கள். தம் தந்தைக்குப்பிறகு மகாசனத்துக்கும், வன்னிய உலகத்துக்கும், பாடுபட்டதைப் பார்த்தால், 'தந்தையினை நிகருடைய னரிவெனவே நின்னிடத்தில் சாரக்கண்டேன்'' என வித்வான் சே. அரங்கசாமி நாயக

ரவர்கள் சொன்னது எவ்வளவோ பொருத்தமுடைத்து என்பது நன்கு விளங்கும்.

பலபத்திரநாயகரவர்கள் சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகாசங்கத்துக்குத் தாம் மெம்பரான 1897-ம் வருஷ முதற்கொண்டு சுமார் இருபது வருடகாலம் உழைத்திருக்கிறார். 1903 ல் மகாசங்கப் பிரதேச காரியதரிசியாக நியமனம் பெற்றார். அவ்வருஷந்தொட்டு, மகாசங்கத்தின் பெயரும் அவர் பெயரும் அதிகம் எங்கும் அடிபடுவதாயிற்று. பிரதி வருட மகாசங்க மகோற்சவத்தையும் தாமே முன்னின்று நடத்திக் கொடுத்திருக்கிறார். சங்க உற்சவத்துக்கு சில நாள்கள் முன்னும் பின்னும் இருந்து, சங்கசம்பந்தமான சகல காரியங்களையும் தீர்த்துவிட்டே தமது ஊர் செல்வார். மகாசங்கவியவகாரார்த்தமாக,வன்னிய உலகத்தினெப்பாகத்துக்கும் நம் நாயகரவர்களே அடிக்கடி போய்வருவார். மகாசங்கம் அப்போதைப்போது ஏற்படுத்திய எல்லா சப்கமிட்டிகளிலும் பல்லவகுலசேகரரவர்கள் ஒரு மெம்பராகவே துலங்கியிருக்கிறார். அவரிருந்து நடத்திய மகாசங்க காரியங்கள், மலையின் உச்சியில் ஜொலிக்கும் விலையேறிய விளக்குகள்போல் பிரகாசித்தன. இவ்வாறாகத் தாம் பிரதேச காரியதரிசியான நாள் தொட்டுப் பத்துப் பன்னிரண்டு வருஷம் மகாசங்கத்தையும், வன்னிய உலகத்தையும், நடத்தும் ஒரு பெரிய மகானாகவும், இணையற்ற வழிகாட்டியாகவும் விளங்கினார். மகாசங்க நிர்வாக சபையில் பல்லவகுல சேகரர் கா. கோ. பலபத்திர நாயகரவர்கள் இல்லாதிருந்தோர் தோற்றம் எங்ஙனமிருந்ததென்பதை விஷ்ணுபாத சேகரர் பின்வரும் செய்யுளில் விளக்குகிறார்.

“சந்திர னின்றி மீனின் கணமுறும் வானம்போலும்
இந்திர னின்றித்தேவரின முறுஞ்சொர்க்கம் போலும்
கந்தர மின்றிமேனி யுறுப்புறுகடமே போலும்
எந்திர மின்றியாங்கே யேய்தொழிற் சாலைபோலும்”.

க்ஷத்ரிய நாட்டிலுள்ள பல சங்கங்களுக்கும் பலபத்திர நாயகரவர்கள் உதவிபுரிந்து வந்திருக்கிறார். ஆரம்பாக்கத்துக்கடுத்த இராமாபுரத்திலும், கோயமுத்தூர் ஜில்லா பல்லடம் தாலுக்காவிலும், கோயமுத்தூரிலும், கொண்டாடிய சங்கங்களுக்கு அக்கிராசனம் வகித்துள்ளார். செல்லஞ்சேரி, திருத்தணிகை முதலிய பல விடங்களில் நடந்த அநேக சங்கங்களுக்கு விஜயம் செய்திருக்கிறார். அங்கங்கே சங்கங்கள் ஸ்தாபனம் செய்வதிலும், பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதிலும், மிகவும் சிரத்தையெடுத்துக்கொண்டார். சங்ககாரியங்களைச் சிக்கறுத்துச் சீர்திருத்தவேண்டுமென்று எண்ணினார். நல்ல பந்துக்கட்டால் வன்னிய உலகத்தையே சிதறவொட்டாமல், சிறந்த கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரவேண்டுமென்றார். நீதியாய் வன்னியப்பிரஜைகளின் நிலைமைக்குத் தகுந்தபடி, மகாசங்கத்தார் மற்றைய சங்கங்களுக்குச் சுதந்தரங்களைக் கொடுக்கவேண்டுமென்று வாதித்தார். ஜனங்களின் விருப்பு வெறுப்புகளைத் தெரிந்து, வெறுப்பை விலக்கியும், விருப்பைத் தழுவியும், சங்க காரியங்களை நடத்தினார். க்ஷத்ரியர்களது பலவகைப்பட்ட சங்கங்களுக்கும், மகாசங்கத்தினது கீர்த்திக்கும், ஆஸ்திக்கும் ஆஸ்பதமானார். நம் நாயகரவர்கள் தம் மறுப்புடன் பொதுநல முயற்சிகளில் பிரவேசித்து, அவைகளைச் சீருடன் நடத்தியதால், அவர் எல்லோராலும் போற்றப்பட்டு க்ஷத்ரியகுல ரத்தினமாய் விளங்கினார். இராஜஸ்ரீ சாமி உபாத்தியாயர் அவர்கள்,

"சங்கமரு விடுங்கண்ணன் தானெனவே
யுன்றுதை தரணி மீது
சங்கமரு விடமுயற்சி தான் பூண்டு
கையாண்ட திலகமேபோல் நத்

சங்கமரு வியகுணனே பலபத்ர
நாயகனே தஞ்ச மென்போர்
சங்கமதை யாதரித்த கோமானே
சீமானே தருமவானே"

எனப் புகழ்ந்திருக்கின்றனர்.

பல்லவகுலசேகரர் தமது மனோகரமான குணத்தினால்சகல ரையும் கவர்ந்தார். ஒருபக்கம்நீரோடி ஒருபக்கம்பாலோடும் ஆறு போலத் தமக்கு வேண்டியவர்களுக்கு அனுகூலமாக வும், மற்றவர்களுக்கு விரோதமாகவும் பேதகம் நடத்தாத லின்றியும், இடம் சமயம் அந்தஸ்து முதலியன பாராட்டா மல், உயர்ந்த உத்தியோகம் செய்வது முதலாகத் தாழ்ந்த கூலிவேலை செய்வது ஈறாக உள்ள எல்லாரையும் பாரபக்ஷ மின்றி ஒரே தன்மையாக நடத்தி வந்தார். இவ்வேற்றும் பாரா ட்டாது பரஸ்பரமதிப்பும், பொது நலம்ஐக்கியமும், ஒருத் திமிருப்பதே வன்னிய உலகம் சீரடைவதற்கு மூலாதாரம் என்று நன்கு உணர்ந்தார். கலைஅறிவும் விசாலமான புத்தியு முடையாராகையால், தீயோரிடத்தும் நன்மை பாராட்டி நல் லுரை நவில்வார். எப்பொழுதும் சமுதாய நன்மையையே நாடுவார். புறத்தூய்மை அகத்தூய்மை இரண்டுங்கொண்ட வர். அவருக்கு உலகஞானம் அதிகரித்திருந்தது. பிறர் சுக துக்கங்களை நன்றாய் அறிந்தார். அனுபவ ரீதியாய் அப பியசிக்கப்பட்டவைகளையும், சங்கதந்திரங்களையும், அப்பிய சித்து வந்தார். ஐச்சரியத்தையும் சீரையும், ஒழுக்கத்தையும், செய்வனவற்றையே முக்கியமாகக் கருதுவார். குலவிசுவாசம், ஜாதியபிமானம், சங்கபக்தி முதலியன அவரிடத்து அளவி றந்து குடிகொண்டிருந்தன. குலாபிமானிகள் செய்யும் உப சரணை, மரியாதை, வேடைசேர்ப்பகாரம் முதலியவற்றுக்குப் பரவசப்படுவார். அவர்களது நல்வரவுப் பத்திரங்களையும், வந்தனோபசாரப் பத்திரங்களையும், சந்தோஷத்துடன் ஏற்றுக்

கொண்டு உபசாரஞ் சொல்வார். யாவரிடமிருந்தும் நல்ல பெயர் வாங்கினர்; வன்னிய நாட்டினரை மகிழும்படி செய்வித்தார். குறுகிய புத்திக்கு அவர் எப்போதும் இடங் கொடுத்ததில்லை. அவர் நோக்கங்களெல்லாம் மேல் நோக்கியே செல்லும். "சீலந்தானெங்கள் குலச் செல்வமும் பலபத்திரச் செம்மல்" உயர் குடியிற் பிறந்து வளர்ந்தாருக்கே உரியதும், வருந்தினாலும் பெறுதற்கு அரியதும், பெற்றாலும் பெற்றவரிடத்து மட்டுமே காணப்படுவதுமாகிய திருந்திய நடை அவரிடத்துக் காணப்பட்டது.

இங்ஙனம் தம்மிடம் குடிகொண்டிருந்த அபூர்வமான குணாதிசயங்களால் சகலரையும் வசப்படுத்திச் சங்கதந்திரங்களை உபயோகித்து, வன்னிய உலகம் முழுமைக்கும் சர்வ சங்க நிர்வாகியாய்ப் பலபத்திர நாயகரவர்கள் விளங்கினர். **கோயமுத்தூர் அக்கிகுல க்ஷத்ரிய ஜில்லாசங்கத்தார்** நம் நாயகரவர்கட்குப் பல்லடத்தில் வாசித்துக் கொடுத்த வந்தனோபசாரப்பத்திரத்தில் கண்டபடி, "குலாபிமானம் பாலாறு போல் பெருகியோடத் தூய சிந்தைகளுடன் வன்னிய உலகெங்கும் ஜெகஜ் ஜோதியாய்ப்" பிரகாசித்தது. ஏற்கெனவே மகா சங்கமுயற்சியால், நமது குலம் பெற்றிருந்த மேன்மையும், அந்தஸ்தும், ஆதிக்கமும், மரியாதையும் இத்தன்மைத்தென்றும் இன்னின்னவென்றும் நம்மவர்கள் பலருக்குந் தெரியச் செய்யப்பட்டது. அம்முயற்சியின் காரணமாகவே காஞ்சிபுரம், தம்மனம்பட்டி, திருக்கழுக்குன்றம், காரனை, புதுச்சேரி, நால்வாய், தாயாறு, குமிளம், சென்னையில் இராயபுரம், மயிலை, நுங்கம்பாக்கம், பெத்துநாயகன் பேட்டை முதலிய இடங்களில் க்ஷத்ரியச் சிறுவர்களுக்குப் பாடசாலைகளும், அநேக இடங்களில் இராப்பாடசாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டன. திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம்,

திருப்போரூர் முதலிய க்ஷேத்திரங்களில் மடாலய தருமங்களும் பரிபாலிக்கப் பட்டுவந்தன. கும்பகோணம், மாயவரம், திருவாரூர், மன்னார்குடி, அரியலூர், ஏரிக்கோட்டிப் பட்டி, காஞ்சீபுரம், கடலூர் ஜில்லா, செல்லஞ்சேரி, தியாகவல்லி, கும்புடிபூண்டி, இராமாபுரம், தேத்தாகுடி, சென்னையையடுத்த இராயபுரம், குயப்பேட்டை, சிந்தாரிப்பேட்டை, சஞ்சீவிராயன்பேட்டை முதலிய விடங்களில் சங்கங்கள் ஏற்பட்டன. இவைகளில் சில வன்னிகுலோத்தாரணர் காலத்திலேயே ஏற்பட்டு நடைபெற்று வந்தனவெனினும், பல்லவகுலசேகரர் காலத்தில் அவரது இடைவிடாத சங்க முயற்சியால் பல விடங்களில் அநேக சங்கங்கள் தோன்றிப் பழுத்துக் காய்த்துக் கனித்துக் கிளைத்தன.

கனம் கா. கோபால நாயகரவர்கள் காலத்தில் உண்டான சங்கமுயற்சியும், சங்கங்களின் தொகையும், அவரது புத்திர சிகாமணியான கனம் பலபத்திர நாயகரவர்களது காலத்தில் எவ்வளவோ மடங்கு அதிகரித்து வந்தன. அநேகமாய் எல்லாச் சனி ஞாயிறு நாள்களிலும், பல்லவகுல சேகரர் சங்கப் பிரயாணத்திலேயே யிருப்பார். குலாபிமானிகள் சங்கங்கள் ஸ்தாபிக்கத் தயாராயிருந்து கொண்டிருப்பார்கள். நாயகரவர்கள் ஆங்காங்கு சென்றதும், குலாபிமான அமிர்தத்தை ஊட்டிச் சங்கங்களை நிலைநாட்டி விடுவார். மகாசங்க வருஷ மகோற்சவம் வெளிஜில்லாக்களில் நடத்துவதென்று ஏற்பட்ட காலந் தொட்டு, வன்னிய உலகில் சங்கங்கள் மூலைக்கு மூலை கிளம்புவதாயின. வேடாரணியம், சித்தூர், மருதவல்லிபுரம், தேரூர், பெங்களூர், திருச்சிறுப்பள்ளி ஜில்லாவில் பொன்பரப்பி, கோவில்பாளையமென்கிற தோளீஸ்வரபுரம்; கோயமுத்தூர் ஜில்லாவில் கோயமுத்தூர், பல்லடம்; சேலம் ஜில்லாவில் சேலம், சுகவனபுரி, மேச்சேரி,

மேட்டாங்குரிச்சி, பிட்டாரெட்டிப்பட்டி, அதமன்கோட்டை, தொடாலூர், கருப்பூர்; திருத்தணிகை முதலிய பல்வேறு இடங்களில் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. தவிர வடஆற்காடு, தென்னாற்காடு, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம் முதலிய விடங்களில் ஏற்பட்டிருந்த சங்கங்களும், ஏனையவிடங்களில் ஏற்பட்டுத் தூங்கியும் தூங்காமலுமிருந்துகொண்டிருந்த மற்றைச் சங்கங்களும், பரம உற்சாகத்துடனும் மன ஊக்கத்துடனும் அதி பிரயாசையுடன் உழைத்துவந்தன. இவைகளன்றிக் கடல்கடந்து இந்தியாவுக்கு மேற்கே நெடுந்தூரத்திலிருக்கும் தென்னாப்பிரிக்காவில் போர்ட் எலிஜபெத், கிம்பர்லி, ஜோன்ஸ்பர்க், டர்பன் என்னுமிடங்களிலும், கிழக்கே சிங்கப்பூர், பினாங்கு முதலிய விடங்களிலும் சங்கங்கள் உண்டாயின. பலபத்திர வள்ளலின் குலாபிமானமே ஓர் உருவெனத் திரண்டு வன்னிய உலகத்தில் புதிய சங்க முயற்சியெனும் நவீனக் கிளர்ச்சியை வெளிப்படுத்தினது. அதன் பயனே பயனாகச் சென்னையில் நம் குலமாணவர்களின் சௌகரியார்த்தமாக "வன்னிகுல க்ஷத்ரிய ஹாஸ்டல் சங்க"மென்ற அரிய உபகாரார்த்தமான சங்கம் ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவுபெரிய முயற்சிக்குக் காரணபூதராயிருந்தவர் பல்லவகுலசேகரரே. இதை உத்தேசித்தே புராணிகர் இராஜஸ்ரீ திரு. சிங்கய்ய நாயகரவர்கள் பின்வருமாறு உரைத்தார்போலும்:

" சீர்படுத்த நிலவுலகில் வன்னிகுலச்
சங்கமென நிகழுவன்னி
யார்தடுத்தா லுந்தடைகள் வாராமற்
றிரவியத்தை யன்பாயீந்தே
போர்படைத்த சங்கள்பல பத்திராக
யனிவைக்குப் பிற்காலத்திற்
சீர்படைத்த விச்சங்க விருத்தியெவர்
செய்வரெனத் திடங்கொண்டாயோ".

வன்னிய உலகின் பலபாகங்களிலுள்ள குலாபிமான க்ஷத்திரியர்களைச் சங்கங்களினுல் ஒருவர்க்கொருவர் சம்பந்தப்பட்டவர்களாகச் செய்வது, குலாபிவிர்த்திக்கு மிகவும் அவசியமென்பதைத் தெளிந்தவராஞர். வன்னிகுலோத்தாரணர் அவர்கள், வன்னிய குலோபகாரி தியாகராய நாயகர், வன்னிகுல போஷகர் வெங்கிடசாமி நாயகர், திரு வட்டியப்ப நாயகர், மகாசங்க மெம்பர்கள் முதலிய சென்னைக் குலாபிமானிகளையும், ஏரிக் கோட்டிப்பட்டி மலையண்டி கண்டர், வாழி அர்ராஜுகண்டர், அலங்கியம் பெருமாள் கண்டர் இன்னும் தஞ்சை, திருசசி, கும்பகோணம், மாயவரம் முதலிய விடங்களிலுள்ள குலாபிமானிகளையும் எவ்வாறு நன்கு அறிந்திருந்தாரோ, அவ்வாறே சென்னையில் மகாசங்க மெம்பர்கள், வன்னிகுல க்ஷத்ரிய ஹாஸ்டல் சங்கப்பிரதிநிதிகள், வட ஆற்காடு பூபதி ஜெகன்னாதராஜா, சடகோப நாயகர், தென்னாற்காடு வைத்தியலிங்கராஜா, சின்னசாமிப் படையாட்சியார், பிச்சாவரம் ஜமீன்தார் காசித்துரை சூரப்பசோழஞர், சேலம் பழனியப்ப நாயகர், க. அர்த்தநாரீச வர்மா, சின்னுக்கண்டர், கோயமுத்தூர் ரங்க சுவாமிகள், M. P. கருப்பணகண்டர், R. பூபதி பழனியப்ப நாயகர், C. N. குப்புசாமிவர்மா, மாயவரம் கோவிந்தசாமி நாயகர், கும்பகோணம் கோவிந்தசாமி நாயகர், அரியாங்குப்பம் பெரியசாமி நாயகர், புதுவை பல்லவ சதாசிவநாயகர், புருஷோத்தம நாயகர், நாராயணசாமி நாயகர் முதலிய இன்னணைய குலாபிமானச் சிரேஷ்டர்களையும், சங்கப் பிரமுகர்களையும், பிரதிநிதிகளையும் நன்கு அறிந்தவர் நம் பல்லவ குலசேகரர் அவர்களும். பலபத்திர நாயகர் இங்ஙனம் அவர்களை அறிந்தது மட்டுமேயன்றி, அவ்வவ் விடங்களுக்குச் சமயம் நேர்ந்தபோது விஜயம் செய்தும், அவர்களுக்கு ஊக்கத்தைப் புகட்

டியும்வருவார். இப்படிச் சங்கசஞ்சாரம் செய்வதில் தேககஷ்டம்,பொருள்கஷ்டம்,எவற்றையும்பாரார்."பரோபகாரிக்குப் பொருள் ஒரு சிறுதுரும்பு" என்றவாறு, குலாபிமானத்தையும் சங்கமுயற்சியையும் பெரிதெனப் பாராட்டினரேயன்றிப் பொருளைப் பெரிதென ஒருகாலும் நம் நாயகரவர்கள் மதிக்கவில்லை. இத்தகையோர் பொருளன்றோ பொருள்; மற்றையோர் பொருள் மருளேயாம். "உனைப்போலோர் வள்ளல் தன்னை உன்னியெங்கு திரிந்தாலும் கிடைப்பதரிது" என்று பாடியவண்ணம், பரோபகார நெஞ்சத்துடன் பேருபகாரியாய் விளங்கினமையால், "சிந்தமால் வரைமேலிட்ட விளக்கென நின்றமேலோன்" எனக் கொண்டாடும்படி, பலபத்திர நாயகரவர்கள் பெரும் புகழும் பெற்றார். வன்னி உலகில் நடந்த இத்துணைச் சங்க காரியாதிகளையும் ஒன்றுக்கொன்று முரண்படாது, சீராயும் ஒழுங்காயும் பார்த்துவந்த பல்லவ குலசேகரரை நமது முதற் பெரிய சங்கதந்திர நிபுணர் என்று சொல்ல என்னதடை?

ஆசிரிய நாட்டினருக்கு, முன்னேற்றத்துக்குரிய மார்க்கங்களைக் காண்பித்து வன்னிபுலத்துக்கே ஓர் அரிய பெரிய வழிகாட்டியாய் நின்றவர் பலபத்திர நாயகரே. அங்கங்கே சங்கங்களைக் கூட்டியும், பள்ளிக்கூடங்களைஸ்தாபித்தும், குலாபிவிர்த்தியையும், சங்கமுயற்சியையும், அதிகரிக்கச்செய்தவர் பலபத்திர நாயகரே. நம்மவர்களுக்கு அத்தியாவசியமான ஜாதி நூல்களும், பத்திரிகைகளும் வெளிநிலவப்பிரயாசை எடுத்துக்கொண்டவர் பலபத்திர நாயகரே. மடாலய தருமங்களையும், சங்கவிசாரணைகளையும், போதகாசிரியர் நியமனங்களையும் மிகவும் கவனித்தார். ஆசிரியர்கள் தினமுமொருபடியாய்ப் பல துறைகளிலும் அபிவிருத்தியடைய வேண்டுமென்று பாடுபட்டவர் பலபத்திர நாயகரே. தமது

காலத்தில் மகாசங்க மகோற்சவங்களையும் ஏனைய சங்கங்களையும், வெகு வைபவத்துடனும் சாம்பிரத்துடனும் நடத்திக் கொடுத்துக்கொண்டுவந்தவர் பலபத்திர நாயகரே. நம்மவரின் பொது ஜன நன்மைக்காக ஏற்படும் சகல இடையூறுகளையும் களைந்து, பின்னர் முன்னின்று சாதகமானவைகளைத் தாமே அநுசரித்தும் அநுசரிக்கச் செய்தவரும், பலபத்திர நாயகரே. ஆதலினாற்றான் பல்லவகுலசேகரர் ஒரு மன்னனெனக் கொண்டாடப்படுகிறார். உலகத்தில் உயர்பதவியிலிருக்கும் மனிதர்களுடைய அறிவு சமரஸநோக்கமுடன் விசாலித்திருந்தால்தான் அவர்கள் தமது கடமையை ஒழுங்காய்ச் செய்ய முடியும். சங்கதந்திர நிபுணர்களாயும் குலாபிமானிகளாயும் இப்பொழுது உள்ளவர்களும், இனிமேல் வரப்போகிறவர்களும், பல சங்கங்களையும் சுற்றிப் பார்த்து, உயர்தரச் சங்கப் பிரகாரங்களையும் படித்துவரவேண்டும். அப்படிச் செய்தாலொழிய அவர்கள் சங்க பதவிகளையாவது, பொறுப்பாயுள்ள குலாபிமான உத்தியோகங்களையாவது, வகிக்கத் தகுதியானவர்களாகமாட்டார்கள். நம் நாயகரவர்கள் இக்கடமைகளை நிறைவேற்றி, ஒப்பற்ற காரியங்களைச்செய்து உயர்ந்து விளங்கினார். அக்குலத்திலுதித்த க்ஷத்திரிய உதிரம் தம் தேகத்தில் நிரம்பப்பெற்ற நாம் ஒவ்வொருவரும் பல்லவகுலசேகரரது வழிகளைப் பின்பற்றி, அவரைப்போல் குலாபிமானமே பூஷணமாய்ப் பூண்ட சிரேஷ்டர்களாய்த் துலங்கிச் சீரும் சிறப்பும் எய்வோமாக.

## பொது விஷயங்களில் ஊக்கம்

"சகலதிசை களிலுமுள சகலவரு
ணத்தவருந் தாங்கொண்டாடப்
பகலவன்போல் விளங்கியசீர்ப் பலபத்திர
நாயக"ரான நம் பல்லவ குலசேகரர், கா.கோ. பலபத்திர நாயகர் அவர்கள் உதாரகுணமும் விசாலமான புத்தியும் படைத்த வன்னிகுல மேதாவி என்று நற்கீர்த்தி படைத்ததன்றிப் பொதுவிஷயங்களிலும் விசேஷ ஊக்கம் காட்டியவரென்றும் பெயர்பெற்றுள்ளார். அவர் எந்தக்காரியங்களில் நுழைந்தாரோ, அந்தக்காரியங்களில் தமது கடமையைச் சரிவர ஒழுங்காக நிறைவேற்றினார். அவரது சிநேகப்பான்மை, மனப்பாங்கு, ஜனவாஞ்சை முதலிய அபூர்வகுணங்களைக் கண்ணுற்ற பல வருணத்தாரும் அவருடைய கூட்டுறவை விரும்புவாராயினர். எத்தகைய விஷயத்திலும் அவருக்கு நியாயமே பிரதானம். நிதானம் அவரதுகொள்கைகளில் ஒன்று. யாவரிடத்தும் அன்புபாராட்டினார். அதுவே பிறரிடத்திருந்து அவர் எதிர்பார்த்த வெகுமானம். தம்மாலியன்றவரைக்கும் எல்லாவித உண்மையான தருமத்துக்கும் உதவி செய்திருக்கிறார். இவ்வாறு சற்குண தருமசீலராய் விளங்கினமையால் பலபத்திர நாயகரவர்கள் எல்லாத்திசையிலுமுள்ள எல்லா ஜாதியாராலும் கொண்டாடப்படுகிறார். பல்லவ குலசேகரரான நம் நாயகரவர்கள் இயற்றிய இப் பொது விஷயங்களிலும், மிகுந்த குலாபிமானம் பொதிந்து கிடக்கிறது.

தமது தந்தை கோபால நாயகரவர்களது வழிகளைப்பின் பற்றிப் பலபத்திரநாயகரவர்கள் கோவிற்றிருப்பணிகளைச் செய்வித்துவந்தார். சென்னைக்கோமளீஸ்வரன் பேட்டையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் குலசேகராழ்வார் சந்நிதியின்

நிர்வாகசபைக்கு அக்கிராசனாதிபதியாக நியமிக்கப்பெற்றார். விஷ்ணு சமயத்தோர் போற்றும் பன்னிரண்டு ஆழ்வாராதிகளில் ஸ்ரீமத் குலசேகராழ்வார் ஒரு வன்னிகுல க்ஷத்ரியரன்றோ? ஆதலின் "வன்னிகுலம் பெருகவந்த பலபத்திரவேள்" ஆன பல்லவகுலசேகரர், குலசேகராழ்வாரது திருச்சபைக்குச் சபாநாயகம் வகிப்பது அத்தியாவசியமே. நாயகரவர்கள் சந்நிதிக்குண்டான திருக்கைங்கரியங்களையும், திருவிழாக்களையும் செவ்வனே நடத்திவந்தார். இவ்வாறே, சைவ சமயத்தைப் பூண்டொழுகிய நமது க்ஷத்ரிய வம்சத்தில் உதித்த நாயன்மார்களும், ஆங்காங்குள்ள குலாபிமானிகளால் அவரவர்கள் திருநக்ஷத்திரத்தின் போது, மிகுந்த விமரிசையுடன் கொண்டாடப்படுகின்றனர். கீர்த்திபெற்ற ஓர் அக்கிகுல க்ஷத்ரியராய் விளங்கி, நீதியுடன் அரசுபுரிந்து, பின்னர் கைலைக்கேகிய சேரமான்பெருமாணாயனாரைச் சுட்டியே, சேலநகரில் "ஸ்ரீகழறிற்றறிவார் வன்னிகுல க்ஷத்ரிய சங்கம்" என்று ஒரு சங்கம் ஏற்பட்டு நடைபெற்று வருகிறது. அச்சங்கத்தார், சேரமான் பெருமாணாயனாரது உற்சவாதிகளையும், புகழ்ச்சோழ நாயனார், நெடுமாற நாயனார், இடங்கழிநாயனார், மங்கையர்க்கரசியார், கோச்செங்கட்சோழநாயனார், மெய்ப்பொருணாயனார், கூற்றுவநாயனார், நரசிங்கமுனையரைய நாயனார், ஐயடிகள் காடவர்கோனாயனார், கழற்சிங்க நாயனார் முதலிய நம் க்ஷத்ரியத் திருத்தொண்டர்களது திருநக்ஷத்திரங்களையும் கொண்டாடுகின்றனர். இவைகளேயன்றிக் குலசேகரப் பெருமாள் திருநக்ஷத்திரத்தின்போதும், திருமஞ்சன அலங்கார ஆராதனைகள் நடத்துகின்றனர்.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை ஆதிகேசவப் பெருமாள் சந்நிதியில் எழுந்தருளியிருக்கும் குலசேகராழ்வார் தம்முடைய திருநக்ஷத்திர மஹோத்சவமும் நம் நாயகரவர்கள் நட-

த்திவந்தார். 1-4-14ல் வெளியாகிய வன்னிகுல மித்திரனில் பின்வரும் விஷயம் எழுதியிருக்கிறது :—"இம்மஹோற்சவத்தை 'வன்னிகுலோத்தாரணர்' ஸ்ரீமான் கா. கோபால நாயகரவர்கள் நடத்திவந்ததைப்போலவே 'பல்லவகுலசேகரர்' கா. கோ. பலபத்திர நாயகவர்களாலும், ஸ்ரீமான் ஜா. பசுபதிநாயகரவர்களாலும் கடந்த 60-வது வருஷோற்சவம் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டது. மறுதினம் (9-3-14) காலை ஷை ஆழ்வாருக்குத் திருவீதி கந்தப்பொடி வசந்தோற்சவமானபின், ஷை கைங்கரிய துரந்தரர்களுக்கு தேவஸ்தான மாலை மரியாதைகள் அளிக்கப்பெற்று, அடியவர் குழாங்களோடு திருவீதிப் பிரதட்சணம், வருகிற வழக்கம்போல் அகில பாகவதோத்தமர்களும், கன தனவான்களுஞ் சூழ திருக்கோலம் நடந்தேறியது. மங்களம்! மங்களம்!!"

இவ்வாறே கோவிற்றிருப்பணிகள் பல இயற்றிவந்தார். வன்னியரின் ஆதிக்கங்கள் மிகுந்து விளங்கும் மைலாப்பூரில் இருக்கும் ஸ்ரீ தேசிகர்கோவில் டிரஸ்டிகளில் ஒருவரானார். சென்னை சூளை மேவும் ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் கோவிலுக்கு ஜாயிண்ட் தர்மகர்த்தராக நியமிக்கப்பட்டார். அது விஷயமாக 7—8—15 ல் கூடிய கூட்டத்தில் மற்றொரு ஜாயிண்ட் தர்மகர்த்தராகிய ம-ா-ா-ஸ்ரீ, M. A. ருத்திரகோடி பிள்ளையவர்கள் தாம் செய்த உபன்னியாசத்தில் தம்முடன் முன் ஜாயிண்ட் தர்மகர்த்தாயிருந்த இராஜஸ்ரீ P. பாலகிருஷ்ண நாயகரவர்கள் ஐதராபாத்தில் காலமாய்விட்டபடியால், அங்குள்ள அவரது குமாரர் இராஜஸ்ரீ P. R. ஸ்ரீனிவாச நாயகரவர்கள், தமக்குப் பதிலாக நம் நாயகரவர்களை நியமனம் செய்தாரென்றும், புதிதாய் நியமனமான ஜாயிண்ட் தர்மகர்த்தா பாலிய வயதுடையவராயும், லக்ஷ்மிகடாக்ஷம் பெற்றவராயும், பகவத் பக்தியுள்ளவராயும், அவ்வாலயத்துக்கு வேண்டிய சீர்திருத்தங்கள் செய்

யவல்லவராயு மிருப்பதைப்பற்றித் தமக்கு அதிக சந்தோஷ
முண்டாயிருப்பதாயும் சொல்லிக்கொண்டாடினர்.

நமது நாயகரவர்கள் சைவ வைணவ சமயபேதமற்றவ
ராகையால், சிவத்திருத்தொண்டும் செய்துவந்தார். சென்னை
மாநகர் வாழ் நாட்டுச் செல்வவிநாயகர், அவர் குடும்பத்தா
ரது முழுபார்வையின் கீழேயே இருந்து வருகிறது. கனம்
கா. கோபால நாயகரவர்கள் அக்கோவில் உற்சவாதி விஷய
மாக மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டார். அவரது
திருக்குமாரர் அக்கோவிலுக்கு ஒரு மாளிகை கொடுத்துள்
ளார். மங்களகிரி ஒன்று செய்துவைத்தார். இன்னும் பல
விதமாக நிதிகள் தந்தார். அக்கோவில் திருப்பணிக்குரிய
சகல செலவுக்கும் நாயகரே கொடுத்து வந்தார். திருப்போ
ரூர் முருகக்கடவுள் சந்நிதியில் நடைபெறும் நவராத்திரி
மழுவடி உற்சவத்திற்கும் உதவி புரிந்தார். அந்த நவராத்
திரி உற்சவத்தின் 6வது நாள் சஷ்டித் திதியன்று இரவு நட
க்கும்போதுநாடகத்தில், வன்னியரைச்சார்ந்த பார்வதம்குமா
ரத்தி சுப்பம்மாள் மாயாயோகியைப்போல் வேடந்தரித்து,
அக்கி வாசப்படியில் நுழைந்து வந்தபின்னர், அனலொழுக
த்திரிவிட்டுக்காய்ந்து, தைலம் விட்டுச்சுவாலை எழும்பியிருக்
கும் இருப்புத்தகட்டில், அக்கியில் ஜெனித்தவரென்பதை
விளக்க, வலது கையினால் பளால் பளாலெனச் சப்தமெழ
மூன்று தடவை அறைவது பார்ப்பவருக்குப் பயமும் சோக
மும் உண்டாக்கும். பின்பு அம்மாது ஒருபருத்த விஷச்சர்
ப்பத்தைக்கழுத்திலணிந்துகொண்டு, பிரதட்சணம்வந்து, சந்நி
தியில் விபூதி, பிரசாதம், மாலை மரியாதையும் அக்கி குல
க்ஷத்ரிய கனவான்களிடத்தில் அநேக பரிசம் பெறுவது, கால
ங்கண்ட வழக்கம். ஸ்ரீமான் பல்லவ குலசேகரர் கா. கோ.
பலபத்திர நாயகரவர்கள் ஒரு உயர்ந்த சேலை முதலிய பல்

வேறு வரிசைகளும், மரியாதைகளும் வழக்கம்போல் பிரதி வருடமும் நடத்திக்கொண்டுவந்தார்.

தற்காலக்கல்வியுள்ளவராகையாலும், தற்கால நாகரீகம் அறிந்தவராகையாலும், நம் பலபத்திரவள்ளல் தேசாபிவிர்த்தியின்பொருட்டும், ஜனாபிவிர்த்தியின் பொருட்டும், ஏற்பட்டுவரும் பலவிதமான சபைகளிலெல்லாம் ஒரு சிறந்த மெம்பரெனவே திகழ்ந்தார். உயர்ந்த கவர்மெண்ட் உத்தியோகஸ்தர்களும், வக்கீல்களும், பிரபுக்களும், பெருத்த வியாபாரிகளும், சிமான்களும் சேர்ந்து நடத்திவரும் மதராஸ் யூனைடெட் கிளப்பின் மெம்பராகப் பல காலமிருந்து, தாம் சாக இரண்டுவருஷங்களாக நாயகரவர்கள் அக்கிளப்பின் பொக்கிஷதாரராய்ப்பொலிந்து விளங்கினர். நாடகத்தமிழையும், நாடக முறைமையையும் விர்த்திசெய்வான் வேண்டி, சுகுண விலாச சபை என்று ஒரு சபை ஏற்பட்டிருக்கிறது. அச்சபைக்கு,தெலுங்கு தமிழ் ஆங்கிலப் பண்டிதவித்வ சிகாமணிகள் மெம்பர்களாகச் சேர்ந்திருக்கின்றனர். அச்சபையார் சென்னையிலிருக்கும் விக்டோரியா பப்ளிக் ஹாலில், பல உயர்ந்த நாடகங்களைத் திருந்திய நடையில் உன்னதமாகவும் கண்ணியமாகவும் நடத்திவருகின்றனர். நம் நாயகரவர்கள் அச்சபையில் ஒரு மெம்பராய்த் துலங்கினர். இடதேசம் அவசியமென்பதை உன்னித்தேசாப்பியாசத்தில் விசேஷ கவனம் செலுத்தி வந்தாரென்பது நமக்கு நன்றாய்த்தெரியும். ஆகையால் தென்னிந்தியாதேசாப்பியாசச்சங்கத்தில் ஒரு மெம்பராய்ச்சேர்ந்து, அச்சங்கத்தாரதுவியவகாரங்களில் ஒத்தாசைத்துப் பிரகாசித்து வந்தார். சங்கீதத்திலும் பலபத்திர நாயகரவர்கட்குப் பிரீதியுண்டு. புராணப்பிரசங்கம், காலக்ஷேபக்கதை முதலியன கேட்பதிலும் மிகுந்த ஆசைகாட்டிவந்தார். அதுபற்றிப் பற்பல இன்னிசைக் கழகங்களிலும்,

அநேக காலக்ஷேபச்சபைகளிலும், மெம்பராக இருந்து வந்திருக்கிறார். பொதுவாய்ப்பார்க்கும் பக்ஷத்தில் சென்னைமாநகரில் உயர்ந்த நடையுடை பாவனை பெற்றுச்சிறந்தோங்கிவளர்ந்திலங்கிய பல்வேறு சபைகளையும், சங்கங்களையும், நம்நாயகரவர்கள் சேர்ந்து, அவைகளின்நோக்கங்களையும் செயல்களையும் கண்டறிதல்லாளர்.

பல்லவகுலசேகரர் கா. கோ. பலபத்திர நாயகரவர்களிடத்தில் மகா விசேஷம் பொருந்திய குலாபிமானத்துடன், சிறந்த தேசாபிமானமும் கலந்து பிரகாசித்தது. குலாபிமானம் ஒரு விதத்தில் தேசாபிமானமேயாகையால், நாயகரவர்கள் நமது தேசநன்மையின் பொருட்டு இயன்றவரை உழைத்தவரென்று சொல்லுதல் தகுதியானதேயாகும். இதுவன்றி, வடித்த தேசாபிமானத்துக்குரிய காரியங்களிலும் பிரவேசித்து, உதவி செய்து வந்திருக்கிறார். ஜீவனத்தின் பொருட்டு நம் நாட்டிலிருந்து பல்லாயிரம் மைல் கடல் கடந்து, தென்னாப்பிரிக்கா சென்று அங்கே கஷ்டப்பட்டுக்கொண்டு தவிக்கும் நமது நெட்டால் சகோதரர் விஷயமாக மிகவும் அனுதாபம் காட்டி வந்தார். அன்னோரது கஷ்ட நஷ்டங்களைப்பரிகரிக்கும்வண்ணம் ஏற்பட்ட க்ஷேம நிதிக்குத் தாம் திரவியச்சகாயம் புரிந்ததுமன்றிச் சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகாசங்கத்தினரும் அது விஷயத்தில் உதவுதல் அவசியமென்பதைக்காட்டி, ஒரு பெருங்கூட்டம் கூட்டிப் பண உதவியும் செய்வித்தார். மகாசங்கத்தார் நெட்டால் சகோதரர்களுக்கு அனுதாபக்கடிதங்களும் தந்திகளும் அனுப்பினர். அங்கே இந்தியாவின் பெருமையின் பொருட்டும், இந்தியர்களின் சுதந்தரத்தின் பொருட்டும் எதிர்க்காமல் எதிர்க்கும் உபாயத்தை அநுசரித்துஜெயில்வாசம்பண்ணி உயிர் துறந்தாருள் ஒருவரான மிஸ்டர் நாகப்பன் என்பவர் நமது அக்கினிகுல க்ஷத்-

ரிய வம்சத்திலுதித்த சிகாமணியல்லவா? நம் குலத்தோர் தென்னாப்பிரிக்காவில் பெரும்பான்மையும் காணப்படுகின்றனர். ஆதலினால் நம் நாயகரவர்களைத் தேசாபிமானம் ஒரு பக்கமும், குலாபிமானம் ஒரு பக்கமும், சதா தூண்டிக்கொண்டேயிருந்திருக்குமென்பதில் தடையொன்றுமில்லை.

நமது தேசத்தின் க்ஷேமார்த்தமாகத் தமது விலையேறிய உயிரையும் திரணமாக நினைத்துப் பொது நல விஷயங்களில் அல்லும் பகலும் உழைத்து வரும் தேசாபிமானச்சிரேஷ்டர்கள் சிறந்து பொலிந்து மலிந்து விளங்கும் இந்திய நாஷனல் காங்கிரசுக்கும் தம்மால் கூடியவரை உபகரித்துவந்தார். அதனது மேலான நோக்கங்களைத்தாமும் அனுசரிக்கலானார். தமது காலத்தில் சென்னையில் காங்கிரஸ் கூடியபொழுதெல்லாம் அதனது உபசரணைக் கமிட்டிக்கு உடனே சந்தாவைச் செலுத்தி ஒரு மெம்பராகியே வந்திருக்கிறார். அது விஷயமாக இன்னும் தம்மால் கூடுமானவைகளைச்செய்தார். வன்னிய நாஷனல் காங்கிரஸை நடத்திக் கொண்டுவந்த நம் நாயகரவர்கட்கு, இந்திய நாஷனல் காங்கிரசில் இஷ்டமில்லாமற் போகுமா? ஒரு சிறந்த தேசாபிமானியாயும் தாம் இருக்கவேண்டுமென்றே விரும்பினார். அன்னியச்சரக்கு விலக்குதல், சுதேச சமான் கொள்ளல் முதலியவைகளில் பிரியப்பட்டார். கைத்தொழில் நிதிக்கும் சகாயம் செய்தார். ஆசார சீர்திருத்தக்காரரின் கொள்கைகளை அனுசரித்தவராய்ப்பெண்களுக்குப் படிப்பும் சுதந்திரமும் அவசியமெனக் கருதினார். சுருங்கச்சொல்லின், பலபத்திரநாயகரவர்கள் இந்தியாவின் முற்போக்குக்குரித்த பல துறைகளிலும் இறங்கி உபசரித்தும் உழைத்தும் வந்தார்.

இந்தியாவில் சுதேசக் கைத்தொழில்கள் விர்த்திக்கு வருவான் வேண்டித் தகுந்த முயற்சியும்செய்தார். அவர் ஒருகுல

பிமானத் தேசாபிமானியாதலால், ஒரு "வன்னியப்பாங்கும் கைத்தொழில் சாலையும்" ஏற்படும் விஷயமாக மிகுந்த சிரமமும் ஊக்கமும் காட்டினர். தென்னாற்காடு ஜில்லா வன்னிகுலக்ஷத்திரிய சங்கஸ்தாபன மகா சபையில் "வன்னியபாங்கும் கைத்தொழில்சாலையும்" என்ற இந்தவிஷயம் கனம் கோ. துரைசாமி படையாட்சியார் அவர்களால் பிரரேபிக்கப்பட்டது. ஏழை க்ஷத்ரியர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற நோக்கத்தைக்கொண்டு பல பங்குகள் சேர்ந்து, இரண்டு லட்சம் ரூபாய் முதல் வைத்துக்கைத்தொழில்சாலையும், நிதியும்; பண்ணுருட்டியில் ஸ்தாபிப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டது. நம் நாயகரவர்கள் 2000 ரூபாய் கையொப்பம் செய்தார். அவரைப்பற்றி அக்நி குலாதித்தன் கூறுவது:-"சென்னைமகா சங்கப் பிரதேசகாரியதரிசியும், தண்டவாளப்பட்டரைக்குச் சொந்தக்காரருமான கனம் கா.கோ.பலபத்திர நாயகரவர்கள் நம் குலத்தை விர்த்திக்குக்கொண்டுவருவதற்கு, இப்பூலோகத்தில் ஒரு அவதார புருஷராக உதித்திருக்கிறாரென்று பலரும் ஒப்புக்கொள்வதற்குத் திருஷ்டாந்தமாகச் சங்க விஷயமாய் எடுத்துக்கொள்ளும் பிரயாசையைப்போல் இந்நிதிக்கும் கூடுமான பிரயாஸை எடுத்துக்கொண்டிருக்கிறார்". இவ்வாறு குலப்பிரகாசர் பிரயத்தனப்பட்டும் க்ஷத்ரியர்கள் முன் வைத்தகாலைப் பின் வைத்துவிட்டார்கள்! இது க்ஷத்ரியகுலத்துக்கு ஒரு வசையைத் தருவதாயிருப்பதால், நாம் மிகவும் விசனிக்கவேண்டியதாயிருக்கிறது. இனிமேலாவது நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தையும் முயற்சியையும் கைவிடாது, "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்னும் பழமொழிக்கிலக்காகி, அக்காரியாதிகளைக்கைகூடச்செய்து புகழுற்று, இவ்வுலகில் இனிது வாழ்வோமாக.

இவ்வாறு பலபத்திர நாயகரவர்கள் பொது விஷயங்களில் மிக்க ஊக்கங்காட்டியும், உண்மையாகவே உழைத்தும் வந்ததால், அவர் வன்னியராலும் அன்னியராலும் ஒருங்கே கொண்டாடப் பட்டார். ஒழுங்கானதும் உபகாரமானதுமான விஷயமெதுவாயினுஞ்சரியே, அதற்குச் சகாயம் செய்ய ஒருகாலும் பின் வாங்கியதில்லை. பல வைஷ்ணவ சைவ பஜனைக்கோவில்களுக்கும், மடங்களுக்கும், திரவிய உதவியேயன்றித் தம் பட்டணமாயினின்றும் நிலன்களும், கிரகங்களும், வீட்டுக்களும் தந்து உபகரித்துள்ளார். மகா பண்டிதராய் விளங்கிச் சைவசமயத்தை நிலைநிறுத்தியவரும், பல இராஜாக்களிடமும் ஜமீன்தார்களிடமும் பரிசுபெற்றுத்திகழ்ந்தவருமான சண்டமாருதம் இராஜஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள் ஸ்தாபித்த வேதாகமோக்த சைவசித்தாந்த சபையின் கட்டடத்துக்குக் கற்பனைகளும், மூன்னூறு ரூபாயும் வாக்களித்திருந்தார். மேற்கண்ட சண்டமாருதத்தின் உருவச்சிலையையும் வார்ப்பித்து வைக்கவும் கருதியிருந்தார். என்னே! இவரது குணவிசேஷம்! குலாபிமானக் குணசீலர்; உதாரகுணத் தர்மிஷ்டர். எக்காரியத்தையும் சிறப்புற நடத்தி, யாவரையும் மகிழ்விக்கச்செய்பவர். இக்காரணத்தை யொட்டி மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்வான் சே. அரங்கசாமி நாயகரவர்கள் சொன்னது பின்வருமாறு:—

"சுற்றமர்க்கும் அன்னியர்க்கும் அவரவர்கள்
வேண்டியதை நல்கிநின்றால்
வந்தவர்கள் குதுகலமா வாழ்வதை
புரிந்தபல பத்ரவள்ளால்
சுகவேலா நின்கீர்த்தி மகிமையிந்த
நானிலத்தி லளவிடற்பாற்றோ".

பல்லவகுலசேகரர் இங்ஙனம் பல்லோராலும் போற்றப் படுகின்றனர். இன்னோரன்ன உன்னத குணாதிசயங்கள் அமை

வமானவையாயும், அதிசயக்கத்தக்கனவையாயும், நாம் ஒவ்வொருவரும் அன்புடன் அநுசரித்துக் கைப்பற்றுதற்குரித்தானவையாயு மிருக்கின்றன.

## தினசரியை

"எத்திக்கும் புகழ்மணக்க வெவ்வலகைக்குந்தாயகமாய்த்
தித்திக்கும் மொழிபேசும்" பலபத்திர நாயகரவர்கள் உயர்தர வாழ்நாள் உடையவர். அவர் தினந்தோறும் அதிகாலையில் நாலு அல்லது ஐந்து மணிக்கு எழுந்திருந்து தேகாப்பியாசம் செய்வார். கசரத்து எடுத்தல், ஜோடிகள் விளையாடுதல் முதலிய இந்தியாப்பியாசங்களையே செய்து வருவார். பின்னர்,

அதிகாலையிலெழுந் தற்பாதிகாசமுன
மாதிகளையே முடித்து
அருவிநீராடிமடி யோடுசந்தியாவந்த
னாதிகர்மங்கள் செய்து
துதிபிரமகாயத்ரி மந்திரஜபஞ்செய்து சூர்யத்
தியானமு முடித்து
சொல்லும் வேதாத்யாணமுஞ்சிறிது செய்தபின்
றேசன் றடிச்சல்ற நெறியொடு

பதியாகிலராசுதனை நீதிதவறுமலெ
பாலிக்கவேண் டுபின்தேற்
பரிவுடனரன்றனக்கிட்ட நற்பணிவையமிக
பயபக்தி யுடனியற்றி
மதிகொண்டு மனைவிமக்களை யாதரிப்பதே
மன்னர்கட னிதைநன்னவே
வன்னியர்களேநல்ல கன்னியர் களேசங்க
வன்னியர்களேசக லாரீர்.

என்றபடி, காலைக்கடனை முடித்துவிட்டுச் சிற்றுண்டி அருந்தி, ஆடை ஆபரண அலங்காரராய்ப், பேசின் பவுண்டிரீ

ப்பட்டரைக்குப் புறப்படுவார். தம் கையில் பருத்ததோர் கைத்தடி விளங்க, அகன்ற நெற்றியில் அழகான வடகலை நாமம் துலங்க, தாம்பூலம் தரித்துச் செவ்விய உதடுகள் புன்னகை பொழிய, தம்மைச் சார்ந்தோர் துன்பம் தத்க்ஷணமேயழிய, நம் நாயகரவர்கள் கோச் வண்டியிலாயினும், ரிக்ஷா வண்டியிலாயினும் போவது, "மாக்கண்ட கன்னியர்கள் மனங்கொண்ட மதனென வடிவில் மிக்கான்" எனப்புகழத் தகுந்ததாயிருக்கும்.

காலை எட்டு மணிக்குள் பட்டரைக்கு வந்துவிடுவார். நாயகரவர்கள் தண்டவாளச்சாலைக்குள் நுழைந்ததும், சகல உத்தியோகஸ்தர்களும் எழுந்து மரியாதையாக நிற்பார்கள். அவர் தமது ஸ்தானத்தை அடைந்ததும், களைந்து கொடுக்கும் உடுப்புகளை வாங்கி அதனதனிடத்தில் மாட்டவும், நிஜாருடன் கூடியவேறு உடுப்பு ஒன்று அவருக்குக் கொடுக்கவும், அவரது கம்பெனிச்சிப்பாய்கள் தயாராகவிருப்பார்கள். பின்பு தமக்கு வந்திருக்கும் கடிதங்களையும் ஆர்டர்களையும் பார்ப்பார். அவைகளுக்கெல்லாம் இன்னின்ன பதில் எழுதுவதென்று சொல்லுவார். அவைகள் எழுதியாவது டைப் அச்சடித்தாவது வந்ததன்மேல், தாமே நேரில் வாசித்துப்பார்த்துக் கையொப்பம் சாத்துவார். சாமான்கள் விஷயமாகவும், ஆர்டர்கள் விஷயமாகவும், சங்க விஷயமாகவும், வரும் கனதனவான்களுடன் பேசிக்கொண்டிருப்பார். சுமார் 11-மணிக்கு ஆபீஸ் அறையினின்று புறப்பட்டுத் தமது பட்டறையின் ஒவ்வொரு இலாகாவிலும் வேலைகள் சரிவர நடந்துகொண்டு வருகின்றனவாவென்று சடுதி பார்த்துவருவார். நாயகரவர்கள் ஒருகோபியல்ல ஆகையாலும், தயாளகுணம் நிறைந்தவர் ஆகையாலும், அவர் தணிக்கை செய்துவருவது அனைவருக்கும் ஆநந்தத்தையே உண்டாக்கும். தமது வேலையாளரிடத்தும்,

உத்தியோகஸ்தரிடத்தும், ஒருவேளை ஏதாவது குற்றம் காணப்படினும், அவைகளைப் பொறுத்து நல்ல புத்திமதிகளைச்சொல்லுவார். ஒரு காலும் வையார், திட்டார், தூஷியார். யாவரிடத்தும் அன்பாகப்பேசுவதே அவருக்கு இயல்பாகும். அவர் பின்னர் தமதிருப்பிடம் அடைந்த சின்னேரத்துக்குள் மணியும் பன்னிரண்டு அடிக்கும்.

அந்நேரத்துக்குள் பலாத்திரகாயகர் அவர்கட்குச் சாப்பாடு வால்டாக்ஸ் ரோடு கப்புசெட்டித் தெருவிலுள்ள தமது வீட்டிலிருந்து தண்டவாளச்சாலைக்கே வந்திருக்கும். நாயகரவர்கள் மெத்தைமேற்சென்று, போஜனம் அருந்தித் தாம்பூலந் தரித்துக்கொண்டு இளைப்பாறுவார். பின்பு சிறிதுநேரம் துயில் கொள்வார். இரண்டரையல்லது மூன்று மணியானதும், கீழேயிறங்கி ஆபீஸ் அறையிலுள்ள தமது ஆசனத்தில் அமர்வார். இன்னும் ஏதேனும் கடிதங்கள் பாக்கியிருந்தால், அவைகளுக்குப் பதிலெழுதும் விஷயங்களைப்பற்றிக் கூறுவார். எழுதி முடிந்து தயாராயிருக்கும் கடிதங்களுக்கும், மணியார்டர்களுக்கும், தருமம் கூலி சம்பள முதலிய ரசீதுகளுக்கும், கையெழுத்து இடுவார். காலையில் ஒருதரம் பட்டறையைத் தணிக்கை செய்தவாறே, மாலையிலும் ஒருதரம்சுமார் 3½ மணிக்கு ஒவ்வொரு இலாகாவிலும் நுழைந்து மேல்பார்வை பார்த்து வருவார். அவரைக்காணும்பொருட்டு இப்பொழுது பலர் வந்திருப்பார்கள். வந்தவர்களின் காரியாதிகளை விசாரித்து, அவர்களுடன் சம்பாஷித்துக்கொண்டிருப்பார். தாங்கள் விடைபெற்றுச் செல்லும்போது கும்பிடுகையில், அவர்கள் எத்தகையினராயிருப்பினும் சரி, அவர்களுக்குக்கைகூசாது பிரதி கும்பிடு போடுவார். பின்னர் ஐந்து மணிக்கெல்லாம் தயாராய் வந்து காத்துக்கொண்டிருக்கும் கோச் வண்டியிலேறி ஜார்ஜ்டவுன்மேவும் யூனைடெட் கிளப்புக்கு வந்து சேருவார்.

கால் மணி நேரத்துக்குள் கோச்வண்டி யூனிடெட் கிளப்பை யடைந்து விடும். உடனே சிற்றுண்டி கொள்வார். பிறகு வெற்றிலை பாக்கு போட்டுக்கொண்டு, கவலையற்ற மனத்தினராய் உல்லாசமாய் உட்கார்ந்துகொண்டிருப்பார். அதற்குள் அவரது சிநேகர்கள் வந்து அவரைச் சுற்றிலும் கூடுவர். புத்தம் புதிதாய் மலர்ந்து உலாவிக்கொண்டிருக்கும் விசேஷ வர்த்தமானங்கள், வியப்பைத் தரும் விசித்திரச் சேதிகள், ஐரோப்பியப் பெருத்தத்தின் அதிசயச்செயல்கள், கவர்ன்மெண்ட் விஷயமாய்ச் சபைகளில் நிகழும் சங்கதிகள், இன்னணைய பல்வேறு விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பார். சிலவேளைகளில் "செஸ்" என்ற ஆட்டமாயினும், "பில்லியர்டு" என்ற விளையாட்டாயினும், ஆடிக்கொண்டிருப்பார். இச்சமயத்திலும் தம்மைக்காண வந்தவர்களைக்கண்டு விட்டால், உடனே ஆட்டத்தை விட்டுவிட்டு எழுந்து வந்து, அவர்களை பெஞ்சியின்பேரில் இருக்கச்செய்து, தாமும் உட்கார்ந்து, அவர்களுடன் சல்லாபித்துக்கொண்டிருப்பார். அவருடன் சங்க சப்பந்தமாகச் சல்லாபிப்பதற்கு இது ஏற்றசமயமாயிருந்தது. அநேக குலாபிமானிகள் பல்லவகுலசேகரரவரை யூனைடெட் கிளப்பில் சந்தித்தே பெருஞ் சங்க காரியங்களைச்சாதித்திருக்கின்றனர். பகலெல்லாம் பட்டரையின் அலுவல்களினால் சலித்துப்போயிருந்த அவரது மனம், கிளப்பில் காப்பி சாப்பிட்டபின்பு இளைப்பாறி நிம்மதியாகவிருக்கும். அது சமயம் அவரது அடி உள்ளத்திலிருந்து கிளம்பிவரும் குலாபிமானத் தொனியானது கேட்போரது மனதை ரமிக்கச்செய்து பரவசப்படுத்தும். காயகரவர்களைச் சுலபசாத்தியத்தில்கண்டு, சாவகாசமாயும் திருப்திகரமாயும் பேசுவதற்குச்சாயந்திரமே தகுந்த காலமாகும். பல்லவகுலசேகரருடனே பலதரம் சங்கயாத்திரை புரிந்துவந்தவரான நமது "வன்னிகுலமித்திரன்" பத்திராதிபர் ராஜஸ்ரீ ஆ. சுப்பிரமணிய நாயகரவர்களுக்கு,

சங்க யாத்திரை செய்வதன் நிமித்தமாக நம் நாயகரவர்களுடன் கலந்து முடிவுசெய்தற்கும், சங்க சம்பந்தமான பலவிஷயங்களைப் பேசுவதற்கும், யூனைடெட் கிளப்பே தகுந்த இடமாயிருந்தது.

ஏழரை அல்லது எட்டு மணிக்குக் கிளப்பிலிருந்து வீட்டுக்குப்புறப்படுவார். மகாசங்கக்கூட்டம் கூடும் நாட்களில், ஆறு மணிக்கே கிளப்பை விட்டுப் புறப்பட்டுக் கூட்டத்துக்கு ஆஜராகி, சங்க வியவகாராதிகளைக் குலாபிமானக் கருத்துடன் கவனித்துக் கூட்டம் முடிந்தவுடன் வீடுவந்து சேருவார். சிறிது நேரத்துக்குள் இராப்போஜனம் உண்டு, தாம்பூலந்தரித்துக்கொண்டு, உற்சாகமாய் மனைவிமக்களுடன் குலாவிக்கொண்டிருப்பார். பின்னர் அன்றைய கணக்குகள் சரியாக வைக்கப்பட்டிருக்கின்றனவாவென்று, பட்டறையிலிருந்து தம்மில்லத்துக்குக்கொண்டுவரப்பட்டிருக்கும் கணக்குப்புத்தகங்களைப்பார்வையிடுவார். சங்கக்கடிதங்களும், குறிப்புகளும், அடங்கிய பெட்டியும் அவரது மேஜையின்மேல் வைக்கப்பட்டிருக்கும். இவ்விஷயங்களைப்பற்றிச் சிந்தித்துவிட்டுச்சுமார் பத்து மணிக்குப் படுக்கைக்குப்போவார். விடியற்காலத்தில் தேகாப்பியாசம் செய்யும்பொருட்டு காலை ஐந்து மணிக்கெல்லாம் நம் நாயகரவர்கள் எழுந்துகொள்வார்.

ஞாயிற்றுக்கிழமை பட்டறையில் வேலைகிடையாது. அந்நாளில் அவருக்குச் சங்கசம்பந்தமாய் ஓய்வு ஒழிவில்லாமலிருக்கும். சனி, ஞாயிறு ஆகிய இவ்விருதினங்களில் வன்னிய உலகத்தில் நடைபெற்ற அநேகசங்கங்களுக்கு விஜயம் செய்தும், அக்கிராசனம் வகித்தும், அவைகளை நடத்தியும் கொடுத்து வந்திருக்கிறார். ஞாயிற்றுக்கிழமை நம்முலகின் எப்பாகத்திலாவது ஒரு சங்கத்தை வைத்துக்கொண்டு, நாயகரவர்கள் கட்டாயம் வரவேண்டுமென்று வேண்டி விண்ணப்பித்துக்-

கொண்டால், "வரமுடியாது" என்று அவர் வாயில் வந்ததில்லை. எவ்வளவு தூரமாயினும் சரி; ரயிலிலாவது, வண்டியிலாவது, பிரயாணம் செய்யத்தயங்குவதில்லை. வாக்குறுதிகொடுத்தவாறே புறப்பட்டுப்போய்ச் சங்ககாரியாதிகளை முடித்துவிட்டு, ஞாயிறு மாலை மெயிலேறி எங்ஙனமாயினும் திங்கட்கிழமை தமது பட்டறை வந்துசேர்ந்து விடுவார். அவ்வாறு வரக்கூடாமையாய்ப்போயின், அதுபற்றிப் பச்சாதாபப்படமாட்டார். தங்கவேண்டிய இடத்தில் தங்கிக் குலாபிமான வியவகாராதிகளைச்சரிவர முடித்துவிட்டே புறப்படுவார். மகாசங்க வருஷ மஹோற்சவகாலங்களில் அதன் தொடக்கம் முதல் முடிவு வரையில் ஏற்படும் பல நாட்களும் அந்தந்த ஊரிலேயே தங்கிச் செய்வன திருந்தச் செய்வார்.

கனம் பலபத்திரநாயகரவர்கள் அமாவாசை, ஏகாதசி, முதலியன அநுஷ்டிப்பார். சரஸ்வதிபூஜை, ஆயுதபூஜை, முதலியன நடத்துவார். ஸ்ரீஜயந்தி, கிருஷ்ணஜயந்தி, முதலியன கொண்டாடுவார். ஆடி நோன்பு அதிக விமரிசையாய் நடக்கும்; ஆவணி அவிட்டம் மிகுந்த விசேஷம். தீபாவளியும், தைநோன்பும், தீரா ஆநந்தத்தை விளைவிக்கும். இன்னு மற்றுமுள்ள இந்துமத வைணவ சமயச் சகல விரதங்களையும் அநுஷ்டித்து வந்தார். சைவ நோன்புகளும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அங்கீகாரமானவைகளே. நம் நாயகரவர்கள் எந்த நோன்பை யியற்றினும்படாடோபமின்றி, அளவுக்குத் தக்கபடி சுருக்கமாகவும் செவ்வையாகவும் செய்வார். வியயம் செய்வதென்பதை அவர் மிகவும் வெறுத்தார். சிக்கனமென்பது அவரது ஆபரணம். இதனால் அவர் தருமம் அதிகம் செய்யவில்லையென்பதல்ல. உண்மையும் உபகாரமுமுள்ள காரியங்களுக்கேதான் அவர் உதவிபுரிந்தார்; நிலைபெற்ற காரியங்களிலேதான் அவர் தலையிட்டுக்கொண்டார்.

பல்லவகுலசேகரர் அவர்கள் வம்சாபிமானமே விரதமாகப் பூண்டு, தமக்கு ஏற்பட்ட தொழிலையும் செய்து, திருக்குலாபிமான கைங்கரியங்களும் இயற்றி, இகத்தில் புகழும், பரத்தில் சுகமும் பெற்றுச் சிறந்ததொரு நிதரிசனமானவராகலின், அவர் நமக்கு ஓர் அரிய பெரிய வழிகாட்டியாக என்றென்றும் பிரகாசித்து நிற்கிறார்.

## நாயகரது மரணம்

"பூபாலர் கொண்டாடும் வன்னியரின் மாச்சங்கம்
புதுப்பித் தற்குக்
காபாலக் காரணமாய் முயற்சித்திற நனியோர்ந்து
காத்து வந்தோன்"

என்று ம-ள-ள-ஸ்ரீ ஜெகராவு முதலியாரவர்கள் பல்லவ குலசேகரரைப் புகழ்ந்து வர்ணித்திருக்கிறார். அதற்குரித்தானவரே நம் நாயகரவர்கள். இவரன்றோ மகாசங்கத்தின் சகல காரியங்களுக்கும் முன்னின்று உழைத்தவர்? சில அசந்தர்ப்பங்களினால், சேல நகரில் மகாசங்கத்தின் 26-வது வருட மகோத்சவம் கூடாதுபோயிற்று. பின்பு மகாசங்க மகோத்சவம் திருக்கழுக்குன்றத்தில் கூடுவதெனத் தீர்மானித்து முயற்சி செய்யப்பட்டது. அதுவும் கைகூடியபாட்டைக் காணாதது பற்றிச் சென்னையிலேயே மகாசங்க மகோத்சவத்தை நடத்துவதென்று, மகாசங்க நிர்வாக சபையார்கள் முடிவு செய்தனர். பலபத்திரநாயகரவர்கள் அது விஷயமாகத் தாமே நேரில் போய் இடம் முதலியனவும் பார்த்துவந்தார்; சில சாமான்களும் தயாரிக்கப்பட்டு வந்தன. இதற்குள்ளாக நம் நாயகரவர்களுக்கு ஒரு நாள் உடம்பு கொஞ்சம் அசௌக்யப்பட்டிருந்தது. அவருக்கு அசௌக்யம் சிறிது சிறிதாக நீடிக்கவே, மகாசங்க வருஷோத்சவமும் தள்ளிவைக்கப்படுவதாயிற்று.

வன்னிகுலமித்திரன் பத்திரிகை பின்வருமாறு கூறுகிறது:—
"சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மகாசங்க 27-வது வருஷோற்சவம்: சென்ற டிசம்பர் மாதத்தில் நடத்துவதாக உத்தேசிக்கப்பட்டிருந்த வருஷோற்சவம் மிஸ்டர் C. G. பலபத்திர நாயகரவர்களுக்கு ஏற்பட்ட தேக அசௌக்யத்தின் நிமித்தமே நிறுத்தப்பட்டுப் போயிற்று. கூடிய சீக்கிரத்தில் நடத்த மகாசங்கத்தார் ஏற்பாடு செய்வார்கள்."

1915ஆ டிசம்பர்மீ 4-தேதியன்று பலபத்திரநாயகர் அவர்கட்கு அஜீரணம் கண்டது. அதற்காக ஒரு சுதேச வைத்தியரிடம் சிகிச்சை பார்த்துக்கொண்டார். அவ் வைத்தியர் கஸ்தூரிமாத்திரை கொடுத்தார் வைத்தியரும் பிறகு சுமார் முப்பது மாத்திரை வரைக்கும் நாயகரவர்களிடம் கொடுத்துக் கையிருப்புச் செய்துவிட்டு, இரண்டுமணிக்கொருதரம் சில மாத்திரைகள் உபயோகிக்கும்படி சொன்னாராம். ஆனால் வைத்தியர் மாத்திரையின் குணாதிசயங்களைப்பற்றி யொன்றும் நாயகரவர்களுக்குச் சொன்னாரில்லை. பல்லவகுலசேகரர் வைத்தியர் சொன்னபடியே முதல்நாள் உபயோகித்தார். கொஞ்சம் குணமுங்கண்டது; மாத்திரைகள் சாப்பிடுதற்கு நன்றாகவும் இருந்தன. ஆதலினால் நம் நாயகரவர்கள் முன்னாள் சாப்பிட்டதுபோக, மீதியாக விருந்த மாத்திரைகளையும் இரண்டுமணிக்கொருதரம் சாப்பிட்டுக்கொண்டே வரலானார். இவ்வாறு செய்தலும், மறுநாளே பேதி ஆரம்பித்துவிட்டது. பேதி மிதமிஞ்சியாகியும், அவ்விஷத்தைக் குடும்பத்தாருக்குத் தெரிவிக்கும்பக்ஷத்தில் அவர்கள் அஞ்சுவரென நினைத்துத் தாம் ஒன்றும் சொல்லவேயில்லை. எனினும் வைத்தியர் உடனே வரவழைக்கப்பட்டார். அவர்வந்து கைபிடித்துப் பார்த்துவிட்டுப் பேதிக்குக் காரணம் கஸ்தூரி மாத்திரையே யென்பதை அறிந்து, பேதியை நிறுத்த தம்மாலானவளவுக்கும்

பிரயத்தனப்பட்டார். பேதி நிற்கவில்லை. பின்னர் ஆங்கில வைத்திய முறையைக் கையாளவேண்டுமென்று நாயகரது குடும்பத்தார்கள் கருதி, ஒரு டாக்டரை அழைத்துக்காட்டினார். அவர் பேதியை நிறுத்தினார். ஆயின் மறுதினமே சுரம் கண்டது. இந்தச் சுரத்தைத் தணிப்பான் வேண்டி, ஆங்கில வைத்திய முறையில் தேர்ந்த பல வைத்தியர்கள் முயன்றும் பயன்படாது போயிற்று. சுரமோ 100 முதல் 106 டிக்ரி வரைக்கும் அடித்துக்கொண்டிருந்தது. நாயகரவர்களுக்குக் கண்ட சுரம் "டைபாய்டு" என்ற கொடியதோர் விஷசுரமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த டைபாய்டு சுரம் கண்டவர்கள் இருபத்தொரு நாட்களுக்குமேல் பிழைத்திருப்பாராயின், உயிருக்கு அபாயமிராதென்று ஒருவதந்தி, எல்லாருக்கும் ஒருவிதத் திருப்தியைக் கொடுத்தது. நம் நாயகரவர்கள் இருபத்தாறுநாள் அச்சுரத்தில் வருந்தினார். அவரது வீட்டின் பெரிய கூடத்தில் பஞ்சணை மெத்தைமீது படுத்திருந்தார். சிசுருஷை செய்யவேண்டிய சிலரைத்தவிர, மற்றவர் எவரும் அக்கூடத்துக்குள் அனுமதிக்கப்படவில்லை. மனைவி மக்களும், உற்றார் பெற்றோரும், பந்து மித்திரர்களுங்கூட நாயகரவர்களைக் காணவாவது, அவருடன் சிறிது நேரமாயினும் சம்பாஷிக்கவாவது, விடப்படவில்லை. வைத்தியர்கள் சொல்லிய ஒவ்வொரு மருந்தும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. பணம் தண்ணீர் செலவாவதுபோல் செலவாயிற்று. நாயகரவர்கள் சில வருஷங்களுக்குமுன் வாங்கியிருந்த மோட்டார்வண்டி ஒரு மாதம் வரைக்கும் வைத்தியர்களை அழைத்துவருவதே தொழிலாகக் கொண்டிருந்தது. சிசுருஷை சரியாய்ச் செய்யவும், மருந்துகள் காலாகாலத்தில் தவறாதபடி கொடுக்கவும், சம்பளத்திலேயே நர்சுகள் வைக்கப்பட்டனர். சாகச் சில தினங்கட்கு முன்பு, கொஞ்

சம் குணமடைந்ததாகத் தெரியவந்தது. பின்பு விக்னம் கண்டு, மனதின் நிலைமைமாறி, சுய அறிவு இழந்து, கண்டபடி பிதற்றுவாராயினர். ஜெனரல் ஆஸ்பத்திரித் தலைமை வைத்தியர் வந்து பார்த்துவிட்டு, டய்பாய்டு சுரத்தைத இரண்டொரு மாதம் வரைக்கும் தப்பமுடியாதென்றும், தாம் கொடுக்கும் மருந்து பேதியாகாமலிருந்தால் நாயகரவர்கள் பிழைக்க ஏது உண்டென்றும், சொல்லிப்போனார். அந்தோ! நாயகரவர்கட்கு ஒருதரம் பேதியாயிற்று! இனி அவர் பிழைப்பது கஷ்டமென்று அவரது குடும்பத்தாருக்குத் தெரிந்தவுடன், கூக்குரல் நாலா பக்கமும் கிளம்புவதாயிற்று. பின்பு அவர்களைப் பல விதங்களிலும் தேறுதலடையச்செய்து, பலபத்திர நாயகரவர்கட்கு எவ்வளவோ கஷ்டமெடுத்துக்கொண்டு பார்த்தும், பலன் ஒன்றும் ஏற்படவில்லை. கடைசியாகத் தமக்குக் காய்ச்சல் கண்ட இருபத்தாறாவது நாளாகிய 1915ஞு டிசம்பர்மீ 30உ இரவு சுமார் 9 மணிக்கு மண்ணுலகைவிட்டு விண்ணுலகுக்கு ஏகினார் நம் நாயகரவர்கள்.

பலபத்திர நாயகரவர்களது உயிர் நீங்கியதோ இல்லையோ, அவரது மாதாவும், மனைவியும், புத்திரபுத்திரியும், சகோதர சகோதரிகளும், மற்ற பந்துக்களும் ஓவென்று வாய்விட்டலறிப் புலம்பி, தலையிலும் வாயிலும் வயிற்றிலும் அறைந்துகொண்டு, பூமியில் விழுந்து புரண்டு, கதறிக் கதறி யழுது யழுது கடைசியில் மூர்ச்சித்துப் போய்விட்டனர். மூர்ச்சை தெளிந்த பின்னர், சிறியவர்கள் வாய்பேசாமலும், நிற்கச்சக்தியில்லாமலும், ஒருவர்மேலொருவர் விழலாயினர். ஸ்திரீகள் உடம்பு பதறினர்; இப் புருஷ சிங்கத்தின் அருமைக் குணங்களையும் ஆண்மைத்தனத்தையும் வர்ணித்து ஒப்பாரியிட்டும், இம் மன்னனையினிக் காண்பதெக்காலம் என்று கதறிக் கண்ணீர்வடிப்பாராயினர். புருஷகூட்டத்திலோ, சிலர் பெருமூச்செறிந்து பேச்சற்ற

னர்; சிலர் இத்தகைய புண்ணியவானை எக்காலத்தில் கண்ணால் காணப்போகிறோமென்று பிரலாபித்தனர். சிலர் கன்றையிழந்த காராவைப்போல் கதறினர்; சிலர் மூர்ச்சையாயினர்; சிலர் நம் போலியர் இறப்பினும் பெரிதன்று, இத்தரும சிலர் துஞ்சினது எல்லாரையும் துக்கசாகரத்தில் மூழ்கச்செய்ததே எனப் புலம்புவாராயினர். பாலர் முதல் விருத்தர்வரையிலுமுள்ள ஆயிரக்கணக்கான பிரஜைகளை அன்பு என்னும் வலையில் மாட்டி, இன்சொல் என்னும் பசைதடவி, கருணை என்னும் கயிற்றால் சுருக்கிட்டுத் தம் இஷ்டப்படி யாட்டிவந்த இச் சீமான் பிரிவாற்றாமை யாரைத்தான்விடும்? இவ்வாறாக நாயகரவர்கள் வீட்டில் உண்டான அழுகை ஒலி எழுகடலும் அஞ்ச மிக்கது. அன்றிரவு முழுமையும் அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக ஊண் உறக்கமின்றி அளவிறந்த பெருந்துக்கசாகரத்தில் அனைவரும் நீந்தலாயினர்.

இவ் விசனகரமான செய்தியைக் கேட்டு எல்லாத் திசைகளிலிருந்தும் மறுநாள் பிரஜைகள் வந்து சேர்ந்தனர். “அழுதாற் பயனென்ன, நொந்தாற் பயனென்ன, ஆவதில்லை” என்றபடி, இனி எவ்வளவுதான் மண்டை யுடைத்துக்கொண்டாலும், மாண்டார் திரும்பி வருவாரோவென ஒருவாறு தேறி, நாயகரவர்களுடைய புண்ணிய சரீரத்தை க்ஷத்திரிய குலாசார நெறிப்படி சடங்குகள் செய்து, மயானத்தில் சேர்க்கவேண்டியதற்குத் தகுந்த ஆயத்தங்கள் செய்யப்பட்டன. சிந்தாதிரிப்பேட்டை ஆதிகேசவப் பெருமாள் சந்நிதி, கோமளீஸ்வரன்பேட்டை குலசேகராழ்வார் சபை, சூளை சுந்தரராஜப்பெருமாள் கோவில் முதலியவைகளிலிருந்து திருக்குடை, புண்ணியதீர்த்தம், பூமாலை, பரிவட்டம் இன்னவைய கோவில் மரியாதைகள் பிராமணோத்தமர்களைக்கொண்டு நாயகரவர்கட்குச் சமர்ப்பிக்கப்பட்டன. பின்னர் அவரது பத்தினி

யும், புத்திர புத்திரியும், தாயாரும், சகோதர சகோதரிகளும் பிரிவாற்று விசனக்கடலில் முழுகித்தத்தளிக்க, மற்றையோர் அநுதாபக் கண்ணீர் முத்து முத்தாய் வடிக்க, மாலை 3-மணிக்குமேல் அவரது பூத உடம்பு எல்லாச் சடங்குகளோடும், ஆடை ஆபரண அலங்காரத்தோடும், வெகு சிறப்புடன் காஷ்டத்துக்குக்கொண்டுபோகப்பட்டது. "திரளான ஜனங்கள் வன்னியரும் அன்னியரும் வந்து குழுமி யிருந்தனர். க்ஷத்ரிய ஜாதிக்குரிய சகல சின்னங்களும் வந்திருந்தன. விற்கொடி, புலிக்கொடி விளங்கின; ஜெண்டாக்கள், தோரணங்கள் துலங்கின; இருவில்மணிகள் இசைத்தன; டங்கா, பேரிகை முழங்கின; கற்பூர தீபங்கள், மத்தாப்புகள் கண்களைக் கவர்ந்தன; காஸ்லைட்டுகள் பிரகாசித்தன. இருபுறமும் நெடுக பச்சைத் தென்னோலை, கதலி முதலியன பலர் கொண்டுபோந்தனர். இடையிடையே வெவ்வேறு கொடிகளும் விளக்க முற்றன. இவை நடுவே பூவால் அலங்கரித்த பூம்படுக்கையில் நாயகரவர்கள் தமது உயர்ந்த முறுக்குத் தலைப்பாகையுடன் வைக்கப்பட்டு இருபாரிசங்களில் அகற்சென்றிருக்கும் கணிகைமாதர்கள் வெஞ்சாமரம் வீச, அவர் மேல் போட்டிருந்த பீதாம்பரம் பிரகாசிக்க, அவரது அகன்ற நெற்றியில் திருநாமம் துலங்கக் கண்ட மனிதரும் மாதரும் 'முகம் வாடவேயில்லையே' என வாய்விட்டழுதனர். 'இப்பேர்க்கொற்ற மனிதனை இனி யெப்பொழுது காணப்போகிறோம்' என்று துக்கித்தவர் பலர்; இவரைப்போல் தர்மத்திலும், குணத்திலும், அபிமானத்திலும் முன்னுமில்லை பின்னுமில்லை என்று வியந்தனர் சிலர்; 'அனுதினமும் அநேக ஆத்மாக்களுக்கு அன்னமளித்த ஆண்டவர் போய்விட்டாரே' என்றழுதனர் அநேகர். 'சொன்னசொல் தவறாத சீலன் செத்தாரே' என்றனர் மற்றையோர்."

"இவ்விதமாய்ப் பலரொருக வாழ்த்திக்கொண்டும், துதித்துக்கொண்டும், ஆங்காங்கு குழுமி அவரைப் புகழ்ந்துகொண்டும், வந்த ஜனங்களுக்குக் கணக்கில்லை; வால்டாக்ஸ் ரோடு கொள்ளவில்லை. வீதிகளில் சென்ற மோட்டார்கார்கள், டிராம்வண்டிகள், ஜட்கா வண்டிகள் முதலியன நிறுத்தப்பட்டு, கூட்டம் விலகிய பின்பே விடப்பட்டன. நாயகரவர்களைக் கடைசியாகக் கண்ணாரப் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று, அவ் வீதிகளிலிருந்த வீட்டுத் திண்ணையின்பேரிலும் மெத்தையின்பேரிலும் வெகு ஜனங்கள் நின்றுகொண்டிருந்தனர். வழியில் கேட்டோரும் விசனித்துக் கும்பலில் கலந்தனர். அவரது கம்பெனியிலிருக்கும் இஞ்சினீரான ஓர் ஆங்கிலேயரும், அவரது குடும்பத்தாரும், அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகக் காஷ்டம் வரைக்கும் சென்றனர். சென்னையின் பல பேட்டைகளிலிருந்து பந்துக்களும், சிநேகிதர்களும், அநேகர் வந்திருந்தனர். மகாசங்கத்தின் பல பிரமுகர்களும், ஹாஸ்டல் சங்கத்தின் சில மெம்பர்களும், வந்திருந்தனர். வன்னியஉலகிலுள்ள மற்றைய சங்கங்களின் பிரதிநிதிகளெனத் தென்னாற்காடு, வடஆற்காடு, செங்கல்பட்டு, திருச்சி, சேலம், கோயமுத்தூர் முதலிய இடங்களிலிருந்து பல குலாபிமானிகளும் வந்திருந்தனர். நம் நாயகரவர்களுடைய ஆருயிர்த் தோழர்களான ஜமீன்தார் அவர்களும், ஈரோடு ம-ள-ள-ஸ்ரீ இராமசாமி நாய்க்கரவர்களும், இன்னும் பலரும் வந்திருந்தனர். ஆயின் இஞ்சினீரிங் காலேஜ் புரபசர்களில் ஒருவராயிருக்கும் ஸ்ரீமான் மாணிக்கநாய்க்கரவர்கள் மட்டும், தமக்குச் சரியான காலத்தில் தந்தி கிடைக்காமையால் வரக் கூடாமையாயிருந்தது. அவ்வருமை நண்பர் பின்னர் நம் நாயகரவர்களது மரணத்தைக் கேள்விப்பட்டதும், காஷ்டத்துக்குவந்து பிணமேடையண்டை புலம்பியதற்கும், கண்ணீர் வடித்ததற்கும், விசனித்ததற்கும், கங்கு கரையேயில்லை.

இவ்வாறு சிலரும் துயராழியில் நீந்திக்கொண்டே இரவு 9-மணிக்கு வீரண்ணன் தோட்டத்துத் தகனக்ஷேத்திரத்தை யண்ணினார்கள். மயானத்தில் நடத்தவேண்டிய சமஸ்த சடங்காசாரங்களோடு நாயகரது தேகத்தைக் காஷ்டத்திலிருத்தித் தகனம் செய்தனர். "சந்திரனில்லா வானம், தாமரையில்லாப் பொய்கை, சுந்தரப் புலவரில்லாத் தொல்சபை, சுதரில் வாழ்வு, மந்திரியில்லா மன்னன், மதகரியில்லாச் சேனை, தந்தியில்லா வீணை, தனமிலா மங்கைபோல்" நம் நாயகரது வீடும், வீதியும், தண்டவாளச்சாலையும், மகாசங்கமும், வன்னிய உலகமும், பொலிவுகுன்றி யிருந்தல் கண்டு விசனிக்காதாரில்லை. நாயகருக்குச் சொந்தமான "கோபால் நாயகர் அண்டு சன்" மூன்று நாளைக்கு மூடப்பட்டது. நாயகரவர்கள் பொக்கிஷதாரராயிருந்த யூனைடெட் கிளப் அன்று முழுதும் மூடப்பட்டுக் கருப்புக்கொடி நாட்டப்பட்டிருந்தது. அவர் சேர்ந்திருந்த மற்றைச் சபைகளும், சங்கங்களும் தங்களது விசனத்தைத் தெரிவித்தன. இந்து, நியூ இந்தியா, இந்தியன் பேட்ரியட் முதலிய இங்கிலீஷ் பத்திரிகைகளும், வன்னிகுல மித்திரன், சுதேசமித்திரன், லோகோபகாரி முதலிய தமிழ்ப் பத்திரிகைகளும், இவரது அருமையான குணாதிசயங்களையும், பரோபகார சிந்தையையும் புகழ்ந்து, இவருடைய மரணத்தைக்குறித்து அநுதாபங்காட்டி எழுதி யிருந்தன. இப்புண்ணியவான் துஞ்சினரென்று கேள்வியுற்ற மற்றுமுள்ள பந்துமித்திரர்கள் மறுநாள் காலையில் இவரது மாளிகைக்கு வந்து, அதிக துக்கத்தோடு பிரலாபிப்பாராயினர். அன்று, க்ஷத்ரியருக்குரிய வில்மணி, புலிக்கொடி முதலிய பற்பல விருதுகளோடும், வாத்தியங்களோடும், சஞ்சயனம் நடத்தப்பட்டது. இம்மகாத்துமா வைகுண்டபதவி யடைந்த காலத்தில் இவருக்குப் பிராயம் நாற்பது நடந்துகொண்டிருந்தது.

### கட்டளைக் கலித்துறை.

"புண்ணிய ராட்சச மார்கழிமாதம் பதினோந்தினில்
நண்ணிய மாக்குரு வாரத்திற் சித்திரை நாளதனில்
பின்னுளா தாம்பக்க மும்மூன்ற தாந்திதி பேர்பெற்றநம்
மன்னவ னும்பல பத்திர னேகினன் வா னுலகே."

---

## சரமோத்தரக்கிரியை

தமது குடும்பத்தை உன்னத நிலைமையில் வைத்தும், சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மகாசங்கத்தைக் காம்பீரமாக நிர்வகித்தும், வன்னிய உலகத்தை அன்புடன் நடத்தியும் வந்த ஸ்ரீமான் பல்லவகுலசேகரர் கா. கோ. பலபத்திர நாயகரவர்கள் வயதில் இளையவராயும், அறிவில் மேலானவராயும், குணத்தில் சிறந்தவராயும், தனத்தில் பெருத்தவராயும், பராக்கிரமத்தில் மிக்கவராயும், ஆண்மையில் அதிகரித்தவராயும் இருந்தமையால், அவரது மரணத்தை நினைத்து விசனியாதவரில்லை. வன்னிய உலகமே வியாகுலக் கடலில் அமிழ்ந்திருக்கிறது. அவரது பிரிவாற்றாமையைக் குறித்து எவ்வளவோ குலாபிமானிகள் அலறி அலறி அழுதனர்; புரண்டு புரண்டு புலம்பினர்; கதறிக் கதறிக் கதறினர்; "இறந்தாரா மிஸ்டர் பலபத்திர நாயகர்!" எனத் திகில்கொண்டு, "உலகத்திலுள்ள சகல வன்னிகுல க்ஷத்ரியர்களும் திடுக்கிட்டு, உள்ளம் பதைபதைத்து, துக்கசாகரத்தில் மூழ்கக்கூடிய ஓர் செய்தியைத் தெரிவிக்க எம்மனம் நடுங்குகிறது; எம் நாவு எழவில்லை; எம் கைகள் எழுதும் சக்தியை இழந்திருக்கின்றன. ஆயின் எம்மனதை ஒருவாறு தைரியப்படுத்தி, எம் கடமையைச் செய்யத் துணிந்தேன். 'புண்ணியவான் பலபத்திர நாயகர் போய்விட்டாரே' என்ற சப்தத்தைத் தவிர வேறொன்றையும் நாம் கேட்டிலோம். பெரியவர், சிறியவர், ஆண்

கள், பெண்கள் அனைவரது அழுகைக்குரல் ஆகாயத்தைத் தாவி எத்திசையிலும் பரவியது. கண்டோரெல்லாம் கேட்டோரெல்லாம் வாய்புதைத்துக் கண்ணீர் பெருகத் தம் விசனத்தை வெளியிட்டனர்.” என்றல்லவோ எழுதியுள்ளார் வன்னிகுல மித்திரன் பத்திராதிபர் இராஜஸ்ரீ ஆ. சுப்ரமணிய நாயகரவர்கள்.

வன்னிகுல மித்திரனில் வந்த செய்தி வன்னிய உலகெங்கும் எட்டியது. ஆங்காங்கு சிறந்து விளங்கும் அருமைத் திருக்குலப்பெருமானிகள் ஆறாத் துயருற்றனர். சேலம் வன்னிகுல க்ஷத்ரிய ஸ்ரீசமுத்திரதிலார் சபையின் பொக்கிஷ காரியதரிசியாகிய இராஜஸ்ரீ சு. அர்த்தநாரீச வர்மா அவர்கள் அளவுகடந்த விசனத்தில் ஆழ்ந்து, பின்வருமாறு புலம்புகிறார் :—

“ புகல்வோமெனில் நாவெழவில்லை
புத்தி நடக்கிற் களவில்லை
அகமே புலம்பும் உடல் வெதும்பும்
ஐயோ விழிகளுந்திரைக்கும்
தகவே யெழுந்த நம்திருகுலச்சங்கச்
சிறுவர் தாயிழந்த
மகவேயாகித் துடிக்கின்றார்
வாழ்வைநாமு மிழந்தோமே.

இழந்தோம் நமது குலமணியை
யிறைவனருள் பாக்கியப்பேற்றை
உழந்தேசெய்த புண்ணியத்தி
னொப்பிலாத பெரும்பயனைப்
பழந்தேவினன்ன நமக்கெல்லாம்
பசிதீர்த்திருந்த பராவமிர்தைக்
குழந்தாயெனவே நாமெல்லாம்
கொஞ்சவிருந்த குழகனையே.”

ல்லை குலசேகரரது பிறப்புவளப்பு முதலியவைகளை ஆதி யோடந்தமாய் அறிந்திருக்கிறவரும், அவரது அம்மானுமா கிய விஷ்ணுபாத சேகரர்,

" எங்குநீ சென்றாயப்பா!
 எனக்கொரு வலத்தோளொப்பாய்
இங்குயார் நின்போல்வார்க
 ளிருக்கின்றா ரெவருமில்லை
தங்கெழிற் பொன்னே! முத்தே!
 தயங்குசன் மணியே! உன்றன்
பங்கய முகத்தை யென்று
 பார்ப்பனின் பிரைசெய்வாயே."

என்று கண்ணீர் வடித்துவிட்டுச் சிருஷ்டி கர்த்தனுன பிரம் மாவை,

"எல்லாஞ் சரியா யெழுதினையே நான்முகனும்
பொல்லாக் குசப்பயலே! புத்திகொஞ்ச மாறினதேன்?
தூய பலபத்திரன்றன் சுந்தரச் சென்னியின்மேல்
ஆயு ளெழுதும்போ தாங்கு."

என்று தம்முள்ளத்தில் எழுந்த ஆயாசத்தினால் திட்டிவிட் டார். சிலர் சிலரான நம் நாயகரவர்களது மரணத்தின் சரியான காரணத்தை யறியச் சாத்தியப்படாததுபோல், இவ் வாறிருக்கலாமோ, அவ்வாறிருக்கலாமோ எனத் திகைத்தவ ராய், "சங்கக்கட்டடம், ஹாஸ்டல் முதலிய சங்க வியவகா ரங்கள் பலவும் மிகவும் காம்பீரமாக எக்காலமும் நடைபெ றுவதத் தற்போது தகுந்த பொருளில்லாமையால், அந்த வைய பொருள் கொண்டுவரப் பொன்னுலகையே விளங்கிடும் விண்ணாடு சென்றிருக்கிறீரோ" என்று பலபத்திர நாயகரவர் களைத் திருப்புறம்பியம் இராஜஸ்ரீ T. C. சிவானந்தன் அவர் கள் விசனத்திலாழ்ந்து வெகு வினயத்துடன் வினவுகிறார்:

தரவு.

"சங்கந்தனை நீத்துத் தமியேற்குத் துன்பீந்து
புங்கவனே! யெங்கெழுந்தாய் புகலாய் புகலாயோ!

தாழிசை.

மாண்டருணப் பெருந்தகைநீ வளர்த்துவந்த நற்சங்கம்
வேண்டும் பொருள் கொணர விண்ணாடு சென்றனையோ!"

மதுரைத் தமிழ்ச்சங்க வித்வான் செங்கல்பட்டு அரங்க சாமி நாயகரவர்கள்,

"மதிவன்னி குலசங்க மகிழநலம் பலபுரிந்தாய்
நிதியாலே பலவறங்கள் நித்தமுமே நீபுரிந்தாய்
துதிபுலவர் வறுமைகெடத் துணைபலவு நனிபுரிந்தாய்
விதியோவித் தகவுளநீ விண்சென்ற ததிசயமே."

என்று பலவாறு நாயகரது பற்பல தரும கைங்கரியங் களை நினைந்து, இவர் இறந்தது அதிசயமே யென்று தீர்மா னித்தார். நம் நாயகரவர்களது நற்குணாதிசயங்களையும், சற்கிருத்தியங்களையும், பேரையும், புகழையும், அநேக விதமாய் அறிந்து, அவரைத் தரிசிப்பான் வேண்டி வந்த ட-உ-ா-ஸ்ரீ *E. A.* சிவராமலிங்கம் பிள்ளை யவர்கள் நாயக ரவர்களது மரணத்தைக் கேட்டதும், இது விதியோவெனப் பின்வருமாறு பாடலுற்றார் :

"எற்றானுந் திறனுடைய உன்னலத்தைச்
சுப்ரமண்ய னெழுதக் கேட்டு
கற்றோர்கண் மதிப்புற்ற வளங்கேட்டும்
பலபத்ர நாயகா நின்
முற்றாத திருவதனங் காணவென்று
சென்னை வந்தேன் முற்றுஞ்சிவன்
வெற்றான வுடலமட்டுங் கண்டேனவ்
விதியை யென்ன விளம்புவனே."

இவ்வாறே நாயகரவர்களின் மரணத்தைக் கேட்ட மற்றையோரும் இடியொலி கேட்டு உயிர் துடித்த அரவம் போல் திகைத்தும், துக்கசாகரத்தில் மூழ்கியும், இனி நங்குலம் எவ்வாறு சீர்திருந்துமென்றும், இப் புண்ணியவானைப்போல் கல்வி, செல்வம், புகழ், குலாபிமானம் வாய்ந்தோர்கள் எக்காலம் கிடைக்கப் போகின்றனரென்றும், பரிதபித்தும் தங்களது அளவிறந்த அனுதாபத்தைக் காட்டி, அநேக கடிதங்கள் நாயகரது குடும்பத்தாருக்கு எழுதினர். ஒருமாத காலத்துக்குள் அனுதாபக் கடிதங்கள் குவியல் குவியலாய்க் குவிந்துகிடந்தன. ஒவ்வொரு கடிதத்துக்கும் தனித்தனி வந்தனப்பதில் எழுதுவது கஷ்ட சாத்தியமாயிருந்ததுபற்றித் தமது விசனத்தைத் தெரிவித்த எல்லாக் குலாபிமானிகளுக்கும் நண்பர்களுக்கும் வன்னிகுல மித்திரன் மூலமாகவே நாயகரவர்களது குடும்பத்தினர் வந்தனமளித்துவிட்டனர். கீழே இரண்டொரு அநுதாபக் கடிதங்கள் குறித்திருக்கின்றன.

### சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகாசங்கம்.

1916ஆம் ஜனவரி மீ 5உ புதவாரம் மாலை 5½ மணிக்கு சென்னை, பெத்துநாயகன் பேட்டை, ராசப்ப செட்டி தெரு, 216ம் நெம்பர் வீட்டிலிருக்கும் மகாசங்க ஆபீசில் கூடிய எக்ஸிகூடிவ் கமிட்டி மெம்பர்களின் கூட்டத்தில் நடந்த வர்த்தமானம்:—

“நமது மகா சங்கத்தில் பொக்கிஷதாராகவும், மொபிசல் செகிரிடரியாகவு மிருந்து, சங்ககாரிய மனைத்தையும் தேகசிரமம் பாராது, ஊன்றுகோல் போலிருந்து, வெகு ஊக்கமாய்ப் பார்த்துவந்த ‘பல்லவ குலசேகரர்’ கா. கோ. பலபத்திர நாயகரவர்கள் தேகவியோகமானதைக் குறித்து, சங்க எக்ஸிகூடிவ் கமிட்டியார் ஆழ்ந்த துயர் கொண்டிருக்கிறார்க

லென்பதை ஷெயார் குடும்பத்திற்கு அறிவிக்கும்படி தீர்மானித்தார்கள்."

## வன்னிகுல க்ஷத்ரிய ஹாஸ்டல் சங்கம்.

1916ளு ஜனவரிமீ 8வ. சனிக்கிழமை மாலை 5 மணிக்கு, சென்னை ருக்ஷா, பெரியதம்பி முதலி வீதி, 35 நெ. ஷெ சங்க ஆபிசில் கூடிய நிர்வாக சபையாரின் கூட்டத்தில் நடந்த வர்த்தமானம்:—

"வன்னிகுல க்ஷத்ரியரின் அபிவிர்த்திக்காகத் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்து உழைத்தவரும், அநேக மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம், புஸ்தகம் முதலியன கொடுத்து வந்தவரும், பல பொதுச் சபைகளில் மெம்பர் ஸ்தானம் வகித்த பரோபகாரியும், மகா சங்கப் பிறதேச காரியதரிசியும், பொக்கிஷதாரரும், பேசின் பவுண்டிரிச் சொந்தக்காரருமாகிய ஸ்ரீமான் 'பல்லவ, குலசேகர' கா. கோ. பலபத்திர நாயகரவர்கள் காலஞ் சென்றதைக் குறித்து மிகவும் விசனித்து, அவரது குடும்பத்தாருக்கும், மகா சங்கப் பிரசிடெண்ட் அவர்களுக்கும் தமது அநுதாபத்தைத் தெரிவிக்கும்படி தீர்மானித்தார்கள்."

ஜோன்ஸ் பர்க்கிலுள்ள வன்னிகுல க்ஷத்ரியர்கள் தங்களது அனுதாபத்தை நாயகரவர்களது குடும்பத்தாருக்குத் தெரிவிக்கும்படி, கீழ்கண்ட தந்தியை இங்கிலீஷ் பாஷையில் வன்னிகுல மித்திரனுக்கு அனுப்பினார்கள். அதன் மொழி பெயர்ப்பு:—

"ஜோன்ஸ்பர்க், 21—3—16,

"பெருங் குலாபிமானியாய் விளங்கியவரும், மிகுந்த உதவி புரிந்தவருமான G. பலபத்திர நாயகரவர்கள் இறந்து போனதுபற்றி, ஜோன்ஸ்பர்க் வன்னிகுல க்ஷத்ரியர்களாகிய

நாங்கள் காட்டும் ஆழ்ந்த அநுதாபத்தை அங்கீகரித்து, அவரது குடும்பத்தாருக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

S. K. படையாட்சி''

வன்னிய குலாபிமானிகளும், அன்னிய நண்பர்களும், இங்ஙனம் தங்களது அநுதாபத்தை அறிவித்ததேயன்றி, நாயகரவர்கட்கு நடந்த சரமோத்தரக் கிரியைக்கும் வந்து, அதைச் சிறப்பித்தனர். 1916 ௵ ஜனவரி ௴ 9௳ ஆதிவாரம் காலை எட்டுமணிக்குமேல், சென்னை முத்தியாலுபேட்டை அத்திப்பட்டான் குளத்து மண்டபத்தில், சாஸ்திர நெறி தவறாமல் சபிண்டீகரணமுதல் உத்தரகிரியைக்குரிய சகல சடங்குகளும் வைதீக கிரமப்படி பிராமணாசாரியர்களைக் கொண்டு, மிக்க வைபவத்துடன் நடத்தப்பட்டன. அன்று காலை பத்து மணிக்குள் சடங்குகள் யாவும் ஒழுங்காகச் செய்து முடிந்து, அநேக பிராமணர்களுக்குப் பற்பலவித தானங்கள் வழங்கிய பின்னர், விஜயம் செய்திருந்த வன்னியர், அன்னியர், அனைவருக்கும் அவ்விடமே அன்னமளித்து உபசரிக்கப்பட்டது. பிறகு இரண்டுமணிக்குச் சபையார் அனைவரும் கூடினார்கள். அப்பெருஞ் சதசில், ஒரு சுவாமியார் எழுந்து நம் நாயகரவர்களின் குணாதிசயம், குலாபிமானம், பரோபகாரம் முதலியவைகளைப் பற்றியும், மனிதப் பிறவி எடுத்தோர் தெரிந்துகொள்ள வேண்டியதும் செய்ய வேண்டியதும் ஆகிய லோகோபகாரார்த்தமான பல அரிய பெரிய விஷயங்களைப் பற்றியும், யாவரும் களிப்புறப் பேசி முடித்தார். பின்பு பிராமணோத்தமர்கள், அவர் புத்திரன் உள்ளிட்ட கிரியைக்குரியவர்களுக்கு ஆசி கூறி, கோ பூஷணதாரம் செய்தனர். கிராமத்தார், பந்து மித்திரர்களுடைய ஆசீர்வாதங்

களும் மரியாதைகளும் நடத்தப்பட்டன. குலாபிமானத்துக்குக் கற்பக விருக்ஷம் போன்றவரும், உதாரத்துவத்துக்குக் கோமானுமான பல்லவகுலசேகரர் பலபத்திர நாயகரவர்கள்மீது அநேக வித்வ சிகாமணிகள் பாடிய இரங்கற் பாக்களும், புகழ்ப்பாக்களும் அடங்கிய ஒரு சரமகவி மாலையை, இராஜஸ்ரீ வித்வான் பு. மு. பாலசுந்தர நாயகரவர்கள் படித்துக்கொண்டிருக்கையில், உள்ளன்போடு யாவரும் கேட்டு, கண்ணில் நீர்ததும்ப, மெய்மறந்து, நாயகரவர்கள்மீது சிந்தை வைத்து, மனமுருகி, இப்புண்ணியவானைப் போல யினி யாரைக்காணப் போகின்றோ மென்று ஏக்கமுற்றனர். பின்னர் சந்தனம், புஷ்பம், தாம்பூலப் பரிமாறல் நடந்தேறியதும், அவ்விடமிருந்து ஊர்கோலப் புறப்பாட்டிக்கு ஆயத்தம் செய்யப்பட்டது.

மாலையில் சுமார் நாலுமணியிருக்கும். விஜயம் செய்த எண்ணிறந்த ஜனங்கள் புடைசூழ, பீதாம்பரப் பந்தலின் கீழ், நாயகரவர்களின் புத்திர சிகாமணியான சிரஞ்சீவி லோகநாதன் கும்ப கலசம் தாங்கி நிற்க, நாயகரவர்களின் சகோதரர்களாகிய இராஜஸ்ரீ கா. கோ. கெருடபதி நாயகரவர்களும், இராஜஸ்ரீ கா. கோ. கஜபதி நாயகரவர்களும் இருபுரமிருக்க, கணிகை மாதர் கவரிவீச, வீரர்கள் வில் மணி தாங்கி ஆர்ப்பரிக்க, மல்லர்கள் சிலம்பாட, குடிப் பிள்ளையென வழங்கும் நோக்கர்கள் முப்பத்திரண்டு விருதும் கட்டிக் காலில் கண்டாமணி தரித்துக் கலீர் கலீரெனச் சப்தமெழ ஆடிவர, பேரிகை முதலிய தோற்கருவிகளும் எக்காளம் முதலிய துளைக்கருவிகளும் கோஷிக்க, க்ஷத்ரியர்க்குரிய ஆலவட்டம், தாலவட்டம், மகர தோரணம், விற்கொடி, புலிக்கொடி சேற்கொடி, பஞ்சவர்ணக்கொடி முதலிய சகல விருதுகளும் இருமருங்கும் வரிசைக் கிரம

மாக முன் செல்ல, இடையிடையே தீவர்த்திகளும் காஸ் விளக்குகளும் பிரகாசிக்க, இவ்வகையாக ஜெகஜ்ஜோதி யாய் வீதிப் புறப்பாடு வெகு விமரிசையாகத் தம்புசெட்டி வீதி வழியாகவும், சைனாபஜார் ரோடு மார்க்கமாகவும் சென்று, நாயகரவர்களது திருமாளிகையை யடைந்தது. ஆங்காங்கு அநேக ஆலத்திகள் எடுக்கப்பட்டன. இவ்வூர் கோலத்தைத் தூரத்தில் பார்த்து, இஃதோர் உற்சவமெனக் கருதி ஆனந்தித்துக் கொண்டிருந்த ஜனங்களது செந்தா மரை முகங்கள், நாயகரவர்களது மரணத்தையும் அதற் குரிய சடங்குகளையும் அறிந்து கொண்டமாத்திரத்தில் வெண்டாமரை முகங்களாக மாறின.

பின்னர் அன்றிரவு ஒன்பது மணிக்கு பிராமணர்கள் பிரபந்தச் சேவைக்காலஞ் செய்தனர். சேர சோழ பாண் டிய தொண்டை மண்டலங்களி லிருந்து விஜயஞ் செய்தி ருந்த நங்குல சிகாமணிகள் அனைவரும் நாயகரவர்களது குடும்பத்தாரின் துக்கத்தைப் பரிகரிக்கத் தேறுதல் சொல்லி, விடைபெற்று, மறுநாள் தங்கள் தங்கள் ஊர்களுக்குச் செல்லலாயினர். தற்போது நம் நாயகரவர்களின் குடும்ப காரியாதிகளின் விஷயமாக, இராஜஸ்ரீ தங்கவேலு நாயகரவர் களும், இராஜஸ்ரீ முத்துசாமி நாயகரவர்களும் சிரமமெடுத்துக் கொண்டு, வெகு சிரத்தையுடன் கவனித்துக்கொண்டு வரு கின்றனர். புகழுடம் பெய்திப் பரமபதம் புக்கிய க்ஷத்திரிய குல ரத்தினமான பல்லவ குலசேகரர் கா. கோ. பலபத்திர நாயகரவர்கள் மாட்டு, நாம் வைத்திருந்த அன்புக்கும் அபி மானத்துக்கும் அறிகுறியாக விரும்புவது ஒன்றுகும். அஃதென்னவெனில், அவரது குடும்பம் பெருகி வாழவும், அவரது ஏக புத்திர சிரோன்மணியான சிரஞ்சீவி லோக நாதன், கல்வி கேள்விகளையே ஆபரணமாகப் பூண்டு, தனது

பெயர் காரணத்தொடுமிப் பெயரென "லோகநாத" ஞகி, ஒப்பு உயர்வற்ற குலாபிமான மகாசமுத்திரமென விளங்கி,

"பித்தியுன்றனக்கு மிக்க பிரபலனுவான் உன்றன்
மைந்தனென்றுரைப்ப னன்றேனுன்மகிதல மீது வாழி."

என்ற விஷ்ணு பாதசேகரரது திருவாக்குத் தெருள் வாக்காகிப் பிதாவின் நற்பெயரைப் பின்னும் பிரகாசிக்கச் செய்து, தனதானிய சந்தான சௌபாக்யாதி அஷ்டலக்ஷ்மீ கடாக்ஷ பரிதராய், நீடூழி வாழ்ந்து சுகிக்கும்படி எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளை நாமெல்லோரும் ஸ்தோத்தரிப்போமாக,

### கலிவிருத்தம்.

"வாழ்க மற்றிவன் வண்குடி நன்மையால்
வாழ்க மற்றிவன் வான்குல மாண்பொடு
வாழ்க மற்றிவன் மாண்புற நற்கலை
வாழ்க மற்றிவன் மாண்புக ழென்றுமே."

### முடிவுரை

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதின்றுமேல்
தோன்றலிற் றோன்றாமை நன்றென்னுந் தூயமொழியை
ஆன்றவனே வையம் அறிவித்தாரா மேயின்
போன்று பலபத்திர பூபதியே நாயகனே.

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிதென்னுந் தெய்வ
பண பாகுரையை மறித்த கருணை
தனையாப் பலபத்ர சாமியே நீக்கினையோ."

இந்தச் சொச்சகக் கவிகளை இராஜஸ்ரீ சு. அர்த்தநாரீச வர்மா அவர்கள், நம் நாயகரவர்கள் மீது இயற்றிய இரங்கற் பாக்களின் ஆரம்பப் பாக்களாகப் பாடிப் புனைந்துள்ளார். "அரிது, அரிது, பலபத்திர நாயகர்போல் வாழ்தல் அரிது"

என்று சொல்லும் வண்ணம், அவர் உயிருடன் இருந்தவரையில், மிகவும் மேன்மையாகவும் சமாதானமாகவும் வாழ்ந்து, யாவராலும் புகழ்ந்து கொண்டாடப்பட்டார். அவர் அவ்வாறு சிறந்து ஜீவித்ததற்கும், பெருங்கீர்த்தி பெற்றதற்கும் காரணபூதமாயிருந்தது, அவருடைய மனோகரமான குணமேயன்றி, அவர் படைத்திருந்த பணமல்ல. அவர், தமக்கு நற்குண நற்செய்கைகளையும், கல்வி கேள்விகளையும் ஆபரணங்களாகப் படைத்துப், பொறுமை, தயாளம், ஒழுக்கம், ஆசாரம், நீதி, தருமசிந்தை, குலவிசுவாசம், ராஜபக்தி முதலிய உயர்தர குணங்களுக்கு உறைவிடமாகிச் சகலரும் மேன்மையுடன் மெச்சப் பெருமையும், கீர்த்தியும், மதிப்பும் பெற்றார். "கல்லாரை நாவிலுரை, பொன்னைக் கல்லிலுரை" என்றபடி நம் நாயகரவர்களை மனப்பூர்வமான அன்போடு புகழாதாரில்லை. ம-ள-ள-ஸ்ரீ ஜெகராவு முதலியாரவர்கள் பின்வருமாறு பாடியிருக்கிறார்.

"பார் பெற்றார் பல்லரசர் பதம் பெற்றா ரிமையவர்கள்
பழிப்பில் லாத
சீர் பெற்றார் கவிவாணர் திறல்பெற்றார் மாதவத்தோர்
திறம்பா நன்மைப்
பேர் பெற்றார் ஞானியர்கள் முக்குலத்து மன்னருள்ளே
பெருகநோக்கின்
ஆர் பெற்றார் பலபத்ர நாயகன் போல் பெருங்கீர்த்தி
யவனி மீதே."

இவ்வாறு வன்னிகுலோத்தாரணர் பெற்ற செல்வரான பலபத்திர நாதர் வன்னியராலும் அன்னியராலும் வாயார வாழ்த்தப் படுவானேன்? அன்னோருக்கு, அவர் செய்த நன்றியின் பயனே புகழ்ச்சியாகக் கிளம்பியிருக்கிறது. அக் குலாபிமானத் திலகர் வன்னிய உலகுக்குக்

செய்த நன்மைகள் என்றும் சிறந்து பாராட்டத்தக்கன. நம் மரபுக்கு விர்த்தியும், ஜெயமும், அயலாரது மதிப்பும், கொணர்ந்தார். க்ஷத்ரிய குலத்தவரின் அபிவிர்த்தி விஷயமாகத், திரளான திரவியச் செலவும் செய்துவந்த தன்றி, அபாரமான முயற்சியும் எஞ்சாத ஊக்கமும் கொண்டிருந்தார். சங்க காரிய முறையில் கைதேர்ந்தார். வன்னிய ஜன சமூக சாஸ்திர நடையில் பேர்பெற்ருர். சின்னுப்பின்னமாகிக் கண்டபடி சிதைவுண்டு வாடியிருக்கும் நம்மவர்கள், இக்காலத்தில் அடைந்துள்ள சீர்குலைந்த நிலைமையாகிய கடலைக் கடந்து, சீர்திருத்தமாகிய கரையைச் சேர்ந்து, பழமைபோல் உன்னத ஸ்தானம் பெறுவான் வேண்டிச் சங்கமாகிய கப்பலைத் திகைப்பின்றி நடத்துவதற்கு, ஓங்கிநின்ற கலங்கரை விளக்கமே போல் விளங்கினுர் நம் நாயகரவர்கள். "வன்னியரில் இவன்போலக் குலத்தபிமானிகளை வழங்கற் பாற்ருே?" வன்னிகுலோத்தாரணர் காலத்துக்குப் பின்பு, பல்லவகுல சேகரரைப் போல க்ஷத்ரியகுல திலகமும், குலாபிமான சிகாமணியும், வேறு இல்லை இல்லை.

க்ஷத்ரியகுல பரிபாலக பூபதியாகிய ஸ்ரீமான் பலபத்திர நாயகரவர்கள் தமது தந்தைக்குப் பிறகும், அர்பத்னெட் ஷேரசில் மகாசங்க மூலதனம் அடியோடு போய்விட்ட பிறகும், சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மகாசங்கம் தாறுமாறுற்றுத் தடுமாறிப் போகாமல், சங்க வியவகாரியங்களையெல்லாம் சிக்கறுத்துச் சீர்திருத்தி, அதுவிஷயமாக எவ்விதச் சிறுமையும் தோன்ருதவாறு, அருமையும் பெருமையுமாக அதை வளர்த்து வந்தார். மகாசங்கம் பலக்கவேண்டும், வன்னிய உலகம் விர்த்திக்கு வரவேண்டும், என்ற விசாலமான நன்னோக்கத்துடன் எல்லாச் சங்கங்களையும் அணைத்து

ஆதரித்து, பாரபக்ஷமின்றி நீதியாய் நடத்தி வந்தார். க்ஷத்திரிய நாடு முழுமையும் ஒரு குடையின் கீழ் ஒன்றினாலன்றி, நம்மவர்கள் சீக்கிரமாகச் சுலப சாத்தியத்தில் அபிவிர்த்தியடைய முடியாதென்பதையும், அங்ஙனம் நம் நாட்டை ஒரு குடையின்கீழ் ஒற்றுமையுடன் கொண்டுவரக் குலாபிமானிகள், குறுகிய மனதை விரட்டியோட்டிவிட்டுப் பெருள்ளம் படைத்துத் திரவியச் செலவுடனும் அஹோராத்திரம் பாடுபடவேண்டுமென்பதையும், பல்லவகுலசேகரர் சகலருக்கும் நிரூபித்துக்காட்டினார். உண்மையை யறிந்தவராகையால் க்ஷத்ரிய குலாபிமானிகளுள் வேற்றுமை பாராட்டாமல், மெய்க் குலாபிமானிகளை யெல்லாம் மேம்படுத்தியே வந்தார். சென்ற இருபது வருடகாலமாக மகாசங்கத்தின் சகல காரியாதிகளையும் தம் பொருப்பிற் கொண்டு அவைகளைச் சரிவர நடாத்தி மகாசங்கத்துக்கு ஒரு பெரிய வழிகாட்டியாய் நின்று உதவினார். எவ்விதக் குலாபிமானியும் அவரை அடைந்து, சங்க காரியங்களைப்பற்றிப் பேசினர். எங்கெனும் கலக்கமின்றி சமாதானமே மேவிட்டிருந்தது. இவ்வாறாக மகாசங்கத்தையும், வன்னிய உலகத்தையும், நல்லபடி நடந்துவதான உபாயத்தைக் கண்டறிந்து, அந்த உபாயத்தை அநுஷ்டித்துச் சித்திபெற்று, "முதல் பெரிய வன்னிய சங்க தந்திர நிபுணர்" எனப் பெரும் பேர் பெற்றார் என்றால், பலபத்திர நாயகரைப் பற்றிப் பலபடியாகப் பன்னியுரைப்பானேன்? வன்னிகுலோத்தாரணருக்குப் பிறகு பல்லவ குலசேகரரே யன்றி, வேறு யாராவது சங்க காரியங்களை நடத்திவந்திருந்தால், மகாசங்கமும் வன்னிய உலகும் தற்போது அடைந்திருக்கும் சீரும் சிறப்பும், பெரும்புகழும், கைகூடி யிருந்திருக்குமென்பதில் சந்தேகமே. நமது நாயகரவர்கள் சங்க விஷயமாக ஆழமான அஸ்திவார

மே அமைத்து வைத்துள்ளார். சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மகாசங்கத்தார் நம் நாயகரவர்களது சங்க தந்திரங்களையும், சங்கீக முறைமைகளையும், அநுசரித்து அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவரேல், மகாசங்கம் மேன்மேலும் பிரகாசிக்கத் தடையிராது.

சில ஆண்டுகளுக்கு முன், குடத்திலிட்ட தீபம்போல் இருந்து கொண்டிருந்த நமது உயர்ந்த க்ஷத்ரிய குலத்தின் மேன்மையும், அந்தஸ்தும், பெருமையும், கீர்த்தியும் வன்னிகுலோத்தாரணரால் வெளிக்கு வந்தன. அவைகளை ஆங்காங்கு அமைத்து, சம்மரவைக் குன்றின்மேலிட்ட தீபம்போல் பிரகாசிக்கச் செய்தவர், நற்குலம் பெற்றெடுத்த அருமைச் சிரோமணியாகிய பல்லவகுலசேகரரே. நம் க்ஷத்ரிய நாட்டில் எந்தப்பக்கத்திலாவது ஏதேனும் சங்கம் நடப்பதாயின், அப்பக்கத்திலுள்ளோர் நாயகரவர்கள் கட்டாயம் விஜயம் செய்தல் வேண்டுமென விண்ணப்பித்துக் கொள்ளலும், அவர்களது அபீஷ்டத்தை நிறைவேற்றுவான் வேண்டி, அந்தக்ஷணமே புறப்பட்டுச் சங்க காரியங்களை நிறைவேற்றி வந்தவர் பல்லவகுல சேகரரே. சகல சங்கங்களுக்கும் ஓர் ஊன்றுகோல் போல் நின்று, அடிக்கடி குலாபிமான அமிர்தம் ஊட்டியும், தைரியம் கொடுத்தும், சங்க உற்சாகமும் குலாபிமான ஊக்கமும் பெருகச் செய்தவர் பல்லவகுலசேகரரே. மெய்வருத்தம் பாராமலும், பசி நோக்காமலும், கருமமே கண்ணாயிருந்து, வன்னிகுல நன்மையின் பொருட்டுப் பாடுபட்டவர் பல்லவகுல சேகரரே. "நல்லகாரியத்துக்கு நாலாயிரம் இடுக்கண்" என்பதையொட்டி, நம்மவர் முன்னேற்ற விஷயமாகப் பிரவேசித்து முயற்சிக்கையில், பல இடையூறுகள் எதிர்த்து நின்று, அவைகளின் தாண்டவத்தினால் அண்டம் புரண்டு, ஆழிகள்

திரண்டு, திசைகள் இருண்டு, தெய்வங்கள் மருண்டு வருவதெனினும், சிறிதும் மனங் கலங்காது மகோன்மத்த சுபாவத்துடன் காம்பீரமாகத் தாக்கிக் காண்டீரவம்போல ஆண்மையுடன் போர்செய்ய வல்லவர் பல்லவகுலசேகரரே. இத்தகைய சிறப்புற்ற அரும் பெரும் குலாபிமான ரத்தினம் நமக்கு இனி எங்கிருந்து கிடைக்கக் கூடும்? அதிலும், ஆங்காங்கு விளங்கிக்கொண்டிருந்த நங்குலத்திலுதித்த பல மணிகளையும் இழந்த இக்காலத்தில், பல்லவ குலசேகரரைப் பொட்டென இழந்ததானது, உகிர் சுற்றின்மேல் உலக்கை விழுந்ததை ஒத்திருக்கிற தன்றோ? இம்மகானுடைய திடும் பிரவேசமான மரணம் நம்மை எவ்விதத் துக்க சாகரதில் தான் அமிழ்த்தாது? ம-ள-ள-ஸ்ரீ E. A. சிவராமலிங்க பிள்ளையவர்கள்,

"தந்தையென நீ ஒருவ னிருந்தமையாற்
புதுவை நகர் தனில்வாழ்ந் தாலும்
சந்தமிகு கச்சிநகர் ஆறுமுக
நாயகனும் தந்த துன்பப்
பந்தமதை மறந்திருந்தோம் நீயிறந்தாய்
முன்னாளிற் படைத்த துன்பம்
வந்த தன்றிப் போவதற்கு வழியில்லையே
பலபத்ர மகீப வானே" எனப் புலம்புகிறார்.

ஓ! மகாவிசேஷம் பொருந்திய க்ஷத்ரிய குலத்திலுதித்த எனது சகோதர சகோதரிகளே!! நாம் இப்புண்ணியவானுடைய திவ்ய சரித்திரத்திலிருந்து அறிந்து கொள்வதென்ன? க்ஷத்திரிய வம்சத்தைச் சேர்ந்த ஒரு பிதா தனது புத்திரர்களுக்குச் செய்யவேண்டியன இன்னின்னவென்றும், ஒரு க்ஷத்ரியன் தான் செய்துவர வேண்டியன இன்னின்னவென்றும் அறிந்துகொள்ளுகிறோம். ஒரு க்ஷத்ரியக் குழந்தை பிறந்தது தொடங்கி, பிரமசாரிய ஆசிரமத்தில் நடத்து

தலான ஜாதகர்மம் முதல் உபநயனம் வரையிலுமுள்ள சடங்குகளும், வாலிபனானதும் கிருகஸ்த ஆசிரமத்தில்செய்த லான கல்யாணச் சடங்குகளும், க்ஷத்ரிய சங்கங்களில் மெம்பர் ஆகலும், பிறகு வானப்பிரஸ்த ஆசிரமத்தில் தம்மாலியன்ற அளவு குலோபகார விஷயங்களில் முன்னின்று உழைப்பதும், கடைசியாக சன்னியாசி ஆசிரமத்தில் சுயநலப்பேயை அறவே ஓட்டிவிட்டு, தன் மறுப்புடன் குலாபிமானமே பூஷணமாகப் பூண்டு, நம் ஜாதியின் முன்னேற்றத்துக் குரிய சற்கிருத்தியங்களையும், சங்க கைங்கரியங்களையும் அல்லும் பகலும் அனவரதமும் செய்து, இவ்வுலகில் நாம் கண்ணுக்குக் கண்ணாக அடையும் நற்பயனான பேரும் பெருமையும், பிறரிடமிருந்து மதிப்பும் கௌரவமும் பெற்று, மறுவுலகில் மோக்ஷ சாம்பிராஜ்ஜியத்தையும் அடைதலான மார்க்கங்களையும் பல்லவ குலசேகரர் சரிதையிலிருந்து நாம் நன்கு தெரிந்து கொள்ளுகிறோம்.

மேலும் இச்சரித்திரத்திலிருந்து நாம் மிகவும் கவனித்துச் செவ்வையாய் அறிந்து கொள்ளவேண்டிய சிறந்ததோர் விஷய மொன்றிருக்கிறது. நம் நாயகரவர்கள், க்ஷத்ரியரின் உட்பிரிவில் இது உயர்ந்த தென்றும், இது தாழ்ந்ததென்றும் சொல்வது அறிவீன மென்று, அவ்வித்தியாசத்தை அறவே யொழித்து விட்டார். சில ஜில்லாக்களிலுள்ள நம் க்ஷத்ரியர்கள் வேறுபாட்டின் அவசியத்தைப் பற்றி வற்புறுத்துகிறார்களாம். பலவிடங்களில், நம்மவர்கள் படையாட்சி யென்றும், கண்டர் என்றும் பிரிவதுண்டு. இப்பிரிவுக்குச் சில பல கலியாணச் சடங்குகளையே காரணமாகக் கொண்டிருக்கிறார்கள். இச்சடங்குகளைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கில், அவை யாவும் நமது க்ஷத்ரிய மரபுக்குரித்தானவைகளாகவும், ராஜ

சீதிக்கு ஒழுங்கானவைகளாகவும் இருக்கின்றன. ஆகவின் வித்தியாசமெங்கேயிருக்கிறது? "தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு" என்றபடி, இடத்தைப்பொருத்து சடங்காசாரங்களும், நடையுடைபாவனைகளும், கொஞ்சம் வேறுபட்டேயிருக்கும். அதனாலேயே "நாங்கள் வேறு. நீங்கள் வேறு" என்று சொல்லலாமா? பற்பல விடங்களிலிருக்கும் நம்மவர்களது சுபா சுபச்சடங்குகளின் முக்கிய அம்சங்கள் யாவும் ஒரே வகைத்தானதாகவேயிருக்கின்றன. அதுவுமன்றி நம்மவர்கள், தாங்கள் செய்துவந்த கிரியைகள் எல்லாவற்றையும் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. தென்னாற்காடு தஞ்சையர்கள் சென்னை வந்தால், சென்னையிலுள்ள சடங்குகளையே அநுஷ்டிக்கிறார்கள். சென்னையிலுள்ளவர்கள் சேலம் கோயமுத்தூர் சென்றால், அங்குள்ள பழக்க வழக்கங்களையே கைக்கொள்ளுகிறார்கள். ஆகவே, நம்குலத்திலுதித்தோர் சகலரும் வன்னியமாதாவின் ஒரே வயிற்றில் பிறந்த குழந்தைகளெனப் பெருமை பாராட்டிக்கொண்டு, நமக்குரிய கொள்கைகளை அநுசரிக்கத் தயாராயிருக்கிறோமே.

அவ்வாறாயின் வேறுபாடு வருவானேன்? வேற்றுமை என்பது எங்கும் கொஞ்சம் கொஞ்சம் இயற்கையாகவே இருந்து கொண்டிருக்கிறது. பாதகண்டமாகிய நமது இந்தியா தேசத்திலே எத்தனையோவிதம் ஒவ்வொன்றிலும் காணப்படுகிறது. வடதேசத்துப் பிராமணர்களுக்கும், தென்தேசத்துப் பிராமணர்களுக்கும் பாஷை, பழக்க வழக்கங்கள், நடையுடை பாவனை, சடங்காசாரங்கள் முதலானவைகளில் எவ்வளவோ வித்தியாசங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படியிருந்தும் அன்னோர்கள் தாங்கள் ஒரே வமிசத்தவரென்று பெருமை பாராட்டியும், கொள்வினை,

தொடுப்பினை தங்களுக்குள் ஏற்படுத்தியும், ஜாகரீசம், ஒற்றுமை, முன்னேற்றம் முதலியவைகளை வளர்த்துக் கொண்டும், வருவதை நாம் பிரதி தினமும் கண்டும் கேட்டும் படித்தும் வருகிறோமல்லவா? ஆகவே அற்பமான சில விஷயங்களைக் கொண்டும், கேவலம் சடங்காசாரங்களைக் கொண்டும் பிரிவு ஏற்படுத்திக்கொள்ளுதல் புத்தி சாலித்தனமாகாது. படையாட்சி என்பது ஒரு பிரிவினரென்றும், கண்டர் என்பது வேறு பிரிவினரென்றும் நாம் கொள்வோமாயின், சில ஜில்லாக்களில் வசிக்கும் படையாட்சிக்கண்டர் என்பதைப்பற்றி நாம் என்ன சொல்வது? உண்மையான அர்த்தத்தைப் பார்க்கும் பக்ஷத்தில், நம்மரபுக்குரிய சகல பட்டப்பெயர்களும் ஒன்றெனவேதானிருக்கின்றன. ஆகையால், நாமும் பிராமணர்களைப் போலவே, ஹிந்தி, தமிழ், மராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பல தேசங்களிலுள்ள வன்னிகுல க்ஷத்ரியர்கள் அனைவரும் ஒரே மகத்தான ஜாதியார் என்று சொல்லும் வண்ணம், ஒருவருக்கொருவர் சம்பந்தா சம்பந்தங்களும், பந்துக் கட்டுப்பாடுகளும், ஏற்படுத்தி முன்னுக்கு வர முயலவேண்டும்.

இன்னும் நாம் அறிந்துகொள்வதென்ன? ஒரு க்ஷத்ரியனுடைய புகழுக்கும் கீர்த்திக்கும் ஆதார பூதமாயிருப்பது அவனுடைய பணமல்லவென்பதும், ஆயின் அவனது குணமேயென்பதும், வெள்ளிடைமலைபோல் விளங்குகிறது. சங்கத்துள் பிரவேசித்தோர்கள் எவ்வாறு பேரூக்கத்துடனும், விசாலமான புத்தியுடனும், சங்க காரியாதிகளைக் கவனித்து வரவேண்டுமென்பதும், வெகு தெளிவாய் விசிதமாகிறது. செல்வவந்தர்களும், நல்ல அந்தஸ்திலிருப்பவர்களும், செல்வமற்றவர்களோடும், உபாயமாய் ஜீவிப்பவர்களோடும் கலந்து அன்புடன் உறவாடி

வருதலே சாலச் சிறந்ததென்றும், ஏழ்மையான ஸ்திதியிலுள்ளாரும் தங்களது நன்முயற்சியால் உன்னத நிலைமையுற்றுப்பெருக்குறும், புகழுக்கும், உறைவிடமாதல் கூடுமென்றும் உணருகிறோம். இவைகள் தவிர ஒரு க்ஷத்ரியன் தன்மட்டும் குலாபிமானியாயிருப்பதோடு நின்று திருப்தியடைந்து விடாமல், தன்னைச் சார்ந்த பெண்டு பிள்ளை, அண்ணன் தம்பி, அக்காள் தங்கை, மாமன் மைத்துனன், உற்றார் உறவினர், சிநேகிதர் முதலானவர்களையும் குலாபிமானிகளாக்கிச் சங்கத்துக்கு உழைக்கச் செய்யவேண்டும் என்ற அருமையான விஷயமும் நம் நாயகரவர்களது சரிதையில் காணக்கிடக்கிறது. ஆதலினால் இச்சரித்திரத்தைப் படிக்குந்தோறும் தெவிட்டா இன்பமுள்ள குலாபிமான அமிர்தம் ஊறும் என்பதில் சந்தேகமில்லை. அங்ஙனமிருந்தும், வன்னிகுலோத்தாரணர், பல்லவகுல சேகரர் போன்ற சிறந்த குலாபிமானச் சிகாமணிகளின் சரித்திரங்களை வாசித்த பிறகும், கேட்ட பிறகும், குலாபிமானியாகாத ஒரு பிராணியை என்னவென்றுதான் சொல்வது?

"மறைக்குலத்தி லுதித்தாலென்
　　மறையுணர்ந்தா லென்வணிகர்
நிறைக்குலத்தி லுதித்தாலென்
　　நிதியடைந்தா லென்னாள்சா
முறைக்குலத்தி லுதித்தாலென்
　　முயற்சிசெய்தா லென்வன்னி
யில்றக்குலத்தி லுதித்தவரே
　　மேலாரென் றியம்புவரே.

சாத்திரமறைகள் சொற்ற
　　தனிநியமம் வழாதோர்
ஆத்திரத்தவறில் வன்னி
　　தோன்றுமெய்ப் புகழ்காப்பாளர்

மாத்திரை யளவும்ஞான
மறைப்பின்மாதவங்கூர் சம்பு
கோத்திர வாசர்க்கொப்பு
கூறுவதெவரை மாதோ.”

என்று கவிச் சக்கிரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வாரால் செம்பொற் சிலையெழுபதில் சிறப்பித்துக் கூறப்பட்ட பராக்கிரமமும் வைராக்கியமும் பொருந்திய சூரியர்களே! மகா பிரபலமானதும் கீர்த்தி கூடியதுமான இந்த க்ஷத்ரிய வம்சத்தின் பிறப்பு புண்ணிய மிகுதியாலேதான் கிடைக்கக் கூடியதென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. இவ்வாறிருக்க, “ஜாதி பேதத்தையும் மாதர் போகத்தையும் தள்ளி நிற்பது சமாதி” என்றாதிய சுலோகங்களைப் பற்றி வாய்ஞானம் பேசி, இருபற்றுகளையும் துறந்தாரைப் போன்று நடிக்கும் சூது நிறைந்த பாண்டங்களான சிலரும்; சுயமாய்ச் சம்பாதித்துச் சாப்பிடச் சக்தியில்லாது, “இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்” எனப் பட்டாங்கு படிக்கும் கசடர்களும்; “ஜாதி சங்கம் என்றால், சூரியன் தேக்கிக் காயுமா? காற்று தள்ளி வீசுமா?” என்று குதர்க்கம் பேசும் உலக ஞானத்தில் குறைந்த பகல் வேஷக்காரர்களும்; “சங்கம் என்றால் ஒருவேளை சாப்பாட்டுக்குப் பொழுது போக்குமா?” எனச் சுருக்கமாகப் பேசிப் பிறரை மயக்கும் சுயகாரியப் புலிகளும்; “ஜாதியானது மூடாது கட்டுப்பாடு” என்று ஆழ்ந்த சிந்தனையின்றித் தமது சொற்ப கல்வியினால் மமதை யென்னும் போர்வையைக் கழற்றாத சிலரும்; “புதியன புகுதலென்னும் உத்தியால், சங்கம் ஜாதி முதலியன அனாவசியம்” எனச் சொல்லிவிட்டு, அன்னியர் வரவை எதிர்பார்க்கும் சில இனிச்சவாயர்களும்; “இஷ்டப்படியெல்லாம் அன்னியரோடு கலந்து உண்ணுவதாலும், சகிப்பதாலும், தொண்டையில் மாட்டிக் கொள்ளுகிறதா?” என்று

னைவிக் "கொண்டதே கோலம், கண்டதே காட்சி" என்
கிற ஆசாரம் வழுவிய ஆபாசப் பாத்திரங்களும்; "ஆண்
பெண் இரண்டே ஜாதி" என வெகு நுட்பமாய்ப் பேசிக்கொ
ண்டு, சகலராலும் அவமதிக்கப்பட்டு, வருகிற சிலரும்; "என்
அம்மாள் மதப்பட்டாள், என் அப்பன் எதிர்ப்பட்டான்,
நான் வெளிப்பட்டேன்" என்றும், "ஜாதி என்றால் நெற்றி
யில் எழுதியிருக்குமா?" என்றும், சொல்லி திரியும் வரம்பு
கடந்த கலப்பாலுதித்த சிலரும்; ஆகிய இன்னவைய கோட
ரிக் காம்புகள் நம் குலத்தில் உதித்து; வன்னிய உலகில்
சிற்சில இடங்களில் தோன்றி, ஜாதி யென்ன? சங்கமென்ன?
குலமென்ன? குலாபிமான மென்ன? என்று பலவாறாகப்
பிதற்றிக் கொண்டு திரிகின்றன. இந்தக் குலத்துரோகிக
ளின் வார்த்தைகளை நம்பி, நமது க்ஷத்ரிய குலாசாரங்களை
விடுத்து, ஏமாந்து மோசம் போகாதீர்கள்! மோசம் போகா
தீர்கள்!! மோசம் போகாதீர்கள்!!!

"நாய் வாழ்ந்தா லென்ன; பூனை தாலியறுத்தா
லென்ன"; "கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்?"
என்றபடி, "எது எப்படியோ போகட்டும், நமக்கு ஜாதி
என்னத்துக்கு? சங்க மென்னத்துக்கு?" என்று நினைத்து,
"சங்கம் என்னும் வார்த்தையைக் கேட்கு முன்னமே ஒரு
பர்லாங்குக்கு அப்புறம் ஓடிப்போய்விடும் அறிவு குன்றிய
சாதுக்களும் நம்மில் சிலருண்டு. இவர்கள் நற்குலம் பெற்ற
நடைப்பிணங்க ளாவர். குலாபிமானத்தோடு சங்கத்தில்
சேர்ந்து சிலகாலம் உழைத்துவிட்டுப் பிரயோஜனம் ஒன்றும்
கைகூடவில்லை யென்று வெறும் வாயை மென்று, வீணன்
தங்கை "சலிப்பு" என்ற சின்னஞ் சிறுக்கியின் வலைக்குட்
பட்டுப் போய்விடும் ஆத்திரக்காரரும் சிலர் உளர். இன்னோர்
கள் "முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்", "முயற்சி

திருவினையாக்கும், முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்" என்னும் முதுமொழிகளை அறியாதவர்களவர். குலாபிமானங் கொண்டு, நம்மவர்க்குமட்டும் நன்மை செய்தல் பக்ஷபாத மென்றும், தேசாபிமானங் கொண்டு எல்லாருக்கும் நன்மை புரிவதே சிறப்புடைத்து என்றும், தங்களை அன்னியர் மெச்சக் கூறும் அல்லது செய்யும் அவசர புத்திசாலிகளும் சிலர் இருக்கின்றனர். நம்மில் ஒருவர் குலாபிமானங் கொண்டு, நம்மவர்களை விர்த்திக்குக் கொண்டுவந்தால், நாம் குடியிருக்கும் நமது தேசத்தின் ஒருபாகம் விர்த்திக்கு வந்ததே யல்லவா? ஆதலின், குலாபிமானத்திலேயே தேசாபிமானமும் அடங்கி யிருக்கிறதென்பது நன்கு விளங்கவில்லையா? ஒரு க்ஷத்ரியனுக்கு நமது மரபைச் சீர்திருத்தம் செய்து அபிவிர்த்திக்குக் கொண்டு வருவதைக் காட்டிலும் வேறே தேசாபிமானம் வேண்டுவதில்லை. மிகவும் சீர் குலைந்து கிடக்கும் நம் ஜாதிக் குறைக்கு முன்வராமல், தேசாபிமானி யென நடிப்பது, மாதா வயிறெரிய மகேஸ்வர பூஜை செய்வதை யொக்கும். இன்னவேயோர்கள் நமது ஜாதிக்கு ஏற்பட்ட புல்லுருவிகளாகும்.

இப்புண்ணிய சரித்திரத்தை வாசிக்கும் அல்லது கேட்கும் எனது குலாபிமான நண்பர்களே! க்ஷத்ரிய உதிரம் நிரம்பப்பெற்ற நாம், நம் நாயக சிகாமணியைப் போல் குலாபிமானமே பூஷணமாகப் பூண்டு, நம் குலோபகார விஷயமாகப் பாடு படுவோமாக. அப்பொழுது தான் நமது ஜாதிக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்கள் நிவர்த்தியாகும். இல்லையேல் நமது கஷ்டங்கள் பூர்வபக்ஷத்துச் சந்திரனைப் போல விர்த்தியாகி, நம்முடையவும் நமக்குப் பின்வரும் சந்ததியாருடையவும் ஸ்திதி வர வர அதிகம் கேவலமாகிக், கடையில் சகிப்பது அசாத்திய மாகிவிடும். ஆகவே,

வன்னிய உலகில் கல்வியைப் பரவச்செய்தும், சங்கங்களை நிலைநாட்டியும், தக்க பரிகாரம் செய்யாவிட்டால், நாம் உள்ளபடியே குலத்துரோகிகள் ஆய்விடுவோம். எவ்வகைத் துரோகம் செய்யினும் உய்வுண்டு; குலத்துரோகம் செய்த பேர்களுக்கு வழியுண்டென எவ்வகையானும் ஆதாரம் காணோம். இக்காரணம் பற்றியே "எங்கள் சங்கம்" வன்னிய வேதாந்தியான இராஜஸ்ரீ வரகுணராம வர்மா அவர்கள்,

"எலாபிமானம் கொன்றார்க்கும் உய்யுமோக்ஷமில்லை
குலாபிமானம் கொன்ற பதர்க்கு"

என்று சொல்லியுள்ளார். ஆகையால் இக்கணம் முதற்கொண்டு வம்சாபிமான வைராக்கியம் கொண்டு, நம் குலத்துக்கு உழைத்து மோக்ஷம் பெறுவோம்; அன்னியரிடமிருந்து கண்ணியம் அடைவோம். நம்முடைய திரிகரணங்களும் குலாபிமானத்தின் பொருட்டு பிரயோஜனப்படட்டும். இஃதன்றோ க்ஷாத்திரமுடைய கோத்திரத்தாருக்கு அழகு?

க்ஷத்ரிய சிகாமணி, குலாபிமானக் கடல், சங்கமுயற்சிக் களஞ்சியம், குணக்குன்று, நம்மவர் செய்த புண்ணியமே அவதாரம் என விளங்கிய பல்லவகுலசேகரர் கனம் கா. கோ. பலபத்திர நாயகரவர்கள் நமதுவன்னிய உலகத்துக்குச் செய்த பல நன்மைகளுக்கும் கைம்மாறாக நாம் அவருக்குச் செய்வது என்ன? அவரது ஞாபகார்த்தமாக க்ஷத்ரிய நாடெங்கும் பற்பல சின்னங்கள் ஏற்படுத்தலேயாம். பல்லவகுலசேகரர் பெயரால் பள்ளிக்கூடங்கள், வாசிப்புக் கூடங்கள், புஸ்தக சாலைகள் முதலியன ஏற்படுத்தலாம். க்ஷத்ரிய மாதரின் ஒவ்வொரு வீட்டிலும், சங்கத்திலும், அவரது திரு

வுருப் படம் அலங்காரத்துடன் வைக்கலாம். கூடுமாயி
அவரது உருவச்சிலையை பிரபல சங்கங்களின் பார்வையான
விடங்களில் நாட்டலாம். அவரைப்பற்றி பல பிரசுரங்கள்
வெளிவரச் செய்யலாம். அவரது ஞாபகத்தை நிலைநி
த்த இவைகளுக்கெல்லாம் மேலான ஒரு வழியுண்டு. அது
வது: அவரது திருச்சரித்திரத்தைப் படித்து அப் புண்
ணியவானுடைய உத்தமோத்தமமான வழிகளைப் பின்பற்றி
நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பல்லவகுலசேகரராக
விளங்குவதே. ஆதலினால் க்ஷத்ரிய குலத்திலுதித்த எனது
சகோதர சகோதரிகளே! நாம் பல்லவகுலசேகரர் விஷய
மாக வெளி ஞாபக சின்னங்கள் நாட்டுவதுடனே, நமது
மனதுள்ளே அவரது கொள்கைகளை நாட்டி, அவரது சங்
முறைமைகளை அனுசரித்துப் பல சங்கங்களை ஸ்தாபித்தும்
பல பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தியும், பல சங்கமகோற்சவங்
களை நடத்தியும், குலாபிவிர்த்தி செய்துப், பின்னர் புண்ணிய
மும், புருஷார்த்தமும், பேரும், புகழும் பெற்றுப் புகழுடம்
பெய்யப் பகீரதப் பிரயத்தனம் புரிவோமாக.

இப்பாட்டுடைத் தலைவருக்கு அம்மானாகிய
விஷ்ணுபாத சேகர ரென்னும்
வித்வான்
ஜா. பசுபதி நாயகரவர்களா லியற்றப்பட்ட
ஆறுசீராசிரிய விருத்தங்களில் சில

பூபாலர் குலத்தின் மேய புகழ்மிகுஞ் சீமானென்கோன்
கோபாலப் புனிதனாய கொழும்பயப் புணரி தன்னில்
நாபாலிற் கினிமையான நல்லமிழ்தென்ன வந்தோன்
பாபாலர் வழுத்துஞ்சீர்த்தி படைத்துளான் கொடையில்
[மிக்கான்.

மலர்பத் திரமே யென்ன மகிதல மதித்தற் பாலான்
சிலர்பத் திரமாய்ச் சேர்க்குஞ் சிறந்தனன் விறிக்கு மேலான்
இலர்புத் திரரின் னன்போ லெனைப்பல ருரைக்கு மாலான்
பலபத்திரனன்னுமம் படைத்துளான் தவறில் தாலான்.

வன்னியகுலத்தி னோர்க்கோர் மணிமுடியென்ன நின்றோன்
இன்னவர் சங்கத்தேய்ந்த இருநிதி காத்தங்கியும்
மன்னவனாய நன்றி மற்றைய தேயந்தோர்தாம்
பண்ணுநற் காரியங்கள் பார்த்திடும் வன்மைபெற்றோன்

கோமள புரத்தின்மேய கோழியர் கோன்கோயிற்கும்
சேமமா மயிலை மேவுந் தேசிகர் தன்கோயிற்கும்
தாமசுந் தரரா சன்வாழ் தருஞ்சூளைச் சந்நிதிக்கும்
நாமமெங் கெங்குமேவும் நற்றர்ம கர்த்தனானான்.

புனைபெட்டுக்கிளப்பினோடே [illegible]மிக்கனார் சேர்ந்த
இனுமொருகிளப்பினுக்கும் இன்னிசைக் கழகங்கட்கும்
கனமிகுங் காலட்சேபக் கழகங்கள் தமக்கு மாங்கேய்
தனிப்பெருமெம்பரென்றே சகலரும் புகழநின்றோன்.

திற்பெறும் வயிறுநன்மூல் நிகரிலுன் தாய்நாகம்மாள்
கற்புடைநின தில்லாளாங் கவின்மிகும் ஆண்டாளம்மாள்

பொற்பினிற் சீதை போலுன் புதல்விநம் ராசாம்பாள் நல்
விற்பனருய மைந்தன் மிகுமெழில் உலக நாதன்.

நின்னிருதம்பிமார்கள் நினதருந்தங்கை அத்தான்
என்னுடன் சேர்ந்துள்ளார்க ளினும்பலவூரிலுள்ளோர்
உன்னுடைத்தொழிற்சாலைக்கண் உள்ளவரோடுமற்றோர்
உன்னியே நைந்து நைந்திங் கேசவெனக்கதறுகின்றார்.

கந்தசாமிப்பேர் சீமான் கட்டியிண்டவிப்பனென்ற
அந்தகஞ்சக்கூடாடி யதனையிவ்வுலகிலில்லா
இந்திரன் சபையைப்போலு மியற்றுதல் நன்றென்றுன்னி
அந்தமாசபையை நோக்க ஆங்கு நீசென்றாய்போலும்.

நந்தைக்கு நிகர்வோர்பின்பு நவலுதற்கில்லையென்றார்
வந்தனையவற்குமேலாய் மதியினில் மிக்கோய்நீயே
பிந்தியுன்றனக்குமிக்க பிரபலனாவான்உன்றன்
மைந்தனென்றுரைப்பனன்றேன் மகிதலமீதுவாழி.

### இன்னிசை வெண்பா

எல்லாஞ்சரியா யெழுதினையே நான்முகனும்
பொல்லாக் குசட[illegible] [illegible]திகொஞ்ச மாறினதேன்?
தூயபல புத்திரன்றன் சுந்தர[illegible] சென்னியின்மேல்
ஆயு ளெழுதும்போ[illegible]

புத்தியி[illegible]னென்றே [illegible]நீயுன் [illegible]ரியினைக்
சத்தி[illegible] [illegible]விட்டான்
நன்ற[illegible]பினி யெவர்க்கும் ஞா[illegible]ழுதாய்
அண்[illegible] வசையுனக்கிங் காம்.

### கட்டளைக் [illegible]துறை

பன்னிய [illegible]திணர்த்திவில்
நன்னய மா[illegible]இரை நாளதனில்
பின்னுள தா[illegible]தாந்திதி பேர்பெற்றநம்
மன்னவ னுப்பல பத்திர னேகினன் வானுலகே.

172445

87

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

("Social Service")

[illegible]